411

ஆசாரிய சரித்திர மாலை

முதற் புத்தகம்

"ஆரியா" பத்திரிகையின் ஆசிரியரான

தி. அ. சாமிநாத ஐயர்

எழுதியது

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE
(*Vide Gazette, Part I B, dated, 3rd June 1924, page 477.*)

சென்னை:
... சாமி நாயுடு ஸன்ஸ்
1925

[விலை 12 அணா

Q2
N25
178897

ஆசாரிய சரித்திர மாலை

முதற் புத்தகம்

'ஆரியா' பத்திரிகையின் ஆசிரியரான

தி. அ. சாமிநாத ஐயர்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1925

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 12 அணா

படங்களின் அட்டவணை

1.	முகவேடு......ஸ்ரீ சாரதா விக்கிரகம்	—
2.	ஸ்ரீ வேதவியாசரும் மாணவர்களும்	5
3.	ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசாரியர்	25
4.	ஸ்ரீமத் சங்கராசாரியரும் சீடர்களும்	41
5.	திருமந்திரார்த்தப் பிரதானம்	65
6.	உடையவர்	82
7.	ஸ்ரீ ராமாநுஜ விக்கிரகம்	84
8.	ஸ்ரீமன் மத்துவாசாரியர்	105
9.	உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகம்	107
10.	ஸ்ரீமத் வல்லபாசாரிய மகாப்பிரபு	118
11.	ஸ்ரீ கௌராங்கதேவர்	149
12.	சைதனியர் காட்டிய அருட்கோலம்	157
13.	ஸ்ரீ வித்தியாரணியரும் ஹரிஹரபுக்கராஜனும்	171
14.	ஸ்ரீ வேதாந்த தேசிகர்	191

Q2
N25

முகவுரை

இன்ப துன்பம், நன்மை தீமை, நியாயாநியாயம், தருமா தருமம், புண்ணிய பாவம் என்பனவும், வாழ்க்கை வகை, ஒழுக்க முறை முதலாய வனைத்து விவகாரங்களும் மதக் கோட்பாட்டைச் சார்ந்திருக்கின்றன. மதக் கோட்பாடுகள் வேறுபடுவது போல, மேற் சொல்லிய எண்ணங்களும் செய்கைகளும் வேறுபடுகின்றன. ஒரே மாதிரியான கொள்கையும் செய்கையு முள்ளவர்கள் ஓர் இனத்தவர்களெனப்படுகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை விவகாரங்கள் மதக் கோட்பாட்டினால் அமைந் துள்ளன. மதக் கோட்பாடு ஆசாரியரால் தொகுத்து வைக்கப்பட்டது. கொள்கைகளைப் பாராட்டுவது போல ஜனங்கள் அவைகளின் மூலபுருஷர்களாகிய ஆசாரியர்களையும் போற்றிப் பாராட்டுகிறார்கள். ஆசாரியர் என்பார் தெய்வத்திற்குச் சமானமானவ ராதலின் அவரிடத்துச் சிஷ்யர்களுக்குப் பக்தியும் பணிவும் அதிகம். ஆசாரியருடைய பெருமையும் பேராண்மையும் தம்மிடத்திற் பிரதிபலிப்பனவாகக் கொண்டு சிஷ்யர்கள் ஊக்கமுற்று அவ் வாசாரியரின் வழி நடந்து உய்வதற் கெண்ணுகிறார்கள்.

ஆனால், எல்லாருமே தம் ஆசாரியரின் பெருமையை நன்குணர்ந்தாரில்லை. ஏனெனின், ஆசாரியரின் ஜீவன விருத்தாந்தம் பெரிய நூல்களில் எல்லார்க்கும் எளிதில் விளங்குவதில்லை. அதனைப் பலருக்கும் தெரிவிக்க விரும்பிச் சிற்சிலர் பதிப்பித்துள்ளன சிறு துண்டுப் பத்திரிகைகளாக இருக்

கின்றன: இன்றேல், பொழுது மிகப்போக்கிப் பொறுமை வாய்ந்து படிக்கத் தக்க விரி நூல்களாக இருக்கின்றன. இந்தக் காரணத்தினால் அவை மாணவர்களுக்குப் பயன்படாவாயின. மாணவர்கள் தம் ஆசாரியரின் சரித்திரத்தைத் தெரிந்துகொள்ளாமல் குருபக்தியை வளர்க்காதவர்களாகிறார்கள். குடும்பத்து இயற்கை வாசனையினால் உண்டாகிற குருபக்தியானது ஆசாரிய சரித்திர ஞானத்தால் சிறப்புறுவதற்கேற்றவாறு "ஆசாரிய சரித்திர மாலை" என்னும் இச் சிறு நூல் மாணவர்களின் பொருட்டு ஆக்கப்பட்டுளது.

ஒவ்வோர் ஆசாரியரின் சரித்திரத்தையும் தனித்தனிப் புத்தகமாக்காமல் இங்ஙனம் ஒரு மாலையாகத் தொடுத்திருப்பதனால், பற்பல ஆசாரிய சிஷ்யர்கள் பயிலும் பாடசாலையில் ஓர் ஆசாரியரின் சரித்திரத்தை மாத்திரம் வற்புறுத்தாமல் இதனைப் பாட புத்தகமாக்கி, அவரவரும் எல்லா ஆசாரியர்களின் சரித்திரத்தையும் தெரிந்துகொள்ள வழி வகுக்கலாம். அன்றியும், ஓர் ஆசாரியரிடத்துச் சார்புள்ளார் மற்ற மதாசாரியரின் சரித்திரங்களையும் படிப்பதனால், அவ்வித ஆசாரியர்களும், தம் ஆசாரியரைப் போன்று, ஒருவகையில் பெருமைக்குரியவர்களே யென்றெண்ணும் அரும்பொறை இளைஞர்க்கு அமையும். இந்தப் பொறையினால் மதத்துவேஷமும் மனக்கசப்பும் குறைந்து நம்மவர்க்குள் நட்பு நிலைகொள்ளும், நன்மையும் மிகும்.

"அகஸ்தியாசிரமம்"
சென்னை,
1923௵ மே௴ 9௳

தி. அ. சாமிநாத ஐயர்

விஷய விவரம்

1. ஸ்ரீ வேதவியாசர்—அவதாரம் - கிருஷ்ணத்துவை பாயனர் - வேதம் - வேதார்த்த விளக்கம் - வியாச புத்திரர் - வியாசமாணவர் - பாரதப்போர் - காசிக்ஷேத்திரம் - வியாச ஆச்சிரமம் 1

2. ஸ்ரீமத் சங்கராசாரியர் — ஜனனம் - அற்புத லீலைகள் - பிரம்மசரியம் - அகஸ்தியரது அறிக்கை - மாதுரு சேவை - அருட்செயல் - துறவறம் - யோகதீக்ஷை—காசிவாசம் - பதுமபாதர் - நூல்தெரித்தல் - "மநீஷா பஞ்சகம்" - "பஜகோவிந்தம்" - சூத்திரபாஷிய சோதனை - விஜய யாத்திரை - குமாரில பட்டர் - பட்டபாதரும் பகவத்பாதரும் - மண்டன மிசிரன் - பாரதீ தேவி - பரகாயப் பிரவேசம் - சாரதா ஆவாகனம் - மாகிஷ்மதி ராஜன் - மல்லாரி பூஜை - காபாலிகர்கள் - அருட்கண் - சிருங்கேரி மடம் - தாய்க்கடன் - கீழ்க்கரை யாத்திரை - வடதேச யாத்திரை - சர்வஜ்ஞ பீடாரோகணம் - அபிநவகுப்தன் - நாராயணாலயம் - ஷண்மத ஸ்தாபனம் - கைலயாரோகணம் - நூல்கள். 9

3. ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர் — வைஷ்ணவம் - பூர்வாதிகாரிகள் (ஆழ்வார்கள், ஆசாரியர்கள்) - அவதாரம் - இராமாநுஜர் - யாதவப் பிரகாசர் - கிரகோச்சாடனம் - சதி தெற்றல் - விஷ்ணு பூஜை - ஆளவந்தாரின் அவசானம் - ஸ்ரீரங்க யாத்திரை - மூன்று பிரதிக்கினைகள் - மேற்கடமை - தீக்ஷாகரணம் - துறவறந்தூண்டிய திறம் - துறவறம் - திருவரங்க வாசம் - திருமந்திரார்த்தப் பிரதானம் - "எம்பெருமானர்" - கோவிந்த பட்டர் - தலைமைத் தகைமை - விஷான்ன விலக்கம் - யஜ்ஞமூர்த்தி - சூத்திர பாஷியம் - பாஷியம் அரங்கேற்றல் - சைவ வைஷ்ணவ வாதம் - ஸஹஸ்ரநாம பாஷியம் - திருவாய்மொழி ஆறாயிரப்படி - சோழனது உபத்திரவம் -

சாளக்கிராம வாசம் - பிட்டி தேவன் - திருநாராயணபுரம் - சம்பத்குமாரர் - ஆழ்வார் விக்கிரகப் பிரதிஷ்டை - ஒருநூற்று அந்தாதி - கோவிந்த ராஜர் சந்நிதி - திவ்வியதேச யாத்திரை-சிங்காசனாதிபதிகள் - இராமாநுஜ விக்கிரகப் பிரதிஷ்டை - கடைசிக் கட்டளை - திருநாமங்கள் - நூல்கள் 50

4. ஸ்ரீமன் மத்துவாசாரியர்—பூர்வாவதாரங்கள் (திரேதாயுகம், துவாபரயுகம்) - கலியுகாவதாரம் - ஜனனம் - அற்புத லீலைகள் - கல்விப் பயிற்சி - ''பீமன்'' - துறவறப் பிரயத்தனம் - ''பூர்ணப் பிரஜ்ஞர்'' - இசையெழுச்சி - ''ஆனந்த தீர்த்தர்'' - தக்ஷிணதேச யாத்திரை- ''அனுமான தீர்த்தர்'' - வாதங்களின் தன்மை - வாக்கியார்த்த வன்மை - பகவத்கீதா பாஷியம் - சூத்திர பாஷியம் - உத்தரதேச யாத்திரை - மிலேச்ச பாஷை - புஜபலப் பெருமை - ஹரித்துவாரம் - சோபன பட்டர் - சாளக்கிராமங்கள் - அச்சுதப் பிரேக்ஷர் - கிருஷ்ணாலயம்-சில்லறைச் சீர்திருத்தங்கள் - பிறமதப் பகையின் பீடை - புஸ்தகக் கொள்ளை - புஸ்தகங்களின் மீட்சி - திரிவிக்கிரம பண்டிதர் - விஷ்ணுதீர்த்தர்-அற்புதச் செயல்கள் - அந்தர்த்தானம் - நூல்கள் - மடங்கள் 87

5. ஸ்ரீமத் வல்லபாசார்யர் — சோமயஜ்ஞ சதம் - சதசோமயஜ்ஞப் பயன் - பண்டித இலக்குமண பட்டர் - பிரபுவின் அவதாரம் - ஸம்ஸ்காரங்கள் - விரஜஸ்தலக் காட்சி - அற்புத பாஷணம் - உபநயனம் - கிருஷ்ணதாச மேகனர் - சகுணதாசன் - கல்விப் பயிற்சி - சாஸ்திரவாதம் - வைஷ்ணவ தர்மோற்சாகம் - பிதுரு கருமம் - பூப்பிரதக்ஷிணம் - கிருஷ்ண தேவராயன் - வைஷ்ணவ சம்பிரதாய வரலாறு - விஷ்ணுசுவாமிகள் - வில்வமங்களர் - புண்டரீக க்ஷேத்திரம் - விரஜபூமிப் பிரதக்ஷிணம் - அயோத்தி சேவை - காசி க்ஷேத்திரம் - ஜகந்நாதம் - தக்ஷிணத்து ஸ்தலங்கள் - துவாரகை - ஸ்ரீ வியாச தரிசனம் - அடேல் க்ஷேத்திரம் - காசியில் விவாகம் - பிருந்தாவன ஆலயம் - துறவும் மறைவும் - வைஷ்ணவ மகாராஜர் - நூல்கள் - வல்லபமத சித்தாந்தம் - வல்லபமத பேதம் ... 119

6. ஸ்ரீமத் கிருஷ்ண சைதனியர் — அவதார சமயம் - ஜனனம் - அற்புதத் தோற்றங்கள் - தமயனர் - உபநயனம் - "கௌராங்கர்" - நூல் இயற்றல் - விவாகம் - கீழ்த்தேச சஞ்சாரம் - கேசவ பட்டர் - கயா யாத்திரை - "ஹரிபோல்" - ஹரிதாச மகம்மதியர் - துறவறம் - "கிருஷ்ண சைதனியர்" - ஜகந்நாத வாசம் - அவதார நிதரிசனம் - விஜயநகர ராஜன் - தென்னுட்டுச் சஞ்சாரம் - மகாராஷ்டிரமும் கூர்ஜரமும் - தர்ம பரிவர்த்தனம் - அந்தர்த்தானம் 145

7. ஸ்ரீ வித்தியாரணியர் — காலவியல் - மதபேதங்கள் - தர்மோத்தாரணம் - இலௌகிக நிலை - வைதிக நிலை - இலௌகிக வைதிக மேம்பாடு - மாதவரின் குலம் - அவதார விசேஷம் - இளமைப் பருவம் - தவம் - பொன்மாரி - ஸ்ரீ வேதவியாச தரிசனம் - வித்தியாநகர மூலம் - "வித்தியாரணியர்" - "ஜகத்குரு" - சாயணர் - ஹரிஹர புக்கராயன் - சிம்மாசனதிபதி - சாம்ராஜ்யம் - கோவாக்கோட்டை - "மாதவபுரம்" - ஸ்ரீ விருபாக்ஷ பீடம் - ஸ்ரீ வேதாந்த தேசிகர் - ஹம்பீ பட்டணம் - குகைபுகல் - நூல்கள் 161

8. ஸ்ரீ வேதாந்த தேசிகர் — வமிச பரம்பரை - திருமணியாழ்வார் - அவதாரம் - அத்திகிரியாரடைக்கலம் - கல்விப் பயிற்சி - மந்திரசித்தி - "கவிதார்க்கிக சிங்கம்" - கச்சிவாசம் - திருமலைச் சேவை - உத்தரதேச சஞ்சாரம் - க்ஷுத்திர நிரசனம் - "வைராக்கிய பஞ்சகம்" - "வேதாந்த தேசிகர்" - "சங்கற்ப சூரியோதயம்" - திவ்யதேச மங்களாசாசனம் - பிடாரன் பங்கம் - அயக்கிரீவ விழா - வாவி வெட்டல் - இரகசிய நூல்கள் - முஜ்ஜீயர்கள் - அழகிய மணவாளப் பெருமான் நயினர் - தந்தையின் திருவத்தியயநம் - பொருள் வெறுப்பு - "பாதுகா ஸஹஸ்ரம்" - புத்திரப்பேறு - சத்தியமங்கல வாசம் - கந்தாடை இலக்ஷ்மணசாரியார் - அழகிய மணவாளன் - தில்லை கோவிந்த ராஜர் - கனகதாரா ஸ்துதி - திருவுருவச்சிலை - சரம தசை - நூல்கள் 177

சிருங்கேரி ஸ்ரீ சாரதா விக்கிரகம்

ஆசாரிய சரித்திர மாலை

முதற் பாகம்

1. ஸ்ரீ வேதவியாசர்

அவதாரம்

உலகம் தோன்றி விவகரிக்கும் காலம் பிரம்மதேவருக்குப் பகற்பொழுது எனப்படும். அவருக்கு ஒரு பகல் என்பது பதினான்கு மன்வந்தரங்கள் கொண்டது. ஒரு மன்வந்தரத்தில் எழுபத்தொரு சதுர்யுகங்கள் அடங்கும். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கும் சேர்ந்தது ஒரு சதுர்யுக மாகும்.

ஒரு மன்வந்தரத்திற்கும் மற்றொரு மன்வந்தரத்திற்கும் இடையிலுள்ள காலம் ஒரு சிறு பிரளயம் எனப்படும். 14-ஆவது மன்வந்தரத்திற்குப் பின்பு தோன்றுவது பெரும் பிரளயம் எனப்படும். அந்தப் பெரும் பிரளயமே பிரம்மதேவருக்கு இரவுப்பொழுது ஆகும். மேலே விவரித்துச் சொல்லிய பகலும், இங்கே விவரித்த இரவும் சேர்ந்து பிரம்மதேவருக்கு ஒருதின மாகின்றது.

அந்தத் தினத்தின் பகற்பொழுதில் 14-மன்வந்தரங்கள் நடைபெறுகின்றன என்றேமே. மன்வந்தரம் என்பது ஒரு மனுவின் காலம். ஒவ்வொரு சிறு பிரளயம் நீங்கி ஒவ்வொரு முறை உலகம் விவகரிக்கத் தொடங்கும் பொழுதும் ஒரு மனு தோன்றுவார். அவருடைய ஆட்சி 71-சதுர்யுகங்களுக்குச் செல்லும். இப்பொழுது நடைபெறுவது 7-ஆவது மன்வந்தரம். இதற்கு அதிபதியாவார் வைவஸ்வதர் என்னும் 7-ஆம் மனு. இவருடைய ஆட்சிக்காலமாகிய 71-சதுர்யுகங்களுள், இப்பொழுது நடைபெறுவது 28 - ஆவது சதுர்யுகம்.

ஒவ்வொரு சதுர்யுகத்திலும் துஷ்டர்களைக் கண்டித்துச் சிஷ்டர்களைப் பாலித்துத் தருமத்தை நிலைநிறுத்தும் பொருட்டு ஸ்ரீமகாவிஷ்ணு பத்துமுறை அவதரிப்பார். அந்த விவரம் தசாவதார சரித்திரத்திற் காணப்படும். தசாவதாரங்களின் கருத்து அங்ஙனமாக, சதுர்யுகந்தோறும் வேதங்களை வெளியிடவும், வேதார்த்தங்களை விளக்கவும் ஸ்ரீமந்நாராயணர் மற்றோர் அவதார மெடுப்பார். இதற்கு வியாசாவதாரம் என்று பெயர். 'வியாசர்' என்னும் சொல்லுக்குத் தொகுக்கிறவர், ஒழுங்கு படுத்துகிறவர், விஸ்தரிக்கிறவர், பங்கிடுகிறவர் என்று அர்த்தமாகும். இப்பொழுது நடைபெறும் சதுர்யுகத்தில் அவதரித்துள்ள வியாசர்

கிருஷ்ணத்துவைபாயனர்.

எனப்படுவர். இவர் பராசரமாமுனிவருக்குச் சத்தியவதியின் கர்ப்பத்தில் உதித்தவர். தீவினில் (துவீபத்தில்) பிறந்தமையால் இவர் 'துவைபாயனர்' எனப்பட்டனர்; இலந்தை மரத்தினண்டை (பதரி விருக்ஷத்தினண்டை) பிறந்ததனால் 'பாதராயணர்' எனவும் வழங்கப்பெற்றனர். இவர்

இப்பொழுது நிகழும் வைவைச்சுத மன்வந்தரத்தில் 28-ஆவது வியாசராவர். இந்தச் சதுர் யுகத்தில் இவரிடத்திருந்தே எல்லாருக்கும் ஞானம் வியாபித்ததனால், இவரே பிரதம ஆசாரிய புருஷராவர்.

வேதம்

வேதம் மிக விஸ்தாரமானது, கந்கு கரை யில்லாதது. அபூர்வ சக்தி வாய்ந்த முனிவர்களும் அதனைப் பூர்த்தியாக ஓதமாட்டாதவர்க ளானார்கள். பிருகு முதலான மாமுனிவர்கள் ஈசுவரனுடைய வரப்பிரசாதத்தினால் ஆயுளை வளர்த்துக் கொண்டு வேதமோதியும் அதன் முடிவைக் கண்டாரில்லை. அப்படிப்பட்ட அபாரமான வேதத்தை அற்பப் பயிற்சியும், அற்ப சக்தியும், அற்ப ஆயுளுமுள்ள இக் காலத்து மானிடர்கள் ஓதுவது இயலாதென் றெண்ணிக் கிருஷ்ணத்துவைபாயனர் வேதத்தைச் சுருக்கி, இருக், யஜுசு, சாமம், அதர்வணம் என நான்கு கூறுக்கினர். வேதத்தை இவ்வாறு பாகுபடுத்தியதனால் இவருக்கு 'வேதவியாசர்' என்னும் பெயர் வந்தது.

வேதார்த்த விளக்கம்

பின்பு, வேதார்த்தத்தை விளக்கும்பொருட்டு இவர் சூத்திரங்களையும், ஸ்மிருதியையும் ஆக்கினர். இவருடைய சூத்திரங்கள் 'பிரம்ம சூத்திரங்கள்' எனவும், ஸ்மிருதி 'வியாச ஸ்மிருதி' எனவும் வழங்குகின்றன. அன்றியும், வேதார்த்தங்களையும் தர்மாதர்மங்களையும் சர்வசாமானிய ஜனங்கள் தெரிந்து தெளிவுறும்பொருட்டுப் பதினெண் புராணங்களையும், மகாபாரத மென்னும் இதிகாசத்தையும் இவர் இயற்றியருளினர்.

வியாச புத்திரர்

ஸ்ரீ வேதவியாசர் புத்திரப்பேறு வேண்டிச் சிவபிரானை நோக்கி யாகாதிகாரியங்கள் செய்யும் பொருட்டுத் தாமே தனித்து அரணியைக் கடைந்தார். அரணி என்பது தீக் கடையும் கோல். ஒரு கட்டையைக் கீழே வைத்து, அதன் மீது மற்றொரு கட்டையை நிறுத்தி, மத்தினால் தயிர் கடைவதுபோலக் கடைவார்கள். அந்த அரணியின் இருபுறத்தில் இருவர் இருந்து, கயிற்றை மாறி மாறி இழுத்துக் கடைவது வழக்கம். அப்படிக் கடைவதனால் தோன்றும் நெருப்பைக்கொண்டு யாகாதிகாரியங்கள் செய்வார்கள். உடனிருந்து அரணியைக் கடையத்தக்கவர் எவரும் இல்லாமையின், வியாசர் தாமாகவே அதனைக் கடையலுற்றார். அப்போது கிருதாசி என்னும் அப்ஸரஸ்திரீ அங்கே தோன்றி இவரைக் காமத்தில் மூழ்குவித்துத் தான் கிளியுரு (சுகவடிவம்) மேற்கொண்டனள். அவளால் ஜனித்த குமரர் சுகர் எனப்பட்டார். சுகர் பிறக்கையிலேயே ஞானியாவர். அவருக்கு நாரதர் வந்து முறைப்படி ஞானோபதேசஞ் செய்தார். உடனே சுகர் தந்தையை விட்டு நீங்கிச் சென்றார். வியாசர் 'சுக! சுக!'' எனக் கூவிக் கொண்டே அவரைப் பின் தொடர்ந்தார். அப்போது வழியிலிருந்த மரங்களும் மலைகளும் "என்?" என வியாசருக்குப் பதில் ஒலித்தன. ஒரு தடாகத்தின் கரையோரமாகச் செல்லுகையில், அரம்பையர் அங்கே ஜலக்கிரீடையில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் சுகரைக் கண்டும் கூச்சமில்லாமல் விளையாடிக்கொண் டிருந்தார்கள். வியாசரைக் கண்டவுடனே அவ்வரம்பையர் தெற்றென எழுந்து சேலையுடுத்தனர். அதனால், தம்மைவிடத் தம்புதல்வர் உலக வியவகாரமற்றவர் என வியாசர் தெரிந்து மீண்டனர். ஞானியாகிய அந்தச் சுகரே சுகப்பிரம்ம முனிவரென வழங்கப்பெறுவர்.

ஸ்ரீ வேதவியாசரும் மாணவர்களும்

வியாச மாணவர்

கிருஷ்ணத்துவைபாயனருக்கு மாணவர்கள் ஆவார் 1. சூதர், 2. சுகர், 3. வைசம்பாயனர், 4. ஜைமினி என்னும் நால்வர். இவர்களுள், சூதர் என்பவர் 18-புராணங்களையும் உலகத்தவர்களுக்கு வெளியிட்டார். சுகர் என்பவர் கிருஷ்ணத்துவைபாயனருக்கு மைந்தராகத் தோன்றியும், இவரையே குருவாகக்கொண்டு வித்தியாப்பியாசஞ் செய்தார். அது காரணமாகச் சுகர் மாணவமுறையில் ஸ்ரீமத் பாகவத புராணத்தை நமக்கு அருளினர். வைசம்பாயனர் என்பவர் ஸ்ரீமகாபாரதம் எனனும இதிகாசத்தைப் பிரகாசிக்கச் செய்தார். ஜைமினி என்பவர் மார்க்கண்டேய புராணத்தை நமக்கு எடுததுரைத்தார். இங்ஙனம் புராணங்கள் ஸ்ரீவியாசரிடமிருந்து சிஷ்யர்களின் மூலமாக வெளிவந்தன.

பாரதப் போர்

சந்திரகுலத்து அரசனை சந்தனு மகாராஜனுக்குக் கங்காதேவியின் கர்ப்பத்தில் பீஷ்மரும், பரிமள கந்தியின் கர்ப்பத்தில் விசித்திர வீரியனும் பிறந்தார்கள். விசித்திர வீரியன் காசிராஜனுடைய புத்திரிகளாகிய அம்பிகை, அம்பாலிகை என்னும் இருவரையும் மணந்தான். அவனுடைய சந்ததிக்கு மகவில்லாமற்போகவே, பரிமள கந்தியின் வேண்டுகோட் கிணங்கி வேதவியாசர் அவனுடைய பாரியைகளுக்கும் அவர்களின் பாங்கிக்கும் புத்திர சந்தானம் அருளினர். இவருடைய அருளினற் பிறந்தவர்கள் திருதராட்டிரன், பாண்டு, விதுரர் எனனும் மூவராவார்கள். திருதராட்டிரனுடைய புததிரர்கள் துர்யோதனதியர்; பாண்டுவின புததிரர்கள் தருமபுத்திரர், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகதே

வன் என்னும் ஐவர். துர்யோதனுதியருக்கும் பாண்டவர்களுக்கும் நடந்ததே பாரதப் போர் எனப்படுவது. பாண்டவர்கள் வனத்தில் வசித்துக்கொண் டிருக்கையில் வேதவியாசர் அப்போதைக்கப்போது தோன்றி அவர்களுக்குத் தருமங் கூறினர்; பாரதப்போரில் அபிமன்னன் இறந்ததைப் பற்றித் துக்கித்த தருமரைத் தேற்றினர். பாரதப் போரினுல் விளைந்த பாவங்கள் தொலையும் பொருட்டு அசுவமேத யாகம் செய்யும்படி தருமரை ஏவினர். பாண்டவர்களை விட்டு நீங்கித் திருதராட்டிரன் தவஞ் செய்கையில் அங்குச் சென்று அவனைத் தேற்றினர்; இறந்த மைந்தரைச் சொர்க்கத்தினின்றும் வரவழைத்து அவனுக்குக் காட்டினர்; திருதராட்டிரனைக் காண வந்திருந்த பாண்டவர்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டுக் கர்ணன், அபிமன்னன், அரவான் முதலானவர்களைச் சொர்க்கத்தினின்றும் வருவித்துக் காட்டியருளினர்.

காசி க்ஷேத்திரம்

ஸ்ரீ வேதவியாசர் தினந்தோறும் உச்சிவேளையில் மாறுவேஷத்தோடு காசிக்கு வந்து, மணிகர்ணிகா கட்டத்தில் கங்கையில் நீராடி, ஸ்ரீவிசுவேசுவரரைத் தரிசிப்பது வழக்கம். இவர் கள்விற்பவனைப்போல நான்கு நாய்களுடன் வருவாரென்றும், நடக்கும் வழியில் உமிகிடந்தால் அதனைத் தாண்டிச் செல்லமாட்டா ரென்றும் கேட்டு ஸ்ரீ வித்தியாரணிய சுவாமிகள், அந்த அடையாளங்களைக் கொண்டு, ஸ்ரீ வியாசபகவானைக் காசியில் தரிசித்தார். ஒரு சமயத்தில் ஸ்ரீ வேதவியாசர் தம் மாணுக்கர்களுடன் காசி நகரில் பிக்ஷை யேற்கப் புறப்பட்டார். பிக்ஷை கிடையாததுகண்டு இவர், கையிலிருந்த ஓட்டை எறிந்து விட்டுக் காசிநகரைச் சபிக்க நினைத்த

வுடனே ஸ்ரீ அன்னபூர்ணி யம்மை பிரத்தியக்ஷமாகி அன்ன மளிக்க, அதனை உண்டு திருப்தி யடைந்தார்.

வியாச ஆச்சிரமம்

ஸ்ரீவேதவியாச பகவானுடைய ஆச்சிரமம் பதரிவனத்தில் இருக்கின்றது. பதரிவனமாவது இலந்தைமரக் காடு. இஃது இமயமலைக்கு அருகில் ஸரஸ்வதீ நதியின் மேற்குக் கரையில் உள்ளது. இது புண்ணிய க்ஷேத்திரம். இதனில் அநேக முனிவர்கள் தவச்சாலை அமைத்துக்கொண்டு வசிப்பார்கள். இதனில் 'பதரீநாதர்' என்னும் விஷ்ணு மூர்த்தியின் ஆலயம் இருக்கின்றது. இதனைப் 'பதரிகாச்சிரமம்' என்றும், 'பதரீ நாராயணம்' என்றும் சொல்லுவார்கள். முன்னர் நரநாராய ணர்கள் தவஞ் செய்த இடமும் இதுவே. கிருஷ்ணத்துவை பாயன வியாசர் சிரஞ்சீவிகளில் ஒருவர். இவரை கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ சங்கராசாரியரும், 11-ஆம் நூற் றாண்டில் ஸ்ரீ இராமாநுஜாசாரியரும், 12-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ மத்துவாசாரியரும், 14-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ வித்தியா ரணிய சுவாமிகளும், 16-ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ வல்லபா சாரியரும் தரிசித்தார்கள் என்று அறிகிறோம்.

சித்தர்கள்.—1. அகஸ்தியர், 2. போகர், 3. கோரக்கர், 4. கைலாசநாதர், 5. சட்டைமுனி, 6. திருமூலர், 7. நந்தி, 8. கூன் கண்ணர், 9. கொங்கணர், 10. மச்சமுனி, 11. வாசமுனி, 12. கூர்மமுனி, 13. கமலமுனி, 14. இடைக்காடர், 15. புண்ணாக்கீசர், 16. சுந்தரானந்தர், 17. உரோமரிஷி, 18. பிரமமுனி (இவர்கள் பதினெண் சித்தர்களாவர்).

2. ஸ்ரீமத் சங்கராசாரியர்

ஜ ன ன ம்

இந்த மகான் கி.பி. 677-ஆம்* ஆண்டுக்குச் சரியான ஈசுவர வருஷம் வைகாசி மாதம் சுக்கில பக்ஷம் பஞ்சமி பானுவாரம் திருவாதிரை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் கேரளதேசத்தில் காலடி என்னும் பெயர்பெற்ற அக்கிரகாரத்தில் பூசுரோத்தமரான சிவசுவாமி (சிவகுரு) என்பவருடைய பத்தினி சதீதேவி (ஆரியாம்பாள்) யின் கர்ப்பத்தில் உற்பவித்தார். அந்த ஆண்டு கலி 3058-க்குச் சரியான விக்கிரம சகம் 14-ஆவது. தந்தை மிக்க சந்தோஷத்தோடு மகனுக்கு ஜாதகர்ம நாமகரணாதிகளை முறைப்படிச் செய்து, மூன்ரும் வயதில் சௌள கர்மாவும் செய்வித்துப் பின்பு சொர்க்கபதம் சேர்ந்தார். சதீதேவியானவள் தன்னுடைய பதிதேவருக்கு உத்தரக்கிரியாதிகளை மகனைக்கொண்டு செய்வித்து, அவனுடைய வித்தியாபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தனள். திரிசூருக்கு அருகில் "பழூர்ப் பனை இல்லம்" என்ருெரு நம்பூதிரிக் குடும்பம் இருக்கின்றது. சங்கருடைய தாயார் பிறந்த குடும்பம் இதுவே யென்று மலையாளப் பிரதேசத்திலுள்ளவர்க ளெல்லாரும் எண்ணுகிருர்கள். அவ் வம்மைக்குத் தகனக்கிரியை செய்த

---

* இந்தக் கால மதிப்பு தவறென்றும், ஸ்ரீசங்கர பகவத்பாதாசாரியர் ஏறக்குறைய 2420-வருஷங்களுக்கு முன்ஞல் அவதரித்திருக்கவேண்டு மென்றும் இற்றைநாள் ஆராய்ச்சி வல்லோர் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

இடமென்று அங்கோர் இடத்தை இன்றைக்குஞ் சுட்டிக் காட்டுகிறார்கள்.

மற்றும், இமாலயத்துள்ள பதரிகாச்சிரமத்தில் நாராயணாலயத்து அர்ச்சகர் நெடுநாளாக நம்பூதிரிப் பிராமணராகவே இருக்கிறார். வேறு எவரும் இங்கு அர்ச்சகராக இருந்ததில்லையென்பது பிரசித்தம். இந்த ஆலயம் சங்கரால் ஏற்படுத்தப்பட்டதென்று சொல்வதனால், இவர் தம் பந்துக்களி லொருவரை அர்ச்சகராக இங்கே ஆதியில் நியமித்திருத்தல் கூடும். இவ்வாறு சங்கரர் கேரளநாட்டு நம்பூதிரி வகுப்பைச் சேர்ந்த பிராமணர் என்பதற்குப் போதுமான அத்தாட்சிகள் இருக்கின்றன.

அற்புத லீலைகள்

இவரது குழந்தைப் பருவத்தில் நாகம் ஒன்று இவரைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்து, பலரும் காண விபூதி ருத்திராக்ஷமாக உருமாறியது. இவரிடமிருந்த சிவச்சின்னம் முதலியவற்றைக் கண்ட தந்தை முதலியோர் இவருக்குச் 'சங்கரர்' என நாமகரணஞ் செய்தனர். இவர் குழந்தைப் பருவத்தில் ஒருநாள் மறைந்துபோய்ப் பூசுணைக்காயிலிருந்து வெளிவந்தனர்; சிவ நிர்மாலியம் தம்மீது இருக்கக் காட்டினர்; சுழல் காற்றில் ஆகாயத்தில் மறைந்தனர்; எட்டுக் குழந்தைகளின் உருவாகத் தோன்றிப் பின் ஒரு குழந்தையாக விளங்கினர். பாடலேசுவரர் திருத்தேர்விழாக் கொள்ளத் தேரின்மீதிருந்த விக்கிரகம் மறைந்துபோயிற்று. அதன் ஸ்தானத்தில் சங்கரர் தாமே குழந்தையாகத் தேரின்மீது இருந்தனர். இவர் இன்னும் பல அற்புதங்களைக் குழந்தைப் பருவத்தில் புரிந்து வந்தனர். தந்தை இறக்க, அவரைச்

சிதைமேலிட்டுச் சங்கரர் ஒரு தருப்பைப் புல்லைக் கிள்ளி அதன்மீது இட்டனர்; அது தீப்பற்றி நறுமணம் வீச, தந்தைக்குக் கருமம் முடித்தனர்.

பிரம்மசரியம்

கர்ப்பாஷ்டமத்தில், அஃதாவது, 7-ஆம் வயது பூர்த்தியானவுடனே சங்கரருக்கு உபநயன ஸம்ஸ்காரம் நடந்தேறியது. அது முதல் இவர் குரு சேவை செய்து கொண்டு வேதவேதாங்காதிகளைப் பயின்று வந்தனர். ஒரு நாள் தம்முடன் படிக்கும் பிள்ளைகள் சிலருடனே பிக்ஷான்னம் வேண்டப் புறப்பட்டு, வறுமையினால் மிக வருந்தும் அயாசித தீக்ஷிதர் என்னும் அந்தணருடைய மனைக்குட் புகுந்து, "பவதி பிக்ஷாந் தேஹி" என வேண்டினர். அந்த மனைமாது சங்கரரைப் பார்த்து, "ஐயா, பிரம்மாசாரியே! கஞ்சிக்குங் கதியில்லாத பரம தரித்திரர்களாயிருக்கும் எங்கள் இல்லத்திற்கு வந்தனையே. பிக்ஷான்னம் இடுமளவு புண்ணியம் எனக்கு இல்லையே" என்று சொல்லிக்கொண்டே ஒரு நெல்லிக்கனியைச் சங்கரருடைய சோளிகையிற் போட்டு, வருந்தி நின்றனள். அப்போது இவர் கருணை மிகுந்தவராய் அந்தக் கணமே ஸ்ரீதேவியைப் பக்தி பரவசராகத் தமது சொந்த கவித்துவததால் துதித்தனர். பராசக்தி பிரத்தியக்ஷமாகி, "என்னால் ஆகத்தக்கது என்ன?" எனக் கேட்கச் சங்கரர், "இம் மனையாருக்கு வறுமை நீங்குமாறு அனுக்கிரகம் புரிதல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தனர். இவருடைய பரோபகார புத்திக்கு மெச்சி இலக்ஷ்மீதேவி, "அங்ஙனமே ஆகுக" என்று அருளி மறைந்தனள். உடனே அம் மனைநிரம்பப் பொன் நெல்லிக்கனிகள் தோன்றின. இவ் வற்புதத்தைப் பார்த்தவர்களெல்லாரும் மிக ஆச்சரியமடைந்தது ஆச்சரியமோ?

அங்கிருந்து புறப்பட்டுச் சங்கரர் தம் சகபாடிகளோடு குரு வின் சந்நிதிக்கு ஏகி, எப்பொழுதும்போல வித்தியாப்பி யாசஞ் செய்துகொண் டிருந்தனர்.

அகஸ்தியரது அறிக்கை

மிக்க காந்தியோடுகூடி வளர்ந்து விளங்கும் தன் அருமை மகனுக்குக் கலியாணம் செய்விக்க வேண்டுமென்று சதீதேவி நிச்சயித்துக்கொண் டிருக்கையில் மகாத்துமா வாகிய அகஸ்தியமா முனிவர் அவளைத் தேடிவந்து, "அம்மா! உன் மகன் எல்லாச் சாஸ்திரங்களிலும் வல்ல மகா மகிமை யுடையவனே யாவன். ஆனல். பூர்ணாயு ளில்லாதவன்" என்று சொல்லி நீங்கினர். கர்ண கடூரமான அந்த வாக்கி யத்தைக் கேட்டுச் சதீதேவி துக்க சாகரத்தில் மூழ்கியிருப் பது சங்கரருக்குத் தெரிந்தது. உடனே இவர் தம் தாயி னண்டை போய், அவளுக்கு உண்டாயிருக்கும் துக்க கார ணத்தை விசாரிக்க, "குழந்தாய்! எனக்கு அகாலத்தில் புத்திர சோகம் பிராப்தி யாகுமாம். ஆனதனல் எனக்கு உலகமுழுதும் இப்பொழுதே பிரளயத்தினல் மூடப்பெற்றது போலிருக்கின்றது" என்று சதீதேவி பெருமூச்சுவிட்டுப் பதிலுரைத்தனள். சங்கரர் புன்னகைகொண்டு, "அம்மா! இதற்காக இவ்வளவு சிந்திக்கவேண்டுமா? அப்படியானல், எனக்குச் சமுசாரபந்தம் தப்பிப்போகும். அந்த மிருத்துவை அகற்ற வேண்டுமானல், நான் சந்நியாசத்தை மேற்கொள்ள வேண்டும். இங்ஙனம் செய்வதற்கு உத்தரவு கொடு" என்ன லும், "ஏக புத்திரனகிய நீ துறவியானல் எங்களுக்கு எள்ளும் நீரும் விடுவார் இல்லாமற்போகும். அந்த ஆலோசனையை விட்டுவிடு" என்று சதீதேவி மறுமொழி பகர்ந்து மகனைச் சமாதானப் படுத்தினள். பின்பு, சங்கரர் வித்தியாப்பியாசஞ்

செய்வதற்குப்போய், அதிமேதாவியான தம் புத்தியின் கூர்மைக்குத் தக்கவாறு வேதாந்த சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்று நற்பெயர் படைத்திருந்தனர். ஆனால், கல்வி பயிலுங் காலமெல்லாம் இவருடைய மனம் துறவறத்தின்மீதே நாட்டங் கொண்டிருந்தது.

மாதுரு சேவை

“தாயினுமிக்க தெய்வமில்லை” என்னும் உண்மையைச் சங்கரர் இயற்கையறிவாலுணர்ந்து தெளிந்தவராவர். நாம் தெரிந் துள்ளபடி தாயார் — பாராட்டுந் தாய், ஊட்டுந் தாய், முலைத் தாய், கைத் தாய், செவிலித் தாய் என ஐவராவர். அன்றியும், அரசனது தேவி, குருவின் தேவி, அண்ணனது தேவி, தன் தேவியை யீன்றாள், தன்னை யீன்றாள் என்னும் ஐவரும் தாய்மார்களாவர். ஆனால், சங்கரர் தம்மை ஈன்ற தாயையும், தம்மை யீன்ற தேசத்தையுமே தாய்மாராகக் கொண்டனர். இவ் விருவருக்கும் சேவை புரிவதே தமது முதற் கடமையென இவர் எண்ணி நடக்கலாயினர். இவ் விரண்டனுள் தேசசேவை பெரிதாயினும், ஈன்ற தாயின் சேவை முதற்கடமை யென்பது இவரது துணிபு. இப்படிப்பட்ட கொள்கையினராய் இவர் தாயாருக்குப் பணிவிடை செய்வதில் மிக்க உற்சாகங் காட்டினர். தாயினிடத்து இவருக்குப் பக்தி அதிகம். அவளுடைய சௌக்கியத்திற்கும் திருப்திக்கும் ஏற்ற காரியங்களை ஏவா முன்னர்ச் செய்யும் இயல்புடையவராய் இவர் மாதுரு சேவை செய்து வர்னர். ஒரு நாள் நதியில் நீராடும் பொருட்டுத் தாயாரை அழைத்துச் செல்லுகையில், சிறிது தூரம் சென்ற தாயார் முன் நடக்கமாட்டாளாய்க் களைத்து வ மரத்தி னடியில் இளைப்பாறலுற்றாள். அருகி

கரர் அவளுக்குச் சைத்தியோபசாரம் செய்து, அவளுடைய களையைத் தீர்த்தனர். அவள் கண்ணை விழித்துக்கொண்ட வுடனே, சிறிது தூரத்திற்கு அப்பால் ஓடும் பூர்ணா நதியைப் பார்த்து, இன்னும் அவ்வளவு தூரம் நடக்க வேண்டுமே யென்பவளைப் போலக் குறிப்பாக ஆயாசப்பட்டனள். தாயின் குறிப்பை யறிந்த சங்கரர் பூர்ணாநதியை நோக்கித் தம் கண் ணிமையினால் சைக்கினை செய்து அழைத்தனர். உடனே, அந்த ஆறு தன் மார்க்கத்தை விட்டு விலகிச் சங்கரரை நோக்கிப் பாய்ந்தோடி வந்தது. அண்மையில் ஆற்றைக் கண்டு தாயார் மகிழ்ந்து, தநயனை வாழ்த்தி, நீராடி இன்புற் றாள் : அன்று முதல் இன்றுவரையில் அந்தப் பூர்ணையாறு காலடி கிராமத்தையடுத்தே பாய்ந்துகொண் டிருக்கின்றது.

அருட்செயல்

ஆற்றின் போக்கு மாறியது எல்லாரும் கண்டு அதிசயிக் கத்தக்க தல்லவா? அவ் வருங்காரியம் இயற்றியவர் சிறுபிரா யத்தவராயினும் பெரியமகானாக இருக்கவேண்டும் என்று ஜனங்கள் நினைக்கலானார்கள். இதற்கு முன்னால் சங்கரர் செய்துகாட்டிய அற்புதங்களையும் எண்ணி, இவர் செய்வன வெல்லாம் அருட்செயல்களென வோர்ந்து ஜனங்கள் இவ ருடைய மகிமையைப் பாராட்டினார்கள். அப்பொழுதே இவ ரிடத்து ஜனங்களுக்குப் பக்தியும் பணிவும் உண்டாயின. வருடைய அருமை பெருமைகளைக் கேட்டு, அந் நாட்டு ன் இவருடைய தரிசனத்தை நாடிப்பெற்று, இவரை கௌரவித்தனன். பின்பு, இவர் சத்தியவந்தன் என் சனுக்கு அவனுடைய வேண்டுகோளால் புத்திரப் ாக ஆசீர்வதித்தருளினர்.

துறவறம்

புத்திக் கூர்மைக்காகவும், கல்வித் திறமைக்காகவும் அருட்செயல்களுக்காகவும் ஓர் இளைஞனை ஊரார் கொண்டாடுவார்களானால், அவன் இறுமாப்புக் கொள்ளுதல் கூடுமல்லவா? சங்கரர் அப்படியில்லாமல் மேலும் மேலும் வைராக்கியம் மிகுந்தவராய்த் துறவறத்தையே நாடிக்கொண் டிருந்தனர்; பற்றை யொழித்துப் பலருக்கும் உழைப்பதற்குச் சமயம் எப்பொழுது வாய்க்குமோ வென்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர். ஒருநாள் பூர்ணையாற்றில் இவர் நீராடிக்கொண் டிருக்கையில் ஒரு முதலை இவருடைய காலைக் கவ்வியது. 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பது எல்லாருக்கும் தெரியுமே. சங்கரர் முதலைக்கு இரையாவாரென்று ஆற்றங்கரையி லிருந்தவர்கள் அலறி அவயமிட்டார்கள். அந்தச் செய்தியைக் கேட்டுத் தாயாராகிய சதீதேவி 'ஹோ!' என்று அழுதுகொண்டு ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தனள். சங்கரர் இனித் தாயாருக்குப் பிள்ளையாகா ரெனத் தோன்றியது. இவர் தம் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்வதற்கு இதுவே சமயமெனக் கொண்டு தாயாரை நோக்கி, "அம்மா! எனக்கு அவமிருத்து நேரும்போ லிருக்கிறது. இனி நான் உலகத்து ஆசையை ஒழிக்க வேண்டியவனாகிறேன். நீயும் என ஆசையை மறக்கவேண்டியவளாகின்றாய். ஆனால், இந்த ஆபத்து வேளையில் சந்நியாசம் மேற்கொள்வேனானால், ஜன்மம் வேறாகும்; அவமிருத்துவும் பரிகாரமாகும். அப்படி இல்லை யெனின், மறுமையிலேனு
எனக்கு நற்கதி வாய்க்கும் பொருட்டு நான் ஆபத்
யாசம் ஏற்பதற்கு அனுமதி யருள்வாய்" என்றனர்.
வார்த்தையைக் கேட்டு அன்னை வேறு மறு
மாட்டாதவளாய்த் தடக்கென, "அப்படியே

செய்! அப்பா, அருமை மைந்தா! அதனால் நீ கண்டம் நீங்கி உயிர் தப்புவாயென்று நம்புகிறேன். எங்ஙனமாவது ஆபத்து விலகி நீ வாழ்வுறுவதே எனக்குத் திருப்தி. துறவியாயினும் நீயே எனக்குரிய தேக ஸம்ஸ்காரஞ்* செய்தல் வேண்டும்" என மொழிந்து புலம்பினள்.

இவ்வாறு சங்கரர், கொண்ட கோள் விடாமல், அன்னையின் அனுமதிபடைத்து, வைராக்கிய பாவனையினால் அவ்விடத்தே துறவறம் மேற்கொண்டனர். இவருடைய காலைக் கவ்விக்கொண் டிருந்த முதலை இவரை விட்டு அகன்று, புருஷ வடிவங்கொண் டெழுந்து இவரைப் பார்த்து, "என் ஐயரே! யான் சுக்கிராகி என்னும் கந்தருவன். நாரதருடைய சாபத்தினால் எனக்கு முதலைப் பிறப்பு வாய்த்தது. தமது பாதஸ்பரிசத்தினால் அந்தச் சாபம் பரிகரிக்கப் பெற்றேன். என்னை உய்வித்தருளிய உத்தம குருவே! இனி யான் என் இருப்பிடத்திற்குத் திரும்பிப் போகவிடை கொடுத்தருளும்" எனப் பிரார்த்தித்து விடைபெற்றுச் சென்றது.

யோகதீக்ஷை

இவ்வாறு பிராணுபத்தை முன்னிட்டுச் சந்நியாச சங்கற்பம் மேற்கொண்ட சங்கரர் நீரில் மூழ்கித் துறவியாய் வெளியேறி, அன்னைக்கு அளித்த வாக்கை யுறுதிப் படுத்தி அவ் வம்மையைத் தமக்குரிய சொத்துக்களுடன் ஒக்கல்-[illegible]ல் ஒப்புவித்துக் காலடிக் கிராமத்தை நீத்து, தமக்குக் [illegible] சந்நியாச மருளத்தக்க குருவைத்தேடி வெளியேறினர். [illegible]ில் இந்தியாவில் அங்கங்கே கல்விக்கழகங்கள் நடை

* [illegible]க ஸம்ஸ்காரம் = அபரக்கிரியை, சவச்சடங்கு.

பெற்றுவந்தன. அவைகளில் பிரபல வித்துவான்கள் தலைமை பூண்டு கல்வி கற்பித்து வந்தனர். கல்வித் துறையில் ஒவ்வொரு கலையை ஒவ்வொருவர் அபிவிருத்தி செய்து, அதனிற் சிறப்பெய்தி, ஒவ்வொரு கழகத்தைத் தாபித்திருந்தனர். அப்படிப்பட்ட மூல புருஷரை யடுத்துப் பரம்பரையாக அந்தக் கலையைக் கற்பித்துவரும் கன பண்டிதர்கள் இருந்தார்கள். பாதராயண "வேதாந்த சூத்திரங்கள்," ஜைமினி "கர்ம சூத்திரங்கள்" முதலான ஒவ்வொரு தரிசனத்தையும் திறமையாகப் போதிப்பதிற் பெயர் பெற்ற கல்விச்சாலைகள் அநேகம் இருந்தன. அத் தரிசனங்களின் இரகசியங்களையும் உண்மைகளையும் ஆதியிலிருந்து குரு-சிஷ்ய பரம்பரைக் கிரமமாகக் கற்று வளர்ந்த ஆசிரியர்கள் வாய்மொழியாகப் போதித்துக் காப்பாற்றி வந்தார்கள். அத் தகைய கழகங்களுள் நர்மதா தீரத்திலிருந்த தொன்றைச் சங்கரர் அடைந்தார்.

அஃதொரு தவச் சாலையே போலும். ஸ்ரீ கோவிந்த பகவத் பாதர் என்னும் பிரசித்தி பெற்ற துறவியே அதற்குத் தலைவ ராவர். இவருடைய ஆசிரிய ராகிய நற்கீர்த்தி வாய்ந்த கௌடபாதர் என்பவர் இவருக்குமுன் அவ் வாச்சிரமத் தலைவராய்ச் சீடர்களுக்குக் கல்வி கற்பித்து வந்ததாக நாம் ஊகிக்க வேண்டி யிருக்கிறது. கோவிந்த பகவத் பாதர் தம் தத்துவ சித்தாந்த மர்மத்தைச் சங்கரருக்குப் போதித்தருளினார் என்பதைத் தவிர இவரைப்பற்றி நமக்கு வேறொன்றும் தெரியாது. ஆனால், சங்கரர் அருளிச்செய்த கிரந்த மொவ்வொன்றிலும் தாம் "ஸ்ரீ கோவிந்த பகவத் பாதருடைய சிஷ்யர்" என்று மிகுந்த வணக்கத்தோடு ஒப்பம் வைத்திருப்பதனால், இவருக்குத் தம் குருவினிடத்திருந்த பக்தியும் நன்றியறிவும் மிக்க அதிகமென்பது நன்கு புலப்படுகின்றது. சங்கரர் தம் பரம குரு (குருவுக்குக் குரு) வாகிய

கௌடபாதரையும் மிக மரியாதையாக அங்கங்கே குறிப்பிட்டிருப்பதனால், கோவிந்த பகவத் பாதருக்குமுன் கௌடபாதர் அக் கழகத் தலைமை வகித்திருந்தன ரென்று ஒருவாறு நிச்சயிக்கலாம்.

சங்கரர் அவ் வாச்சிரமத்தை யடைந்து, கோவிந்த பகவத் பாதாசாரியருக்குப் பிரணமஞ்செய்து அஞ்சலிபத்தராய் நின்றனர். "நீ யாவன்?" என்று ஆசாரியர் வினவ, "கேரள நாட்டுப் பிராமணரான சிவகுரு என்பவரின் புதல்வன் யான். என் இளமைப் பருவத்திலே தந்தையார் காலஞ்சென்றமையின், என் தாயார் என்னை வளர்த்துவந்தாள். சாஸ்திரங்களில் எனக்குச் சாமானியப் பயிற்சி யுண்டு" என்று பதிலுரைத்துச் சங்கரர் முதலையின் வாய்ப்பட்டுத் துறவறமேற்றுத் தப்பித் தாம் வெளிப்போந்த விருத்தாந்தத்தையுஞ் சொல்லி, தமக்கு முறைப்படி சந்நியாசமீந்து உபதேசித்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்தார். அவ் வேண்டுகோட்கிணங்கி ஸ்ரீ கோவிந்த பகவத் பாதர் முறைப்படிச் சங்கரருக்குச் சந்நியாச தீக்ஷை செய்வித்து, ஸ்ரீ கௌடபாதரிடமிருந்து தாம் கற்ற தத்துவ ஞானத்தை இவருக்குப் போதிக்கலானார். எத்தனை காலம் சங்கரர் அவரிடத்துக் கலைபயின்றாரெனச் சொல்வதற்கு ஆதாரமில்லை. சங்கரர் கிருஷ்ணாலய மொன்றைத் தாபித்தனரென்றும், வேதியர் பொருட்டு ஆற்று வெள்ளத்தைக் கமலண்டலத்துள் அடக்கினரென்றும், ஆசாரியர் வெயிலில் வரக்கண்டு தம் கை வஸ்திரத்தை ஆகாயத்தி லெறியப் பற்றுவாரின்றி அது நிழல் செய்து வந்ததென்றும் சொல்கின்றனர். கலைபயின்று சங்கரர் யோக தீக்ஷையும் பெற்றபின்பு, இவர் முதலிற் காசிமா நகரத்திற் கேகி யங்கிருந்து அவனிசரராக * மதப்பிர

---

* அவனிசரர் = நாடுதிரிகிறவர்.

சாரகம் * செய்யும்படி ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர் கட்டளையிட்டனராம். பௌத்தமதம் பிரபலமாவதற்கு முன்னும் பின்னும் மதப்பிரசாரகர்கள் அநேகர் ஊர் தோறுஞ் சென்று மத போதனை செய்துவந்தார்கள். ஆதலின், சங்கரரும் அவ்வித மாகவே தம் மதத்தைப் போதிக்கத் தலைப்பட்டனர் போலும். மதப்பிரசாரகர்களுள் சிறந்தவரெனச் சங்கரரை இன்றைக்கும் இவருடைய சிஷ்யர்கள் மிகக் கொண்டாடுகிறார்கள்.

காசிவாஸம்

ஆசானது ஆக்கினையைச் சிரமேற்கொண்டவராய்ச் சங்கரர் காசிக்ஷேத்திர மடைந்தார். ஒவ்வொரு சாஸ்திரத்திலும் உயர்தரப் பாண்டித்தியம் வாய்ந்த உத்தம போதகாசிரியர்களும், தேச தேசங்களிலிருந்துவந்து ஆவலுடன் கல்வி கற்கும் வித்தியார்த்திகளும் நிறைந்த காசி நகரானது வித்தியாநிலையமாக விளங்கிக்கொண் டிருந்தது. அப்படிப்பட்ட கல்வியாளரின் சமூகத்தை யடைந்த சங்கரர் சின்னாளிலேயே தர்க்கத்திலும் தத்துவவாராய்ச்சியிலும் ஒப்பற்ற திறமை வாய்ந்தவரென உயர்வுற்றுத் திகழலானார். இவருடைய கல்விப் பெருமையைக் கேட்டுப் பல திக்குகளிலிருந்தும் அநேக மாணவர்கள் இவரை நாடி வரத் தலைப்பட்டனர்.

பதுமபாதர்

அங்ஙனம் வந்தடைந்த மாணவர்களுள் சோள தேசத்துப் பிராமணச் சிறுவன் ஒருவன் விசேஷ குணம் பொருந்தியவனாவன். அவனைச் சங்கரர் 'பதுமபாதன்' எனத்

---

* **பிரசாரகம் = பரவுதல்; மதப்பிரசாரகம் = தம் கொள்கை எங்கும் பரவும்படி செய்தல்.**

தீக்ஷா நாமமிட்டு நவமாணவ கோஷ்டியிற் சேர்த்துக் கொண்டனர். ஆசாரியரிடத்து அவனுக்கு அதிசய பக்தி உண்டாயிருந்தது. அவனுடைய குருபக்திக்கு மெச்சி ஆசாரியர் அவனை முக்கிய சிஷ்யனுகப் பாராட்டலானுர். இதனுல் மற்ற மாணவர்கள் பொருமை கொண்டிருப்பதை யுணர்ந்தவராய் ஆசாரியர் அவனுடைய குருபக்தியின் அரும் பிரபாவத்தை விளக்கிக் காட்டும் பொருட்டு மற்ற மாணவர்களின் முன்னிலையில் பதுமபாதனை நோக்கிக் கங்கையாற்றின்மீது நடந்து செல்லக் கற்பித்தனர். பதுமபாதன் பின்வாங்காமல், ஐயுருமல், குருவின் ஆணையைத் தர்க்கிக்காமல், அதன் சாத்தியாசாத்தியங்களைச் சிறிதும் எண்ணுமல், அதனை நிறைவேற்றுவதே தனக்குக் கடப்பா டெனக் கொண்டு, 'ஸ்ரீ குரு பாதமே துணை' எனத் திடமாக நம்பி அந் நீர்த் திரள்மீது நிலத்தில் நடப்பதுபோல நடந்துபோய் மீண்டனன். அவன் நீரின்மீது வைத்த அடி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பதுமம் மிதப்பதுபோலத் தோன்றிய காரணத்தால் அவன் 'பதும பாதன்' எனப்பட்டனன் என்பர். பக்தியின் பெருமை மிகவும் பெரிது பெரிதே.

நூல் தெரித்தல்

சங்கரர் நூல்கள் இயற்றத் தொடங்கியது இக் கல்வி நிலையத்திலேயாம். ஆனுல், நூல்களை இவர் எந்த வரிசைக் கிரமத்தில் எழுதினு ரென்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும், முதன் முதல் சிறிய நூல்க ளெழுதிப் பின்னர்ப் பெரிய நூல்களை ஆக்கியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. முதன் முதலில் இவர் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்குப் பாஷிய மெழுதியதாகச் சொல்லிக்கொள்கிருர்கள். அஃது அங்ஙனமே ஆதல் கூடும். அவ் வாயிரம் பெயர்க

ளுக்கு இவர் பொருள் கூறி யிருப்பது மிகமிடுக்காகவும் அழகாகவும் இருக்கின்றது. இனி இவர் கைப்பட வரையப் பெறுவன எத் தன்மையனவா மென்பது அந்தப் பாஷியத்திலே தெரிகின்றது. உபநிஷத்துக்களுக்கும், பகவத் கீதைக்கும், வேதாந்த சூத்திரத்திற்கும் பாஷியம் அமைக்கு முன் இவர் பல்வேறு சிறு நூல்களைப் பொறித்திருத்தல் வேண்டும்.

"மநீஷா பஞ்சகம்"

அவ்வவ் வமயங்களை யனுசரித்துச் சங்கரர் அநேக சிறு நூல்களை அருளிச்செய்தன ரெனத் தெரிகிறது. உதாரணமாக, ஒரு தினம் மாத்தியான்னிக ஸ்நானத்தின் பொருட்டு இவர், தம் சீடர்கள் சூழ, மணிகர்ணிகா கட்டமென்னுங் கங்கைத் துறைக்குப் போய் மீளுகையில் பஞ்சம னொருவன் நான்கு நாய்களைச் செலுத்திக்கொண்டு அண்மையிற் படர்ந்தான். மலையாளத்துப் பிராமணர்களுடைய சம்பிரதாயத்தின்படி புலையனை விளித்துப் பாட்டையை விட் டொதுங்குமாறு சீடர்கள் சொற்றனர். புறம் போகாது புலையன் திரும்பி, அத்துவைத மோதும் ஆசிரியர் இத்தகைய அந்தரம் *வகுத்தல் அடுக்குமோவென வினவி, "சுவாமி, யதிபதியே! யான் புலையனென ஊகித்தீர்கள் போலும். புலைமை வாய்ந்தது என் தேகமோ, ஆன்மாவோ? அன்னமய கோசமாம் இத் தேகத்திற்கேனும் சர்வ சாக்ஷியாம் ஆன்மாவிற்கேனும் அப் பெயர் பொருந்துமோ? உற்று நோக்குழி பேதபாவனை பிரமையி னிகழ்ந்த கற்பனை யாகுமே. வஸ்து ஒன்றேயாமன்றோ?" என்று அப் பஞ்சம வேடதாரி கடாவ, ஆசாரியர் விழிப்புற்று அன்னவன் கூற்றின் உண்மையை உவந்து,

* அந்தரம் = வித்தியாசம்.

"மநீஷா பஞ்சகம்" என்னும் ஐந்து அற்புதமான சுலோகங் களை இயம்பி யருளினர். இந்தச் சுலோகங்கள் ஒவ்வொன் றின் இறுதியிலும், "பிரபஞ்சத் தோற்றங்க ளனைத்தையும் ஏகான்ம வடிவமாகத் தெரிகிறவன், சண்டாளனுயினும் துவி-ஜனுயினும், * அவனே எனக்கு உண்மையிற் குரு வாவன். இதுவே எனது கொள்கை ('ஏஷா மநீஷா மம')" என்னும் சித்தாந்தம் யாவருமறியச் சாற்றப் பட்டுள்ளது.

உற்ற கொள்கையை இங்ஙனம் உலகறிய ஆசாரியரைச் கொண்டு ஓதுவித்த மாதங்கன் உடனே தன் மாறுவேடந் தவிர்த்து மாதேவனுகக் காட்சி தந்தருளினன; நாய்களும் நான்கு வேத புருடர்களாக விளங்கின. அவ் வருட் காட்சி யைக் கண்ணுற்ற அத்தன் ஷட்குணைசுவரிய சம்பன்னனுய அச் சந்திரமௌலியைப் பஜித்துப் பக்தி பரவசராய் நிற்க ஈசுவரன், "யதிச்சிரேட்டனே! எமது அம்சாவதார னென வறிந்த நீ இன்னணம் எம்மிடம் விகற்ப முன்னல் வண் மையோ? வியாசர் வரிந்துள்ள பிரம்ம சூத்திரங்களுக்குப் பொருள் கூறப் போந்த புலவர் பலர் விபரீதார்த்தங்களை வழங்குவா ராயினர். அந்தச் சூத்திரங்களின் உண்மைப் பொருளை விளக்குவான் நீ விரைந்தோர் பாடியம் இயற்றக் கடவை" எனச் சாசனபூர்வகமாக மங்களாசாசனஞ் செய்து கரந்தருளினர்.

"பஜ கோவிந்தம்"

சங்கரர் அருளிய சிறு நூல்களுள் மற்றென்றாகிய "பஜகோவிந்தம்" என்பது விஸ்தாரமாக எல்லாராலும் பாராட் டப்படுகின்றது. இது பன்னிரண்டு சுலோகங்களா லாயது. ஒவ்வொரு சுலோகத்தின் இறுதியிலும், "கோவிந்தனைப் பஜி,

* துவிஜன் = இருபிறப்பாளன்.

கோவிந்தனைப் பஜி, கோவிந்தனைப் பஜி, மூடமதியோனே! குறிப்பிட்ட காலத்தில் கூற்றுவன் எதிர்ப்பட்டு இழுக்கும் போது வியாகரண சூத்திர படனம் உன்னை இரக்ஷிக்க மாட்டாது" எனப் பொருள்படும் பல்லவி போன்ற வாக்கியங்களைச் சேர்த்து இந்தச் சுலோகங்களைப் பாட வேண்டும். மாணவ னொருவன் மிக்க ஆர்வத்தோடு வியாகரண சூத்திரங்களை நெட்டுருப்போட்டுக்கொண் டிருக்கக் கண்ட ஆசாரியர், ஆத்துமா கடைத்தேறுவதற்கு அக் கல்வி சிறிதும் பயன் படாதென்பதை அவனுக்கு வற்புறுத்துவராய்ச் சடக்கென இச் சுலோகங்களைக் குயிறலுற்றார். இவை இன்றைக்கும் இன்னிசையோடு எல்லாராலும் பாடப் படுகின்றன. உலகத்தினிடத்துற்ற மோகத்தைக் களையவல்லதானமையின் இச் சிறு நூல் "மோக முத்கரம்" (மோக மென்னுங் காட்டை வெட்டி யழிக்குங் கோடரி) எனப்படும்.

சூத்திர பாஷ்ய சோதனை

இங்ஙனம் சில்லாண்டுகள் சங்கரர் காசி க்ஷேத்திரத்தில் தங்கியிருந்து பன்னூல்களைப் பண்புற இயற்றி, ஆண்டுள்ள பண்டித பிரமுகர்கள் பலர்பால் காட்டிப் பன்முறை தர்க்கித்துத் தெளிந்து, உசிதமாந் திருத்தங்களை உவகையோடிசைத்து உலகமீடேறத் தந்தருளினர், சந்தடி நீத்துச் சாந்தமா யமர்ந்து செய்யத்தக்க கிரந்தங்களின் பொருட்டு இவர் இடையிடையே பதரிவனத்திற்குச் சில முக்கிய சீடர்களுடன் எழுந்தருளி, அங்குத் தங்கி அவைகளைத் தீர்க்க திருஷ்டியோடு தீட்டினர். இன்னணம் காசியில் உறையுமொரு நன்னாள் தன்னில் வேதாந்த சூத்திர கர்த்தாவாகிய வியாச பகவான் முதுவருருக்கொண்டு ஆசாரியரது ஆச்சிரமத்தை யண்மி, இன்னவர் வேதாந்த சூத்திர பாஷிய மெழுதி

யதை இவர்தம் சீடராலுணர்ந்து, எளிதின் விள்ளப்பெறாத விஷமபதமொன்றை முன்னிட்டுச் சங்கரரொடு வாதந் தொடுத் தனர். வாரம் ஒன்றாகியும் இவ் விவாதம் முற்றுறாததைக் கண்ட பதுமபாதர் இடையில் இவர்ந்து, "சிவ விஷ்ணுவவதார விசேஷர்களாய வல்லாளரிருவரும் வழக்குத் தவிர்ந்து இனியேனும் இவ் வையகத்திற்கு அமைதி யருள்வீர்களாக!" எனப் பிரணாம பூர்வகமாகப் பிரார்த்தித்தனராம். சங்கரருடைய வேதாந்த சூத்திர பாஷியத்துப் பற்பல பகுதிகளின் விஷயமாக இவ்வித நெடுந் தர்க்கங்கள் நிகழ்ந்தன வெனவும், எதிர்வாதங்களைத் தழுவி இவர் சிற்சில இடங்களில் தாம் கொண்டிருந்த கோள்களை ஒருவாறு மாற்றி இணக்கமாகப் பொருளிசைத்துக் கூறினரெனவும் இதனால் நாம் ஊகிக்கத் தகும். மேற்சொல்லியவாறு வாதமாடிய வயோதிகர் வியாசரா யில்லாவிடினும், வியாசருக் கிணையான வித்தையும் விவேகமும் யோக்கியதையும் வாய்ந்தவரெனலும், எளிதில் வெல்ல வொண்ணாத திறலமைந்தவ ரெனலும் திண்ணம். அஃது எங்ஙனமாயினும், வேதாந்த சூத்திரங்களின் முக்கியாமிசங்களில் இத்தகைய தர்க்கங்களினால் சங்கரர் தெளிவுற்றுத் தேர்ந்தவராய், வாதத்தில் எவரையும் எதிர்த்து அத்துவைதமார்க்கத்தை அதிர்த் தோதப் போந்தனர்.

விஜய யாத்திரை

முக்கியமான பெரிய கிரந்தங்களை இவ்விதமாக எழுதிப் பூர்த்திசெய்து பழுதறச் சோதித்து வாதத்தில் நிலைநாட்டி, மாணவர்களுக்கும் பாடமோதிய பின்னர்ச் சங்கரர் அநேக சிஷ்யகணங்கள் பற்பல நூற்றுறுதிகளோடு சூழ்ந்துவரக் காசிமாநகரை நீத்துத் திக்குவிஜயத்தின் பொருட்டாய் எழ

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசாரியர்

தருளினர். அப்போது இரத்தின சிங்கன் என்னும் காசி ராஜன் ஆசாரியரைத் தன்னுடன் காசியிலே இருக்கும்படி பலவாறாகப் பிரார்த்தித்தனன். "குருவின் ஆணையைக் கடக்க வொண்ணாது. அவருடைய கட்டளைப்படி இத் தேசம் முழுதும் சஞ்சரித்துத் தர்மப் பிரசாரஞ் செய்வதே எனது கடப்பாடு" எனக் கூறி, ஆசாரியர், அவ் வரசனால் அளிக்கப் பட்ட பலவகை எடுபிடி பிருதாவளிகளுடன் அவணீத்து ஆசாரிய முறையில் விஜய யாத்திரை மேற்கொண்டனர். அத் தருணம் இவருக்கு 25-வயதுக்கு அதிக மிருக்கலாமென்று சொல்லலாம்.

குமாரில பட்டர்

பௌத்தம், சார்வாகம் முதலான மதங்களை யெல்லாங் கண்டித்து அத்துவைதத்தை யுபதேசித்து அனைத்துயிர்களை யுங் கடைத்தேற்றுவிக்கக் கங்கணம் பூண்ட ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அஞ்ஞான மென்னும் அந்தகாரத்திற்கு ஆதித்திய வடிவமாகத் தோன்றினர். இவர் முதன் முதலில் தங்கியது பிரயாகை (அலகபாது) க்ஷேத்திரத்திலாகும். அங்கே திரிவேணிசங்கமத்தில் தீர்த்தமாடி, அனுஷ்டான முடிவில் இவர் தம் பெற்றோர்களையும் ஸ்மரித்தனர். பின்பு, நதிக்கரையில், சீடர்கள் புடைசூழ, மரநிழலில் இவர் இளைப் பாறுவான் அமர்ந்திருக்கையில், பூர்வமீமாம்ச சித்தாந்த வீரரும், வடஇந்திய பௌத்த மத நாசகருமா, பெருமபுகழ் அடைந்தவரும், பிரசித்த பிரபாவமுடையவருமான பட்டர் தீயினுக்கு இரையாகத் துணிந்துள்ளா ரென்னுஞ் செய்தி இவருக்கு எட்டியது.

அவ் வித்துவான் அசாம் தேசத்துக் * குமாரில பட்டர் என்னும் அந்தணர். அவரைப் 'பட்டபாதர்' எனவும்

* அவர் தமிழ் நாட்டு வேதியரெனச் சாதிப்பாரு முளர்.

விவகரிப்பார்கள். அவர் பௌத்தாசாரிய ரிடத்துக் கலை பயின்று, பௌத்தமதத்திற்குத் தீர்க்கவைரியாக வெளிப் போந்து, பௌத்த பண்டிதர்களை வாதத்தில் வென்று வெருட்டி யடக்கிய வல்லாள கண்டர். அவருடைய தீவிர சாகசத்தால் பௌத்தமதம் க்ஷீணதசை யடைந்தது. பௌத்த மதஸ்தர்களுக்குப் பல இடைஞ்சல்களும் அவமான மும் அங்கங்கே நேர்ந்துவந்தன. அம்மதத்தைப் பிரபல மாக்குவதில் ஊக்கங்கொண்டிருந்த அரசர்கள் அதனில் உற் சாகங் குன்றியவர்களாய் ஹிந்து மதத்தை ஆதரிக்குஞ் சார்பு மேற்கொண்டனர். இவ்வாறு, பழைய ஹிந்து மதத்தைப் பண்படுத்திப் புதிய பாங்குாளமைத்து, இதனையே பண்டு போல் தழுவப் பலரும் சித்தமாயிருந்தனர். மொத்தத்தில் பட்டபாதர் அநேக பெரிய மாகாணங்களைப் பௌத்த மதத்தி னின்றும் மீட்டு, அவைகளில் வைதிக ஹிந்து மதத்தைத் தாபித்தனர் என்று திடமாகக் கூறலாம். பல்லாயிரஞ் சனங் கள் அவருடைய மதத்தை யவலம்பிக்க லாயினர். இவ் வண்ணமாக அவர் தம கொள்கையை ஈடேற்றித் திருப்தி யெய்தியவராய்த் தீக் குளிக்கத் தீர்மானித்தனர். இந்த விருத்தாந்தம் பகவத் பாதராகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமி களுக்குப் பிரயாகையில் எட்டியது. *

பட்டபாதரும் பகவத்பாதரும்

ஆசாரியர் அவணடைந்தபோது பட்டபாதர் ஆழப் பறித்த பள்ளத்தி லிறங்கிச் சமூத்தளவு உமி நிரப்பித் தீ மூட்டிக்கொண் டிருந்தார். பகவத் பாதருடைய விஜயத்தை

* பத்திரசேன மகா ராஜனுடைய நகரமாகிய உருத்திரபூரில் தங்கி யிருக்கையில் பட்டபாதருடைய வர்த்தமானம் ஆசாரியருக் குத் தெரிந்தது என்பார் சிலர்.

யறிந்து பட்டபாதர் தம் சிஷ்யர்களான பிரபாகரன் முதலி யோரைக் கொண்டு இவரைச் சந்தித்து உபசரித்தார். குமை யும் உமிப் புடத்தி லுயிர்துறக்க உற்ற காரணம் யாதென யதிபதி வினவ,

பட்டபாத — சுவாமி, பரமஹம்ஸரே! யான் யோகாசாரிய ரென்னும் ஜைன வித்துவானிடத்து எல்லாக் கலைகளையும் பயின் றேன். பின்பு, வேதமார்க்கத்தை நிலைநிறுத்த வேண்டுமென்னும் ஆசையினுல் சுதன்வன் என்னும் அரசனது அவையை அடைந் தேன். அங்கே குழுமியிருந்த பௌத்த ஜைன சார்வாகாதி கலை ஞர்களோடு வாதப் பிரசங்கங்கள் செய்து அவர்களெல்லாரையும் வென்றேன். ஆயினும், அவர்கள் வேதங்களெல்லாம் அசத்தியம், சார்வாகமதமே சத்தியம் என்று அரசனுக்குப் போதித்தார்கள். அவன் ஒரு நிபந்தனை செய்தான். அந்த நிபந்தனையின்படி யான் மலையின் உச்சியிலேறி, ''வேதங்களே பிரமாணம்; மற்ற மதங்கள் அப்பிரமாணம்'' என்று அறைந்துகொண்டே கொடுமுடியிலிருந்து கீழே குதித்தேன். வேதத்தின் மகிமையினுல் எனக்கு ஆயாச மேனும் வாதையேனும் காயமேனும் இல்லாதாயிற்று பார்த்த ஜனங்கள் நான் ஏதோ கபடமந்திரங்களினுல் இவ்வாறு நடிக்கி றேனென்று அரசனுக்கு அறிக்கை செய்தார்கள். சங்கையுற்ற மனத்தினனுன அரசன் பிராமணர்களில் அநேகரையும் என்னை யும் ஒரு சார்பில் வைத்து, மற்றவர்களை யெல்லாம் மற்றுேர் சார்பில் வைத்து, இரகசியமாக ஒரு குடத்தில் சர்ப்பம் ஒன்றைப் புகுத்தி, அந்தப் பாத்திரத்திற்கு இராஜ முத்திரையிட்டுச் சபை நடுவில் அதனை நிறுத்தி, ''இதற்குள் இருப்பது இன்னதென்று சொல்லுகிற வர்களுடைய மதமே சத்தியம். சொல்லுவது தப்பானுல் அப்படிச் சொல்லுங் கூட்டத்தாரைக் கல்லாலையிலிட்டு ஆட்டுவிப்பேன்'' என் னுங் குரூரமான பிரதிக்கினை செய்தான். அரசனது ஆணைக்கு இருதிறத்தாரும் ஒப்பினுர்கள். சேஷசாயியான விஷ்ணுமூர்த்தி அதற்குள் இருக்கிறுர் என நாங்கள் பகர்ந்தோம். சூனியவாதிக ளான பௌத்தர்கள் சர்ப்பம் இருக்கிறதென்று சாற்றினுர்கள். பிராமணர்கள் கூறியது தவறு; அவர்களெல்லாரும் மரண தண்ட

ளைக்கு இலக்காயினரே என்று அரசன் சிந்தித்துக்கொண்டிருக்கையில், "பிராமண வாக்கியமே சத்தியம்" என்று அசரீரிவாக்கு உதித்தது. அக்கணமே முத்திரையை உடைத்து அரசன் பார்க்குமளவில், விஷ்ணுமூர்த்தி சேஷசாயியாகக் கும்பத்திற்குள் இருப்பதைக் கண்டு, அவன் அச்சமுற்று அயர்ந்தான். பின்பு, அரசன் கட்டளையிட் டிருந்தபடி சௌகதர்களுக்கு * மரண சிக்ஷையாயிற்று. இவ்விதமாக என் மூலமாய்க் குருவுக்குப் பரிவாரங்களோடுகூட நாசம் ஏற்பட்டது. அந்தக் காரணத்தினுல் நான் குருத்துரோகம் செய்த பெரும் பாவியானேன். அதற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளும் பொருட்டு இப்பொழுது உமிப்புடத்திற்குள்ளானேன்.

ஆசாரியர் — "சுவாமி! பிரம்ம சூத்திரங்களுக்குப் பாஷியம் இயற்றிக் கொண்டுவந்திருக்கிறேன். இதனைத் தாங்கள் தயைகூர்ந்து பார்வையிட வேண்டும்.

பட்டபாதர்—யதீந்திரரே! நான் இப்பொழுதிருக்கும் நிலைமை தங்களுக்குத் தெரிந்தேயிருக்கின்றது. பிராணன் சீக்கிரத்தில் பிரிந்து போகும்போ திருக்கின்றது பாஷியத்தை எப்படி பார்ப்பேன்?

ஆசாரியர் — எனது கமண்டலத்து நீரைத் தெளித்து இந்த அக்கினியைக் குளிரச்செய்வேன். தாங்கள் எழுந்துவரவேண்டும். ஆத்தும தண்டனை செய்துகொள்ளக்கூடாது.

பட்டபாதர் — சாக்ஷாத் சங்கர வடிவமானதங்களுடைய தரிசனம் முன்னரே எனக்கு நேர்ந்திருந்தால் எவ்வகைப் பிராயச்சித்தமும் வேண்டி யிராதாகும். சங்கற்பித்துத் தீக்குழியில் இறங்கிய பின்பு யான் எழுந்து வருவது இயலாது. உலகத்தை உய்விக்கும் பொருட்டுத் தாங்கள் இயற்றியுள்ள சூத்திர பாஷியத்தை எனக்குச் சக்தியுள்ளவரையில் படித்துப் பார்க்கிறேன். எனது சீடருள் மண்டன மிசிரன் என்பவன் ஒருவன் இருக்கிறான். அவன் சுதீசுவரன் † எனத் தக்கவன். அவனிடத்திற்குத் தாங்கள் எழுந்தருளிப் பிரசங்கிக்கலாம்

* சௌகதர் = பௌத்தர் முதலானவர்கள்.

† சுதீசுவரன் = அற்புதமான புத்தி வாய்ந்தவன்.

என்று பதிலுரைத்தனர். நீ அதிகரித்து வருமளவும் பாஷியத்தை ஆராய்ந்து பார்த்து அவர் ஆனந்த பூரிதராகிப் பின்பு பஞ்சத்துவ * மெய்தினர்.

மண்டன மிசிரன்

மண்டனமிசிரனோடு வாதப்பிரசங்கம் செய்யும்பொருட்டு ஆசாரியர் அவன் இருந்த மாகிஷ்மதி என்னும் பட்டணத்திற்கு விஜயஞ் செய்தனர். அவன் இராஜஸம்ஸ்தானத்து ஆஸ்தான பண்டிதனாக விளங்கினமையின், செல்வமுஞ் செல்வாக்கும் வாய்ந்தவனாய், அரண்மனையெனத்தக்க மாளிகையில் அநேகம் வேலையாட்களும் பணிப்பெண்களும் ஏவல்புரிய, விநோத வஸ்துக்களும் விசித்திரப் பறவைகளும் வரிசை வரிசையாக நின்று இலங்க வளமுற்று வாழ்ந்துகொண்டிருந்தான். ஆசாரியர் எழுந்தருளிய வேளையில் அவன் பிதரு சிராத்த கருமத்தில் அமர்ந்திருந்தான். அவன் கர்மானுஷ்டானங்களில் மிக்க பற்றுடையவன்; எள்ளளவும் அவைகளினின்று பிறழாது நடக்கிறவன்; கருமானுஷ்டானங்களினாலே முக்திபெறலா மென்னும் திடமான நம்பிக்கை யுடையவன். சிராத்தகாலத்தில் விரும்பத்தகாதவர்கள் வீட்டிற்குள் வாராமல் தடுக்கக் கருதி அவன் கதவைச் சாத்தித் தாளிட்டு வைத்துச் சிராத்தஞ் செய்துகொண் டிருந்தான். சிராத்த காலத்தில் விரும்பத்தகாதவர்களுள் கர்மானுஷ்டானத்தைத் துறந்த சந்நியாசி முதன்மையானவன். அப்படியிருந்தும், ஆசாரியர் தம்முடைய யோக பலத்தினால் ஆகாச மார்க்கமாக அவனது இல்லத்திற்குட் போய்ச் சேர்ந்தனர். சிராத்தத்திற்கு அவன் வரித்திருந்த பிராமணர்கள் உத்தமமான

* பஞ்சத்துவம் = ஐந்தாயிருக்கும் நிலைமை, பஞ்சபூதங்களின் தொகுதி, பஞ்சபூதங்களாகப் பிரிதல்; மரணம்.

இருடிகள். அந்தச் சந்தர்ப்பத்தில் விரும்பத் தகாத விரோதியைக் கண்டவுடனே அவனுக்குச் சீற்றம் மிகுந்தது. அவன் திக்கரித்துக் கேட்ட கேள்விக்கு ஆசாரியர் வேறு அர்த்தங் கற்பித்து அவனுக்கு விடை கூறி, அவன் வாயை அடக்கினர். முடிவில் அவன், 'சத்கர்மாசரணங்களைக் கைவிட்டு வியர்த்தமாகத் துரீய * ஆச்சிரமத்தில் வீழ்ந்தனையே!" என்று ஆசாரியரைப் பார்த்துப் பரிதபித்துப் பேசினன். அமானுஷ சாரித்திரரான † ஆசாரியர் அவனுடைய வார்த்தைகளுக்கெல்லாம் தக்கவாறு பதிலளிக்கு மளவில், அங்குப் பிதுருக்களாக வரிக்கப்பட்டிருந்த இருடிகள் மண்டனமிசிரனைச் சமாதானப்படுத்தி, யதிகளை எப்பொழுது கண்டாலும் சத்கரித்துப் பூசிக்க வேண்டுமே யல்லாமல் திக்கரிக்கலாகா தென்னும் ஒழுக்க முறையை வற்புறுத்தி, சிராத்தாங்கத்தில் வரிக்க வேண்டிய மகாவிஷ்ணுவின் ஸ்தானத்தில் எழுந்தருள யதீந்திரரை அவன் பிரார்த்திக்கும்படி செய்தார்கள். அந்தப் பிக்ஷையை ஏற்குமுன் ஆசாரியர் மண்டன மிசிரனை நோக்கி, அன்னபிக்ஷையினும் வாதபிக்ஷையே தமக்குத் திருப்தி தருவதென விளம்ப, அவன் வாதபிக்ஷையும் தருவதாக வாக்களிக்கவேண்டியவ னாயினன்.

ஆசாரியரோடு வாதமாட இசைந்த மண்டன மிசிரன் சதசு கூட்டிக் கர்ம மார்க்கமே உயர்வானதென்று வாதித்தான். வேதாந்த மார்க்கமே உயர்வானதென்று சாதித்து, "யான் இந்தப் பிரசங்கத்தில் தோல்வியுற்றால் துறவறத்தை விட்டு இல்லறத்தை மேற்கொள்வேன், நீ தோல்வியுறுவாயானல் துறவறம் மேற்கொள்ளவேண்டும்" என்னும் நிபந்தனையை ஆசாரியர் முன்னிட்டார். மண்டன மிசிரன் அந்த

* துரீய = நான்காம். † அமானுஷ சாரித்திரர் = மானிடரின் சக்திக் கெட்டாத அற்புதச் செயல்க ளுடையவர்.

நிபந்தனைக்கு ஒப்பினன். அவர்களுடைய வெற்றி தோல்வி களை நிர்ணயிப்பதற்கு மண்டன மிசிரனுடைய பாரியையான பாரதீ தேவியே மத்தியஸ்தையாக இருக்க வேண்டுமென்று இருவரும் விரும்பினர். அவள் கலை வல்லவள், கல்வி கேள்விகளிற் சிறந்த பண்டிதை. அவள் இரண்டு பூ மாலை களைக் கொண்டுவந்து அவர்க ளிருவருக்கும் போடுவித்து, தோற்றவருடைய மலர்மாலை வாடிப்போகும் என மொழிந்து தன் கிருககிருத்தியங்களை வழக்கம் போலக் கவனித்துக் கொண்டிருந்தனள். வாதம் சில நாள் தொடர்ச்சியாக நடந் தது. அந்த வாக்கியார்த்த விவாதங்களின் முடிவில், சிரௌ தஸ்மார்த்த சதாசாரங்களை நிலை நிறுத்துவதே முதன்மை யான கருத்தாகக்கொண்ட ஆசாரியரே வெற்றி வாய்ந்தனர்; மண்டன மிசிரன் தோல்வியுற்றனன். அவனுடைய கழுத்தி லிருந்த மலர்மாலை வாடிப்போயிற்று. அவனே பின்பு சந்நியாசம் மேற்கொண்டு 'சுரேசுவராசாரி' எனப் பெயர்பூண்டு ஸ்ரீ சங்கர பகவத் பாதருடைய சீடர்கள் நால்வருள் முதன் மையானவனாக விளங்கினன்.

பாரதீதேவி

கிருகஸ்தாச்சிரமத்தில் பிரம்மதேவனே மண்டன மிசிர னெனவும், ஸ்ரீ சாரதாம்பிகையே அவனுடைய பாரியை பாரதி எனவும் அவர்கள் மதிக்கப்பெற் றிருந்தார்கள். ஸ்ரீ சாரதாதேவி தேவலோகத்திற் செய்ததொரு தப்பிதத்தி னிமித்தம், அதற்குத் தண்டனையாகப் பூவுலகிற் பிறக்க நேர்ந் தது. பிரம்ம தேவருடைய சதசில் துர்வாசமாமுனிவர் வேதமோத, அதனிற் பிழைகண்டு வாணி நகைத்தனள். அம் மகாசபையில் அங்ஙனம் தம்மை அவமானப்படுத்தின ளென்னும் ஆக்கிரகங்கொண்டு துர்வாசர் அவளைப் பூலோகத்

திற்கு இழியச் சபித்தனர். எண்ணுமலிழைத்த அபராதத்தை யெண்ணிக் கலைமகள் மனம் மிக நொந்து முனிவரைப் பிரார்த்திக்க, அவர் இரக்கமுற்று அவளுடைய பூலோக வாசத்திற்குப் பரிமிதி கூறிச் சாபத்தை யொருவாறு சமனப்படுத்தினர். அந்தப் பரிமித காலம் முடிவுற்றது. இனி அவள் தன் இருப்பிடமாகிய தேவலோகஞ் சேர விரும்பினள். ஸ்ரீ சங்கராசாரியருடைய சர்வஞ்ஞத்துவத்தை வெளிப்படுத்துவதே அவள் புவிமீது புரியத்தக்க பாக்கிக் காரியம். மத்தியஸ்தையாக நின்று மேற் சொல்லியவாறு அக் காரியத்தை ஈடேற்றிய பின் அவள் உம்ப ருலகேற வேண்டியவளே யாவள். ஆனல், அவள் சங்கருடைய வேண்டுகோட்கிணங்கி அங்ஙன மேகாமல் பூலோகத்தில் தங்கியிருந்து இவருடன் சாஸ்திர வாதஞ் செய்யவும், இவர் சம்மதித்து விடை யளிக்கும்போது புவி நீத்துப் பிரம்மலோகஞ் சேரவும் இவருக்கு வாக்களித்தனள். மண்டன மிசிரர் தோல்வியுற்றுத் துறவற மேற்கவே, அவருடைய மனைவியாயிருந்த பாரதீ தேவி சங்கரரை வாதுக்கு அழைத்தனள்.

கணவனும் மனைவியும் உடல் வேறுயினும் ஒருயிரெனக் கருதப்படுகின்றமையின், கணவனை வென்றதனுல் மாத்திரமே வெற்றி சித்திக்காது. வெற்றி பூர்ணமாக வேண்டின், மனைவியாகிய தன்னையும் வாதத்தில் வெல்லக் கடவது என்று வாக்குத் தேவியாகிய பாரதி ஆக்ஷேபித்து ஸ்ரீ சங்கருடன் பதினேழு நாள் வாதத்திற்கு நின்றனள். மானிட வடிவமாய்த் தோன்றிய கலைமகள் அந்த வாதத்தில் அநேக சாஸ்திர சம்பந்தமான வினுக்களைக் கடாவினுள். அவ் வினுக்களுக் கெல்லாம் ஆசாரியர் தக்க விடைகள் பகர்ந்தார். பின்பு, இவரை எவ்வகையிலாவது வெல்ல வெண்ணிப் பாரதி வாத்சியாயன தந்திர சம்பந்தமான கேள்விகளைக் கேட்கத் தொடங்கினள்.

பரகாயப் பிரவேசம்

அவ் விஷயம் துறவியாகிய ஆசாரிய சுவாமிகளுக்குப் பரிச்சய மில்லாமையின், ஒரு மாதத் தவணையில் விடை கூறுவே மெனப் பாரதிக்குச் சொல்லி இவர் அவ்விடம் விட்டு நீங்கித் தமது மாணுக்கருடன் காட்டிற் சென்று, ஆங்கொரு குகையில் தங்கி யிருந்தார். பின்பு, ஒருநாள் ஆசாரியர் தம் உடம்பை மாணுக்கரின் வசம் ஒப்புவித்து, அந்த வேளையில் வேட்டைக்கு வந்து காலகதியடைந்த அமருக னென்னும் மகா ராஜனுடைய தேகத்தில், பரகாயப் பிரவேசம் என்னும் யோக வித்தியா பலத்தினுல், புகுந்து சமுசார சுகாதிகளை அனு பவித்து இராஜ்யத்தை ஆண்டுகொண்டிருந்தனர். அரசனிடத் துப் புதிதாகத் தோன்றிய பாண்டித்தியத்தையும், வாக்குத் தோரணை சாதுரியம் முதலான திவ்விய குணங்களையும், நாட் டில் தோன்றிய அதிசயமான வளத்தையும் இராணி குறிப் பால் உணர்ந்து, மிகக் கெட்டிக்காரி யாதலால், தன் கணவ னுடலில் யாரோ மகாத்துமா பரகாயப் பிரவேசஞ் செய் திருக்கக் கூடுமென்று ஊகித்துத் தன் அனுமானத்தை மந்தி ரிகளுக்கு அறிவித்தாள்.

எங்கேனும் உயிர் ஒழிந்த உடல் காணப்படின் அதனை யுடனே தகனஞ் செய்க என மந்திரிகள் ஏவலாளர்க்குக் கட்டளை பிறப்பித்தனர். இது நிற்க, முன் ஆசிரியர் சொற்படி தேகத்தைக் காத்திருந்த மாணுக்கர்கள், ஆசிரியர் கூறிய தவ ணையில் வராதது கண்டு, அவருடைய சரீரத்தைக் குகையி லேயே மறைத்து வைத்து விட்டுத் தாம் இசைப்புலவர் வேடம் பூண்டு, ஆசிரியரைத் தேடிச் சென்றனர். மந்திரியின் ஏவலாளர்கள் குகையிலிருந்த ஆசாரியரவர்களுடைய சரீரத் தைக் கண்டுபிடித்துத் தகனஞ்செய்யப் பிரயத்தனப்பட்டுக் கொண் டிருந்தார்கள். மாணுக்கர்கள் —

சங்கராபரண ஜன்ய குறிஞ்சிராகம் — ரூபகதாளம்.*

1. நிஸ்தமஸி நீரஜஸி நீர்க்களித ஸத்வே
தேஜஸிவி வேகஜுஷி பேதமதி சூன்யே
நிர்வசன மானஸப தாதிகம சிந்த்யம்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன்

[வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாததாயும், தியானிப்பதற்கு அரியதாயும் எந்த ஒருவஸ்து வுண்டோ அப்படிப்பட்டதாகி, ஸத்துவரஜஸ்தமோ குணங்களைக் கடந்து, விபரீத பாவனையற்று (ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேத புத்தியற்று), ஞானஸ்வரூபியாகி தத் பத லக்ஷியார்த்தப் பொருளாயிருக்கிற தேஜோ வஸ்துவாக நீ இருக்கிறாய், ஏ, இராஜனே!]

2. யஜ்ஜனித மேததகி லஞ்ஜகத நித்யம்
ஸ்வப்னஜக தப்ரகஜ வாரிவன துல்யம்
அப்ரமித மூர்த்திரஹி தம்பரஸு கம்யத்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன்

[கனவுலகு ககனக்கரி கானனீர் என்னும் இவைகளுக்கு ஒப்பான (இவைகளைப்போல் அசத்தியமான) இந்த நிலையற்ற உலக மனைத்தும் எதனின்று தோன்றியதோ (எதனிடத்தில் அத்தியாசத்தினால் காணப்படுகின்றதோ) அப்படிப்பட்டதாகி, அளவிற் கடங்காது (விபுவாகி), உருவமற்று, மேலான ஸுகஸ்வரூபமாயிருக்கிற தத் பத லக்ஷியார்த்தப் பொருளாக நீ இருக்கிறாய், ஏ, இராஜனே!]

---

* Attuned to the Harmonium it will be sung thus :—

காபமகா -	காபமகா -	ரீகமகரி -	ரீகா 2 †
நிஸ்தமஸி -	நீரஜஸி -	நிர்க்களிதஅ -	ஸத்வே†
ரீகரிரீ -	ரீஸஸரீ -	ரீகமகரி -	ஸநிஸா 2
தேஜஸிவி -	வேகஜுஷி-	பேதமதிஇ -	சூஉன்யே

இது மத்தியமகாலத்திற் பாடுவதற்கு இசைந்தது. † குறி இட்டிருக்கும் சரணம் இரண்டுமுறை பாடத்தக்கது. மற்றச் சரணங்களை மேலே உதகரித்தபடி பாடவேண்டும்.

3. தேஹகுண ஜாலமதி லீலமதி லோலம்
யேநலஸி தம்பவதி தீபுரச தஞ்ச
அத்வயம நந்தசம பாரமதி ஸூக்ஷ்மம்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன் •

[பூர்வ வினைப்பயனால் மிக்க விசித்திரமும் சஞ்சலமும் (அடிக் கடி மாறுந் தன்மையும்) வாய்ந்த தேகம் குணம் (போக்கிய ரூப மாயுள்ள வெளிப்பிரபஞ்சம்) என்னும் இவைகளின் கூட்டமும், புத்தியென்னும் பட்டணங்கள் அநேகமும் எதனால் பிரகாசிக்கின் றனவோ (தனித்த சத்தா யில்லாமல் எதன் சத்தினால் விளங்கு கின்றனவோ) அப்படிப்பட்டதாகி, இரண்டற்று, முடிவற்று, கரையற்று மிகச் சூக்ஷ்மமாயிருக்கிற தத் பத லக்ஷியார்த்தப் பொரு ளாக நீ இருக்கிறாய், ஏ, இராஜனே!]

4. கோசமல பஞ்சகமி தஞ்சஸவி காரம்
யத்ரவிய தாதிவிம லஸ்புரித மேதத்
அஸ்திநக தாசிதபி ரஜ்ஜுவத நந்தம்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன்

[மாறுபாடுகளுள்ள அழுக்கான இவ் வைந்து கோசங்களும் ஆகாசம் முதலானவைகளும் எதனிடத்தில் நிர்மலமாகத் (தெளி வாக, உள்ளதுபோலவே) பிரகாசிக்கின்றனவோ, (ஆனால் உண் மையில்) ஒருபொழுதும் இல்லையோ—அப்படிப்பட்டதாகி, இரஜ்ஜு சர்ப்பத்திற்கு இரஜ்ஜுவானது ஆதாரமாயிருப்பதுபோல உலகக் கற்பனைக்கு ஆதாரமாகி, முடிவில்லாததாயிருக்கிற தத் பத லக்ஷி யார்த்தப் பொருளாக நீ இருக்கிறாய், ஏ, இராஜனே!]

5. பேதமதி ஜாதமவ தூதமநு பூதம்
யேநவிதி தம்சதம்ப ராத்பரஸு சஞ்ச
தத்பவதி ஸோஹமிதி யச்ச்ருதிஷு சோக்தம்
தத்வமஸி தத்வமஸி தத்வமஸி ராஜன்

[அனுபவிக்கப்பட்ட பேத புத்தியின் கூட்டம் எதனை அறிந்த தனால் உதறப்பட்டதோ, எது நிர்மலமான ஸுகஸ்வரூபமானதோ அப்படிப்பட்ட எங்கும் வியாபித்த வஸ்துவே எப்பொழுதும் உள் ளது. 'அதுவே நான்' ('அதுவே நான்' என்னும் சொல்லுக்கு

உண்மையில் அர்த்தமாயுள்ளது) என்று வேதத்தில் எந்த ஒரு வஸ்துவானது கூறப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட தத் பத லக்ஷியார்த்தப் பொருளாக நீ இருக்கிறாய், எ, இராஜனே!]

என்னும் பாடல்களை வடமொழியில் இனிமையாகவும் விநோதமாகவும் இராகத்தோடு பாடிக்கொண்டு இராஜ சபையில் வந்து தோன்றினர். பாடல்களின் பரமார்த்தத்தை யுணர்ந்த சங்கரர் பூர்வஞாபகம் தோன்றப்பெற்று, தம்முன் நிற்பவர்கள் தம் சீடர்களே யெனவுந் துணிந்து, அவர்களுடைய சங்கீதத்தைச் சரியாகப் பொருட்படுத்திக்கொண்டு, அமருக ராஜனுடைய தேகத்தை விட்டு முன்னர்த் தாம் குகையில் நீத்திருந்த உடலிற் பிரவேசித்தனர். மந்திரியின் ஏவலாளர் அவ் வுடலுக்குத் தீமூட்டியிருந்தமையின் அஃது எரியத் தொடங்கியது. அவ் வேளையில் சங்கரர் சுவாலா நரசிங்க மூர்த்தியைத் தியானித்துக் 'கராவலம்பம்' (கைகொடுத்தல்) தந்தருளத் துதி செய்தனர். அப்போது திருமால் திருவுளங் கூர்ந்து இவரைக் கைதூக்கிவிட்டனர்.

சாரதா ஆவாகனம்

கானகம்நீங்கிச் சங்கராசாரியர் அறுபத்து நான்கு கலைகளும் வல்லுநராய் மண்டன மிசிரனது மனையை நாடிக் கடுகியேகினர். அவனுடைய பத்தினியாகிய பாரதீதேவி சாஸ்திர வாதத்தில் சங்கரரை இப்பொழுது வெல்லமாட்டாதவளாய்ப் பராபவ * மெய்தினள். முன் அவள் சங்கருக்கு அளித்திருந்த வாக்கின்படி இவருடைய விடைபெற்றே விண்ணுலகேகத் தக்கவளாய் நிற்கும் நிலைமையில், அவளும் துறவியாகித் தம்முடன் யாத்திரை செய்து, தாம் குறிக்குமிடத்தில் நிலைகொள்ளுமாறு அந்தச் சாரதா தேவியைச் சங்கரர்

* பராபவம் = தோல்வி.

ஆவாகனஞ் செய்தனர்.* அவள் அங்ஙனமே இவரைப் பின் பற்றினள். பூர்வாச்சிரமத்தில் அவளுடைய பர்த்தாவான மண்டன மிசிரன் முண்டிதனாகிச் 'சுரேசுவரன்' என்னுந் தீக்ஷாநாமத்தோடு பகவத்பாதாசாரியருடைய பிரதம சிஷ்யனாக இவரைப் பின்பற்றி யெழுந்தான்.

மாகிஷ்மதி ராஜன்

மாகிஷ்மதி விஜயத்தால் மண்டனன் மாத்திரமே யல்லாமல் அவ்வூர் அரசனும் அவனுடைய ஸம்ஸ்தானத்தவர்களும் சங்கருடைய மதத்தைத் தழுவலானார்கள். ஆத்மஞானமே பரம புருஷார்த்த மென்று சங்கரர் வற்புறுத்தினராயினும், அதனை யடைவதற்குத் தாம் கூறுவதே மார்க்க மென்று சாதிக்கவில்லை; மற்ற மார்க்கங்களை மறுத்து நீக்கவில்லை. இவருக்கு முன் பிரபலர்களா யிருந்த பட்டர் முதலான சாஸ்திரவாதிகளோ, தங்களுடைய மதத்திற் பிடிவாதமும், மற்றவைகளில் வெறுப்புங் காட்டி வந்தனர். சங்கரருக்கு இருந்த சமரசக் கொள்கையினால் இவர் மேற்கொண்ட சீர்திருத்தக் காரியம் எளிதில் நிறைவேறிய தென்னலாம். எந்தக் கொள்கையையும் இவர் தலைகீழாகப் புரட்ட வில்லை. உதாரணமாக, கர்மமார்க்கப் பற்றுடையவர்கள் தம் இஷ்டம் போலக் கர்மங்களை ஆசரிக்கலா மென்று இவர் கூறினர்; ஆனால், அந்தக் கர்மங்களைச் செய்யும் மனப் பான்மையையும், நோக்கத்தையும் மாத்திரம் மாற்றிக்கொள்ள வேண்டுமென்றார். ஆனதனால், இவருடைய மதத்தை எவரும் தழுவுவது எளிதாயிற்று. ஊண் உடுக்கை முதலிய காரியங்களைச் சாமானிய ஜனங்கள் செய்வதுபோலவே யோகியா யிருப்பவனுஞ் செய்கிறான். அக் காரணத்தால் யோகிக்கும் மற்றவர்களுக்கும் வித்

* ஆவாகனஞ் செய்தல் = அழைத்தல்.

தியாசமில்லையென்று நினைக்கலாகாது. அந்தக் காரியங்களையே யோகி செய்துகொண்டிருப்பினும் அவனுடைய நிலைமையும், நோக்கமும், மனப்பாங்கும், செய்வகையும் வேறாயிருக்கும். அவனுடைய கருத்தும் கொள்கையும் சாமானியருடைய ஊகைக்கு எளிதில் எட்டா. இவ் வுண்மையே பகவத் கீதையில் "யோகஃகர்மஸு கௌசலம்" (யோகம் என்பது செய்யுங் காரியங்களை ஓர் உபாயமாகச் செய்தல்) என்று உணர்த்தப்பட்டிருக்கின்றது.

மல்லாரி பூஜை

வடதேசத்தைச் சீர்திருத்தித் தர்ம மார்க்கத்தை நிலை நிறுத்திய பின்னர்ச் சங்கரர், தம் சீடர்களுடன், தென் ஞேக்கி மகாராஷ்டிரச் சீமையினூடே பிரயாணப் பட்டுச் சென்றவிட மெல்லாம் தம் கொள்கைகளைப் போதித்து வந்தனர்; துராசாரங்களையும் கொடிய சம்பிரதாயங்களையும் கண்டவிடத்திற் கண்டித்தனர்; தாம் போக முடியாத இடங்களுக்குத் தம் சீடர்களை யனுப்பி வேதாந்த வொளி பரப்பினர். ஆண்டுள்ள பிராமணர்களு ளொரு வகுப்பினர் சிவபிரானை 'மல்லாரி' என்னும் நாமரூபங்களோடு ஆராதிப்பவர்கள். அந்தக் கடவுளின் வாகனமாகிய நாயை அம் மதத்தினர் மிக மதித்துக் கௌரவப்படுத்தி வந்தனர். அவர்களுடைய அனுஷ்டானம் ஆதாரமற்ற தவறென்வும், அசுத்தப் பிராணியாகிய நாய் ஆராதனைக்குரிய தன்றெனவும் அவர்களுக்கு ஆசாரியர் எளிதில் விளங்கவைத்தனர். மகாராஷ்டிரக் குடும்பத்தவர்க ளநேகர் மல்லாரியை இன்றைக்கும் குலதெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்; 'தசரா' பண்டிகையில் அவருக்கு விசேஷ வழிபாடுகளும் நடத்துகிறார்கள். ஆனால், இந் நாளில் நாயை யாராதிப்பது இல்லை.

காபாலிகர்கள்

அந்தப் பிரதேசத்திலே காபாலிகர்கள் என்னும் ஒரு வகைக் கொள்கையினரையும் சங்கரர் எதிர்க்க நேர்ந்தது. அவர்களில் ஒருவனுடைய கையினின்றும் அவர் உயிர் தப்புவது அருமையாயிற்று. காபாலிகர்களுடைய இஷ்ட தெய்வம் பைரவர். அவர் சங்கார மூர்த்தி யாவர். பண்டித பிராமணர்களுடைய தலை அவருக்கு மிகப் பிரியமாம். படிப்பும் பக்தியும் அதிகரிப்பதற்குத் தக்கபடி அவருக்குப் பிரியம் அதிகமாம். அப்படிப்பட்ட தலையை யறுத்து இரத்தம் பீரிட நிவேதிப்பது அவருக்கு உவப்பான சிறந்த பலியென்பர். மகாராஷ்டிரப் பிராமணர்களுள் 'கராடி' என்னும் வகுப்பினர் காபாலி மதத்தினராவர். இவர்கள் தென்தேசத்திலிருந்து காசிக்குப் போகும் தனி யாத்திரிகர்களைப் பிடித்து, ஓராண்டளவும் நன்றாகப் போஷித்துக் கொழுக்க வைத்து, 'தசரா' பண்டிகை முடிவில் துர்க்கைக்கு உசிதமான உத்தம பலியாக இடுவார்க ளென்னும் சிறுசுட்டு வாய்ந்திருந்தார்கள். இவ்வகைப் பிராமணனே போலும் ஒருவன் காளிக்குப் பலியிடும் நோக்கங்கொண்டு சங்கரரை யண்மினன். நரபலியிடுவது இந் நாட்டுக்கு மாத்திரம் உரியதன்று. தேச தேசாந்தர சரித்திரங்களில் அங்கங்கே உலகமுழுவதும் நரபலி மிகக் கோரமாகவும், வெறுக்கத் தக்க விதமாகவும் வழக்கத்திலிருந்ததாகக் கூறப்படுகின்றது.

மேற்குறித்த காபாலிகன் சங்கரரைப் பணிந்து, "தங்கள் தலையை எனக்குத் தந்தருளவேண்டும். அதனை யளிப்பதனால் தங்களுக்கு ஒருவித நஷ்டமுமில்லை; அதனால் எனக்குப் பரமார்த்த சித்தி வாய்க்கும்" என்று இவருடைய அத்துவைதக் கொள்கையைத் தன் கருத்திற்கிசையத் திரித்

துரைத்து இரந்தான். சங்கரர் அவனுக்கு இரங்கித் தாம் தனித்துத் தியான நிஷ்டையி லமர்ந்திருக்கையில் வந்து தம் தலையைக் கொண்டுபோமாறு அவனுக்குப் பணித்தார். அப்



ஸ்ரீமத் சங்கராசாரியரும் சீடர்களும்

படிப்பட்ட சமயம் பார்த்துக் காபாலிகன் வந்து சங்கரருடைய தலையை நறுக்கக் கையை யோங்கினன். வெளியே

போயிருந்த பதுமபாதர் அத் தருணத்தில் அகஸ்மாத்தாக அங்குத்தோன்றி, நரசிங்காவேச பூரிதராய், ஓங்கிய காபாலி கனது கையைப் பிடித்து அவனுடைய வாளினாலே அவனை அதஞ் செய்தனர். பின்னர்ச் சங்கரர் நிஷ்டை குலைந்து எழுந்து, நிகழ்ந்த வர்த்தமானத்தை யுணர்ந்து, தம் சீடருடைய உக்கிராவேசத்தைச் சமனம் பண்ணினர்.

அருட் கண்

அங்கிருந்து சங்கரர் பிரயாணப்பட்டுப் போகும் மார்க்கத்தில் கொல்லூர் என்னும் ஊரில் அகாலமரண மெய்திய அந்தணச் சிறுவனுடைய தந்தையாகிய வேதிய னொருவன் மனம் புழுங்கி இவரை யடைந்து தன் மகனை யெழுப்பிக் கொடுக்கும்படி வேண்ட, அவ் விளைஞனை உயிர்ப்பித் தருளினர். ஸ்ரீ வல்லிபுரம் என்னுமிடத்தில் இவர் பிக்ஷை செய்து கொண்டிருக்கையில் ஆண்டுள்ள பிரபாகரபட்டன் என்பவன் தனது ஒரே குழந்தையாஞ் சிறுவன் செவிட்டூமையா யிருப்பதைச் சகியாமல் அந்தப் பிள்ளையை இவருடைய பாத கமலங்களுக்கு அர்ப்பித்தனன். கருணையங் கடலாகிய நம் கோமான் ஸ்ரீ மூகாம்பா ஸ்தோத்திர மொன்றை ஆங்கே இயற்றியருளி அக் குழந்தையை விளித்து, "நீ யாவன்?" என வினவலும், குழந்தை செவிடு நீங்கி வாக்கு வல்லமை யுற்றுச் செய்யுள் நடையில் பிரம்ம வுண்மையை யெடுத்துரைக்க லாயினன். இங்ஙனம் அனுக்கிரகத்திற் குரியனான அவனுக்கு இவர் தீக்ஷை செய்தருளிச் சென்றனர்.

சிருங்கேரி மடம்

மண்டனமிசிரனும் பாரதீதேவியும் துறவிகளாய்ப் பின் பற்றிவர, இவ்வாறு தென்றிசையிற் பிரயாணஞ்செய்து சாரதா ஆவாகன பண்டிதரான ஆசாரிய சுவாமிகள் துங்கபத்திரா நதி

யின் உற்பத்தி ஸ்தானத்தை யடைந்தனர். அங்குத் தங்கி ஆலயமொன்றமைத்து ஸ்ரீ சாரதாம்பிகை*யைப் பிரதிஷ்டை செய்தனர். அந்தச் சாரதாலாயத்தில் இன்றைக்கும் பூஜை நைவேத்தியங்கள் கிரமமாக நடைபெறுகின்றன. இந் நற்காரியஞ் சாதிப்பதற்கு அவ் வூர்ச் சிற்றரசனாகிய வீரசேனனென்பான் ஆசாரியருக்குப் பெரிதும் துணை புரிந்தனன். இந்தச் சாரதாலயத்தைச் சார்ந்ததாக மடமொன்றைத் தாபித்துச் சங்கரர் தம் மாணவருள் முதன்மை வாய்ந்து விளங்கிய மண்டனனைச் சுரேசுவராசாரியன் என்னுந் தீக்ஷா நாமத்தோடு மடத்தலைவனாக்கி யருளினர்.

இம் மடாதிபதிக்கு "ஜகத் குரு" என்னும் விருது பரம்பரையாக வழங்கி வருகின்றது. மடத்தலைமை ஸ்தானம் "சாரதா பீடம்" எனப்படும். தென்னிந்திய மடங்களுள் சீரும் சிறப்பும் மதிப்பும் வாய்ந்து, அருள் வளமும் பொருள் வளமும் பொலியச் "சிருங்கேரி மடம்" என இன்றைக்குத் திகழ்ந்துகொண் டிருப்பது இந்த மடமேயாம். இரத்தின கர்ப்ப எரம்ப சாரதா சந்திர மௌளீசுவரரைப் பூஜித்துக்கொண் டிருப்பது இம் மடாதிபதிகளின் முறையாகும். சிஷ்யர்களுக்குச் சாஸ்திர பாடஞ் சொல்வது, தத்துவ விசாரஞ் செய்வது, நாநாமத நூல்களை யாராய்வது, நவநவமாகத் தம் மதத்தை விளக்க நூல்களை யியற்றுவது, முதனூல்களுக்கு உரை நூல்களை ஆக்குவது இவை முதலான அரும் பெரும் காரியங்கள் சிருங்கேரி மடத்தில் விஸ்தாரமாகவும் மும்முரமாகவும் நடைபெறலாயின. பகவத்பாதரருளிய வேதாந்த சூத்திர பாஷியத்திற்குப் பதுமபாதரும், தசோபநிஷத்பாஷியத்திற்குச் சுரேசுவராசாரியரும் அருமையான உரைகளை யெழுதினர்.

* இப் புத்தகத்து முகவேட்டிலுள்ள படத்தைப் பார்க்க.

தாய்க்கடன்

அன்னையாருக்கு மூப்பொடு பிணி மூண்ட தென்னும் வர்த்தமானங் கேட்டுச் சங்கரர் தம் சீடர் முதலாயினோரைச் சிருங்கேரியில் விட்டுத் தனியே காலடிக் கிராமமடைந்தனர். அவ் வம்மை படுக்கையினின் றெழமாட்டாத நிலைமையிலிருந் தனள். துறவற முறையைப் புறம்பாக்கிச் சங்கரர் பக்தி யும் பிரேமையும பணிவும் மிக்கவராய்த் தாயின் பாதங்களில் தாழ்ந் தெழுந்தனர். அருமைத் தனயனது திருமுகத்தைத் தரிசித்துத் தாயார் அகமகிழ்வுற்று முகமலர்ச்சி காட்டினள். அவள் பரலோக சிந்தையுள்ளவளாய்த் தனக்கு நற்கதி யளிக் கத்தக்க விஷயங்களைக் கேட்க விரும்பினள். வேதாந்தம் அவளுடைய புத்திக்கு அவ் வேளையில் எட்டாமையின், சிவ விஷ்ணு ஸ்தோத்திரங்களைச் சொல்லிச் சங்கரர் அவ் வம்மை யைக் கடைத்தேற்றினர். ஆதியில் அவளுக்குத் தாம் அளித் திருந்த வாக்கின்படி இவர் ஈமச்சடங்குகளைத் தாமே செய்ய மேற்கொண்டார். துறவி கர்மஞ்செய்ய லாகாதென அக்கிர காரத்தார் செய்த ஆக்ஷேபத்தையும், அவ் விஷயத்தில் அவர் கள் ஒதுங்கி நின்ற கட்டுப்பாட்டையும் பொருட்படுத்தாமல் சங்கரர் தாமே தனியாகத் தகனக்கிரியை முதலான தாய்க் கடனைத் தம் இல்லத்து எல்லைக்குட்பட்ட ஆவரணத்திலே செய்து முடித்து, தமது அதிசயமான மாதுரு பக்தியை நமக்கு நல்லுதாரணமாகக் காட்டியருளினர்.

கீழ்க்கரை யாத்திரை

அறிவுக்கடலைக் கடைந்தெடுத்த ஆசாரியர் சிருங்கே ரிக்கு மீண்டு, சிஷ்யவர்க்கத்துடன் எழுந்தருளிப் பெரிய வித்தியா நிலையங்களிலும் இராஜதானிகளிலும் யாத்திரை ஸ்தலங்களிலும் தங்கித் தம் வேதாந்தக் கொள்கைகளைப் பிர

கடனஞ்செய்து, ஆங்காங்குள்ள துராசாரங்களைக் கண்டித்துத் திருத்திக்கொண்டு கீழ்க்கரைப் பிரதேசங்களில் சஞ்சரித்தனர். பூரியில் (ஜகந்நாதத்தில்) ஒரு மட மேற்படுத்தினர். அது 'கோவர்த்தன மடம்' என இப்பொழுதும் நடைபெறுகின்றது. காஞ்சீபுரம் அந் நாளில் சாக்தேயர்களின் ஆஸ்தானமாக விளங்கியதுபோலும். சாஸ்திரவாதத்தினால் அவர்களுடைய துராசாரங்களை யெல்லாங் கண்டித்துச் சங்கரர் அவர்களுடைய ஆலயங்களையும், திருவானைக்கா திருவொற்றியூர் முதலான சக்தி நிலையங்களையும் பரிசுத்தமாக்கினர். திருவொற்றியூர் வடிவுடையம்மன் சந்நிதியில் இன்றைக்கும் நம்பூதிரிப் பிராமணரொருவர் . விரதம்பூண்டு அர்ச்சகரா யிருப்பது இவருடைய ஏற்பாடேபோலும். கஞ்சி காமாக்ஷிக்கும் மதுரை மீனாக்ஷிக்கும் இந் நாளிலுள்ள விசேஷ மகிமையைக்கொண்டு அந் நாளில் இப் பிரதேசங்களில் சக்தி பூஜைக்கு இருந்த பிராபல்யத்தையும், இவர்தம் அற்புத சாகசத்தால் அது தூய்மைப்பட்டதையும் ஒருவாற்றான் ஊகிப்பதற்காகும். இவ் விஜய யாத்திரையில் சோழ தேசாதிபனும் பாண்டிய மன்னனும் இவருடைய அத்துவைத வழிப்பட்டு இவருக்கு வயமாயினர்; சாக்த, காணபத்திய, காபாலிக மதங்களின் துராசாரங்களும், இவையொத்த மற்றத் தீய வொழுக்கங் களும் இனித் தலையெடுத் தோங்கா தொடுக்கப்பட்டன. நாளடைவில் இவைகளை அடியோடொழிக்கும்பொருட்டு, நீதி வழுவான நெறிகளும் துராசாரங்களும் வழங்கு மிடங்களுக்கு அப்போதைக் கப்போது போய் இவைகளைக் கண்டிப்பதற்காக நிரந்தரமான ஏற்பாடுகளை இவர் சிருங்கேரியில் தீர்க்கமாகச் செய்தருளினர்.

வடதேச யாத்திரை

இங்ஙனமாக வேதாந்த மதப்பிரசாரம் இடையறாது நடைபெற வமைத்துத் தக்க யோக்கியதை வாய்ந்த பண்டிதர்

களையும் விவகார சீலர்களையும் நியமித்துச் சிருங்கேரி மடத்தைப் பலப்படுத்திய பின்னர்ச் சங்கரர் இரண்டாம் முறையாக வடதேச யாத்திரைக்கு எழுந்தருளினர். விராட தேசத்தின் (மத்ஸியம்) * வழியே சென்று உஜ்ஜைனி நகரத்திற் சிலகாலம் தங்கினர். ஆங்கு ஒருவகைச் சிவாராதனை வழங்கியது. இதனில் இரத்தபலி பெரிதும் பாராட்டப் பெற்றது. இந்தக் கொள்கையினர் பைரவர்கள் எனப்படுவர். அவர்களுடைய அக்கிரமங்களை யெதிர்த்துச் சங்கரர் வாதிக்க, அக்கூட்டத்தா ரனைவரும் இவர்மீது ஆக்கிரகங்கொண் டெழுந்தனர். அவர்களின் தலைவன், 'கிரகசன்' எனப்படுவன். 'கிரகசன்' என்னுஞ் சொல்லுக்கு அரம்பம் அல்லது வாள் என்று அர்த்தம். அந்தப் பெயரினாலே அவனுடைய தன்மை விளங்கியது. முன் குமாரிலபட்டருக்கு உதவிய சுதன்வ ராஜனைச் சங்கரர் தம் வயமாக்கிக்கொண்டு, அவனது துணையால் பைரவர்களின் கோரகிருத்தியங்களைப் பலவந்தமாக ஒழித்தனர். நியாயவாதத்திற்கு இணங்காத பிடிவாதத்திற்குத் தண்டமே தக்க முறிவாகும். பகைவரை வெல்லும் உபாயங்களுள் தண்டம் என்பது கடைசியானதன்றே?

ஸர்வஜ்ஞ பீடாரோகணம்

உஜ்ஜைனியை ஒவிய அடிகள் கூர்ச்சரப் பிரதேசத்திற் பிரவேசித்துத் துவாரகையில் ஒரு மடத்தைத் தாபித்து உகந்தனர். அம் மடம் இன்றும விளங்குவ தொன்றும். பின்னர்க் கங்கைக் கரைவழியே எகிப் பாஸ்கரர், பாணர், தண்டி, மயூரர் முதலான பிரபல வித்துவான்களொடு சாஸ்திர வாதத்தி லமர்ந்து, அவர்க ளொவ்வொருவரையும் மெய்ப்பித்து

* Country lying to the west of Dholpur. Vairata, the capital, is probably the same as Bairat, 40 miles north of Jeypore.

வென்று, காசுமீரதேச விஜயஞ்செய்து ஆங்குள்ள பிரம்மராக்கதனுக்குப் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கி, "ஸர்வஜ்ஞ பீடம்" ஏறி, அதனை அலங்கரித்தனர். 'ஸர்வஜ்ஞ பீடம்' என்றால், எல்லாமுணர்ந்தவரது ஆசனம் என்று அர்த்தம். இது மேதையிற் சிறந்தவர் ஆரோகணிக்கத்தக்க அரும் பதவியாக அமைக்கப்பட் டிருந்தது. இதனால் கல்விப் பயிற்சியில் ஜனங்களுக்கு உற்சாகமும், ஒருவருக்கொருவர் போட்டியும் மிகுந்து விளங்கின. அந் நாளில் இமாலயப் பிரதேசங்களில் பௌத்த பண்டிதர்கள் பெருத்துப் பிரபலராயிருந்தனரென்பது இந்த ஏற்பாட்டினால் ஊகிக்கத்தக்கது.

அபிநவகுப்தன்

வேதாந்த மார்க்கோபதேசத் தலைவராம் நம் ஆத்தன் கடைசியாக வாதத்தில் வெற்றிகொண்டது அசாம் தேசத்தில் காமரூபம் (Gauhati) என்னு மிடத்திலாகும். ஆண்டுள்ள சாக்தபாஷியகாரனாகிய அபிநவகுப்தன் எனபவன் ஆசாரியருடன் வாதுக்கு நின்று நிலையழிவுற்றான். இன்னணம் பின்னிட்ட பண்டிதன் வன்கண் வாய்ந்தவனாய் ஆசாரியர் மீது பகைசாதிக்க லாயினன். தனக்குக் கைவந்த அபிசார மந்திரப் பிரயோகத்தினால் அவன் இவருக்குக் கடுமையான மூலநோய் விளைவித்தான். அந் நோயை இவர் பாராட்டவில்லையாயினும், அது முதிர்ந்துவருவதைச் சீடர்கள் கவனித்துப் பண்டிதம் பலவாறு செய்வித்தனர். மருத்துவம் பயன்படாமை கண்டு அவர்கள் மயங்கியக்கால், சடிதியில் வந்த சிவதூதனொருவனால் அவர்களுக்கு அந் நோயின் மர்மம் வெளியாயிற்று. உடனே பதுமபாதர் சீறியெழுந்து, அபிசார மந்திரங்களில் தமக்குள்ள திறமையினால் குப்தனுடைய கொடிய ஏவலை முறித்து அழித்தனர். சங்கரரும் நோய்தீர்ந்து முன்போலச் சுகமெய்தினர்.

நாராயணாலயம்

அவ்வாறு சுகமெய்தினும் அந் நோயால் இவருடைய சரீரம் மிக நொந்திருந்தது. நோய் தணிவுற்ற பின்பு இவர் பதரிக்ஷேத்திரத்திற்குச் சென்று, ஆங்கொரு மடத்தைத் தாபித்து, நாராயணாலயத்தையும் நிர்மித்தனர். அதுமுதல் தேசசஞ்சாரஞ் செய்வதைத் தவிர்த்து, ஸ்ரீகேதாரத்திற்கு எழுந்தருளி இவர் ஓய்வுற்றிருந்தனர்.

ஷண்மதஸ்தாபனம்

நாநாமார்க்கங்களைப் போதிக்கும் அக்கினி, காபில, குபேர, சார்வாக, சாந்திர, பிரம்ம, மன்மத, யம, இரவி, இலிங்கதாரி, வருண, வாயு, வராக, விஷ்வக்சேன, சூனிய, க்ஷபணக (சமண), சாரஸ்வத, சாங்கிய மதங்களிலும் மற்று முள்ளவைகளிலும் அந்தந்த தேவதைகளுக்கு உயர்வையும் மோக்ஷதாரதம்மியத்தையும் ஆசாரபேதத்தையும் அவரவர் கற்பித்திருந்தார்கள். அப்படிப்பட்ட எழுபத்திரண்டு (72) மதங்களைக் கண்டித்து, ஸமஸ்த மதசித்தாந்த சோதகரான ஸ்ரீ சங்கராசாரியர் வேதவிரோதமான ஆசாரங்களை விடுவித்து, தூயதன்மைக்கேற்ற நியமனங்களைச் செய்து, சைவம் வைஷ்ணவம் காணாபத்தியம் ஸ்காந்தம் ஸௌரம் சாக்தேயம் என்னும் ஆறு மதங்களையுஞ் சீர்திருத்தி ஸ்தாபித்தனர். இக்காரணத்தினால் இவருக்கு 'ஷண்மத ஸ்தாபனாசாரியர்' என்னும் விருது ஏற்பட்டது.

கைலயாரோகணம்

இவ்வாறு அத்துவைத மதஸ்தாபனஞ் செய்த ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரியர் தமக்கு 32-வயசு பூர்த்தியாகும் வரையில் உலகத்திற்கு மிக்க மேன்மை தரத்தக்க சாதனங்களை உள்ளங்கைக் கனிபோல எடுத்துக் காட்டிக்கொண்டு பூசஞ்சாரஞ் செய்தனர். பூசுரோத்தமரான சுரேசுவரர், பதும

பாதர், அஸ்தாமலகர், தோடகர் என்னும் நான்கு முக்கிய சீடர்களையும் முறையே சிருங்கேரி, துவாராபதி, ஜகந்நாதம், பதரிக்ஷேத்திரம் என்னும் நான்கு இடங்களிலும் உள்ள மடங்களில் வீற்றிருந்து அத்துவைத மதத்தைப் போதித்து வருமாறு நியமனஞ் செய்தனர். பின்பு, இவர் இமயமலையி லுள்ள குகைக்குள் பிரவேசித்துத் தம் நிஜரூபத்தோடு திருக் கைலைக்கு எழுந்தருளினர். வைசாக சுத்த பஞ்சமியானது இவர் துறவறம் மேற்கொண்ட விசேஷதினமாதலால், அந்தத் தினத்தில் இவருடைய ஆராதனை காசி முதல் கன்னியாகுமரி வரையில் ஆண்டு தோறும் இன்றைக்கும் வெகு விமரிசையாக நடைபெறுகின்றது.

நூல்கள்

இவர் செய்த நூல்கள் 1. கலியாண விருஷ்டிஸ்தவம், 2. காருண்ணிய பூர்ணஸ்தவம், 3. மகாபகாஸ்தவம், 4. சந் நியாசோத்தாரம், 5. நிரீதிஸ்தவம், 6. கங்காஷ்டகம், 7. மநீஷா பஞ்சகம், 8. சிவாத்ம பூர்ணானுபவ ஸ்தோத்திர மஞ்சரி, 9. பிரம்மசூத்திர பாஷியம், 10. பஞ்ச ருத்திரோப நிடத வியாக்கியானம், 11. நரசிங்கதாடனி வியாக்கியானம், 12. கௌஷீதகி பிராம்மணவியாக்கியானம், 13. ஸ்ரீருத்திராத் தியாய வியாக்கியானம், 14. பகவத் கீதா பாஷ்யம், 15. சனத் சுஜாதீய வியாக்கியானம், 16. விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம், 17. ஆத்ம போதம், 18. கலாரோகணம், 19. தத்துவா லோகம், 20. அபரோக்ஷா நுபூதி, 21. அத்துவைத ஸஹஸ்ரி, 22. உபதேசஸஹஸ்ரி, 23. யுக்தி சுலோகாஷ்டசதி, 24. வாகீ சுவரி ஸ்தவம், 25. தசோபநிஷத்பாஷ்யம், 26. ஹரிமீடே ஸ்தோத்திரம், 27. சிவானந்தலகரி, 28. சௌந்தரியலகரி, 29. தக்ஷிணாமூர்த்தி அஷ்டகமும் வியாக்கியானமும், 30. மோக முத்கரம் என்பது முதலியனவு மாகிய சிலவாம்.

3. ஸ்ரீமத் ராமாநுஜாசாரியர்

வைஷ்ணவம்

விஷ்ணுவைப் பரமாகக் கொண்டு வணங்கும் மதத்திற்கு விஷ்ணுமதம் அல்லது வைஷ்ணவம் என்று பெயர். இஃது இந்தியாவின் ஒவ்வொரு பிரதேசத்தில் ஒவ்வொரு பெயரோடு ஒவ்வொரு விதமாக வழங்குகின்றது. ஒவ்வொரு விதமும் ஒவ்வொரு சம்பிரதாயம் எனப்படும். இந்தச் சம்பிரதாயங்கள் இவைகளை ஏற்படுத்திய ஆசாரியர்களுடைய பெயராலேயே பெரும்பாலும் குறிக்கப்பெறும். வைஷ்ணவ மத பேதங்களை இங்கு ஒருவாறு தொகுத்துரைப்போம் —

தென்தேசம் — இராமாநுஜ வைஷ்ணவம், மாத்துவ வைஷ்ணவம்.

மகாராஷ்டிரம் — துக்காராம், இராமதாசர் முதலானவர்களின் சம்பிரதாயங்கள்.

மத்தியதேசம் — வல்லபாசாரிய மதம்.

வங்கதேசம் — சைதனியர் மதம்.

காசிப்பிரதேசம் — இராமானந்தர் மதம், கபீர்தாசர் மதம்.

இவற்றுள் இராமாநுஜ வைஷ்ணவத்திற்கு 1. விசிஷ்டாத்துவைதம், 2. ஸ்ரீ வைஷ்ணவம், 3. ஸ்ரீ சம்பிரதாயம், 4. அத்தியாத்தும சம்பிரதாயம் என்னும் பெயர்களும் உண்டு. இந்தச் சம்பிரதாய கர்த்தர்க ளநேகர் இராமாநுஜருக்கு முன்னால் அவதரித்திருந்தார்கள். ஆயினும், இதனைத் தெளிவுற வகுத்து ஸ்தாபித்த ஆசாரியரென்று உலகப்பிரசித்தி பெற்றவர் ஸ்ரீ ராமாநுஜாசாரியராவர்.

பூர்வாதிகாரிகள்

இராமாநுஜருக்கு முன் இந் நாட்டில் இந்த ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தைப் பாராட்டிப் பிரகடனஞ்செய்து வந்தவர்கள் பரம்பரைக் கிரமமாக ஆழ்வார்களென்றும் ஆசாரியர்களென்றும் இருவகைப்படுவார்கள்.

ஆழ்வார்கள்

ஆழ்வார்கள் விஷ்ணுவினிடத்தில் ஆழ்ந்த பக்தியுள்ளவர்கள். சிவனிடத்தில் பக்தி செலுத்தியவர்கள் "நாயனமார்கள்" எனப்படுவார்கள். இவ் விருவகையார்களின் தன்மையும் பெரும்பாலும் ஒத்ததே யாகும். இருதிறத்தாரும் முக்திக்குச் சாதனமாகப் பக்தியை வற்புறுத்தினார்கள்: ஒருவர் விஷ்ணுபக்தி செய்ய வேண்டுமென்றார், மற்றவர் சிவபக்தி செய்யவேண்டு மென்றார். வைஷ்ணவ பரம்பரையில் 12-ஆழ்வார்களும், சைவ பரம்பரையில் 63-நாயன்மார்களும் உண்டு. ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களாகிய ஸ்ரீ சூக்திகளும, இராமாநுஜர்மீது செய்யப்பட்டதோர் அந்தாதியுஞ் சேர்ந்து ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய "நாலாயிரப் பிரபந்தம்" ஆகும்; சிவனடியார்கள் அருளியவை "தேவாரம்" முதலியன அநேகமாகும். 12-ஆழ்வார்களும் முறையே 1. பொய்கை யாழ்வார், 2. பூதத்தாழ்வார், 3. பேயாழ்வார், 4. திருமழிசை யாழ்வார், 5. நம்மாழ்வார், 6. மதுரகவி யாழ்வார், 7. குலசேகர ஆழ்வார், 8. பெரியாழ்வார், 9. ஆண்டாள், 10. தொண்டரடிப்பொடி யாழ்வார், 11. திருப்பாணாழ்வார், 12. திருமங்கை யாழ்வார் — எனப்படுவர்.* இவர்களுடைய காலத்தைத் தனித்தனியே நிர்ணயித்துக் கூறுதல் கஷ்டம். ஆயினும், இவர்கள் மேற்சொல்லிய வரிசைக் கிரமமாகத் தோன்றினார்க

* இவ் வாழ்வார்களின் சரித்திரங்கள் இப் புத்தகத்தின் பிற்பகுதிகளில் பதிப்பிக்கப் பெறும்.

ளென்று சாற்றலாம். இவர்களுள் நம்மாழ்வாரே முதன்மை வாய்ந்தவர். இவர் அருளிய சாமவேத சாரமே "திருவாய் மொழி" என்னுஞ் சிறப்புப் பெயர் பெற்றுள்ளது. இவர்க ளெல்லாரும் உலகத்தவர்களை உய்விப்பதற்குத் தோன்றிய திவ்விய ஞானவதார மூர்த்திக ளென மதித்து, பிற்பட்ட தலைமுறையார்கள் இவர்களை மிக்க பக்தி சிரத்தைகளோடு வழிபட்டு வந்துகொண் டிருக்கிறார்கள்.

ஆசாரியர்கள்

"ஆசாரிய பரம்பரையினர் "ஆழ்வார்"களுக்குப் பின் தோன்றியவர்கள். இவர்களின் பரம்பரை இடையறாது வந்துள்ளது. 'ஆசாரியர்' என்னுஞ் சொல்லுக்குப் போதகர், உபதேசகர்த்தர் என்று அர்த்தமாம். இவர்கள் பக்தி விசேஷத்தினால் ஈசுவரனைக் கிட்டியவர்களே யானாலும், ஆழ்வார்களுக்கு ஒரு படி தாழ்ந்தவர்களே; அங்ஙனமாயினும், சாமானிய மானிடரினும் மிகச் சிறந்துயர்ந்தவர்க ளாவார்கள். இவர்கள் ஸம்ஸ்காரங்கள் செய்வித்துச் சிஷ்யர்களை மேற்கொண்டு, மார்க்கோபதேசஞ் செய்து, சித்தாந்தப் பிரவசனம் பண்ணிக்கொண் டிருப்பார்கள். இத்தகைய ஈசுவரதூத பரம்பரையில் இராமானுஜருக்கு முற்பட்டவர்கள் ஆறுவர் ஆவர். இவர்களுள் நாதமுனிகளும், அவர்தம் பௌத்திரராம் ஆளவந்தாரும் மிக முக்கியமானவர்கள். ஆளவந்தாருடைய பௌத்திரியின் குமாரராக உதித்தவரே இராமானுஜர்.

அவதாரம்

சர்வசக்தனாகிய பகவானுடைய அமிசாவதாரமே ஆதியில் அனந்தன் என்னும் பெயருள்ள ஆதிசேஷனாகவும், திரேதாயுகத்தில் இலக்குமணனாகவும், துவாபரயுகத்தில் பலராமனாகவும் அவதரித்து மகத்தான காரியங்களைச் செய்த

தல்லவா? இந்தக் கலியுகத்தில் அவருடைய நான்காம் அவதாரக் கிரமம் வருமாறு: கலி 4118-க்குமேல் கி. பி. 1012-*க்குச் சரியான பிங்கள வருஷம் சித்திரை மாதம், சுக்கிலபக்ஷம் பஞ்சமி, குருவாரம், ஆருத்திரா நக்ஷத்திரம் கூடிய கர்க்கடக சுபலக்கினத்தில் செங்கற்பட்டு (செங்கழுநீர்ப்பட்டு) ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீபெரும்பூதூர் (பூதபுரி) என்னும் புண்ணிய ஸ்தலத்தில் ஹரித்ஸ கோத்திரத்தவராகிய ஆசுரி கேசவபட்டரின் மனைவியாகிய காந்திமதிதேவி (பூமிபிராட்டி)யின் கர்ப்போததியில் † உலகத்தின் நன்மையின் பொருட்டு ஆதிசேஷாமிசம் ஸ்ரீமத் ராமாநுஜாசாரியராகத் திருவவதரித்தது. திவ்விய லக்ஷணங்களோடு பிரகாசித்துக் கொண்டிருக்கும் இந்தக் குழந்தைக்குக் கேசவபட்டர் முறைப்படி ஜாதகர்ம ஸம்ஸ்காரம் நிகழ்த்தி, "இளையபெருமாள்" என நாமகரணஞ் செய்தனர். பெருமாளாகிய இராமருக்கு இளையவர் எனப் பொருள்படும் இத் தமிழ்ப் பெயர் வடமொழியில்

இராமாநுஜர்

எனப்பெறும். இவருடைய இளமைப் பருவத்து விவரங்கள் நன்றாகத் தெரியவில்லை. இவர் சிறுவராயிருக்கையிலே தந்தையார் பரமபத மடைந்தார். மற்ற இளைஞர்களைப் போலவே இவர் தம் குலத்துக்கும் வயதுக்கும் ஏற்ற கல்வி பயின்று வந்தார். இவரது சிற்றம்மையின் குமரரான கோவிந்த பட்டரும் இவரும் ஓரிட்டுப் பிள்ளைகளாய், ஒருமித்து ஓதுவாராயினர். இதனால் இவர்களுக்குள் உறவு முறையன்றி நேச வுணர்ச்சியும் பலப்பட்டது. கோவிந்த பட்டர் என்பவர் வைநதேயாமிசம் ‡ வாய்ந்தவர் என்பார்கள். இவ் விருவரும்

* கி. பி. 1017 எனச் சொல்லுவார் சிலர். † கர்ப்போததி = கர்ப்ப சாகரம் = கருப் பை. ‡ வைநதேயன் = கருடன்.

சாமானியக் கலைகளைப் பழுதறப் பயின்று வேதவேதாங்க சாகித்தியங்களில் தேர்ந்தனர். ஆனால், கலைப் பயிற்சி அம் மட்டில் முற்றுப் பெறாது. ஆதலால், வேதாந்த சாஸ்திரத்தை யும் பயிலும்பொருட்டு இவர்கள் காஞ்சிபுரத்திற்கு மூன்று மைல் தூரத்திலுள்ள திருப்புட்குழி என்னுங் கிராமத்து

யாதவப் பிரகாசர்

என்னும் அந்தணரை அடுத்தனர். அவர் பெயர்பெற்ற பிரபல பண்டிதர்; காஞ்சிபுரத்தில் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லி வந்தனர். இராமாநுஜரும் கோவிந்த பட்டரும் ஊக்கமாகச் சாஸ்திரம் பயின்றுகொண் டிருந்தார்கள். இரா மாநுஜருடைய தேர்ச்சியும் தெளிவும் வியத்தற்பாலனவாயி ருந்தன. இவருடைய நற்குண நற்செய்கைகளையும் நற்பயிற்சி யையும் நுண்ணறிவையும் பற்றிக் கேள்விப்பட்ட பெரிய பாட் டனாகிய ஆளவந்தார் என்பவர் களிப்புற்று ஸ்ரீரங்கத்தி னின்று, எவருமறியாமல் மாறுவேடம் பூண்டு, காஞ்சிபுரத் திற்கு வந்து தேவராஜப் பெருமாளுடைய சந்நிதியில் இரா மாநுஜரைப் பெருங்காதலுடன் உவந்து நோக்கினர். இளவ லுடைய இனிய முகவிலாசத்தையும் தேஜஸையுங் கண்டு ஆளவந்தார் கழிபே ருவகைபூத்துத் தம் ஆசாரியாதிகாரத் தைக் காலந்தாழ்க்காமலே இவருக்கு ஒப்புவிக்கலா மென்னுந் திருப்தியோடு திரும்பித் திருவரங்கம் சேர்ந்தனர். இராமாநு ஜருக்குக் கல்வியிலுள்ள கவலை மாறுவண்ணம் ஆளவந்தார் இவருடன் உரையாடா தேகினர்.

வழக்கம்போல இராமாநுஜர் வேதாந்த விசாரஞ்செய்து வருமளவில், வேதவாக்கியங்களுக்கு யாதவப் பிரகாசர் கூறும் பொருள் சிற்சில இடங்களில் இவருக்குத் திருப்திப்படவில்லை. ஒரு சமயத்தில் இவர் ஆசானுடைய அபிப்பிராயத்திற்கு மாறு

கத் தமக்குத் தோன்றிய பொருளைக் கூற, உடனிருந்தவர்கள் இவருடைய அர்த்தத்தை மெச்சுவாராயினர். இதனால் ஆசானுக்கும் சீடனுக்கும் முறண்பாடு உற்றது.

கிரக உச்சாடனம்

இங்ஙன மிருக்கையில், காஞ்சிமா நகரத்து அரசனது மகளைப் பிரம்மரக்ஷசு பிடித்து மிக வருத்திக்கொண்டிருந்தது. அதனை யோட்ட அரசன் யாதவப் பிரகாசரை அழைத்தனன். அப் பேய் யாதவப் பிரகாசரை நோக்கி, 'உம்மால் என்னை யோட்டலாகாது. உம்மிடம் கல்விகற்கும் இளைய பெருமாள் கட்டளையிடின், யான் நீங்குவேன்' என்றது. அவ்வண்ணமே இராமாநுஜர் தம்முடைய பூஜ்ய பாதத்தினால் அதன் தலையை மிதித்து, அதனை ஓட்டினார். அரசன் பரிந்தளித்த பரிசுகளை யெல்லாம் இராமாநுஜர் தமது குருவாகிய யாதவருக்கே உரித்தாக்கினராயினும், அவர் மாணவனுடைய மகிமையைப் பொறாராயினர். சிஷ்யனுக்கு ஏற்பட்ட பெருமையும் கீர்த்தியும் அதிக அசூயைக்குக் காரணமாயின.

சதி தேற்றல்

அசூயை முதிர்ந்ததனால் இராமாநுஜரை நதியிலிறக்கி விட்டுக் கொல்லவேண்டு மென்று யாதவப்பிரகாசருக்கு மற்ற மாணாக்கர்கள் இரகசியமாகத துராலோசனை சொல்ல, அவர் கங்காயாத்திரை போகும் வியாஜத்தை வைத்துக்கொண்டு தம் மாணவர்களுடன் பிரயாணப்பட்டார். ஒரு நாள் விந்தியாரணியம் என்னும் காட்டின் வழியே செல்லுகையில் சௌசத்திற்காக இராமாநுஜர் தனித்து நிற்பதை யறிந்த கோவிந்த பட்டர் மற்ற மாணவர்களின் சூழ்ச்சியை இவருக்கு அறிவித்து, 'அகலப் போம்' என்றனர். இராமாநுஜர் அவ்

வழியை விட்டு ஒரு மரத்தடியில் நின்று சர்வேசுவரராகிய சுவாமியைத் தியானித்துக் காஞ்சிபுரத்திற்குப் போகவேண்டு மென்று சிந்தித்துக்கொண் டிருந்தார். அப்போது பேரரு ளாளராகிய ஸ்ரீ வரதராஜப் பெருமாளும் பெருந்தேவித் தாயா ரும் வேடனும் வேடத்தியுமாக இவருக்கு எதிரில் தோன்றி னர். அவர்களை இளையபெருமாள், 'நீங்கள் எங்குப்போகிற வர்கள்?' என வினவ அவர்கள், 'நாங்கள் ஸ்ரீகாஞ்சி செல்லு கின்றோம்' என்றனர். 'நானும் உங்களைத் துணைகொண்டு வருகிறேன்' என்று இளையபெருமாள் அவர்களைத் தொடர்ந்து சென்றனர். வழியில் தாகத்திற்குச் சலம் வேண்டுமென்று வில்லிச்சி கேட்க, ஆழ்வார் கிணற்றி லிறங்கி நீர்கொண்டு வந்தனர். அதனைத் தம்பதிகளிருவரும் பருகி, "இதோ புண்ணியகோடி விமானம் * காணும்'' என்றருளிச்செய்து அந் தர்த்தான மாயினர். இவ்வாறு இராமாநுஜர் காஞ்சி நகரஞ் சேர்ந்து அடி நடு முடியற்ற அண்ணலின் மகிமையை யுன்னி இறும்பூதெய்தி இறைவனை ஏத்திப் போற்றினர்.

யாதவப் பிரகாசரும் மாணாக்கர்களும் இளைய பெரு மாளைத் தேடித் தேடி எங்குங் காணாமல், காட்டில் என்ன வாயினரோ வென்று அனுமானித்து, முடிவில் வாராணசி (காசி)யை அடைந்து, சின்னாள் ஆண்டுத் தங்கியிருந்து காஞ்சிக்கு மீண்டனர். இங்கே இராமாநுஜரைக் கண்டு, 'எவ்வகை வந்து சேர்ந்தீர்?'' என, நடந்த செய்தியைக் கூறக் கேட்டு யாதவர் ஆச்சரிய மடைந்தனர். அதுமுதல் அவர் இராமாநுஜர் இடத்தில் முன்னினும் மிக்க நட்புப் பாராட்டுவா ராயினர். அவரிடத்தே இராமாநுஜர் பின்னும் வேதாந்தம பயிலலுற்றார். ஒரு தினம் மற்றோர் உபநிஷத்துப் பாடஞ் சொல்லுகையில் யாதவர் அதனில் ஒரு வாக்கியத்திற்கு

---

* காஞ்சீபுரம் வரதராஜராலய விமானத்தின் பெயர்.

மிக உதாசீனமாகப் பொருள் கூறினர். அது விபரீதமாகத் தோன்றினமையின் இராமாநுஜர் அங்ஙனம் அவ் வாக்கியத்தின் கருத்தைப் புரட்டிக் கூறலாகாதென அசமாதானங் காட்டினர். இவ்வாறு குத்துண்ட யாதவர், "இனி எம்மிடம் நீ பாடங் கேட்கத் தகாது" என இராமாநுஜருக்கு உரைத்தனர்.

விஷ்ணு பூஜை

இவ் வர்த்தமானத்தை இராமநுஜர் தம் தாயாரிடங் கூற அவர், ஆளவந்தாருடைய சீடரான திருக்கச்சி நம்பி என்பவருடன் இருக்கும்படி, தம் தனயருக்கு நியமனஞ் செய்தனர். அன்னை சொற்படி இராமாநுஜர் அவரை யடுத்து, விஷ்ணு பூஜா துரந்தரராகி, கிருகஸ்தாசிரமத்தை மேற்கொண்டு, நாள் தோறும் வேளைதோறும் பெருங் கருணைத் தடங்கடலாகிய பேரருளாளனுடைய கைங்கரியத்தில் மிக்கபக்தியுடன் அமர்ந்திருந்தனர்.

ஆளவந்தாரின் அவசானம் *

ஈதிங்ஙனமாக, ஸ்ரீரங்கத்தில் வைணவ குலக் குரவராய்த் துலங்கிய ஆளவந்தாருக்கு அவசான காலம் அண்மியது. அதனை யுணர்ந்து அவர் தம் சீடர்களுள் மூப்பும் முதலெண்ணிக்கையும் பெற்ற வைணவ சிகாமணியாய பெரிய நம்பி என்பாரை விளித்து, காஞ்சியிலிருந்து இராமநுஜரை ஸ்ரீரங்கத்திற்கு அழைத்து வரும்படி கற்பித்தனர். ஆசானுடைய நியமனப்படி பெரிய நம்பி (மகாபூர்ணர்) காஞ்சீபுரத்திற்கு வந்தபோது இராமாநுஜர் பெருமாள் கோயிலில் காலைக் கைங்கரியத்திற்கான பூர்வாங்கங்களைச் சித்தமாக்கிக்கொண் டிருந்தனர். ஆளவந்தாரருளிய ஸ்தோத்திர ரத்தின மொன்றை யோதிக்கொண்டு பெரிய நம்பி ஒரு சார்பிருக்க, அந்தச் சுலோ

---

* அவஸானம் = முடிவு, மரணம்.

கங்கள் இராமாநுஜருடைய மனத்தைக் கவர்ந்தன. ஆண்டடைந்திருந்த பெரிய நம்பியை விழைவொடு நோக்கி,

இராமாநுஜர் — இந்தச் சுலோகரத்தின மியற்றி யருளிய புண்ணிய சீலர் யாவர்?

பெரியநம்பி — எங்கள் ஆசானும் ஆளவந்தார் என்னும் மகான்.

இராமாநுஜர் — அவரை யான் தரிசிக்கலாகுமோ?

பெரியநம்பி — என்னுடன் வரக்கூடுமாயின் உம்மை அவரிடம் அழைத்துச் செல்வேன்

எனலும், அன்னார்பால் மிக்க நன்றி பாராட்டி 'அங்ஙனே யாகுக' வெனச் செப்பி யன்னவரிடமாக விடைபெற்று இராமாநுஜர் காலைக் கைங்கரியத்தை விரைந்து முடிப்பான் திருக்கோயில் புக்கனர். அலகிலா விளையாட்டுடையோனுய்த் தந் தொண்டர் கொண்ட கருத்தை யோர்ந்து அங்ஙனே ஆக்குவிப் போனுகிய பெருந்தேவி மணாளனும் பேரருளாளனது உத்தரவு படைத்து, ஆளவந்தாரைச் சேவிக்க பெரிய நம்பியுடன் இவர் முதன் முதலாக

ஸ்ரீரங்க யாத்திரை

புறப்பட்டார். இருவரும் பிரயாணமாகி ஸ்ரீரங்கத்தின் வடகரைக்குப் போய்ச் சேர்ந்தபோது கொள்ளிட நதியின் தென்கரையில் திருக்கரம்பரன் துறையில் சில ஜனங்கள் கும்பலாக நிற்பதை இராமாநுஜர் கண்டார். அவணணுகி நோக்குழி ஆளவந்தார் அன்றே திருநாட்டுக் கெழுந்தருளியதும், அபரக்கிரியையினிமித்தம் அவருடைய திருமேனியைச் சீடர்குழாம் சுமந்து வந்துள்ளதும் புலப்பட்டன. அந்தச் சரம விக்கிரகத்தை யண்மி இராமாநுஜர் ஆபாதமத்தகம்* சேவிக்கையில், வலக்கரத்து விரல்களுள் மூன்று முடங்கி யிருக்கக் கண்டனர்.

* ஆபாத மத்தகம் = அடிதொடங்கி முடிவரையும்.

மூன்று பிரதிக்கினைகள்

அது ஜீவதசையிலிருந்த உடற் குற்றமோ வென வாய்ந்து, இல்லை யென வோர்ந்து, இராமாநுஜர் ஆண்டுக் குழுமியிருந்த முதியோரைப் பின்னும் உசாவி, ஆளவந்தாருக்கு மூன்று மனக்குறைகள் இருந்தன வெனவும், அவைகளை ஈடேற்றாத காரணத்தினால் அம் மூன்று விரல்கள் மடங்கியிருக்கலாகு மெனவும் தெரிந்தார். குறைகள் இன்னவையெனக் கேட்டறிந்த இராமாநுஜர், குரவர் கொண்ட கருத்துக்கிணங்க, அவைகளை ஈடேற்றுவேமெனப் பின்வருமாறு மூன்று பிரதிக்கினைகளைச் செய்தார்:

1. பிரம்ம சூத்திரங்களை எளிதில் விளங்கவைக்கத்தக்க விசிஷ்டாத்துவைத பாஷியமொன்றைப் புனைவேன்.

2. பராசரருடைய பெயரும் சடகோபருடைய பெயரும் உலகில் விளங்கும் வண்ணம் அவர்களிடத்தில் உபகாரஸ்மிருதி * பாராட்டி, தக்கவர்களுக்கு அந்தப் பெயர்களை யிடுவேன்.

3. நம்மாழ்வார் அருளிய திராவிட ஆம்நாயத்தை † ப் பிரசாரப்படுத்தி, அவரிடத்துப் பக்திவிசுவாஸஞ் செலுத்துவேன்.

இங்ஙனம் இவர் அறைந்தவக்கணமே ஆளவந்தாரின் கையில் மடங்கியிருந்த மூன்று விரல்களும் நிமிர்ந்தன. இவ்வதிசயங் கண்ட இராமாநுஜர் மயக்கொழிந்து மிகக் களித்த மனத்தினராய், அலகில் பேரின்ப வீட்டை யடைந்துள்ள குலக்குரவர்க்குச் சரம கைங்கரியாதிகளைச் செவ்வனே நிகழ்த்தி முடிப்பித்தனர். பின்பு, "காசி முதலாய நன்னகரி யெல்லாங் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா" என்னும்படி மேம்பாடுற்றுத் துலங்கும் கச்சிநகரத்தே யிருந்து, அத்திகிரியருளாளப் பெருமாளுடைய கைங்கரியத்தைப் பண்டைபோல் மேற்கொள்ள மீண்டனர்.

---

* உபகாரஸ்மிருதி = நன்றி. † ஆம்நாயம் = வேதம்.

மேற்கடமை

கச்சியம்பதியை யடைந்து இராமாநுஜர் ஞானியாகிய திருக்கச்சி நம்பியுடன் இருந்து பகவதாராதனாதி கைங்கரியங் களை முறை வழுவாது இயற்றிவந்தார். இன்னணம் காலங் கழித்துவரும் நாளில், முன் செய்த பிரதிக்கினைகளை நிறை வேற்றும் முயற்சி இல்லையே என்னுங் கவலை இவருக்கு உண்டாயிற்று. செய்வ தின்ன தெனத் தெளிந்திலராய் இவர் மூத்தோராகிய திருக்கச்சி நம்பியாரை நாடி, அந்தப் பிரதிக்கினைகளை இயம்பி, இனித் தாம் செய்யத்தக்க காரி யம் இன்னதெனப் பெருமாளின் திருவுள்ளத்தைத் தெரிந்து கொள்ளும்படி வேண்டினர். இவ் விஷயத்தில் பேரருளாள னுடைய நியமனத்தை வெளியிடுவாராய்த் திருக்கச்சி நம்பி,

"நானே பரம்தத்துவம், பேதமே எனது மதம், பிரபத்தியே நிரபாயஹேது, புத்திபூர்வகமான சங்கற்பம் அவசியமில்லை, அந்திய காலத்தில் மோக்ஷம்; இப்போது மகாபூர்ணரே ஆரியவரியர்"

எனப் பொருள்படும் சுலோகத்தைச் சாதித்தருளினர். இவ் வாறு வாக்கியங்களின் மூலமாக இவர் மேற்கொள்ளவேண் டிய கடமைகள் குறிக்கப்பட்டன. எங்ஙனமெனின், ஈசுவ ரனே பரமதத்துவ மென்னும் உறுதியான நம்பிக்கை வாய்ந்து, பெரிய நம்பியை (மகா பூர்ணரை) ஆசானாகக்கொண்டு அவ ரிடத்து உபதேசம பெற்று, விசிஷ்டாத்துவைத சித்தாந்தத் தைத் தாபித்துப் பிரபத்தி மார்க்கத்தை ஜனங்களுக்குப் போதிக்க வேண்டும். இங்ஙனம் பிரபத்தி செய்கிறவர்கள் முக்தி வேண்டுமென்று தாங்களே விரும்பி வேண்டாவிடினும், அவர்களுக்கு முக்தி யளிக்க ஈசுவரன் காத்திருக்கின்றார் — என்பன காளமேக வண்ணலாகிய எம்பெருமான் அருளிப் போந்தவையென இவர் தெரிந்துகொண்டார். திருக்கச்சி நம்பி

யின் வாயிலாக தேவராஜனுடைய * அனுக்கிரக பூர்வகமான விடையைப்பெற்று இவர் அவ்வகை நடக்கச் சங்கற்பித்து, முதற் காரியமாகப் பெரியநம்பியைத் தேடி ஸ்ரீரங்கயாத்திரை செய்யப் புறப்பட்டார்.

தீக்ஷாகரணம்

மார்க்கத்திலுள்ள மதுராந்தகத்தில் தங்கி, இவர் ஆலயம் புக்குப் பிராட்டி சமேதனாக ஏரிக்கரையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளும் ஸ்ரீ ராமபிரானை அஷ்டாங்கப் பிரணாமஞ்செய்து, தம் சிந்தை செல்லுங் காலவரை தவுத்தியஞ் செய்து திரும்பினர். அப்போழ்து அவ்விடத்தே மிக்க தேஜசோடு துலங்கும் பெரியநம்பியைக் கண்டு வியப்புங் களிப்புமடைந்து, 'உய்ந்தேன், உய்ந்தேன்' எனக் கிளத்திய வாக்கினராய் இவர் அன்னாரை வலம்வந்தனர். திருநாரணனது ஆக்கினையே என்னலாம்படி, வணங்கி அஞ்சலிபத்தராய்க் குசலக் கிளவி யாடி, குரவராம் அன்னார் தரிசனத்தின்பொருட்டே தாம் காஞ்சிநீத் தெழுந்த விவரத்தை இவர் சொற்றனர். அவ்வமுத வாக்கினைச் செவிமடுத்த பெரியநம்பி, இவர்பொருட்டுத் தாம் காஞ்சியை நோக்கிவந்த காரணத்தை இயம்பினர். இருவருடைய பிரயாண நோக்கமும் ஏரிகாத்த எமபெருமானுடைய சந்நிதியில் ஈடேறியது. ஏற்ற வமயம் உற்றதென வுன்னி இராமாநுஜர் விடாப்பிடியாய் மன்றாடி, ஆண்டுள்ள திருமகிழ மரத்தின் அடியில் பெரியநம்பியினிடம் பஞ்சஸம்ஸ்காரமும் வேதாந்த தத்துவ ரகசியோபதேசமும் பெற்றனர். ஆசானும் சிஷ்யனும் காஞ்சிக்கேகிச் சின்னாள் ஒத்துக் குடித்தனம் நடாத்தி வந்தனர். ஆயின், பிரிவினை விரைவில் விளைந்தது.

---

* தேவராஜன், வரதராஜன், பேரருளாளன், அருளாளப் பெருமாள் என்பன காஞ்சீபுரம் அத்திகிரியில் அமர்ந்தருளும் விஷ்ணு மூர்த்தியைக் குறிக்கும்பெயர்கள்.

துறவறந் தூண்டிய திறம்

பெரியநம்பியும் இராமாநுஜரும் அடுத்தடுத்துத் திருமாளிகைக எமைத்துக்கொண்டு சிலகாலம் அந்நியோந்நியமாக விவகரித்துவந்தார்கள். ஆனால், இராமாநுஜருடைய இல்லக்கிழத்தி இவருக்கு இசைந்தொழுகுந் தன்மையளெனத் தோன்றவில்லை. அவள் இவருடைய நோக்கமறிந்து நடந்தாளில்லை, விருப்பமறிந்து விவகரித்தாளில்லை, இரக்கமறிந்து இணங்கினாளில்லை, ஏவியவண்ணம் இயற்றினாளில்லை. ஒருநாள் இவருடைய திருமாளிகைக்குத் திருக்கச்சி நம்பி வந்து பேசிக்கொண்டிருந்தார். அம் மகானுபாவர் இவரைவிடக் குலப்பிரதிஷ்டையிற் சிறிது தாழ்ந்தவரானமையின், அவர் வீற்றிருந்த பீடப்பலகையை இராமாநுஜருடைய மனைவி விரைந்து கழுவிச் சுத்திசெய்தனள். அதனைக் கண்டு இராமாநுஜர் மனம் வருந்தி, மனைவியைக் கண்டித்து அக் குற்றத்தைப் பொறுத்தனர். மற்றொருநாட் காலையில் இவர் கைங்கரிய பரராய்ப் பெருமாள்கோயிலி விருக்கையில் எளிஞனொருவன் இவரை யடுத்து அன்னம் வேண்டினன். தாம் அனுப்பியதாகச் சொல்லி வீட்டில் தம் மனைவியிடம் அன்னம் பெற்றுப் புசிக்கும்படி இவர் அவ் வெளியானை ஏவினர். அவ் வம்மை சோறு இல்லையென அவனுக்குச் சொற்றனள். மீண்டுவந்து அவன் முறையிட இராமாநுஜர் இல்லஞ்சென்று உள்ளே அன்ன மிருக்கக் கண்டு, அதனை யெடுத்துத் தாமே அவ் வறிஞனுக் களித்து, மனைவிக்குப் புத்தி புகட்டி இரண்டாம் முறையும் அவளை மன்னித்தனர். மூன்றும் முறை அவள் செய்தகுற்றம் இவருக்குப் பொறுக்க முடியாதாயிற்று. அது மிகப் பெருங் குற்றமென இவர் கொண்டார். இவருடைய மனைவியும் பெரியநம்பியின் மனைவியும் ஒரு கிணற்றில் நீரெடுக்கச் சென்றிருந்தனர். அஜாக்கிரதையினால் பெரி

நம்பி மனைவியின் குடத்து நீர் தளம்பிச் சிறிது இராமாநுஜர் மனைவியின் குடத்தில் தெறித்தது. இதுகாரணமாக அவர்களிருவருக்கும் நிகழ்ந்த சச்சரவில் அவ் விருவரது குலப் பெருமையின் தார தம்மியங்களை இராமாநுஜரின் மனைவி சற்றுக் கடுமையாக வற்புறுத்தி வாதித்தனள். இனி இவ் விருவரும் உடனுழலுதல் இயலாதாயிற்று. மற்றவள் இவ் விஷயத்தைத் தன் கணவனுக்குப் புகல, அன்னவர் சாதுவாகிய இராமாநுஜர் நோவா வண்ணம் காஞ்சிப் பதியினின்றும் பெயர்ந்து திருவரங்கம் மேவினர்.

துறவறம்

திடீரென்று பெரியநம்பி ஊரை விட்டுப் போன காரணம் இன்னதென்று பின்பு இராமாநுஜர் தெரிந்து, தம் மனைவியை விட்டுப் பிரியுங் காலம் கிட்டியதெனத் தீர்மானித்தார். அந்த வேளையில் இவருடைய மாமனார் தம் புத்திரியைப் பிறந்தக மழைத்துப்போக விரும்பினர். அதுவே வியாஜமாக இராமாநுஜர் தம் மனைவியைப் பிறந்தகத்திற்கு அனுப்பிவிட்டனர். பிறழாப் பிரதிக்கினை யுடைய நம் இளைய பெருமாள் சமுசார சுகம் அநித்தியமான தெனவும் பந்தத்திற்கு ஏதுவானதெனவும் நிச்சயித்து, அவ் வமயத்தைக் கைக்கொண்டு மேலே விவரித்த காரணங்களினால் பத்தினியைப் பரித்தியாகஞ் செய்தனர். கேவல வைராக்கியத்தினால் மோக்ஷார்த்தியாகி ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் பிரேரணையை மேற்கொண்டு பரபீடன பராமுகரான இராமாநுஜர் நிர்மலமாயுள்ள அனந்தசரசின் தீரத்தில் பஞ்சாசாரிய * தசையை

---

* இல்லறம் நடத்திக்கொண்டு ஆசாரியராயிருப்பவர் பஞ்சாசாரியர் எனப்படுவர். ஏனெனில், இல்லறவாழ்க்கையில் கிருகஸ்தன் நாள்தோறும் வளர்க்கவேண்டிய அக்கினிகள் ஐந்து உள. அவை,

விட்டுத் துரீயாச்சிரமத்தை மேற்கொண்டு, "யதிராஜர்" என்னும் தீக்ஷாநாமத்தோடு திரிதண்ட காஷாய பூஷிதராகி விளங்கினர். சந்நியாசியா யிருப்பவர் ஏகதண்டியா யிருக்க வேண்டுமா அல்லது திரிதண்டியாய் இருக்க வேண்டுமா என்னும் விவாதத்துக்கு இப்போது விவாதத்திற்கு வந்தது. முன்பு இராமாநுஜருக்குக் கலை கற்பித்த ஆசானாகிய யாதவப்பிரகாசர் இப்பொழுது இராமாநுஜருடைய வைஷ்ணவ மதத்தைத் தழுவிப் பஞ்ச ஸம்ஸ்காரங்களோடு துறவம் மேற்கொண்டு 'கோவிந்த ஜீயர்' என்னும் பெயர் பூண்டு, துறவியின் ஒழுக்க முறை யாராய்ச்சியாகிய "யதி தர்ம ஸமுச்சயம்" என்னும் நூலை யியற்றினர். இராமாநுஜர் துறவறம் மேற்கொண்ட பின்பு அநேகர் சிஷ்யர்களாகி இவரை யடுத்துப் பாடங் கேட்கத் தலைப்பட்டனர். அவர்களுக்குப் பாடஞ் சொல்வதும் ஜனங்களுக்குப் புராணாதிகளை யெடுத்தோதுவதுமே தினந்தோறும யதிராஜருக்குக் காரியமாயிருந்தது. இவருடைய புராண காலக்ஷேபங்களைக் கேட்டுக் களிப்புற்ற யாதவரின் அன்னை தன் மகனுக்கு இராமாநுஜரின் மகிமையை யெடுத்துரைத்து இவரிடம் துவேஷம் பாராட்டல் துர்மதி யென வற்புறுத்திய பின்னரே யாதவப் பிரகாசர் மேற்சொல்லியவாறு இராமாநுஜரை யடைந்து ஸம்ஸ்கார மேற்றுத் துறவறம் பூண்டன ரென்பர்.

திருவரங்க வாசம்

இங்ஙனம் இராமாநுஜர் காஞ்சியில் காலக்ஷேபம் சாதித்துக்கொண்டு போதருகையில் திருவரங்கத்திலுள்ள ஆளவந்

1. அன்வாஹார்ய பசனாக்கினி, 2. கார்ஹபத்தியாக்கினி, 3. ஆஹவநீயாக்கினி, 4. ஸப்யாக்கினி, 5. ஆவஸத்தியாக்கினி என்னும் பஞ்சாக்கினிகளாம்.



திருமந்திரார்த்தப் பிரதானம்

தாருடைய சிஷ்யர்கள் இவரை வரவழைத்துத் தங்கள் ஆசானுடைய ஸ்தானத்தில் எழுந்தருளப்பண்ண வேண்டுமென்று எண்ணங்கொண்டார்கள். முன்பு ஆளவந்தாருடைய அவசான சமயத்தில் இவரை யழைத்துவருமாறு பெரியநம்பியை யனுப்பியதுபோல இப்போது ஆளவந்தாருடைய புத்திரரும், மாணவர்களுள் முக்கியமானவருமாகிய திருவரங்கப் பெருமாளரையர் என்பவரைக் காஞ்சீபுரத்திற்கு அனுப்பி இராமாநுஜரை யழைத்துவரத் திட்டஞ் செய்தார்கள். அவ்வரையருடன் இராமாநுஜர் எழுந்தருளித் திருவரங்கம் அடைந்தனர். ஆசாரிய ஸ்தானத்திற்கு மிக்க உரிமை வாய்ந்தவரென எல்லாராலும் மதிக்கப் பெற்ற இராமாநுஜர் அந்தப் பெரும் பதவியை வகிப்பதற்கேற்ற யோக்கியதைகளை முறைப்படி பெற்றுத் தேறப் பிரயத்தனப்பட்டனர். அதன்பொருட்டு இவர் ஸ்ரீ வைஷ்ணவ தத்துவ இரகசியம் ஒவ்வொன்றையும் குருமுகமாகப் பெறவேண்டியவ ராயினர்.

திருமந்திரார்த்தப் பிரதானம்

ஒரு வகையில் பெரியநம்பி யென்பார் ஏற்கெனவே இவருக்குக் குருவாயினரன்றே? மற்றொருவகையில், அஃதாவது, திருமந்திரார்த்தத்தின் பொருட்டு இவர் திருக்கோட்டியூர் நம்பியை யடுத்து உபதேசம் பெறவேண்டியதாயிருந்தது. அவரை நாடி இராமாநுஜர் பதினெண்முறை சென்றும் இவருக்கு இவ் விஷயத்தில் போதிய சிரத்தை இன்னும் உண்டாகவில்லையென எண்ணித் திருக்கோட்டியூர் நம்பி திருமந்திரார்த்த ரகசியத்தை இவருக்கு வெளியிடாராயினர். மனம் முறிந்து இராமாநுஜர் தம் பிரயத்தனத்தைக் கைசோர விடுமளவில் மற்றொருமுறை பார்க்குமாறு நண்பர்கள் தூண்ட, திருக்கோட்டியூர் நம்பி இவர்மாட்டு

இரங்கிய மனத்தராய், ஆய்ந்தெடுத்த மாணவர்க் கன்றி மற்றெவர்க்கும் வெளியிடவொண்ணா தென்னும் சம்பிரதாய நிபந்தனையின்மீது, திருமந்திரார்த்த ரகசியத்தை இவருக்கு உபதேசித்தருளினர். இத்துணை அரும்பாடுபட்டுப் பெற்ற இரகசியப் பொருளை இராமாநுஜர் அங்ஙனே திருக்கோட்டியூர்க் கோபுரச் சிகரியினின்று உலகறியப் பிரகடித்தனர்.

"எம்பெருமானர்"

இதனை யுணர்ந்த ஆசான் இவரை விளித்துத் தம் கட்டளையைக் கடந்தது என்னேவென, இராமாநுஜர் இவ் வபசாரத்திற்குரிய தண்டனையைத் தமக்கு விதிக்கும்படி ஆசானை வேண்டினர். மறுமையில் நரகப்பிராப்தியே யொழிய இம்மையில் இதற்குச் சிக்ஷை ஒன்றுமில்லையென ஆசான் நவின்றனர். 'இதனால் அகில ஆன்மகோடிகளும் உய்வதற்கு உபாய மேற்படுமாயின், இதன் பயனும் நரகானுபவத்தை யானொருவன் களிப்புடன் ஏற்பேன்' என்று இராமாநுஜர் மறுமொழி பகர்ந்தனர். இவர் குருவாணை கடந்த கருத்தின் கனத்தைத் தெரிந்து சந்தோஷமனத்தினராய்த் திருக்கோட்டியூர் நம்பி இராமாநுஜரை வாழ்த்தி, உடையவருடைய உட்கருத்துக்குப் போர உகந்து, 'யாம் அது பெற்றிலேம்' எனத் தம்மை நொந்து, "இன்று முதல் இந்தத் 'தரிசனம்' (வேதாந்தப் பிரகரணம்) 'இராமாநுஜ தரிசனம்' என வழங்குக" வெனச் சாற்றியருளினர். இராமாநுஜருடைய மனவிரிவையும் பெருந் தகைமையையும் பரோபகார புத்தியையும் வியந்து அங்குள்ளவர்க ளெல்லாரும் 'இவ் வர்த்தத்தை யருளிச் செய்தவர் எம்பெருமானரோ?' என்று உடையவர் திருவடிகளிலே சேவித்து நிற்க, நம்பியும் இவருக்கு "எம்பெருமானர்" எனத் திருநாமஞ் சூட்டியருளினர்.

கோவிந்த பட்டர்

இளமைப் பருவத்தில் இராமாநுஜரோடு கோவிந்தபட்டரென்பவர் பாடசாலையில் படித்து வந்ததன்றி யாதவப் பிரகாசரிடமும், இவருக்குச் சகபாடியாக, வேதாந்த விசாரம் செய்து வந்தனரல்லரே? இந்த கோவிந்த பட்டர் யாதவருடன் கங்கா யாத்திரை செய்து அப் புண்ணிய தீர்த்தத்தில் நீராடுமளவில் இவருடைய உள்ளங்கையில் ஒரு சிவலிங்கம் வந்து தாக்க, இவர் இலிங்கதாரியாய்க் கரையேறினர். அது காரணமாக இவர் "உள்ளங்கை கொணர்ந்த நாயனுர்" எனப் பெயர் பெற்ருர். அது முதல் இவர் தீவிர சிவபக்தராகி, மழலை மங்கலத்தில் சிவப்பிரதிஷ்டை செய்து, திருக்காளத்தியில் நிவசித்துக்கொண் டிருந்தார். இவர் இப்படி யிருப்பது வைஷ்ணவர்களாகிய உறவினர்களுக்குச் சமாதானப் படவில்லை, அருகிலுள்ள திருப்பதி க்ஷேத்திரத்தில் இவருடைய மாதுலராம் பெரிய திருமலைநம்பி யென்பார் கைங்கரியராக இருந்தனர். இராமாநுஜருடைய விருப்பத்திற் கிணங்கி அம் மாதுலர் தம் மருமகனுகிய கோவிந்தபட்டரை யண்மி ஏற்றவாறு இதோபதேசங்கள் செய்து புத்தியைப் பேதித்து மீண்டும் வைஷ்ணவராக்கி "எம்பார்" என்னும் திருநாமமும் அளித்தனர்.

தலைமைத் தகைமை

இராமாநுஜருடைய பெயரும் கீர்த்தியும் பரவலாயின; பெருமை அதிகரிக்கலாயிற்று; ஒரு வேதாந்த தரிசனத்திற்குத் தலைவர் என்னும் பெயருக்கு ஏற்ற தகைமையைத் தேடிக்கொள்ள வேண்டுமென இவர் தீவிரப்பட்டார். முதலில் திருவரங்கப்பெருமா ளரையரிடத்தும், பின்பு திருமாலை யாண்டானிடத்தும் இவர் திருவாய்மொழி யோதினர்.

திருமாலையாண்டானிடத்து ஓதுங் காலையில் இவர் சில வாக்கியங்களுக்கு விசேஷார்த்தங்களைக் கற்பித்துக் கூறினர். ஆராயுமளவில், இவை ஆளவந்தாரது கருத்துக்கு இசைந்தவை என வெளிப்பட்டது. இவ்வாறு இராமாநுஜர் ஆசாரிய பதவிக்குரிய யோக்கியதைகளை யெல்லாம் சம்பாதித்துக் கொண்டு பிரகாசமாக விளங்கினர்; உண்மையில் ஆளவந்தாருடைய ஸ்தானத்தை வகிக்கலாயினர் என்பதாம்.

விஷான்ன விலக்கம்

இவர் துறவற முறைப்படி தினந்தோறும் பகற்பொழுதில் மதுகரவினை* செய்து போனக மருந்துவர். இவரிடத்து அசூயை கொண்டவ னொருவன் இவருக்குப் பிக்ஷையிடும் அன்னத்தில் விஷத்தைக் கலந்து போடும்படி தன் மனைவிக்குக் கற்பித்திருந்தான். அவ் வம்மை கணவன் கட்டளைப்படி செய்யக் கடமைப்பட்டவளாயினும், அங்ஙனம் விஷங் கலந்த அன்னத்தை இராமாநுஜருக்கு இடுகையில் பரிதாபமிகுந்தவளாய் மனந்தாளாது இவர் பாதத்திற்குத் தண்டஞ் சமர்ப்பித்தனள். துறவிக்குப் பிக்ஷையிடுகையில் இவ்வாறு வந்தனஞ் செய்தல் முறையல்லாதிருக்க இம் மாது வழிபட்டதைக் கொண்டு அவ் வன்னத்தில் ஏதோ மோசமிருக்கிறதென்று இராமாநுஜர் ஊகித்து அதனைத் தவிர்த்தார். சோதனையில் விஷம் வெளிப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் இவருடைய கீர்த்தி நாற்புறமும் பரவியிருந்ததனுல் திருப்பதியிலுள்ள இவருடைய அம்மான்சேய் இவர் பெருமையைக் கேட்டுப் பெருமகிழ்வுற்று, இவரைத் தரிசிக்க விரும்பி மற்றொரு ஞாதியுடன் திருவரங்கம் வந்து சேர்ந்தான். மேலே

* மதுகரம்=வண்டு. மலர்களினின்று தேனை வண்டு எடுப்பதுபோல வீடுதோறும் பிச்சையெடுத்தல் மதுகரவினை.

சொல்லியவாறு பிக்ஷான்னத்தில் நஞ்சு கண்டது முதல் திருமலையிலிருந்து வந்தவ ரிருவருள் மூத்தோனே இராமா நுஜருக்கு வேண்டிய புசிகரண மமைக்கும் பொறுப்பை யேற்கும்படி திட்டஞ் செய்தார்கள்.

யஜ்ஞமூர்த்தி

இதுவொழிய, இராமாநுஜர் ஆசாரிய ஸ்தானத்தை மேற் கொண்டு ஸ்வஸ்தமாகவே காலங்கழித்து வந்தார். இதற்கு பின்பு, அமளி அதிகமாயிற்று. இவரது கீர்த்தி எங்கும் பரவி நிலை கொண்டது. பிரபலமானவர்கள் சிலரை வைஷ் ணவர்களாக்கினதனுல் ஜனங்கள் இவரை விசேஷமாகக் கவனிக்கலாயினர். இவர் விரும்பினும் விரும்பாவிடினும், வந்தெதிர்ப்பவர்களை வென்று தம் நிலையைத் தாபித்துக் கொள்வது இவருக்கு இன்றியமையா தாயிற்று. இவ்வாறு இவர் சாஸ்திர வாதச் சிரேட்டரெனப் போந்தார்.

இங்ஙனம் போதருகின்ற காலத்தில் யஜ்ஞமூர்த்தி என்னுமொரு அத்துவைத சந்நியாசி இந்தியா முழுதும் விஜய யாத்திரை செய்வாராய்த் திருவரங்கம் வந்து சேர்ந் தார். அவருக்கும் இராமாநுஜருக்கும் அவரவருடைய மதசித்தாந்த விஷயமாகப் பெருந் தர்க்கம் நிகழ்ந்தது. பதினறு தினங்கள் போராடியும் ஒருவருக்கொருவர் சளைக்க வில்லை. தம் நிலைமையைக் காத்துக்கொள்ளும் கவலைமேலிட்ட வராய் இராமாநுஜர் தியங்குகையில் ஆளவந்தார் அருளிய நூல்களில் தமக்கு அனுகூலமான ஆதாரங்கள் ஒருகால் கிடைக்கக் கூடுமென்று எண்ணி அக் குரவர்பெருமானுடைய "மாயாவாத கண்டனம்" என்னும் நூலைப் பார்க்கலானர். அதனில் பொதிந்து கிடந்த எதுக்களைக்கொண்டு இவர் பதி னேழாம நாள் எதிரியை வாதத்தில் வென்றார். இங்ஙனம்

பரிபவப்பட்ட யஜ்ஞமூர்த்தி தம் அத்துவைதக் கொள்கையைக் கைவிட்டு, இராமாநுஜரது சிஷ்யவர்க்கத்திற் சேர்ந்து, "அருளாளப் பெருமாள் எம்பெருமானார்" என்னும் திருநாமம் பெற்றார்.

சூத்திரபாஷியம்

சின்னாட் செல்லலும் இராமாநுஜர் திருப்பதியிலுள்ள தம் மாதுலரைக் காணவேண்டுமென வெண்ணினார். அம்மாதுலரும் இவரைக்கண்டு களிக்கும் அவாவுற்று விழைவுடன் இவருக்குச் சொல்லி யனுப்பினார். அதன்மீது, ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய முக்கிய திருப்பதி* களிலொன்றாகிய திருமலைக்கு இவர் எழுந்தருளினார். அத் திவ்விய தலத்தில் ஓர் ஆண்டிருந்து தம் மாதுலரிடமாக இராமாயணத்தை யோதி, அதன் இரகசியங்களை இவர் நன்றாகத் தெரிந்துகொண்டனர். இங்ஙனம், இதிகாச ரத்தினமாகிய இராமாயணமே செவிக்கினிய செஞ்சொல் லெனக்கொண்டு இவர் சிரவணஞ்செய்து பூர்த்திபண்ணுமளவில் அம் மாதுலர் தம் புத்திரர்கள் இருவரையும் இராமாநுஜாசாரியருடைய வசத்தில் ஒப்புவித்தனர். இப்பொழுது ஆசாரியர் செய்து கொள்ள வேண்டிய ஆயத்தங்களனைத்தும் முற்றுப்பெற்றன; வயதும் முதிரலாயிற்று. இனி ஆளவந்தாருக்கு அளித்திருந்த வாக்கைப் பரிபாலிக்க இவர் குதூகலங்கொண்டனர். இவர்செய்த பிரதிக்கினைகள் மூன்றனுள் பிரம்ம சூத்திரத்திற்கு விசிஷ்டாத்துவைத பாஷியம் இயற்றுவது முதலாவதாம். இதனை நிறைவேற்றுவதற்கு, முன்னவர்கள் புனைந்

*மூன்று முக்கிய திருப்பதிகளாவன: 1. திருவரங்கம், 2. திருப்பதி, 3. காஞ்சீபுரம் என்னுந் தலங்களாம். இவை முறையே 1. கோயில், 2. திருமலை, 3. பெருமாள் கோயில் என வைணவ பரிபாஷையில் வழங்கப்பெறும்.

துள்ள பாஷியங்கள் எத் தன்மையன வெனத் தெரிந்து கொள்வது அவசியமாயிருந்தது ; அவற்றுள் முக்கியமாக போதாயன விருத்தியைப் பார்க்க வேண்டுமென்று ஆசாரியர் வெகு பிரயத்தனப்பட்டார். இவருடைய நோக்கம் பண்டைப் பாஷியங்களைக் கண்டித்துப் புதியதொன்றை அமைப்பதே யென்பது பிரசித்தமானமையின் இவருக்கு அஃது எளிதிற் கிட்டாதாயிற்று. முடிவில் இவர் சிருங்கேரி மடத்திலுள்ள பாஷியப் பிரதியினைப் பார்க்கலாயினர். இவருடைய முக்கிய சிஷ்யரான கூரத்தாழ்வார் அந் நூல் முழுமையும் வெகு விரைவில் முகபாடஞ் செய்து கொண்டனர். அவருடைய பெருந் துணையைக் கொண்டு இராமாநுஜாசாரியர் "வேதாந்த சாரம்," "வேதாந்த சங்கிரகம்," "வேதாந்த தீபம்" என்னும் மூன்று நூல்களையும் ஆக்கியருளினர். இவையன்றி, பிரம்ம சூத்திரத்திற்கும் பகவத்கீதைக்கும் பாஷ்யங்களை வரைந்தருளினர். இங்ஙனமாக இராமாநுஜாசாரியர் தம் முதற் பிரதிக்கினையை ஈடேற்றினவராயினர்.

பாஷியம் அரங்கேற்றல்

ஆயினும், இந்தப் பாஷியத்தை உலகத்தவர் ஒப்புக் கொள்ளுமுன் தம் கடமையைச் செலுத்தியவ ராகோமென வோர்ந்து, இராமாநுஜாசாரியர் ஆங்காங்குள்ள பிரபல வித்துவான்களுக்கு இதனைக் காட்டி அவர்களுடைய ஆமோதத்தைப் பெறும் பொருட்டுப் பற்பல இடங்களுக்கு எழுந்தருளினர். இந்த விஜய யாத்திரையில் இவர் கும்பகோணம், கேரளம், பாண்டியநாடு, அனந்தசயனம், மதுராபுரி, துவாராவதி, சாகேதம், நைமிசம், புஷ்கரம், பிருந்தாவனம், பதரிகாசிரமம் முதலான திவ்விய ஸ்தலங்களி லெல்லாம் சஞ்சரித்து, வித்துவான்களை வாதத்தில் வென்று, தம்முடைய

சித்தாந்தத்தை நிலை நாட்டி, வித்தியா நிலையமாங் காசுமீரத்தை யடைந்தனர். அங்கே "ஸரஸ்வதி பீடம்" என்னும் "பட்ட மண்டப"த்தில் தம் சூத்திர பாஷியத்தை அரங்கேற்றி "ஸரஸ்வதி"யின் ஆமோதத்தையும் அனுக்கிரகத்தையும் படைத்தனர். ஸரஸ்வதீதேவி தனது ஆமோதச் சின்னமாக அயக்கிரீவ விக்கிரக மொன்றை ஆசாரியருக்கு அளித்து, இவருடைய சூத்திர பாஷியம் "ஸ்ரீபாஷியம் என்னுஞ் சிறப்புப் பெயரால் விளங்குமாக" எனச் சாசனஞ் செய்தருளினர். இந்தச் சிறப்புப் பற்றியே இராமாநுஜாசாரியர் ஸ்ரீ வைஷ்ணவர்களுள் "பாஷியகாரர்" என வழங்கப் பெறுவர். ஸரஸ்வதி யருளிய அயக்கிரீவ விக்கிரகம் மைசூரிலுள்ள பரகால மடத்தில் இன்றைக்கும் ஆராதிக்கப்பட்டு வருகின்றதென்பர்.

சைவ வைஷ்ணவ வாதம்

வடதேசத்திலிருந்து மீளுமளவில் ஆசாரியர் இடையே ஜகந்நாதத்தையும் நரசிம்மாத்திரியையும் சேவித்துக்கொண்டு வேங்கடாசலத்தை யடைந்தனர். அங்குக் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அதிஷ்டான தெய்வத்தைப் பற்றிய வாதம் மிகக் கடுமையாக நிகழ்ந்துகொண்டிருந்தது. அவ்வாலயம் சுப்பிரமணிய சுவாமியினுடையதென்று சைவர்களும், விஷ்ணுவினுடையதென்று வைஷ்ணவர்களும் உரிமை பாராட்டினார்கள். அவ் விக்கிரகம் "இரண்டுருவு மொன்றா யிசைந்து" விளங்குவதாகத் திருவாய்மொழியும் கூறும். இந்த விஷயத்தைப் பரிஷ்கரிக்கும் பொருட்டு இராமாநுஜாசாரியர் இரு திறத்தாரையும் அழைப்பித்து 'இன்றிரவு தேவசந்நிதியில் சிவனுக்குரிய ஆயுதங்களையும் விஷ்ணுவுக்குரிய ஆயுதங்களையும் வைப்போம். ஈசுவரன் எந்தத் திருக்கோலத்தை மேற்கொள்கிறாரோ அந்த மூர்த்தியே இவ்

வாலயத்தில் வழிபடு தெய்வமாகக் கொள்வோம்'' என்று சமாதானப்படுத்தி அங்ஙனமே பரீக்ஷை செய்வித்தார். மறுநாட் காலையில் கர்ப்பக்கிருகத்தைத் திறந்து பார்க்கையில் பக்த பராதீனரான எம்பெருமான் சங்கு சக்கராதி பஞ்சாயுதங்களைத்* தரித்து விளங்குவதைக் கண்டு எல்லாரும் இவர் விஷ்ணுமூர்த்தியே யாவரெனத் தீர்மானித்துக் கொண்டார்கள். அதுமுதல் வேங்கடாசலம் விஷ்ணுவாலயமாகவே வழங்குகின்றது. இவ் வல் வழக்கை ஓராற்றால் தீர்த்த பின்பு ஆசாரியர் திருவரங்கத்திற்கு எழுந்தருளித் தாம் மேற்கொண்டுள்ள மற்றக் காரியங்களையும் முற்றுவித்து "சத்தியப் பிரதிஜ்ஞர்'' ஆயினர்.

ஸஹஸ்ரநாம பாஷியம்

இவருடைய முக்கிய சிஷ்யரான கூரத்தாழ்வார் பன்னாள் மகப்பேறிலராய் மனங்கவின்றிருந்தார். அவருக்கு அரவணைச் செல்வனுடைய அனுக்கிரகத்தினால் இரண்டு புத்திரர்கள் உண்டாயினர். அவர்களி லொருவருக்கு, ஆசாரியர் சொற்படி, "பராசரர்'' எனக் கூரத்தாழ்வார் திருநாமஞ் சாத்தினர். அந்தப் பராசரபட்டர், இராமாநுஜாசாரியர் தம் இரண்டாம் பிரதிக்கினையை நிறைவேற்ற எண்ணுங்காலையில் தக்க யௌவன பருவம் வாய்ந்திருந்தார். அவருடைய கல்வித் திறமையையும் தீவிர புத்தியையுங் கண்டு உவந்து ஆசாரியர் அவரைக்கொண்டு விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்கு விசிஷ்டாத்துவைத பாஷியம் எழுதுவித்தார். இங்ஙனமாகப் பராசருடைய பெயரை விளங்கவைத்ததில் ஆசாரியருடைய இரண்டாம் பிரதிக்கினையும் நிறைவேறியது.

---

* சங்கு, சக்கரம், கதை, வாள், வில் (சார்ங்கம்) என்பன விஷ்ணுவின் பஞ்சாயுதங்களாம்.

திருவாய்மொழி ஆறுயிரப்படி

இனி, 'சடகோபர்' என்னும் சிறப்புப் பெயர் வாய்ந்த நம்மாழ்வாருடைய திருநாமம் விளங்கச் செய்வதும், அன்னவர்பால் பக்தி விசுவாஸம் பாராட்டி அவருடைய பெருமை பிரகாசிக்கச் செய்வதுமாகிய மூன்றும் பிரதிக்கினையை நிறைவேற்ற ஆசாரியர் வகைதேடலாயினர். நம்மாழ்வாருடைய திருவாய் மொழிக்குத் தாமே வியாக்கியானம் எழுதவேண்டுமென்று ஆசாரியர் எண்ணியிருந்தார்போலும். ஒருநாள் இவர் ஓரறை புக்குக் கவாடம் பந்தித்து ஒருபாடலின் கருத்தை யுன்னி, அதன் பூர்ண தத்துவத்தையும் தெரிந்து கொள்வதற்காக ஆழ்ந்து ஆலோசித்துக்கொண் டிருக்கையில் பெரிய திருமலை நம்பியின் குமாரரும் இவரது ஞான புத்திரருமாய பிள்ளான் என்னும் இளைஞர் கதவிடுக்கின் வழியாகப் பார்த்துத் திருமாலிருஞ் சோலை எம்பெருமானின் விஷயமான செய்யுளைக் குறித்து ஆசாரியர் ஆலோசித்துக் கொண்டிருக்கிறார் போலுமெனச் செப்பினர். இவர் ஆலோசித்துக் கொண்டிருந்தது உண்மையில் அதுவே. அதனைத் திவ்விய திருஷ்டியால் தெரிந்து கூறிய பிள்ளானுடைய போதத்தை யுகந்து ஆசாரியர், திருவாய்மொழிக்கு ஆறுயிரப்படி வியாக்கியான மெழுதும்படி அவருக்குக் கற்பனை செய்து, "திருக்குருகைப்பிரான் பிள்ளான்" என்னுந் திருநாமமுஞ் சாத்தியருளினர். இந்தத் திருநாமத்தின் முதற்பகுதி நம்மாழ்வார்க்குரிய அநேக திருநாமங்களு ளொன்றும். இங்ஙனமாக ஆளவந்தாருக்கு இருந்த மூன்றும் மனக்குறையும் நல்லாற்றான் நிறைவேறியது. உபய வேதாந்திகளாய இராமாநுஜர் மேற்கொண்ட முக்கியமான காரியங்களை ஈடேற்றி விட்டபடியால் இனி இவர் அமைதியாகச் சித்தாந்தப் பிரவசனம் செய்யத் தொடங்கினர்.

சோழனது உபத்திரவம்

ஆயினும், இவருக்கு முற்றும் அமைதி வாய்ந்ததாகத் தோன்றவில்லை. இராச்சியாதிகாரம் கைமாறினும், இராஜ சபையின் அமைப்பு மாறினும் துரைத்தனத்தின் தன்மை மாறுபாடெய்துமன்றே? முன்னிராஜாங்கங்களில் தர்மாசரணையின் விஷயத்தில் அவரவரும் தமக்கு இஷ்டமான கொள்கைகளைக் கைக்கொண்டு விவகரிக்கச் சுவதந்திரர்களாயிருந்தனர். இராமாநுஜாசாரியர் காலத்திருந்த கிருமி கண்ட சோழராஜன் அத்தகைய மனவிரிவு இல்லானாகி, "சிவாத் பரதரம் நாஸ்தி" (சிவனினும் உயரிய தெய்வம் இல்லை) என்னுங் கொள்கையை எல்லாரும் ஏற்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினன். பிரபலமான சைவர்கள் சிலரை இராமாநுஜர் வைணவராக்கியது பொறுமல் அவ் வரசன் இராமாநுஜமதத்தின் பிராபலியத்தைத் தடுக்கவெண்ணி இங்ஙனம் பலவந்தஞ் செய்யலாயினன்போலும். இது பகிரங்கமான விவாத விஷயமாதலின் எதிர்ச் சார்பின் தலைவராகிய இராமாநுஜாசாரியருடைய சம்மதத்தை அரசன் பெறவேண்டியது அவசியமா மென்று அனைவரும் சொல்வாராயினர். இவ் விஷயமாகப் பேச இராஜ சபைக்கு வரும்படி இராமாநுஜரைச் சோழன் அழைத்தான்.

சாளக்கிராம வாசம்

இராஜ சபைக்குப் போனால் ஆசாரியருக்கு ஆபத்து நேரிடுவது திண்ணமென்று நண்பர்கள் அஞ்சினார்கள். அப்படிப்பட்ட அவகேட்டைத் தவிர்க்கும் பொருட்டு இவருடைய முக்கிய சிஷ்யராகிய கூரத்தாழ்வா ரென்பவர் தாமே இராமாநுஜரென அரசனவை யேற இசைந்தார். அங்ஙனே அவர் துறவி வேடம்பூண்டு, விருத்தரான பெரியநம்பியுடன், சோழராஜனது அவையை யடைந்தனர். இராமாநுஜரோ,

கிருகஸ்த வேஷதாரியாகி உற்ற சீடர்கள் சிலருடன் ஹோய ஸால பிட்டி தேவனுடைய நாட்டிற்கு எழுந்தருளினர். காவேரிக்கரையோடே சென்று இவர் தொண்டனூரையடுத்த சாளக்கிராம மென்னும் பட்டணத்தை யடைந்து, அவ் விடத்தே பன்னிரண்டாண்டுகள் கழித்தனர். இவர் அவ ணுறையும்போதே பிட்டிதேவன் (விட்டல தேவராயன்) என் பவன் விக்கிரமாதித்தனது சாலுக்கிய ஸம்ஸ்தானத்துக்குத் தென்புறமாய்ச் சோழராச்சியத்திற்கு வடகிழக்காயுள்ள சிறிய பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டு, தனக்கெனத் தனியாக ஓர் இராச்சியம் அமைக்கப் பெரும்பிரயத்தனம் பண்ணிக் கொண்டிருந்தான்.

பிட்டி தேவன்

இவ்வா றிருந்துழி அவ் வரையன் மகளாரை பிரம்ம ரக்ஷசு பிடித்தது. அதனை விடுவிப்பதற்கு மாந்திரிகராதியோர் செய்த பன்முயற்சிகளும் பலியாமல் இராமானுஜாசாரிய ருடைய உதவியை அரசன் தொண்டனூர் நம்பியின் மூலமாக நாடினன். ஸ்ரீபாத தீர்த்தத்தைப் பிரசாதித்து ஆசாரியர் அப் பிரம்மரக்ஷசை ஓட்டினர்; பிட்டி தேவராயன் இவருக்குச் சிஷ்யனாக இணங்கினன். அவன் ஜைன மதத்தவனென்பது பிரசித்தமாதலின், ஜைனர்களை வாதத்தில் வெல்லாமல் இரா மானுஜர் அவனைச் சிஷ்யனாக்கிக் கொள்ளமுடியாதாயிற்று. வாதம் நிகழ்ந்தது; அதனில் சேஷரூபப்பிரதரிசகரான இராமா னுஜரே வெற்றிவாய்ந்தனர். விட்டல தேவராயன் ஆசாரிய ரிடம ஸம்ஸ்காரம் பெற்று வைஷ்ணவனாகி "விஷ்ணுவர்த்த னன்" என்னுந் திருநாமமும் அருளப் பெற்றனன். ஜயினர் கள் பெரும்பாலார் இராமானுஜ 'தரிசன'த்தைத் தழுவி னர். அங்ஙனந் தழுவாதாரைச் செக்கிலிட்டு ஆட்டும்படி பிட்டி தேவன் கட்டளையிட்டனன். ஆயினும், அங்ஙனம்

செய்ய வொண்ணுதென இராமாநுஜர் தடுத்துவிட்டுச் சாளக் கிராமத்திற்கு மீண்டார்.

திருநாராயணபுரம்

இவர் சாளக்கிராமத்தி லமர்ந்திருக்குங் காலையில், ஸ்ரீ வைஷ்ணவர்கள் தரிக்கும் திருமண் காப்பிற்கு வேண்டிய வெண்மண் (சுவேதமிருத்திகை) எங்குங் கிடையாதாயிற்று. இஃது ஆசாரியருக்கு மிக்க கவலை விளைத்தது. அதனைப் பெறுதல் எங்ஙனமெனக் கவன்று இவர் கண்படைகொள்ளா நிற்கையில், பிட்டி தேவனுடைய ஊராகிய தொண்டனூருக் கருகில் அவ் வெண்மண்குன் றொன்று இருப்பதாகக் கனவு கண்டு, பிட்டி தேவனுடைய உதவியினாலே அவ் விடத்தை ஆய்ந்து அடைந்தனர். அது பவித்திரமான கலியாணி நதிக் குத் தென்மேற்கில் சம்பங்கி வனத்திடையில் உள்ளது. அதனைப் பறிக்கையில், ஸ்ரீ ராம கிருஷ்ணாதிகளினாலும் மாமுனிவர்களினாலும் அர்ச்சிக்கப்பெற்ற ஸ்ரீமந் நாராயண மூர்த்தி பக்தர்களுடைய பிரார்த்தனைகளை யெல்லாம் நிறை வேற்றியருளுவாராய்த் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கக் கண்டு, கடல்மடை திறந்தாற்போலக் களிப்புமே லிட்டு ஆசாரியர் கண்களில் ஆனந்த நீர் பெருக்கினர். அந்த ஸ்தலம் யாதவகிரி யெனவும் மேலக்கோட்டை யெனவும் வழங்கப்பெறுவது. பிட்டி தேவனென்ற விஷ்ணு வர்த்தன ராயனைக்கொண்டு அத் திவ்விய மங்கள விக்கிரகத்தைச் சுற்றி லும் பிராகாராதிகளை யமைப்பித்து பாஞ்சராத்தி ராகமத்தின் படி அர்ச்சனாதிகளை நடப்பிப்பதற்கு இவர் ஏற்பாடுகளைச் செய்தார். அவ் வாலயத்தையடுத்து அக்கிரகாராதிகளை நிர்மித்து, அவ் விடத்திற்கு "திருநாரயாணபுரம்" என்னும் நாமப்பிரசித்தியையும் இவர் உண்டாக்கினர்.

சம்பத் குமாரர்

ஆலயத்து மூல விக்கிரகத்துக்கு அனுகுணமான உற்சவ மூர்த்தி வேண்டுமென்று இவர் சிந்தித்துக்கொண்டிருந்தார். அப்போது டில்லிமாநகரத்தில் இராஜ்யாதிபத்தியம் வகித்திருந்த மகம்மதியப் பிரபுவாகிய பாச்சாவின் புத்திரி வசமாக "இராமப்பிரியர்" என்னும் அழகிய விக்கிரகமொன்று இருப்பதை இவர் கனமுகமாகக் கண்டனர். அவ் வருளப்பாட்டை யனுசரித்து இவர் மீண்டும் வடதேச யாத்திரை செய்து, டில்லி பாச்சாவினிடமிருந்து அவ் விக்கிரகத்தைக் கைக்கொண்டு திரும்புமளவில், அதன் பிரிவாற்ருது அலமருஞ் செல்வியைத் தேற்றுவான் இராமாநுஜாசாரியரை மடக்கிக் கொணருமாறு டில்லி பாச்சாவர்னவன் உழையரை விடுத்தனன். அன்னவர் கையில் அகப்படாமல் கடுநடையிட்டு ஆசாரியர் ஒரு பஞ்சமர் சேரியில் ஒளித்திருந்து, விக்கிரகத்தைப் பத்திரமாகத் திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளப்பண்ணினுர். விக்கிரகத்தை விதியுக்தமாகப் பிரதிட்டித்து, "சம்பத் குமாரர்" (செல்வப்பிள்ளை) எனப் பெயரிட்டு, உற்சவாதிகள் நிரந்தரமாகவும் சிறப்பாகவும் நடந்தேறுவதற்கு ஆவனவற்றை இவர் அமைத்தனர். அவ் விக்கிரகத்தையும் தம்மையும் பஞ்சமர்கள் காத்த நன்றியைப் பாராட்டிக் கைம்மாறு புரிவாராய் இவர் மேலக்கோட்டை இரதோற்சவ காலத்தில் பஞ்சமர்கள் அவ் வாலயம் புக்கு எம்பெருமான் திருவடி தொழலாமென ஆஞ்ஞாபித்தருளினர்.

பிற்பட்டு, மற்ற ஊர்களிற்போலவே இவ்விடத்திலும் ஆசாரியர் சாஸ்திர வாதங்கள் செய்து தம் சித்தாந்தத்தை நிலை நிறுத்தவேண்டியவராகிச் சிரவணபெலகோளா என்னும் பத்மகிரி பௌத்தர்களுடன் வாதிட்டு அவர்களை யெல்லாம் முறைப்படி வென்றனர்.

ஆழ்வார் விக்கிரகப் பிரதிஷ்டை

இன்னணம் ஆசாரியர் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருத்தலும், அரையனவை யடைந்த கூரத்தாழ்வாரையும் பெரிய நம்பியையும் கண்ணவித்துக் கஷ்டப்படுத்திய சோழராஜன் இறந்தா னென்னும் வர்த்தமானம் இவருக்கு எட்டியது. அது கேட்டு, நிர்ப்பந்தம் நீங்கியதென அறுதியிட்டு இவர் தைரியங் கொண்டு திருவரங்கப் பெருநகரேற எழுந்தருளிக் கண்ணிழந்த கூரத்தாழ்வார்க்குத் தம்மால் இயன்ற ஆதரவு புரிந்தனர்.

அத் தலத்தில் ஆழ்வார்களருளிய பாசுரங்களைப் பாராயணஞ் செய்வதற்காக ஆண்டுதோறும் "அத்தியயனோற்சவம்" ஒன்று நடத்துவதுண்டு. இதன் பொருட்டுத் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஆழ்வார் திருநகரியினின்று நம்மாழ்வாருடைய விக்கிரகத்தைக் கொணர்வது வழக்கம். இவ் வாண்டில் மழையின் மிகுதியால் அத்துணைத் தொலையினின்று விக்கிரகத்தைக் கொண்டு வருவது இயலாதாயிற்று. ஆதலின், இராமாநுஜாசாரியார் திருவரங்கத்திலேயே ஆலயம் ஒன்றமைத்து அதனிடமாக ஆழ்வார் விக்கிரகத்தைப் பிரதிஷ்டித்தனர். ஆண்டுதோறும் இந் நாலாயிரப் பிரபந்த அத்தியயன உற்சவம் ஒழுங்குற நடைபெறுதற்கு ஆவனவற்றை யமைத்த தன்றி இவர் ஆழ்வார்களின் விக்கிரகங்களையும் ஆண்டாளின் விக்கிரகத்தையும் திருவரங்கமாதியாயுள்ள முக்கியமான திவ்விய தேசங்களில் பிரதிஷ்டை செய்து ஆண்டுதோறும் உற்சவங்கள் ஒழுங்காக நடைபெறுமாறு நியமித்தனர்.

ஒருநூற்று அந்தாதி

இங்ஙனம் இவர் ஸ்ரீமந் நாதமுனிகளின் நியமனப்படி நம்பெருமாளுக்குத் திருவத்தியயனோற்சவத்தைப் பண்

ணுவித் தருளும்போது, கூரத்தாழ்வாரிடத்தில் ஆசாரிய பக்தி கொண்டவராய்த் திருவரங்கத்து அமுதனார் என்பார் இவரிடத்தில் மிக்க பக்தியும் கௌரமும் பாராட்டலாயினர். முன்னம் ஆழ்வார் விஷயமாக மதுரகவிகள் அருளிச்செய்த 'கண்ணிநுண் சிறுத்தாம்பின்' அர்த்தத்தை யேறிட்டு, ஒரு பாட்டுக்குப் பத்துப் பாட்டுகளாயிருக்கும்படி, உடையவர் விஷயமாக அவ் வமுதன் 'ஒரு நூற்றந்தாதி' பாடி, அதனை இவரடிகளிலே சமர்ப்பித்தனன். அதனைப் பிரபந்தத்திற் சேர்க்கும்படி அழகிய மணவாளன் அர்ச்சக முகமாகத் திரு வாய் மலர்ந்தருளினன். அதனை உடையவர் திருவுள்ளம் பற்றி அந்த 'நூற்றந்தாதி'யை 'இயற்பா' ஆயிரத்தின் இறுதி யிற் சேர்த்து, நான்கு விபாகங்களுள்ள நாலாயிரங்களைப் பாட்டுகளாலேயும் நாலாயிரங்க ளாக்கினர்.

கோவிந்தராஜர் சந்நிதி

பிற்பட்டு இவர் ஆழ்வார் திருநகரியில் ஆழ்வாரைத் திருவடிதொழுது, கோயிலேற மீளுமளவில் திருப்பதியி லிருந்த மாதுலராகிய பெரிய திருமலை நம்பி திருநாட்டுக் கெழுந்தருளிய வர்த்தமானம் எட்டியது. ஆசாரியர் திரு வேங்கடத்திற் கெழுந்தருளி மாதுலர்க்கான சரமக்கிரியைகளை அவர் தம் ஜேஷ்ட புத்திரரைக்கொண்டு முறைவழுவாது சிறப்பாக முடிப்பித்து, ஸ்ரீசூர்ணபரிபாலனம் முதலியவை களைச் செய்தருளினர்.

ஆண்டுத் தரிக்கையில் தில்லையிலிருந்த கோவிந்தராஜப் பெருமாளுடைய ஆலயத்தைத் தகர்த்து, விக்கிரகத்தைத் கடலில் எறிந்துள்ளாரெனக் கேட்டனர். கோவிந்தராஜப் பெருமாளின் சந்நிதி ஆதியில் சிதம்பரத்துப் பெரிய சிவால

யத்திற்குள் இருந்த தென்பது ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிக ளுடைய "திருச்சிற்றம்பலக் கோவை," 86-வது பாடலினால் ஏற்படுகின்றது. இந்தப் பெருமாளின் விக்கிரகத்தை அவ் விடத்தினின்று பெயர்த்து இரண்டாம் "குலோத்துங்கச் சோழன் அப்புறப்படுத்தியதாக ஒட்டக்கூத்தருடைய "குலோத்துங்கச் சோழன் உலா" முதலான நூல்களினால் தெரிகிறது. அந்தச் சோழன் ஸ்ரீ கோவிந்தராஜ மூர்த்தியை அவ் விடத்தி னின்றும் அவருடைய ஆதி ஆலயமாகிய கடலுக்கு எழுந் தருளப் பண்ணிச் சிவாலயத் தைப் புதுப்பித்துச் சொர்ண விமானமும் அமைத்ததாக மேற் சொல்லிய "உலா"விற் கூறப்பட் டிருக்கின்றது.

உடையவர்

அவ் விக்கிரகத்தை இராமா நுஜர் கொணர்வித்துத் திருப்பதி மலையடிவாரத்துத் தரைத் தலத் தில் திருக்கோவிலொன் றமைப் பித்து, அதனில் பிரதிஷ்டை செய்து, மற்றத் தலங்களிற் போலவே ஆழ்வார்களையும் ஆண் டாளையும் பிரதிஷ்டை செய்தருளினர். இதனால், திருப்பதி யானது குலோத்துங்கச் சோழனுடைய ஆட்சிக்கு உட்பட் டிருக்க வில்லையென ஊகிக்கத் தகும. இனறேல், தம்முடைய சிவாலயத்துக்குள் இல்லாமல் ஒழிந்த கோவிந்தராஜர் மற் றெங்கேனும் இருப்பதனால் தமக்கென்ன வென்று உதாசீன புத்தி மேற்கொண்டு அவ் வரையன் முதலான சைவாபி மானிகள் வாளா இருந்தனர் போலும்.

திவ்விய தேச யாத்திரை

அங்கிருந்து உடையவர் காஞ்சி மதுராந்தகம் மார்க்கமாகத் திருவரங்கத்திற்கு மீண்டு, அத்தலம் நீத்துத் தென்னாட்டிலுள்ள பற்பல திவ்விய தேசங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான்களைச் சேவித்து, தக்ஷிண யாத்திரையைப் பூர்த்திசெய்யச் சங்கற்பித்துத் திருமாலிருஞ் சோலையையும் ஸ்ரீ வில்லிப்புத்தூரையும் அடைந்தனர். இங்ஙனம் தென்னிந்தியா முழுதும் தம் சித்தாந்தத்தை நிலைநிறுத்தி விசிஷ்டாத்துவைத வேதாந்தப் பிரவசனம் கிரமமாக நடந்தேறுவதற்கான ஏற்பாடுகளை அமைத்தவராய் ஆசாரியர் தம் அவதாரத்தின் உத்தேசம் நிறைவேறியதென நினைக்கலாயினர்.

சிங்காசனாதிபதிகள்

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தவர்கள் வேறு சித்தாந்தங்களைக் கைக்கொள்ளாமல் காக்கும்பொருட்டும் தம் சித்தாந்தப் பிரவசனம் நீடூழிகாலம் நிலை பெறும்பொருட்டும் ஒரு நிபந்தனம் செய்யவேண்டுமெனத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீ இராமாநுஜாசாரியர் தமது சிஷ்யச் சிரேஷ்டர்களுள் உபயவேதாந்தங்களில் தேர்ந்த எழுபத்து நால்வர்க்குத் திருவாழி திருச்சங்குகளை யருளிச் சிங்காசனாதிபதிக ளென்னும் தேசிகர்களாக நியமித்தனர். இவர்களுள் நால்வர் முக்கியமாக ஸ்ரீபாஷியப் பிரவசனம் செய்யத்தக்கவர்கள். இந் நால்வருள் ஒருவர் ஆறாயிரப்படி பிரபந்தப் பிரவசனமும் செய்தற் குரியவராவர். இவ் வொருவராவார் ஆசாரியருடைய மாதுலர் மைந்தராகிய பிள்ளான் என்பவர். இவரே ஸ்ரீ இராமாநுஜருக்குப் பின்பு ஆசாரியஸ்தானத்தை வகித்தவர்.

இராமாநுஜ விக்கிரகப் பிரதிஷ்டை

பின்பு சின்னாள் கழிந்தவாறே எம்பெருமானார் திருமேனியில் நோய் சாத்தியிருக்கும்போது பிள்ளான், ஆழ்வான், ஆச்சான், ஆண்டான் முதலானவர்கள் அண்மி, "ஆழ்வார்களை



திருவுருவச்சிலை

யொப்பத் தமது திவ்வியமங்கள விக்கிரகப் பிரதிஷ்டையை நியமித்தருள வேணும்" என இவரை இரந்தனர். இவர்களுடைய பிடிவாதத்திற் கிணங்கி இராமாநுஜாசாரியர் தமது திருவுருவச்சிலையைத் திருவரங்கம், ஸ்ரீ பெரும்பூதூர், திரு

நாராயணபுரம் என்னும் திவ்விய ஸ்தலங்களில் பிரதிஷ்டை செய்வதற்கு அநுமதி யளித்தருளினர். அவைகளைப் பார்த்துத் தென்தேசத்திலுள்ள ஒவ்வொரு விஷ்ணு ஆலயத்திலும் ஸ்ரீ இராமாநுஜாசாரியருடைய விக்கிரகம் பிரதிஷ்டையாகி ஆராதிக்கப்பட்டு வருகின்றது.

கடைசிக் கட்டளை

உடையவர் தேகத்தியாகம் பண்ண மனமுவந் திருத்தலை யுன்னிப் பிள்ளான் முதலான முதலிகள், "இனி எங்கட்குச் செய்ய அடுப்பதென்?" என்று விண்ணப்பஞ் செய்ய எம்பெருமானாரும்,

ஒருவன் பிரபன்னனானால் அவனுடைய ஆத்மயாத்திரை பகவததீனம். ஆதலால், அஃது அவனுக்கு அன்வயமில்லை. * தேகயாத்திரையோ கர்மாதீனம். ஆதலால், அதற்கு அவன் கரைய வேண்டா. ஆனால், அவன் மன மொழி மெய் என்னும் முக் கரணங்களையும் பிராப்பியமான கைங்கரியத்தில் விநியோகிக்கக் கடவன். அவன் பண்ணத்தக்க காரியங்கள் ஐந்து உண்டு:—

(1) ஸ்ரீபாஷியத்தை வாசித்துப் பிரவர்த்திப்பித்தல். இதற்கு யோக்கியதை இல்லையாகில், (2) அருளிச் செய்யக் கேட்டுப் பிரவர்த்திப்பித்தல். இன்றேல், (3) உகந்தருளிய திவ்விய தேசங்களுக்கு அமுதுபடி, சாத்துப்படி, திருவிளக்கு, திருமாலைகளை உண்டாக்கல். இன்றேல், (4) த்வயத்தினுடைய அர்த்தத்தை அநுசந்தானம் பண்ணுதல். இதற்கும் யோக்கியதை இல்லையாகில், (5) 'என்னுடையவன்' என்று அபிமானிப்பான் ஒரு ஸ்ரீ வைஷ்ணவனுடைய அபிமானத்தில் ஒதுங்கி வர்த்தித்தல்

என்று அருளிச் செய்தனர். இவர் 120-ஆண்டுகள் பூசஞ்சாரஞ்செய்து பிங்கள வருஷம் சித்திரை மாதம் சனிவாரம்

---

* அன்வயம் = காரண காரிய சம்பந்தம். அவனுக அவ் விஷயத்திற் செய்யக்கூடிய காரியம் ஒன்றுமில்லை என்பதாம்.

தசமி, திருவாதிரை நக்ஷத்திரங்கூடிய ஓர் நன்னாளில் திருவரங்க க்ஷேத்திரத்தில் கோயிலுக்குநேரே பிள்ளான்மடியில் திருமுடியும், கிடாம்பிச்சான் மடியில் திருவடிகளுமாய்க் கண்வளர்ந்தருளினர். முதலிகளும் ஜீயர்களும் ஏகாங்கிகளும் மூசித்துக் கிடந்து சோகித்துத் தேறிப் பிள்ளானைக் கொண்டு சரம கைங்கரியங்களை யெல்லாம் நடப்பித்தனர்.

திருநாமங்கள்

ஸ்ரீ இராமாநுஜாசாரியருக்கு எம்பெருமானார், இளையாழ்வார், யதிராஜர், பாஷ்யகாரர், உடையவர் என்பன திருநாமங்களாம். இவர் திருவரங்கப் பெருமாளரையருடன் திருவரங்கத்துக்கு எழுந்தருளி, சேவாக் கிரமமாகத் திருவீதிப் பிரதக்ஷிணமாய்க் கோயிலுக்குள்ளே புக்கு ஸ்ரீரங்க நாச்சியாரையும், அழகிய மணவாளனையும் திருவடி தொழுது, திருமணத்தூணருகே சென்று பெரிய பெருமாளை "அமலனாதிப்பிரான்" படியே சேவித்துக்கொண் டிருந்தனர். அவ்வெல்லையில் பெரியபெருமாள் இவருக்குத் தீர்த்தமாதியன பிரசாதித்து "உபய விபூதி யைசுவரியத்தை யெல்லாம் ஆராய்ந்து நடத்தும்" என்று அருளிச்செய்து, "நம் உடையவர்" என்றும் அர்ச்சக முகமாக அருளப்பாடிட் டருளினர். அது முதல் இவர் "உடையவர்" என்னுஞ் சிறப்புப் பெயரால் பிரசித்தமாக வழங்கப் பெறுவாராயினர்.

நூல்கள்

ஆதிசேஷாம்சரான இவர் அருளிச் செய்த நூல்கள் ஸ்ரீபாஷியம், வேதாந்த தீபம், வேதாந்த சாரம், வேதாந்த சங்கிரகம், கீதாபாஷியம் என்பனவாகும்.

4. ஸ்ரீமன் மத்துவாசாரியர்

சகல லோக பிராணுதாரமான வாயு தேவர் திரேதா யுகத்தில் அநுமான் எனவும், துவாபர யுகத்தில் தர்மானுஜ ஞகிய பீமசேனன் எனவும், இந்தக் கலி யுகத்தில் மத்துவா சாரியர் எனவும் பெயர்கொண்டு உலகத்திற்கு அனுகிரகஞ் செய்வான், பகவானுடைய நியமனத்தின்படி, திருவவதாரஞ் செய்தருளினர்.

பூர்வாவதாரங்கள்

திரேதாயுகம்

பிராண தேவர் தம்முடைய முதல் அவதாரத்தில் கேசரி எனும் கபிச்சிரேஷ்டருடைய பத்தினியாகிய அஞ்சநாதேவியின் கர்ப்பத்தில் ஆஞ்சநேயன் என்னும் பெயருடன் பிறந்து, பரம சாகச முடையவராய் விளங்கினர்; பராக்கிரமம் மிகுந்தவராயினும் சத்துவ குண சீலராய் வளர்ந்து, நவ வியாகரண பண்டிதரெனப் பிரசித்தி பெற்று, கிஷ்கிந்தாதிபதியான சுக்கிரீவ மகாராஜனுக்கு ஆப்த மந்திரியாயினர். ஈதிங்ஙனமாக, ஸ்ரீ வைகுண்டத்துத் துவார பாலகர்களான ஜய விஜயர்கள் தங்களுக்கு நேர்ந்த சாபத்தின் படி இரண்டாம் அவதாரமெடுத்து இராவண கும்பகர்ணர்க ளெனப் பிறந்து உலகத்தைப் பல விதங்களிலும் பீடித்துக் கொண் டிருந்தார்க ளல்லவா? அவர்களைச் சங்கரித்து உல கத்தை உத்தரிக்கும் பொருட்டு ஸ்ரீமந் நாராயணனே அயோத்தி மன்னனுகிய தசரத மகாராஜனுக்குப் புத்திரனுக அவதரித்து ஸ்ரீராமரென விளங்கினுரல்லவா? ஸ்ரீராமருக்குப் பரம பக்தராகி ஆஞ்சநேயர் பகவத் சங்கற்பத்தை நிறை

வேற்றுவதே முக்கிய நோக்கமாகக் கொண்டு இலங்கையைத் தகனஞ் செய்து, இராவணனுடைய அகந்தையைக் குலைத்துச் சீதாதேவியின் சோகத்தைப் பரிகரித்து, ஸ்ரீஇராமரிடத்தில் தாசபாவத்தைப் பாராட்டிச் சேவகனாக அரும்பெருங் காரியங்களை இயற்றி, இராமவதார முடிவில் கிம்புருஷ கண்டத்தில் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தியின் தியானத்திலே அமர்ந்தார்.

துவாபரயுகம்

இரண்டாம் அவதாரத்தில் வாயுதேவர் பாண்டு ராஜனுடைய பத்தினியான குந்திதேவியின் கர்ப்பத்தில் பீமசேனன் என்னும் பெயருடன் பிறந்து ஜயவிஜயர்களுடைய மூன்றும் அவதாரமாகிய சிசுபால தந்தவக்கிராதிகளைச் சங்கரித்து, ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தருளிய ஸ்ரீமந் நாராயணனுடைய சேவையே பெரிதெனக் கருதிப் பக்தராகி, இடிம்ப, பகாசுர, ஜராசந்த, கிம்மீர, ஜடாசுர, துர்யோதனாதி துஷ்டர்களை வதைத்து, ஸ்ரீகிருஷ்ணனுக்குத் துணைவராகி மித்திரபாவத்தைப் பாராட்டினார். அப்போது அவர் அந்தர்யாமியாகிய பகவானுக்கு எப்பொழுதும் மானச பூஜை செய்துகொண்டே யிருப்பவராய், மகா பராக்கிரமசாலியா யிருந்தபோதிலும், தர்மத்தை யனுசரித்து நடப்பதே முதற் கடமையாகக் கொண்டு, தர்ம ராஜனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவராக விவகரித்து, குரு வாக்கினையைப் பரிபாலனஞ் செய்யும் முறை இத்தன்மையதென உலகத்திற்குப் போதித்தருளினர்.

கலியுகாவதாரம்

பூர்வத்திற் சில அரக்கர்கள் தம்முடைய சௌரியத்தினால் ஸ்ரீ விஷ்ணுவை வெல்வது அசாத்தியமெனத் தெரிந்து தாமும் சாஸ்திர மார்க்கத்தில் பிரவேசித்து பீடிக்க வேண்டுமென் றெண்ணிப் பூமியில் மனுஷ்யராய்ப் பிறந்து,

பிரத்தியக்ஷப் பிரமாண வாதிகளெனப் பெயர் பூண்டு, நாஸ்திக மதத்தையும் இராக்ஷசாசாரங்களையும் போதிக்கலானார்கள். அந்தத் துஷ்டர்களுடைய துர்மதங்களையும் துராசாரங்களையும் கண்டித்து விஷ்ணுவின் சர்வோத்தமத்துவத்தையும், வாயுவின் ஜீவோத்தமத்துவத்தையும் நன்றாக விளக்கிப் பக்தி பாவத்தை நமக்குக் காட்டிக் கொடுப்பான் வாயுதேவர் இக் கலியுகத்தில் ஸ்ரீமத்துவாசாரியராக அவதரித்தனரென்பது பிரசித்தம்.

ஜனனம்

இவர் மகா புண்ணிய க்ஷேத்திரமாகிய உடுப்பிக்குச் சமீபமாயுள்ள பாஜகக்ஷேத்திரம் என்னும் சிவரூப்பிய கிராமத்தில் கி. பி. 1119-க்குச் * சரியான விளம்பி நாம சம்வத்சரம் ஆஷாடபகுள சதுர்த்தி சுபதினம் அபிஜித்து முகூர்த்தத்தில் பிராம்மணோத்தமரான மத்தியகேக பட்டருடைய தருமபத்தினியார் வேதவதீ தேவியின் கர்ப்பசாகரத்தில் அவதரித்தனர். கேவல சாத்துவிகரான மத்தியகேக பட்டர் மனோஹரமான சுலக்ஷணங்களோடு உதித்திருக்கும் புத்திர ரூபம் வாய்ந்த பாலசூரியனுக்குப் புத்திரோற்சவாதி ஸம்ஸ்காரங்களை யெல்லாம் அந்தந்தக் காலத்தில் நிறைவேற்றி, 'வாசுதேவன்' என நாமகரணஞ் செய்தனர். இந்தக் குழந்தை பிரக்லாதனே போன்று அரிபக்தி மிகுந்து ஆடிப் பாடி விளையாடுவதைக் கண்டு அவர் களிப்புற்றிருந்தனர். பூர்வாலயன் என்னும் வேதியன் கொடுத்த பசுவின் பாலை உண்டு வாசுதேவர் வளர்ந்து வந்தார்.

---

* கி. பி. 1199, கலியுகம் 4300, 'தசரா' கடைசித்தினம் என்பார் சிலர். கி. பி. 1238 என்பார் சிலர். சாலிவாகன சகம் 1025-க்கும் 1029-க்கும் இடையிலென்பார் சிலர். சா. ச. 1041 என்பாரு முளர். சா. ச. 1049, பிலவங்களூ என்பார் வேறு சிலர்.

அற்புத லீலைகள்

இரண்டு வயதளவில் தாயார் தன் கிருககிருத்தியாவசரமாய் வெளியிற் சென்றிருக்கையில் வாசுதேவர் அழ, அகத்திலிருந்த தமக்கை அங்கே வேகவைத்திருந்த முப்பது படி கொள்ளினின்றுங் கொஞ்சம் எடுத்து இவர் கையில் கொடுத்தனள். இவர் அழுகை தவிர்த்து, வேகவைத்திருந்த கொள்ளத்தனையையும் உண்டு துன்பமில்லாதிருந்தார். அதனால் இவருக்கு என்ன தீங்கு நேரிடுமோவென எல்லாருங் கவலையுற்றுக் கசிந்தார்கள். ஆயினும், இவ் விளம்பிள்ளை அத்துணைக் கொள்ளையும் அவலீலையாகப் பக்ஷித்து, ஜீர்ணித்துக்கொண்டு ஆயாசஞ் சிறிதுமின்றி ஆடியோடிச் சாதாரணமாயிருந்தது எல்லாருக்கும் வியப்பு விளைத்தது. இதற்கு முன் ஓராண்டளவில் ஒருநாள் வாசுதேவர் பசுவின் வாலைப் பிடித்து மறைந்து போயச் சாயங்காலம வீடுவந்து சேர்ந்தார். பொழுதொருவண்ணமாய்ப் பெருகிவளரும் வாசுதேவர் ஒரு தினம் துளசிவனததில் விளையாடிப் பின்பு வீட்டுக்கு விரைந்து, தம்முடன் அன்னமுண்ணத் தந்தையை அழைததார். அழைத்தலும் மத்தியகேகர், "அப்பா, வாசுதேவா! நமக்கு எருது விற்ற வர்த்தகன் இதோ பணத்திற்காக என்னை நிர்ப்பந்திக்கிறான். ரொக்கம் இறுத்தாலன்றி அவன் என்னை விடான்' என்று சொன்னார். உடனே வாசுதேவர் தாம் விளையாடுவதற்காக வைத்திருந்த புளியங் கொட்டைகளை அவ் வர்த்தகன் கையிற் கொடுத்து, "இதனால் உனக்கு மகத்தான ஐசுவரியம் வாய்க்கும்; போ" என்று மொழிந்தார். இவர் அங்ஙனமளித்ததை அவன் வெகு பூஜிதையாக ஏற்று, வந்தனஞ் செய்து நீங்கினான். காலக்கிரமத்தில் வர்த்தகனுக்குக் கடனைச் செலுத்த மத்தியகேக பட்டர் பணங் கொண்டு போக அவன், "சுவாமி! தங்கள் புத்தி

ருடைய அனுக்கிரக விசேஷத்தினால் இப்பொழுது நான் மிக்க தனவானாயிருக்கின்றேன். ஆதலால், நீங்கள் கொடுக்க வேண்டிய கடன் தீர்ந்துபோய்விட்டது" என்று சொல்லி, மிக்க உபசரணைகள் செய்து அவரைத் திருப்பி யனுப்பி விட்டான். இதனால் குழந்தையாகிய வாசுதேவருடைய மகிமை மற்றும் அதிகமாயிற்று. நெடுந்தூரத்தில் நடந்த தொரு கலியாணத்திற்குத் தாய் தந்தையருடன் வாசுதேவர் சென்றிருக்கையில், இவர் தனித்துக் காட்டின் வழி மீண்டு உடுப்பி பட்டணம் வந்தடைந்தார்.

கல்விப் பயிற்சி

பின்பு, மத்தியகேக பட்டர் தம் புத்திரருக்கு உற்ற காலத்தில் உபநயனம் செய்வித்துத் தினந்தோறும் இவரைக் கொண்டு அக்கினி காரியங்களை நடப்பித்து, வித்தியாபி விருத்திக்கு வேண்டிய வழிகளை யெல்லாம் செவ்வனே அமைத்து வைத்தார்.

வாசுதேவர் உடுப்பிப் பட்டணத்தில் கல்வி பயின்று வரும் நாளில் தம்முடைய புத்திக் கூர்மைக்குத் தக்கவாறு வேதசாஸ்திராதி வித்தைகளில் வெகு சீக்கிரகாலத்தில் மிக அற்புதமான பாண்டித்தியம் வாய்ந்து வளர்ந்தார். குருவி னிடம் வேதாத்தியயனஞ் செய்கையில் இவர் பாடத்தைக் கவனியாதவர் போலப் பராக்கா யிருப்பதைக் கண்டு குரு, "அத்தியயனஞ் செய்ததைக் கூறுக" என, வாசுதேவர் அனை வரும் வியப்புறத் தவறாது கூறினார்.

ஒருநாள் இவரை அரவந் தீண்ட, அதனை இவர் தம் கட்டைவிரலால் நசுக்கி, விஷக்கடியால் சிறிதும் துன்ப மில்லாதிருந்தார். ஒரு காட்டில் தம்முடன் வந்த நண்பன்

ஒருவனுக்கு இளமை முதல் இருந்த தலைநோயை அவ னுடைய காதில் ஊதிப் போக்கினார்.

"பீமன்"

பாடசாலையிற் பயின்று வரும் நாளில் இவர் புஜபல சாகசமான காரியங்களிலும் வனக்கிரீடை முதலிய பல வகை ஆட்டங்களிலும் மற்றச் சிறுவர்களினுஞ் சிறந்து விளங்கி னார். இவர் ஓடுவதும் குதிப்பதும் மற்போர் செய்வதும் நீந்துவதும் ஆச்சரியப் படத்தக்க அற்புதக் காட்சிகளா யிருந்தன. இவருடைய இணையில்லாத பலத்தையும் பராக் கிரமத்தையும் துணிவையும் சுறுசுறுப்பையுங் கண்டு அதி சயித்து ஊரார் இவரைப் "பீமன்" எனச் செல்வமாய்ச் சொல்வார்கள்.

துறவறப் பிரயத்தனம்

அந்தப் பருவத்தில் இவருடைய தரிசன லாபத்தைக் கருதி மகனீயரான அச்சுதப் பிரேக்ஷர் என்னும் யதிவரர் இவருடைய இருக்கைக்கு எழுந்தருளினார். பிறருடைய இங்கிதத்தைத் தெரிந்து நடப்பதில் தேர்ந்தவராய வாசுதேவர் துறவறம் மேற்கொள்ளுவதற்குச் சித்தமாயினர். அதனைக் கண்டு தாய்தந்தையர், "அடா சுமதியே! முதியோர்களாகிய எங்களுக்கு ஏகபுத்திரனாகிய உன்னைத் தவிர ஆதரிப்பவர் வேறெவருமில்லை. ஒன்பது வயதுகூட நிரம்பாத குழந்தை யாகிய நீ, இவ்வளவு விரக்தி கொண்டனையே! உனக்கு விவா கம் செய்வித்து வமிச விருத்தியாவதைக் கண்டு களிக்கக் காத்திருக்கின்றோம்; அப்பா, குழந்தாய்! நீ சந்நியாசி யாக வேண்டாம், ஆக வேண்டாமையா!" என்று சொல்லி அரற்ற லுற்றனர். அமைதி வாய்ந்த வாசுதேவர் வெகு விநயமாகத் தாய் தந்தையர்களைச் சமாதானப்படுத்தி, அவர்களை நோக்கி,

"இன்று முதல் 314 - தினங்கள் கழிந்த மறுநாள் உங்களுக்குச் சிம்மலக்கினத்தில் தீர்க்காயுள் படைத்த மற்றோர் சுபுத்திரன் உண்டாவான். அது பரியந்தம் யான் யதியாவதில்லை. சிந்திக்க வேண்டாம்" என்று வாக்களித்தார். அவருடைய வார்த்தையை அனுசரித்து மத்தியகேக பட்டருடைய பாரியை குறிப்பிட்ட காலத்தில் சுபுத்திரனைப் பெற்றது எல்லாருக்கும் ஆனந்தமாயும் ஆச்சரியமாயும் இருந்தது. இவர் தீர்க்க திருஷ்டி வாய்ந்தவரென்பது இவ்வாறு இளம்பிராயத்தே வெளியாயிற்று.

"பூர்ணப் பிரஜ்ஞர்"

கிராமத்துப் பாடசாலையில் வேதாத்தியயனஞ் செய்து அதனை விட்டு நீங்கிய பின்பு வாசுதேவர் தர்க்கம், வியாகரணம் முதலான சாஸ்திரங்களைப் பயின்று தேர்ச்சி வாய்ந்தார். அறிவு அதிகரித்ததற்குத் தக்கவாறு இவருக்குத் துறவறத்தின்மீது நாட்டமும் அதிகரித்தது. துறவறமேற்பதே தகுதியெனத் தெளிந்து திடசங்கற்ப முள்ளவராய் வாசுதேவர் ஆசானைத் தேடலுற்றார். அச்சுதப் பிரேக்ஷ தீர்த்தரே தக்க ஆசானுவரெனத் தீர்மானித்து, உடுப்பியில் ஸ்ரீ அனந்தேசுவராலயத்தை யடுத்துள்ள அவருடைய மடத்தை யடைந்து, இவர்தமக்கு ஆச்சிரமமருள அவரை வேண்டினர். பூஜ்யரான அச்சுதப்பிரேக்ஷ சுவாமிகள் இவருடைய இளம் பிராயத்தையும், மற்றுமுள்ள சந்தர்ப்பங்களையு மெண்ணி இவருக்கு நிர்ப்பந்த மில்லாத துறவறமீந்து, வேத வேதாந்தங்களில் இவருக்கு உண்டா யிருந்த அசாமானிய பாண்டித்தியத்தையும், அருமையான நுண்ணறிவையுங் கருதிப் "பூர்ணப் பிரஜ்ஞர்" என்னும் சிறப்புப் பெயர் சூட்டியருளினர்.

இசையேழுச்சி

இவர் துறவறம் பூண்ட 41-ஆம் நாள் கங்கையில் தீர்த்தமாடச் சங்கற்பித்து, ஸ்ரீ அனந்தேசுவரரைப் பிரார்த்தித்தனர். அவருடைய அருளினால் அந்தக் கங்கையை உடுப்பியிலுள்ள தடாகத்தில் வரப்பெற்று இவர் நீராடினமையின், அன்று முதல் அந்தத் தடாகம் 'மத்துவ சரோவரம்' எனப் பிரசித்தமாக வழங்கப் பெற்றுள்ளது.

துறவறத்திற்குச் சாதகமான இலக்ஷணங்களையும் சாஸ்திரார்த்தங்களையும் அச்சுதப்பிரேக்ஷரிடம் பயின்று வேதாந்த தத்துவங்களை விசாரித்துச் சுவானுபவம் பெறுமளவில் பூர்ணப் பிரஜ்ஞருடைய நியாயதார்க்கிக வாதத் திறமை நன்கு வெளிப்பட்டது. இவருடைய ஆசானாகிய அச்சுதப்பிரேக்ஷர் ஸ்ரீ சங்கராசாரியருடைய சித்தாந்தங்களிற் பயின்றவர். அந்தச் சித்தாந்தம் பூர்ணப் பிரஜ்ஞருக்குத் திருப்தி தரவில்லை. அடிக்கடி அதனில் தப்பு உளதென இவர் மெல்ல மெல்ல எடுத்துரைக்கலாயினர். நாளடைவில் அந்த அத்துவைத வேதாந்தத்திற்கு விரோதமான கக்ஷியை மேற்கொண்டு இவர் வற்புறுத்தலாயினர். அத்துவைத நூல்களிலேயே ஈடுபட்ட தம் ஆசானுடன் முரண்பட்டு இவர் சில சமயங்களில் வாதிக்கவும் நேர்ந்தது. வாது வினைவிளையாது வீண்போகுமோ? ஒவ்வொரு வேளையில் மனவருத்தமும் தோன்றியதென்க. ஆனால், இவருடைய பிரசங்கத் திறமையும திடமான கொள்கையும் நவீனமான அபிப்பிராயமும் புகழத் தக்கனவாயிருந்தமை கண்டு சுற்றுமுற்று முள்ளார் இவரைக் கொண்டாடிக் கௌரவிக்கத் தலைப்பட்டனர். ஒரு நாள் அச்சுதப்பிரேக்ஷர் ஸ்ரீமத் பாகவதத்தைச் சீடர்களுக்குப் பாடஞ் சொல்லுமளவில் அவர் கூறிய அர்த்தத்திற்கு மாறு

னப் பூர்ணப் பிரஜ்ஞர் மொழிந்த அபிப்பிராயத்தைக் கேட்டு அச்சுதப்பிரேக்ஷர், அவ்வளவு அருமையான தாற்பரியம் தமக்குத் தோன்றாததைக் குறித்துச் சிந்தித்துப் பூர்ணப் பிரஜ்ஞருடைய பிரஜ்ஞையைப் பாராட்டி மகிழ்வுற்றனர்.

"ஆனந்த தீர்த்தர்"

இங்ஙனம் கல்வி கேள்விகளில் தேர்ந்து விளங்கிய பூர்ணப்பிரஜ்ஞர் துறவறம் மேற்கொள்ளும் விஷயத்தில் இவருடைய தாய் தந்தையருக்கு இருந்த ஆக்ஷேபம், விஷ்ணு தீர்த்தர் என்னும் பெயர் வாய்ந்த மற்றொரு குமரன் அவர்களுக்குப் பிறந்ததனால், நீங்கியது. உடனிருந்து பல கலைகளையும் பயின்று பாடஞ் சொல்லுந் திறமையும், வாதத்திற் பின்னிடா வன்மையும், கூரிய புத்தியும் பெற்றுள்ள பூர்ணப் பிரஜ்ஞரிடத்தில் ஆசானாகிய அச்சுதப் பிரேக்ஷருக்குப் பிரீதியும் நம்பிக்கையும் பெருகினதன் பயனாக அவர் பூர்ணப் பிரஜ்ஞருக்கு உத்தமமான பரமஹம்ஸபத தீக்ஷையைச் செய்வித்து, "ஆனந்த தீர்த்தர்" என்னும் தீக்ஷா நாம மருளி, மடத்துச் சீஷர்களுக்கு வேதாந்த பாடஞ் சொல்லவும் இவரை நியமித்தனர். இதனால் அனந்தேசுவராலயத்து மடத்திலிருந்த துறவிகளுள் ஆனந்த தீர்த்தர் முதன்மை வாய்ந்தனர். அந்த மடத்திலேயே சில்லாண்டுகள் தம் நிலைமைக்குரிய தவம், விரதங்கள், சாஸ்திராத்தியயனம், வேதாந்த விசார வாதானுவாதங்கள், தேவாராதனை முதலிய காரியங்களை யெல்லாம் இவர் செய்துகொண் டிருந்தனர். தம் காலத்தில் பிரபலமாயிருந்த வேதாந்த கொள்கைகளை அச்சுதப் பிரேக்ஷர் போதிக்க, அவை ஆனந்த தீர்த்தருக்குச் சமாதானப்படாவாயின. இவர் மாறுபட்டு, ஆசானுடைய அனுமதிப்படி, பிரமம சூத்திரங்களுக்கும உபநிஷத்துக்களுக்கும் தம்

முடையசொந்த வழியில் பொருள்கூறிச் சித்தாந்தஞ்செய்து, தம்முடைய மேதையின் பிரபாவத்தைப் பலரும் அறியக் காட்டி, எல்லாரும் தம்மை வியக்கச் செய்தனர்.

தக்ஷிண தேச யாத்திரை

சின்னாட் சென்ற பின்பு, வேதாந்த வாதத்தில் மற்றவர் களைவென்று தம நிலையை ஸ்தாபிக்கலாமென்னும் தைரியங் கொண்ட மகானுபாவராகிய ஆனந்த தீர்த்தர் என்னும் மத்து வாசாரியர் தக்ஷிண தேச யாத்திரை செய்யப்போந்தனர் இங்ஙனம் போதருமுன், தந்தையாருக்கிருந்த மன வருத் தத்தைத் தணித்து அவருடைய அனுமதியையும் படைத் தனரென்பர். துறவறந்தவிர்க்கக் கூறிய புத்திவாதத்தை இவர் பொருட்படுத்தாமையின் மத்தியகேகருக்கு உண்டா யிருந்த மனஸ்தாபம் இதுவரையில் தணியாமலிருந்ததென ஊகிக்கத்தகும். பால சந்நியாசியாகிய மத்துவாசாரியரின் பெயருங் கீர்த்தியும் பிரபலமாகத் தொடங்கியதைக் கண்டு உவகைபூத்து மத்தியகேகர் தம் குமரர் துறவறம் பூண்ட விஷயத்தில் ஒருவாறு சமாதான மெய்தினர்போலும்.

அச்சுதப்பிரேக்ஷரும் வேறு சிலரும் புடைசூழ மத்து வாசாரியர் தென் தேச சஞ்சாரஞ் செய்யப் போந்தவராய் விஷ்ணுமங்கலம் என்னும் பட்டணத்திற்கு எழுந்தருளினர். இது மங்களூருக்கு 27-மைல் தெற்கேயுள்ளது. இங்கே இவர் பீமனேயெனத் தக்கவாறு அபரிமிதமான உணவுத் தொகு தியை உண்டு களித்து, உடனிருந்தோர் பிரமித்து அச்சுறு மாறு செய்தனர். மற்றொரு சமயத்தில் நடுக்காட்டில் தம பரிவாரங்கள் உணவின்றிச் சோர்வதைக் கண்டு, கையிலிருந்த அற்ப உணவை அக்ஷயமாக வளரச் செய்து அனைவருக்கும் பங்கிட்டு, அவர்களுடைய பசியைத் தீர்த்தருளினர்.

"அனுமான தீர்த்தர்"

மார்க்கத்தின்கண் அநேக ஊர்களில் தங்கி வித்துவான் களோடும் கல்விச் சங்கங்களோடும் சித்தாந்த வாதங்கள் நிகழ்த்தி, அனந்தசயனம் (திருவனந்தபுரம்) என்னும் இராஜ ஸ்தானத்திற்கு ஸ்ரீமத்துவாசாரியர் விஜயஞ் செய்தனர். இந்த வேளையில் சிருங்கேரி ஜகத்குரு பீடாதிபதியாகிய வித்தியா சங்கரர் என்பவர் தம்முடைய விஜய யாத்திரையில் தற்செயலாக இந் நகரில் எழுந்தருளி யிருந்தனர். இந்தப் பிரதேசத்துத் தர்மாதிகாரம் சிருங்கேரி மடத்திற்குரியது; இன்றைக்கும் அந்த மடத்தையே சார்ந்துளது. இராஜ சபையில் வித்தியாசங்கரருக்கும் மத்துவாசாரியருக்கும் நிகழ்ந்த வாதத்தினின்றும் இவர்கள் ஒருவருக்கொருவர் பெரிய மனஸ்தாபத்தோடு பிரிந்தனரெனத் தெரிகிறது. இத் தலத்தினின்றும் நீங்கி, இவர் இராமேசுவரம் சேர்ந்த காலையிலும், நான்குமாத காலத்திற்கு அதிகம அத்துவைத சித்தாந்திகளுடன கடுமையான வாக்குப் போர் விளைந்த தென்பர். மாயாவாதி யொருவனுடன் வித்தியாவாதத்தி லமர்ந்து தம வாசாலத்தினல் இவர் விறல்வாய்ந்து "அனு மான தீர்த்தர்" என்னும் ஏற்றப் பெயர் படைத்தனர். வாத சிங்கன், புத்திசாகரன் என்னும் பௌத்த பண்டிதர்களை வென்று, இவர் கேரள தேச சஞ்சாரஞ் செய்து புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துப் பள்ளிக்கொண்டை யென்னுங் கிராமத்தையடைந்து, ஆங்குத் தம்மை யெதிர்த்துவந்த வாதிகளைச் சயித்து வாகை சூடினர்.

வாதங்களின் தன்மை

காமக் குரோத லோப மோக மத மாச்சரியங்க ளென்னும் உட்பகைஞர் அறுவரையும் வென்று விளங்கும் மத்துவா

சாரியர் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளிச் சாதுர்மாஸ்ய விரதம் முடித்து, அத் தலம் தணத்துப் பாலாற்றங்கரை வழியே மீண்டும் உடுப்பிக்குப் பெயர்ந்தருளினர். இவ் யாத்திரையில் நடைபெற்ற வாதானுவாதங்கள் பெரும்பாலும் தத்துவ விஷயங்களைப் பற்றியேயாம். இம்மை விவகாரமல்லாத நுண்ணிய தத்துவவிசாரம் சாமானிய ஜனங்களுக்கு ஏற்கா தென்பது நாம் சொல்லாமலே அமையும். கண்ணுக்கும் மனத்துக்கும் எட்டாத தத்துவ விஷயங்களைப் பற்றிய தர்க்கங்களில் அறுதிமொழி எவரேனுங் கூறுவது இயலுமோ? இங்ஙனமாக மதாசாரியர்களுடைய வாதங்கள் என்றென்றைக்கும் முடிவுறாது வேற்றுமை விளக்கும் நிலையிலேயே நிற்கின்றன.

வாக்கியார்த்த வன்மை

பாலாற்றங் கரையில் (காஞ்சீபுரத்திற் போலும்) மத்துவாசாரியர் எழுந்தருளிய செவ்வி, சுருதி வாக்கியங்களுக்கு மூன்று வகையாகவும், மகா பாரதத்திற்குப் பத்து விதமாகவும், விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் அடங்கிய பெயர் ஒவ்வொன்றுக்கும் ஒரு நூறு வழியாகவும் பொருள் கூறலாகுமென ஒருகால் சொற்றனர். இவருடைய வாக்கியார்த்த வன்மையைச் சோதிப்பான் அங்குக் குழுமிய பண்டிதர் சிலா விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் முதற் பெயராகிய "விசுவம்" என்னுஞ் சொல்லுக்கு நூறு அர்த்தங்கள் கூறுகவென இரந்தனர். அவர்களுடைய கள்ளக் கருத்தை ஊகித்துணர்ந்தவராய் மத்துவாசாரியர் பின்னிடாது அடைமொழிப் பிரயோக விதிகளைக் கைக்கொண்டு தைரியமாகவும் தீவிரமாகவும் மயக்கமறப் பொருள் கூறப் போந்தனர். ஐந்து ஆறு அர்த்தங்கள் கூறு முன்னரே, இவருடைய திறமையைச் சங்

சித்த புலவர்கள் திடுக்கிட்டு அயர்ந்து, பொருள் கூறியது போதும் போதுமென நிறுத்தப் பிரார்த்தித்து, இவருடைய தெய்வத்தன்மையான பெருமையையும், தங்களுடைய சிறுமை யையும் ஓர்ந்து ஒடுங்கி ஒதுங்கினர்.

பகவத் கீதா பாஷியம்

இங்ஙன மிழைத்த பரியடனத்தில் ஸ்ரீ மத்துவாசாரியர் தம்முடைய மகிமையைத் தாமே உணர்வாராயினர்; சாத்து விக சிகாமணிகளெனத் துலங்கிய இவருக்கும் சிருங்கேரி மடாதிபதிக்கும் உற்ற உறழ்வு உரமுற்றது, விடவு விரி வுற்றது. உடுப்பிக்கு மீண்டு இவர் தம இருக்கை யெய் தலும பகவத கீதைக்குப் பாஷியம் இயற்றியருளினர். தம் கொள்கையின முக்கியாமிசங்களை இப் பாஷியத்தில் வெளி யிட்டனர். இனி வேதாந்த சூத்திர பாஷியம எழுதுவதற் கும், துவைத சித்தாந்தப் பிரகடனம் செய்வதற்கும் இந்தப் பகவத்கீதா பாஷியம் பூர்வாங்கமாக அமைந்தது என்னலாம்.

சூத்திர பாஷியம்

துவைத சித்தாந்த ஸ்தாபகராகிய பூர்ணபோதர், உடுப்பி யிற் சிறிதுகாலம் தரித்திருந்து, வேதாந்த சூத்திர பாஷி யத்தை நிதானமாக வரிந்துகொண் டிருந்தாரென்று ஊகிப்ப தற்கு இடமிருக்கின்றது. ஏனெனில், இவர் வடதேச யாத் திரை மேற்கொண்டு வாராணசி சேருமளவில் சூத்திர பாஷி யம் பூர்த்தியானதாகக் காண்கின்றோம். முதன் முதலில் இவர் வேதாந்த விசாரணையில் சிற்சில அமிசங்களை அங்கங்கே ஆக்ஷேபித்து மாறுபொருள் விரித்தவராய்ப் பின்னர்த் தம் கொள்கைகளை ஒருவழிப் படுத்திப் பகவத்கீதையின் பாஷி

யத்தில் அமைத்தனர். மதசித்தாந்தம் செய்வதற்குப் பிரம்ம சூத்திரமே எல்லா ஆசாரியர்களுக்கும் முதற்படை யாதார மாதலின், சூத்திர பாஷியத்தை இவர் நிதானமாக ஆய்ந் தோய்ந்து ஆக்கினரென்று கொள்ளல் தகும். இங்ஙனம் உடுப்பியில் ஓய்வுற்றமர்ந்து சூத்திரபாஷியத்தை வரைந்த பின்பு உத்தர தேச யாத்திரையில் அநேக இடங்களிலும், முக்கியமாக வித்தியா நிலையமாய காசிக்ஷேத்திரத்திலும், பிர பல வித்துவான்களுடைய பரிசீலனையை யனுசரித்து அதனை ஒப்பாவாக்கியிருக்கவேண்டும். வேதாந்த சூத்திர பாஷியம் இயற்றியதன்றி ஸ்ரீமத்துவாசாரியர் உடுப்பியில் ஓய்வுற்று வதிந்தக்கால் சமயானுசாரமாகவும் சந்தர்ப்பானுசாரமாகவும் வேறு சில நூல்களையும் இயற்றுவாராயினர்.

உத்தர தேச யாத்திரை

உத்தர தேச சஞ்சாரஞ்செய்ய மேற்கொண்டு மத்துவா சாரியர் போதரு மார்க்கத்தில் மகாராஷ்டிர தேசத்தில் ஈசு வரதேவன் என்னுமோர் அரசன் இருந்தான். அவன் பதி கர்களைப் பிடித்துக் குளம் வெட்டக் கட்டாயப்படுத்திக்கொண் டிருந்தான். அவன் மத்துவாசாரியரையும் பரிவாரத்தையும் வழிமடுத்துக் குளம் வெட்டக் கட்டளை யிட்டனன். அதற் கிணங்கிப் பொறுமையுடன் ஆசாரியர் அவனைப் பார்த்து, "நீ தோண்டிக் காட்டின் அங்ஙனம் செய்வன்" எனக் கிளத் தலும், மண்வெட்டியைக் கையிலெடுத்த அரையன் அன் றைப் பொழுது சாயுமட்டும், பரவசனாய் ஆசாரியருக்குப் பதிலாகத் தானே மண்பறித்துக்கொண்டிருந்தான். பின்பு தெளிவுற்றுப் பெரியாரென் றறியாமல் முன் கட்டளையிட்ட குற்றத்திற்காக அவன் இவரிடத்தில் விதேயனாகி, அபசார க்ஷமை வேண்டுவானாயினன்.

128897 ... 600 008.

அந் நாளில் தேச சஞ்சாரஞ் செய்வது மிகப் பிரயாசையா யிருந்தது. வழிகளில் துஷ்ட மிருகங்களின் சஞ்சாரம் அதிகமாயிருந்தது. அம் மிருகங்களினுங் கொடிய துஷ்டத் தன்மை வாய்ந்த கொள்ளைக்காரர்களின் கும்பல்கள் அங்கங்கே பிடித்துக்கொண் டிருந்தன. இந்த ஆபத்துக்களி னின்றும் தப்பிச் செல்லுவதற்கு அவ்வப்போது ஆசாரியர் செய்த உபாயங்கள் உண்மையில் அற்புதங்களே யாகும். பரவிவந்த பறிகாரர் ஒருவரை யொருவர் தாமே வதைத்துச் சாகுமாறு இவர் செய்தனர்; மற்றோரிடத்தில் நூறு கள்வர்களைத் தம் சீடராம் உபேந்திர தீர்த்தரிடமிருந்த கோடரியாற் கோறினர். அங்கங்கே ஆறுகள் நீர்நிரம்பிக் கடக்க முடியாமல் தடுத்து நின்றன. இவைகளைக் கடந்து செல்லும் விஷயத்தில் இவர் மிகச் சமத்காரமாகவும் தந்திரமாகவும் வழி வகுத்தனர். ஓரிடத்தில் இவர் நனையாமலே நீரின்மீது நடந்தேகித் தம் மகிமையை விளக்கி யருளினர்.

Q2 N25

மிலேச்ச பாஷை

ஏகுவழிப் பிரதேசங்களின் ஏந்தல்க ளெல்லாருமே இவருக்கு அனுகூல மமைத்தா ரில்லை. அனுகூலம் செய்யா திருந்தவர்கள் சிலர்; பிரதிகூலம் செய்யப் போந்தவர்கள் சிலர். அவர்களை இவர் எவ் வகையானும் நேர்ப்படுத்திக் கொண்டு முன் செல்ல வேண்டியவராயினர்; சில சிற்றரசர்களுடன் கனிவுகூர்ந்து கிளவியாடிக் கழிந்தனர்; வேறு சிலரின் கண்ணிற் படாமல் ஒதுங்கித் தப்பிப்போயினர். இவை முதலான பல்வேறு சந்தர்ப்பங்கள் இந்த யாத்திரையில் இவருக்கு நேர்ந்தன. அவ்வவ் வமயத்திற்கு ஏற்றபடி நடப்பதிலும் யுக்திகள் புனைவதிலும் இவர் அதிசயமான சாமர்த்தியங் காட்டினர். சில திசைகளில் மதத்த மதபேதி

களான முகம்மதியராம் மாற்றலர் இவருக்கு எதிர்ப்பட்டனர். எதிலரை இன்மொழிகளினால் இணங்கப்பண்ணித் தம் காரியத்தைச் சாதிப்பது தகுதியெனத் தெளிந்தவராய், இவர் அன்னவர்க்கு உரிமையான பாஷையிலேயே — அஃதாவது, 'உருது' அல்லது 'பர்ஷியன்' பாஷையிலேயே — உரையாடினர். இது வியத்தற்பாலது. உலக விவகாரத்தில் ஜனங்களோடு பேசவும், அவர்களுக்கு இதபோதனை செய்யவும் எளிதாய சாதனம் அவரவர்களுடைய சுவபாஷையே யென்னும் உண்மையை இவர் நன்கு ஓர்ந்தவர். இதனால் சுசியும ஆசாரமும் குறைவுறுவென ஆய்ந்து இவர் மிலேச்ச பாஷையைப் பயின்றிருந்து, அவர்களோடு சல்லாபம் நிகழ்த்தினரென்க. இக் காலத்து மடாதிபதிகள் மிலேச்ச பாஷையைப் பயிலுவதும் பேசுவதும ஆசாரக் குறைவென மதித்து, அதனைத் தவிர்த்திருக்கிறார்கள். இவர்களின் சுசித்துவம் தும்மினு லறுந்துபோம் மூக்கின் தன்மைய தென்னலாம். துவைதமட ஸ்தாபகரான ஆசாரியரைவிட இவர்கள் தூய்மை மிகுந்தவர்கள் போலும்!

புஜபலப் பெருமை

கோவா பட்டணத்தில் மத்துவாசாரியருக்கு மிக்க கஷ்டம் நேர்ந்த தென்பர். அதனின்று தப்பித்துக் கொள்ளும் பொருட்டு இவர் நெரிதரலே நேரிதென நினைந்து பரிவாரம் பின்பற்ற நீடினராம். இந்த வடதேச சஞ்சாரத்தில் இவ்ருக்கு உற்ற பீழைகள் பல, பலவகைப்பட்டன. இவரைச் சூழ்ந்து காத்துக் குற்றேவல் செய்து, உற்ற வேளையில் தேகபோஷணைக்குரிய உபசாரங்களைச் செய்துகொண்டிருந்த பணிசாரர்களும் இடையி லிறுமாப் பெய்தினவர்களாய் இவருக்கு இடைஞ்சல் செய்யலானார்கள். இவருடைய தெய்விகத் தன்

மையையும் மகிமையையும் அநேக சந்தர்ப்பங்களில் இவர்கள் கண்கூடாகக் கண்டிருந்தும், இவர்கள் தேகபலத்தினுல் செருக் கடைந்து இவருக்கு அவிதேயமாக நடக்கலாயினர். இவர் கள் கன்னடப் பிராமணர்களுள் புஷ்டியான தேகக்கட்டும் கனத்த களிமண் மண்டையும வாய்ந்த மடைய ரினத்தினர் போலும். தம்மிடத்திற் காணும் அற்புத சக்திகளினுல் இவர்களுக்குப் பயமும் பக்தியும் தோன்ருமையின், ஆனந்த தீர்த்தர் இவர்கள் பதினைவருடன் மற்போர் செய்து எல்லா ரையும் வீழ்த்தித் தம் புஜபலத்தினுல் அடக்கி யச்சுறுத் தின ரென்பர். இவர் இளம்பிராயத்திலேயே "பீமன்" எனப் பெயர்பெற்ற பராக்கிரமசாலி யல்லரோ?

அரித்துவாரம்

இவ்வண்ணம் ஏதமுங் கேதமும் கம்பலையும் கஷ்டமும் பட்டு மிக்க சிரமத்தோடு மத்துவாசாரியர் அரித்துவார க்ஷேத்திர மடைந்தனர். இமய பருவதத் தருகில் இவரு டைய பூஜைப் பெட்டகத்தைத் தாங்கி முன் சென்ற சத் திய தீர்த்தரைப் புலியுருக்கொண்டு கொல்ல வந்த அரக்கனை இவர் கையா லறைந்து கொன்றனர். இப்படிப்பட்ட இடைஞ் சல்களுக் கெல்லாம் ஈடுகொடுத்துப் பின்னர் அரித்துவாரத் தில் சின்னுள் தங்கி, உபவாசமும் மௌன விரதமும் மேற் கொண்டு இவர் தியான யோகத்தி லமர்ந்திருந்தனர். பின்பு, தனியே புறப்பட்டு வியாசருடைய ஆச்சிரமத்தை நோக்கி இயமமலைக் காட்டுக்குட் புக்கினர். பதரியை யடைந்து பாதராயண முனிவரைக் கண்டு இவர் தாம் இயற்றிய கீதா பாஷியத்தைக் காட்டிய பின், அவரிடத்துத் தத்துவோப தேசம் பெற்றுக்கொண்டு அங்ஙனே சிறிது காலம் இருந்து அரித்துவாரத்திற்கு மீண்டனர். இங்ஙனம் மீண்ட பின்பே

விஷ்ணுவின் சர்வோத்தமத்துவத்தை வற்புறுத்தி தம்முடைய வேதாந்த சூத்திர பாஷியத்தை வெளியிட்டனர்.

சோபன பட்டர்

அரித்துவாரத்தி னின்று தமது ஆஸ்தானத்தை நோக்கித் திரும்பும் மார்க்கத்தில் இவர் துவைத சித்தாந்தத்தைப் பிரகடனஞ்செய்து சென்றவிட மெல்லாம் சிறப்பு வாய்ந்து வந்தார். இந்திரபுரி என்னும் மாயசந்நியாசி கர்மமே பிரதான மென்று இவரை எதிர்த்து வாதிக்க, அவனுடைய வாயை யடக்கி வென்றார். கோவிஷயம என்னும் கிராமத்தில் பூவாது காயாதிருந்த மரங்களைக் காய்க்கச் செய்தார். மாயாவாதியான புண்டரீக னென்பவனை வாதத்தில் வென்றார். இவ்வாறு அங்கங்கே தங்கி நிதானமாக மீண்டு வருமளவில், சாளுக்கிய சாம்ராச்சியத்துத் தலைநகரான கலியாண் என்னும் பட்டணத்தை யடைந்தார். அந் நாளில் இந்த இராஜஸ்தானத்திற்கு நானுதேசத்திலுள்ள பண்டிதர்களும் வந்து சேர்வது வழக்கம். இவ்விடத்தில் இவர் ஒரு பெரிய வித்துவானைத் தம மதத்திற்குத் திருப்பினர். பிரபல சத்துருவாயும் மகாவித்துவானுயு மிருந்த சோபனபட்டர் என்பவரை இவர் வாதத்தில் வெனறு துவைதமதத்தை அவலம்பிக்கும்படி செய்தது மிகப் பெருங்காரியம். இதுவரையில் அநேகரை இவர் துவைதமதத்திற்குத் திருப்பினரெனினும் அவர்க ளெல்லாரும சோபன பட்டரைப்போன்ற பிரசித்திவாய்ந்தவர்க ளல்லர். இந்தச் சோபன பட்டரே இவருக்குப் பின்பு துவைத மடாதிபதியாகப் பட்டம பெற்றுக் கேழொடு திகழ்ந்தவர். இவருடைய மடத்துச் சாகைகளே இக் காலத்தில் முக்கியமான மத்துவ மடங்களென மின்னுவன. இவ் வாசாரிய பரமபரை வருமாறு:—



ஸ்ரீமத்துவாசாரியர்

|

பத்மநாப தீர்த்தர் என்னும் சோபன பட்டர்

|

நரஹரி தீர்த்தர்

|

மாதவ தீர்த்தர்

|

அக்ஷோப்பிய தீர்த்தர்

|

ஜயதீர்த்தர் (மத்துவ பாஷிய டீகாசாரியர்)

|

வித்தியாதிராஜர்

|

வியாசராய மடம் | உத்தராதி மடம் | சுமதீந்திர மடம்.

சாலக்கிராமங்கள்

பதரியினின்று ஸ்ரீமத்துவாசாரியர் மீளுமளவில் இவருக்கு ஸ்ரீவேதவியாசர் எட்டு சாலக்கிராமங்களை அன்புகூர்ந்து அளித்தனர். அவைகளைக் கைக்கொண்டு இவர் உடுப்பியில் தம் ஆச்சிரமத்திற்கு எழுந்தருளி, அவைகளுள் சுப்பிரமணிய க்ஷேத்திரத்தில் ஆறு, உடுப்பியில் ஒன்று, மத்தியதாள க்ஷேத்திரத்தில் ஒன்று பிரதிஷ்டித்து, அவைகளுக்கு விதிபூர்வகமாக அர்ச்சனாதிகளை நடப்பிப்பதற்கான ஏற்பாடுகளை ஆக்குவித்தனர்.

அச்சுதப்பிரேக்ஷர்

பதரிகாச்சிரமத்திலிருந்து உடுப்பிக்கு மீண்டபின், இவர் குயிற்றிய காரியங்களுள் இவருக்கு ஆதி குருவாகிய அச்சுதப்பிரேக்ஷர் தமது அத்துவைதக் கொள்கைகளைக் கைவிட்டு இவருடைய துவைதபக்ஷத்தை அவலம்பிக்கும்படி செய்ததே பேராண்மையாம். இளமையிலிருந்து அச்சுதப் பிரேக்ஷர் பிரபலமான அத்துவைத நூல்களை ஓதித்தேர்ந்து, அந்தச் சித்தாந்தத்தை விளக்கிக்கொண் டிருந்தமையின், அவரிடத்துப் பாடங்கற்குங் காலையிலேயே மத்துவாசாரியர் அத்துவைத பக்ஷத்தை மறுத்துத் துவைதக் கொள்கைகளை அவ்வப்போது சாற்றினரெனச் சொற்றன மன்றோ ? இஞ்ஞான்று அவ்வகைச் சாஸ்திர வாதங்களினாலாவது அற்புதச் செயல்களினாலாவது அச்சுதப் பிரேக்ஷருக்குத் துவைதக் கொள்கையைப் புகட்டுவது எளிதாகவில்லை. ஆதலின், சாஸ்திரார்த்த வாதத்தின் முடிவில் தம்முடைய உத்தண்டமான வாக்குவன்மையினால் மத்துவாசாரியர் தம் குருவின் வாயையடக்கித் துவைதியாக்கினர் என்பர்.



உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகம்

கிருஷ்ணுலயம்

காரியாகாரியங்களை மிக நுட்பமாகப் பகுத்தறியும் தன்மையுள்ள ஆனந்த தீர்த்தர் கிருஷ்ண விக்கிரகம் ஒன்றை இரஜதபீட புரத்தில் பிரதிஷ்டிக்க வெண்ணங்கொண்டிருந்தார். ஒருநாள் இவர் தம்முடைய ஆச்சிரமத்திற்கு அருகிலுள்ள கடற்கரைக்கு எழுந்தருளி அனுஷ்டானத்தில் அமர்ந்திருக்கையில், துவாரகா நகரத்திலிருந்து வந்துகொண்டிருந்த கப்பலொன்று மூழ்கிப்போந் தருணத்தி லிருப்பதை இவர் தூரத்தில் கண்ணுற்ருர். கப்பலுக்கு உடையவன் கரையில் இருந்து அதன் நிலைமையைப் பார்த்து மனமாழ்ந்து உளைந்து இவரை யணுகி, அது மூழ்காமல் கரை வந்து சேரும்படி அனுக்கிரகிக்குமாறு வேண்டினன். அவ்வண்ணமே அது வந்து சேர்வதற்கு அனுகூலமான காற்றை ஆசாரியர் கற்பிக்க, அஃது அனாயாசமாகத் துறை வந்து புகுந்தது. இவருடைய அதிசய மகிமையைக்கண்டு பகட்டுக்கு உடையவன் பயமும் பக்தியுங்கொண்டவனுய், "தங்கள் அருட்பெருமையால் எனது நாவாய் அமிழாது கவிழாது கரை சேர்ந்தது. இதற்கு ஏற்ற கைம்மாறு எவ்வகையானும் ஆற்றகில்லேன். இக் கப்பற் சரக்குக்களுள் தங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்வீர்களாக" என்றனன். இவர் அதனிலிருந்த கோபீ சந்தனக் கட்டிகளை மாத்திரமெடுத்துக்கொண்டு தம மடமடைந்து, அவைகளுள் பெரியதொன்றை அலம்பக் சட்டளை யிட்டனர். அதனில் அற்புதமான அழகு அமைந்த ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகம ஒன்று இருக்கக்கண்டு இவர் மிக்க ஆனந்த மடைந்து அதனை உடுப்பியில் பிரதிஷ்டை செய்தனர். பக்தருக்கு இஷ்டார்த்தங்களையளிக்கததக்க அர்ச்சாவதார மூர்ததியாகிய அந்தத் திவ்விய மங்கள விக்கிரகத்தை இவர் தாமே அர்ச்சித்து வந்தனர்.

சில்லறைச் சீர்திருத்தங்கள்

மேலும் மேலும் புதிது புதிதாகப் புலமையோர் பலர் துவைத சித்தாந்தத்தைத் தழுவலாயினர். ஆசாரியர் பரிஷ்கரிக்க வேண்டிய ஆசாரவிஷயங்கள் பல தோன்றின. இங்ஙனம் மத்துவாசாரியர் செய்த விவஸ்தைகளுள் இரண்டொன்றை இங்குக் குறிப்பாம். இராமாநுஜ மதத்தவர்கள் சமாசிரயணம் செய்துகொள்வது சாஸ்திரீய மென்றும், அந்தப் பிரகாரமே த்ம்மவர்கள் விஷ்ணுவின் பஞ்சாயுத முத்திரைகளைப் புஜங்களில் தரிக்க வேண்டுமென்றும் இவர் விதித்தருளினர். ஆனால், இந் நாளில் மடாதிபதிகள் விஜய யாத்திரையில் எழுந்தருளுந்தோறும் ஆங்காங்குள்ள மத்துவ ஸ்திரீ புருஷர்களெல்லாரும் முத்திரை குத்திக் கொள்ள வேண்டுமென்னும் நிர்ப்பந்தமான சம்பிரதாயம் மத்துவாசாரியரின் காலத்திற்குப் பின்பு ஏற்பட்டதாகவே தோன்றும்.

உடுப்பியில் கிருஷ்ணாலயம் அமைத்ததன் பயனாக மத்துவமதஸ்தர்கள் பல விடங்களிலும் இருந்து ஆங்கு ஒருங்கு சேர்வதற்கும், ஒருவருக் கொருவர் அன்பும் அபிமானமும் பாராட்டுவதற்கும், இங்ஙனம் உசாத்துணைகொண்டு மத்துவ மதத்தைப் பலப்படுத்துவதற்கும் அனுகூலம் வாய்த்தது. இந் நாளிலும் வைதிகப்பற்றுடைய மத்துவர்கள் தம் ஆயுளில் ஒருமுறையேனும் உடுப்பியாத்திரை செய்து ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பண்ணுவது கடமையெனக் கருதுகின்றார்கள்.

நாராயணோபநிஷத்தின் இறுதியிலுள்ள "ஆத்மயஜ்ஞ" விளக்க மானவாக்கியங்களைத் தழுவியேபோலும் இவர் யஜ்ஞயாகாதிகளில் ஜீவவதை செய்வதைத் தவிர்த்து, மாவினால் ஆட்டுருவமமைத்து, அந்தப் பிஷ்ட பசுக்களையே பலியளிக்க வேண்டுமெனத் தம சீடர்களுக்குத் திட்டம் பண்ணினர்.

இது ஜீவகாருண்ணியமான பெருந்திருத்தமே யாகும். மாத்துவர்களால் பரிபாலிக்கப்படும் தேவாலயங்களில் தேவதாசிகளுக்கு இடமில்லையென வழக்கத்திற் காண்கிறோம்; தேவாராதனே செய்கிறவர்கள் படிப்பு, பயம், ப்க்தி, சதாசாரம், சிரத்தை என்னும் அமிசங்களில் கொண்டாடத்தக்கவர்களாயிருக்கிறார்கள்.

விஷ்ணுவின் சர்வோத்தமத்துவத்தைத் தாபிக்கப் போந்தது இந்தத் துவைத மதம். விஷ்ணுவின் புத்திரராகிய வாயுதேவரின் மூலமாயன்றி மற்றெவ்வகையாலும மாணிடர்க்கு நற்கதி இல்லை யென்பது இம் மதத்தவர்களின் பெருங்கொள்கை. இங்ஙனங் கொள்ளும விஷயத்தில் இவர்கள் இந்தியாவில் தோன்றிய மற்றெம மதத்தாரையும் போலாதவர்கள். இவர்கள் விஷ்ணுபக்தியை,

(1) அங்கனம் — விஷ்ணுவின் பஞ்சாயுத முத்திரைகளைத் தேகத்தில் தரித்தல்;

(2) நாமகரணம் — மக்களுக்கும் மற்றுமுள்ள உற்றார்களுக்கும் விஷ்ணுவின் திருநாமங்களைச் சூட்டுதல்;

(3) பஜனே — விஷ்ணுவின் பல்வகைப் பெருமைகளேயும் புகழ்ந்து கொண்டாடல்

என்னும் இவ் வகைகளில் முக்கியமாகப் பாராட்டக் கடவர். இவர்களுள் சிலர் 3-ஆம் அமிசமாகிய பஜனேயை விசேஷமாக வற்புறுத்துவாராய் "தாசக்கூட்டத்தவர்" என்னும் பெயர் பெற்று, மற்றவர்களை "வியாசக்கூட்டத்தவர்" என்பார்கள். இதர மதசாகையினரைவிட மாத்துவ ஸ்திரீ புருஷர்கள் புராண கதா சிரவணத்திலும் விரதானுஷ்டானங்களிலும் அதிக ஆர்வங் காட்டுவது குறிக்கத்தக்கது.

பிறமதப் பகையின் பீடை

பிரபலமான பண்டிதர்களிற் பலரை மத்துவாசாரியர் தம் முடைய துவைத சித்தாந்தத்திற்கு வளைத்துக்கொண்டத னாலும், ஆசார விவகாரங்களில் சிற்சில சீர்திருத்தங்களை யமைத்ததனாலும் அக்காலத்தில் மிகப் பிரகாசமாக விளங்கிய ஸ்மார்த்தர்களி* லநேகர் இந் நவீன துவைத சித்தாந்திகளின் பால் பகைமை பாராட்டலானார்கள். இவர்களுள் முக்கிய மாகச் சிருங்கேரியிலுள்ள ஸ்மார்த்த மடாதிபதிகளுடைய கண்ணை மத்துவாசாரியருடைய பிராபல்யம் உறுத்தியது. அந்த மடத்திற்குச் சிஷ்யர்கள் அதிகம், செல்வாக்கு அதிகம், அரசர்களின் அபிமானம் அதிகம், பிரதிஷ்டையும் அதிகம். அதற்குச் சிறிது தூரத்திலுள்ள உடுப்பியில் வீற்று மத்து வாசாரியார் நூதன மதஸ்தாபகராக விளங்கியதனாலும், மற்ற வர்கள் ஏற்றுப் பழகிய சித்தாந்தங்களை இவர் இகழ்ந்து கூறியதனாலும் பகைவர்கள் இவருக்கு அநேக வகைகளில் இடைஞ்சல் செய்யலானார்கள்; இவ் வபிநவ மதத்தைத் தழு வியவர்களுக்கும பலவிதமான உபத்திரவங்களை உண்டாக்கி னார்கள். துவைத மதஸ்தர்கள் எண்ணிக்கையில் குறைவா யிருந்ததன்றி, இவர்களுக்கு இராஜ போஷணையும் இல்லாத தனால் இவர்கள் மற்றவர்களை அச்சுறுத்தி அடக்க முடியாத வர்களா யிருந்தார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் இவ் விருதிறத்தாருள்ளும் தூஷணப் பிரசங்கங்கள் மலியலாயின. இத் தருணததிலேயே புலனறுத்த புண்ணிய சீலரான மத்து வாசாரியர், அவ் வத்துவைத சித்தாந்திகளை எந்நாளும் இகழ்ச் சிக்குள்ளாக்கக் கதை யொன்றைக கற்பித்து, அதனை நுழைத்து வைப்பான் "மகா பாரத தாத்பரிய நிர்ணயம்" என்னுமொரு நூலையும் இயற்றினர்.

* ஸ்மிருதியைப் பிரமாணமாகக் கொண்டொழுகுவோர்.

புஸ்தகக் கொள்ளை

பற்றற்ற பரமசாநதரெனப் பொலிந்த சிருங்கேரி மடாதிபதிகளுக்கும், முற்றத்துறந்து முற்று முணர்ந்த முழு வைஷ்ணவராய் மதஸ்தாபனஞ் செய்யப்போந்த மத்துவாசாரியருக்கும் ஆதியில் திருவனந்தபுரத்தில் உண்டாகிய மனக்கசப்பு முதிர்ந்து நாளுக்குநாள் அதிகரித்து வன்பகையாகத் தீர்ந்ததன் பயனாக மத்துவாசாரியருடைய நூற் சேகரத்தைச் சிருங்கேரி மடாபிமானிகள் சிலர் கூடிக் கொள்ளையடித்து, அவை வெளித்தோன்றாவண்ணம் ஜயசிங்கராஜனுடைய நாட்டின் எல்லைப் புறத்திற் சேமித்து வைத்தார்கள். அச்சுப் பதிப்பில்லாத அந் நாளில் பனையேட்டுப் பிரதிகளை இழப்பது பெரிய நஷ்டமென்பதை எவரும் எளிதில் உணர்வர்.

புஸ்தகங்களின் மீட்சி

மேற்குறித்த ஜயசிங்கராஜன் என்பவன் சாளுக்கிய மன்னர் வமிசத்து ஜயசிங்கர்களுக்குச் சம்பந்தப் பட்டவனாயிருக்கவேண்டும். அவனுடைய மதக்கொள்கை இன்னதென்று நமக்குத் தெரியவில்லை. அவன் காசரகோடு என்னும் ஊருக்கு எட்டு மைல் வடக்கேயுள்ள கும்பலா என்னும் பழைய பட்டணத்தை ஆண்டவன். ஆனால், அவனுடைய இராஜதானி விஷ்ணுமங்கலமாகும். இந்த இராஜதானியை முன்னர் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறோம். பட்டணத்தின் பெயர் விஷ்ணுமதச் சார்பைத் தெரிவிக்கின்றதெனினும், அவ் வரையன் இப் புதிய மதாசாரியர் விஷயத்தில் நன்மனங்கொண்டவனா யிருந்தா னென்பதைத் தவிர வேறொன்றும் சொல்லமுடியவில்லை. அவனுடைய உதவியை நாடி மத்துவாசாரியார், அவன் மூலமாக, மேலே விவரித்தவா றிழந்த பனையோலைச் சுவடிகளைத் திரும்பப்பெற்றனர். இவர் அவ

னுடைய ஸம்ஸ்தானத்தில் சின்னாள் வசித்தனரெனினும், அவன் இவருடைய துவைத சித்தாந்தத்தைத் தழுவிய தாகக் காணோம். ஏனெனில், இவருடைய காலத்தில் அரசர் எவரையும் இவர் தம்வழிப் படுத்தியதாகத் தெரியவில்லை. இற்றைநாள் மடாதிபதிகளுக்குரிய யானைகளும் குதிரைகளும் பல்லக்குகளும் மற்றுமுள்ள எடுபிடி பிருதுகளும் இவருக்கு இருக்கவில்லையெனத் தோன்றுகிறது.

திரிவிக்கிரம பண்டிதர்

புஸ்தகங்களை மீட்ட பின்பு ஸ்ரீமத்துவாசாரியர் மிகப் பெரிய வெற்றி யொன்று படைத்தனர். இதுகாறும் இவர் வித்துவான்களோடு வாதித்து அவர்களை மெய்ப்பித்துத் துவைதிகளாக்கியதெல்லாம் சாமானிய விஷயமாகவே கணிக்கப் பெறும். திரிவிக்கிரம பண்டிதர் என்னும் மகா வித்துவானை மெய்ப்பித்துத் துவைத சித்தாந்தத்தை ஏற்கப் பண்ணியது மகத்தான சாகசமென மதிக்கப்படும். திரிவிக்கிரம பண்டிதருடைய புத்திரராகிய நாராயண பண்டிதர் ஸ்ரீ மத்துவாசாரியருடைய சரித்திரத்தை விவரமாக எழுதியுள்ளார். திரிவிக்கிரம பண்டிதரைத் துவைத பக்ஷத்திற்குத் திருப்பின கீர்த்தியின் வியாபகத்தினால் பின்னும் அநேகர் மத்துவ மதத்தை மேற்கொள்ளலானார்கள். அந்தப் பண்டிதர் துவைத சித்தாந்தத்தை அவலம்பித்த பின்பு பூஜார்த்தமாகக் கிருஷ்ண விக்கிரகம் ஒன்றை அவருக்கு மத்துவாசாரியர் அளித்தனர். அந்தப் பண்டிதருடைய சந்ததியார் தென்கன்னட தேசத்திலோ, கொச்சி ராஜ்யத்திலோ இப்போது இருக்கிறார்களாம். ஆனால், அவர்கள் துவைதசித்தாந்தத்தைத தழுவிய மாத்துவர்களா யில்லாமல், பண்டைக் கொள்கைகளை மேற்கொண்டு ஸ்மார்த்தர்களா யிருக்கின்றார்களாம்.

விஷ்ணு தீர்த்தர்

மத்துவாசாரியர் ஜயசிங்கராஜனுடைய ஸம்ஸ்தானத்திலிருக்குங்காலையில் இவருடைய பெற்றோர்கள் பரமபத மெய்தினர். இவர் பாஜக க்ஷேத்திரத்துக்குத் திரும்பிப் போய்த் தம் கனிஷ்ட சகோதரரைக்கொண்டு அவர்களுக்குரிய அபரக்கிரியைகளை முறைப்படி செய்வித்து முடித்தனர். பின்பு, இளையவர் செய்துகொண்டிருந்த வியவகாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதனால் அவர் மனம் நொந்து உலகத்தை வெறுத்துத் தமயனாராகிய மத்துவாசாரியரை யடைந்து துறவறம் மேற்கொண்டனர். அவர் "விஷ்ணு தீர்த்தர்'' என்னும் துறவறப் பெயர் தாங்கி, ஆசாரியரை யடுத்து வைதிக மார்க்கத்தை அவலம்பித்திருந்தனர்.

அற்புதச் செயல்கள்

விஷ்ணு தீர்த்தர் முதலான துறவிகள் எண்மர் முறையே *ஒவ்வொருவரும் ஈராண்டு காலம் உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணாலயத்தைப் பரிபாலிக்கும்படி நியமனஞ் செய்து பூர்ணப்பிரஞ்ஞர் தேசாடனஞ் செய்யப் புறப்பட்டார். இந்தச் சஞ்சாரத்தில் இவர் செய்த அற்புதச் செயல்கள் அநேகம். மைசூருக்குத் தெற்கே 24-மைல் தூரத்திலுள்ள பலிஹொன்னூர்த் தாலூகாவில் கலாசம் என்னுங் கிராமத்தில் எவரும் எடுக்க வியலாத பெரும்பாறை யொன்றைத் தூக்கி இவர்

---

* இது 'பரியாயம்' எனப்படும். 'பரியாயம்'=முறை, ஒழுங்கு, turn, course. ஈராண்டுதோறும் மகரசங்கிரமண காலத்தில் வேறு ஒருவர் பொறுப்பை மேற்கொள்ளும்போது 'பரியாயோத்ஸவம்' நிகழ்த்தி, அன்னதானம் சொர்ணதானம் முதலியன ஏராளமாக வழங்கி, விமரிசையாக ஊர்வலம் வருவர். இவர் 'பரியாய ஸ்வாமி' எனப்படுவர்.

பலருக்கும் பயன்படச் செய்தார். அங்குள்ள "பத்திரை" என்னும் ஆற்றின் வலக்கரையில் "இந்தச் சதுரப் பாறையை ஸ்ரீமத்துவாசாரியர் கொணர்ந்து அம்புதீர்த்தத்திற்கு வாரா வதியாக வைத்தார்" என்னுங் கருத்துள்ள வடமொழி வாக்கியம் சிலையில் செதுக்கப்பட் டிருக்கின்றது. 'அம்பு தீர்த்தம்' என்பது குன்றுகளினிடையில் அகாதத்தில் பாயும் பத்திரையாற்று நீராட்டுத்தானம். மற்றும், இவர் "கோமதி" யாற்றங் கரையில் வேதகீதங்களைக் கானஞ் செய்ய, அங்குக் காய்ந்து கிடந்த வித்துகள் விரைந்து முளைத்துத் தளிர்த்துச் செடிகளா யெழுந்தன.

கடைசிக் காலத்தில் இவர் குமாரதாரை, வேத்திராவதி என்னும் இரண்டு நதிகளுக்கு இடையிலுள்ள "ஸரிதந்தரம்" என்னும் தீவில் அமர்ந்து துவைதமத சித்தாந்த விளக்கமாக "கிருஷ்ணாமிருத மகார்ணவம்" ஆதிய நூல்களியற்றியதன்றி, பரபக்ஷவாதிகளை வெல்வதற்காகச் சீடர்களுக்குப் போத மூட்டி அனுப்பி வந்தனரெனத் தெரிகிறது. இவ்விடத்தில் சூரியக் கிரகணம் நேர்ந்ததொரு நன்னாளில் இவர் கடலாடப் போயிருந்தனர். அப்போது சமுத்திர ராஜன் விம்மி வீறுப் புற்று அலையோச்சி யலந்தலைப் படுத்த, இவர் சீற்றமுற்றுச் சிவந்துநோக்கினர். உடனே சமுத்திரன் அடங்கி அமைதி மேற்கொண்டனன். விஷ்ணுதீர்த்தர், இருஷீகேச தீர்த்தர், ஜனார்த்தன தீர்த்தர், நரசிம்ம தீர்த்தர், உபேந்திர தீர்த்தர், வாமன தீர்த்தர், ஸ்ரீராம தீர்த்தர் முதலான மாணவர்கள் பலருக்குப் பாடஞ் சொல்லிக்கொண் டிருக்குமளவில் தீபம் அவிய, இவர் தம் கால்விரலில் ஒளியுண்டாக்கி அவர்களைப் படிப்பித்தனர்; சடிஜா என்னும் பலாட்டியனும் அவ னுடைய சகோதரனுஞ் சேர்ந்து இவருடைய கழுத்தை நெருக்க, அவர்கள் அதிர்ந்து அயர்ந்து அப்பால் வீழச் செய்

தனர். மற்றும், தேக பல பரீக்ஷையினிமித்தம் வந்த அவ் விருவரும் நமது ஆசாரியர் தரையிலூன்றிய கைவிரலைப் பெயர்க்க வியலாதவர்களாய் இளைத்துப் பரிபவப்பட்டனர். இவருடைய அற்புதச் செயல்கள் இன்னும் எத்தனையோ உள.

அந்தர்த்தானம்

ஏகாதசி விரத பராயணரான இவ் வானந்த தீர்த்தா சாரியர் உடுப்பியில் அஷ்டமடங்களை* ஸ்தாபித்துத் தம் சிஷ்யவர்க்கத்தில் பிரமுகர்களாய பத்மநாப தீர்த்தர், நரஹரி தீர்த்தர், மாத்வ தீர்த்தர், அக்ஷோப்பிய தீர்த்தர் என்னும் சிஷ்டர்கள் நால்வரைத் தமது சம்பிரதாயப் பிரவர்த்தகர்க ளாக்கினர். பகவத் பக்தரான பத்மநாப தீர்த்தருக்குத் தம் முடைய ஸ்தானத்தில் அபிஷேகம் செய்வித்தனர்; தாம் அருளிய நூல்களுக்கு ஜயதீர்த்தர் என்பவர் வியாக்கியானம் எழுதுமாறு பணித்தனர். இந்த ஜயதீர்த்தரே பின்பு "டீகா சாரியர்" என இந் நாட்டில் உத்தம பிரசித்தி பெற்றவர்.

சர்வசங்க பரித்தியாகியாகிப் பூர்ணப் பிரஞ்ஞரெனவும் ஆனந்ததீர்த்தரெனவும் பெயர்படைத்த ஸ்ரீமத்துவாசாரியர் அரும்பெருங் காரியங்களை இயற்றித் துர்மதங்களைக் கண்டித் துத் துவைதமதத்தை நாட்டி, அதனைக் காப்பதற்கான நூல் களையும் அதிகாரிகளையும் அமைத்து, எழுபத்தொன்பது வரு ஷம் ஆறு மாதம் இருபது நாள் பூவுலகில் எழுந்தருளி இருந் தனர். முடிவில், பிங்கள நாம ஸம்வத்ஸரம் மாக சுத்த நவமி சுபதினத்தன்று மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்

---

* 1. ஸோதேமடம், 2. கிருஷ்ணபூர்மடம், 3. காணியூர்மடம், 4. அத்மார்மடம், 5. புத்தேமடம், 6. சீரூர்மடம், 7. பலிமார் மடம், 8. பேஜாவர்மடம்.

டிருக்கையில் இவர் அந்தர்த்தான மாயினர். இவர் மீண்டும் ஸ்ரீ வேதவியாசரை யடைந்து, அவ் வாச்சிரமத்திலே தவம் புரிந்துகொண் டிருக்கிறாரென இம் மதத்தவர்கள் கூறுவர்.

நூல்கள்

ஸ்ரீமத்துவாசாரியர் இயற்றிய நூல்கள் பகவத்கீதா பாஷியம், சூத்திரபாஷியம், கீதா தாத்பரியம், இருக்குவேதத்து முதல் நாற்பது சூக்தங்களுக்குப் பாஷியம், தசோபநிஷத்துப் பாஷியம், பாகவத தாத்பரிய நிர்ணயம், கிருஷ்ணாமிருத மகார்ணவம், அணுபாஷியம், துவாதச ஸ்தோத்திரம், தந்திரசாரம், மகாபாரத தாத்பரியநிர்ணயம் முதலியன முப்பத்தேழு.

மடங்கள்

ஸ்ரீமத்துவாசாரியர் தாபித்த வைஷ்ணவம் "சத் வைஷ்ணவம்" எனப்படும். இந்தத் துவைத சித்தாந்தத்தை யனுசரிக்கும் மாத்துவர்களுடைய மடங்கள் உடுப்பியிலும் * மைசூர் ஸம்ஸ்தானத்தில் ஹொளே நரசீபுரம், ஸோஸலே, நஞ்சனகூடு, முளுபாகிலு முதலான ஊர்களிலும் பிரபலமாயிருக்கின்றன. நைஜாம் ஸம்ஸ்தானத்திலும் பெரிய மடமொன்று உண்டு. இம் மதத்தைச் சார்ந்தவர்க ளெல்லாரும் பிராமணர்களே. மற்றச் சாதியாரெவரையும் இதனிற் சேர்த்துக் கொள்ளவில்லை. இம் மதாபிவிருத்தியின் பொருட்டு விஷ்ணு தீர்த்தர் சுப்பிரமணிய க்ஷேத்திரப் பிரதேசத்தில் மறைந்து இன்னும் தவம்புரிகின்றன ரென்பர்.

---

* குறிப்பு:— 'உடுபம்' என்னுஞ் சொல்லுக்குத் 'தெப்பம்' 'படகு' என்று அர்த்தமாகும். படகுத்துறை யென்னும் அர்த்தத்தில் அந்த ஊர் 'உடுப்பி' என்னும் பெயர் வாய்ந்தது.

ஸ்ரீமத் வல்லாபாசாரிய மகாப் பிரபு

5. ஸ்ரீமத் வல்லபாசாரியர்

சோம யஜ்ஞ சதம்

தெலுங்கு நாட்டில் காங்கரவாடை என்னுமொரு கிராமம் உண்டு. அதனைக் கம்பம் காகரவல்லி என்றும் காகர கம்பம் என்றும் சொல்லுவார்கள். முன்னர் அஃது ஆந்திர தேசத்தில் அகப்பேடு ஜில்லாவைச் சேர்ந்திருந்தது. அந்தக் கிராமத்தில் வெலிநாட்டு இராம நாராயணபட்டர் என்பவர், ஒருவர் இருந்தார். அவர் யஜுர்வேதி, தைத்திரீயசாகை பாரத்துவாஜ கோத்திரத்தவர். அவருடைய புத்திரர் யஜ்ஞ நாராயண பட்டர் எனப்படுவர். அவர் வேதங்களில் மிக்க தேர்ச்சி பெற்றவர்; சாக்ஷாத் வேதாமிசம் வாய்ந்தவரெனவே சொல்லப்படுவர். அவர் முதன்முதல் சோம யாகம் செய்கையில் யாககுண்டத்தி லிருந்து "நூறு சோம யாகங்கள் பூர்த்தி செய்தவர்களுடைய குடும்பத்தில் சாக்ஷாத் விஷ்ணு அவதரிப்பார்" என்னுமோர் அசரீரி வாக்கு உண்டாயிற்று. அவர் 32-யஞ்ஞங்கள் செய்தார். அவருடைய காலத்திற்குப் பின்பு அவருடைய குமாரர் கங்காதரபட்டர் 28, அவருடைய புத்திரர் கணபதி பட்டர் 30, அவருடைய ஜேஷ்ட புத்திரர் வல்லப பட்டர் 5, அவருடைய புத்திரர் இலக்குமண பட்டர் 5-சோம யஞ்ஞங்கள் செய்தார்கள். இவ்வாறு இலக்குமண பட்டருடைய நாளில் சத சோம யாகங்கள் பூர்த்தியாயின. இவருக்கு ராமகிருஷ்ண பட்டர் என்னுமொரு சீமந்த புத்திரன் பிறந்தான்.

சத சோமயாகப் பயன்

கடைசி சோம யாகமானது விக்கிரம சகம் **1532,** சைத்திர சுத்த நவமி சோம வாரம் புஷ்ய நக்ஷத்திரம், அபிஜித் யோகம் மத்தியான்ன காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. யஞ்ஞம் பரிபூர்த்தியாகும் தருணத்தில் யஞ்ஞ குண்டத்தினின்று, "உங்கள் கிருகத்தில் சாக்ஷாத் பூர்ண புருஷோத்தமராகிய நாராயணமூர்த்தி அவதரிக்கப் போகிறார்" என்னும் அசரீரி வாக்கு வெளிப்பட்டது. அதனைக் கேட்டு எல்லாரும் ஆனந்தமடைந்தார்கள். இலக்ஷத்து இருபத்தையாயிரம் பிராம்மணர்களுக்குக் காசியில் சந்தர்ப்பணை* செய்வதாக இலக்குமண பட்டர் சங்கற்பஞ் செய்தார். பின்பு, அவர் தம் குடும்பத்தோடு அநேக வித்தியார்த்திகளையும் அழைத்துக்கொண்டு, சந்தர்ப்பணைக்கு வேண்டிய வனைத்தையுங் கைக்கொண்டு காசிக்குப் பிரயாணப்பட்டார். தம்முடைய கிராமமாகிய காங்கரவாடைக்கு ஏழு மஜிலி † தூரத்திலுள்ள பிருங்க சார்த்தகம் என்னுங் கிராமத்தில் மூன்று நாள் தங்கி யிருந்தார். அப்போது வைசாக பகுள ஏகாதசி தினம் நடு நிசியில் இராதா சகிதமாக ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கனவில் அவருக்குத் தரிசனமளித்து, "நீர் காசியினின்று மீளுகையில் சம்பாரணிய க்ஷேத்திரத்தில் எமது அவதாரம் உமக்கு வாய்க்கும்" என்று திருவாக்கு மலர்ந்து ஓர் உத்தரீயம், ஒரு துளசிமணி மாலை, ஒரு தாம்பூலம் ஆகிய இவைகளை யளித்து, "அந்தச் சிசுவுக்கு இந்த வஸ்திரத்தைப் போர்த்த வேண்டும், துளசிமணி மாலையைக் கண்டத்தில் தரிப்பிக்க வேண்டும், தாம்பூலத்தை உள்ளே செலுத்த வேண்டும்" என்று கட்டளையிட்டுக் கரந்தார்.

---

* சந்தர்ப்பணை = திருப்திகரமான விருந்து. † 'மஜிலி' = ஒருநாள் பிரயாணம் செய்து வழித் தங்குமிடம்.

பண்டித இலக்குமண பட்டர்

இலக்குமண பட்டர் கண்ணைத் திறந்து பார்க்கையில் பகவான் கனவில் அருளிய பதார்த்தங்கள் மூன்றும் பிரத்தியக்ஷமா யிருந்தன. அவைகளை இவர் மிக்க சந்தோஷத்தோடு கைக்கொண்டு பற்பல திவ்யக்ஷேத்திர தீர்த்த யாத்திரைகளைச் செய்து பிரயாகை*க்குப் போய்ச்சேர்ந்தனர். அங்கே பாரத்துவாஜமகர்ஷியின் ஆச்சிரமம் இருக்கின்றது. அதனைச் சேவிக்கவெண்ணிப் பக்தியுடன் போந்த இலக்குமண பட்டர் அம் மாமுனிவரைத் தரிசித்தனர். அவ் வாச்சிரமத்தில் ஆகாசவாணி, "நீர் எமது கோத்திரத்திற் பிறந்தவராயிருக்கின்றீர். உங்கள் கிருகத்தில் சாக்ஷாத் பூர்ண புருஷோத்தமர் அவதரிக்கப் போகின்றார். ஆதலால், கால விடம்பம் செய்யாமல் நீர் விரைந்து வாராணசி†போய்ச்சேரும்"

---

* 'பிரயாகை' என்பது கங்கையும் யமுனையுங் கூடுமிடம்; இந்நாளில் 'அலஹபாத்' என விவகரிக்கப்படுகின்றது. இது 'பிரஜாபதி க்ஷேத்திரம்' எனப்படும். இது பிரயாகை, பிரதிஷ்டானபுரம், வாசுகிஹிரதம், வெகு மூலபர்வதம் என்பவைகளுக்கு இடையே உள்ள புண்ணிய க்ஷேத்திரம். இதனில் ஸ்நானஞ் செய்வோருக்குச் சொர்க்கப் பிராப்தி யுண்டாவதன்றி மறுபிறப்பும் இல்லை என்பர். பிரம்மாதி தேவதைகள் இந்த க்ஷேத்திரத்தை எப்பொழுதும் காத்துக்கொண்டிருப்பர். இங்குள்ள புண்ணியதீர்த்தங்கள் எண்ணில.

† வாராணசி — இது 'வாரணசி' எனவும் பெறும். இது காசி மாநகருக்கு ஒரு பெயர். வரணை என்னும் நதிக்கும், அஸி என்னும் நதிக்கும் இடையிலுள்ள பிரதேசமாதலால், இதற்கு இப்பெயர் வந்தது. காசியை யடைந்தவரது பாவத்தைத் தரித்தலால் 'வரணை' என்றும், அந் நீரிற் படிந்தோரது பாவத்தைத் யறுத்தலால் 'அஸி' என்றும் பெயருள்ள இவ் விரண்டு நதிகளும் தெற்கு வடக்காகக் காசியைச் சூழ்ந்திருக்கின்றன.

என மொழிந்தனள். அங்ஙனே இலக்குமண பட்டர் குடும்ப சமேதராகக் காசி க்ஷேத்திரத்தை யடைந்து கங்காஸ்நானம், ஸ்ரீ விசுவேசுவராதி தேவதா தரிசனம் முதலியன செய்து கொண்டு, நிவசிப்பதற்கு இருக்கையொன்றை அமைத்துக் கொண்டனர். அவ்விடத்தில் இவர் பிராம்மண போஜனம், வேதபாராயணம், அக்கினிஹோத்திரம் முதலியன நடப்பித்து வந்தனர். சிறிது காலத்திற்குள் ஓர் இலக்ஷத்து இருபத்தையாயிரம் பிராமமணர்களுக்குச் சந்தர்ப்பணை செய்து இவர் தம்முடைய சங்கற்பத்தை நிறைவேற்றினர். இவர் காசியிலுள்ள பண்டித சபைகளுக்கு அடிக்கடி போய்ச் சாஸ்திரார்த்தங்களைச் சொல்லி வித்துவான்களை மெய்ப்பித்துப் பிரபலமாக விளங்கினர்.

பிரபுவின் அவதாரம்

ஈதிங்ஙனமாக, வடமேற்குத் திசையிலிருந்து முகலாயரும் பட்டாணிகளும் டில்லி (ஹஸ்தினபுரப்) முதலிய பிரதேசங்களிற் கொள்ளையடித்துக் காசி தேசத்திற்கும் வந்து கொண் டிருக்கிறார்களென்னும் வதந்தி உண்டாயிற்று. காசிவாசிகள் திகிலுற்றுக் கிராமாந்தரங்களுக்கு நீளலாயினர். அந்தத் தேசோபத்திரவம் நீங்கும் வரையில் வேறு ஸ்தலத்தில் வசிக்கவேண்டி வந்ததைப் பற்றி வருத்தமுற்று இலக்குமண பட்டர் தம் குடும்பத்தோடு சம்பாரணியம் * போய்ச் சேர்ந்தனர். ஏற்கெனவே இலக்குமண பட்டருடைய பத்தினி எல்லம்மை கர்ப்பவதியாயிருந்தனள். சம்பாரணியம்

* 'சம்பாரணியம்' என்பது நாகப்பூருக்கு அருகில் இராயபுரம் என்னும் பெரிய கிராமத்திற்குக் கிழக்கே ஏறக்குறையப் பதினைந்து மைல் தூரத்தில் உள்ளது. இப்பொழுது இதனைச் 'சம்பாஜர்' என வழங்குகிறார்கள்.

சேர்ந்தபோது எழுமாத கர்ப்பமாயிருந்தது. அந்த மாதத்திலே, அஃதாவது, விக்கிரம சகம் 1535, சாலிவாகன சகம் 1400, கி. பி. 1478, வைசாக மாசம் கிருஷ்ணபக்ஷத்து ஏகாதசி ஆதித்திய வாரத்தில் கர்ப்பம் சிராவமாயிற்று.* கடவுளின் கட்டளை இங்ஙனமாயிற்றென்று சிறிது நேரம் சிந்தித்து எல்லம்மை அந்தக் கர்ப்பசிராவத்தைக் கதலிகுருத்திற் சுருட்டி ஒரு மரப்பொந்தில் பொதுக்கிவிட்டு, அங்கிருந்து கணவருடன் சௌடா நகரத்திற்குப்போப் ஒருநாள் தங்கியிருந்தனள். அதற்குள்ளாக, காசியில் முகலாய மம்மரும் பட்டாணிப் பீடையும் நீங்கி ஜனங்கள் க்ஷேமமாய் இருக்கிறார்களென்னும் செய்தியைக்கேட்டு மறுதினமே தம்பதிகள் திரும்பக் காசி சேர நிச்சயித்தார்கள்.

ஸம்ஸ்காரங்கள்

மறுநாட் காலையில் பிரயாணப்பட்டுச் சம்பாரணி † யத்தின் வழியாக அவர்கள் போய்க்கொண்டிருக்கையில் கர்ப்ப சிராவத்தை மறைதது வைத்திருந்த மரத்தின்கீழ் நாற்பது முழச் சதுரமான அக்கினி குண்டத்தில் ஒரு சிசு விளையாடிக்கொண் டிருப்பதை அவர்கள் கண்டார்கள். அதனைக் காண்டலும் எல்லம்மையின் அம்மத்தில் சுதை சுரந்தது. "இஃது எனது இளவலேயாமாயின் எழுநா எனக்கு வழி விடுக" என்று அவள் நுவல, வன்னிதேவன் வயவை வகுத்து ஒதுங்கினன். அன்னையாகிய எல்லம்மை அந்தச்

---

* சிராவம் = ஒழுகல்.

† சம்பாரணியத்தில் எல்லம்மைக்குக் கர்ப்பசிராவமான இடத்தில் இன்றைக்கும் கர்ப்பிணி ஸ்திரீகளுக்குக் கர்ப்பசிராவம் உண்டாகின்றது. அந்தக் காரணத்தினால் கர்ப்பிணிகள் அவ் வழி செல்வதில்லை.

சிசுவை எடுத்து மார்போடணைத்து மகிழ்ந்தனள். இலக்குமண பட்டருக்குப் பகவான் கனவில் அருளிய தாம்பூலத்தை அரைத்துச் செவ்வெண்ணெய்க்குப் பதிலாகச் சிசுவுக்குப் புகட்டினார்கள்; துளவமணி மாலையைக் கண்டத்தில் தரிப்பித்தார்கள்; வஸ்திரத்தைப் போர்த்தினார்கள். ஜாதகர்ம நாமகரணம் முதலிய ஸம்ஸ்காரங்க ளனைத்தும் சம்பாரணியத்திலேயே நடந்தேறின. ஸ்ரீ கிருஷ்ணாவதார காலத்தில் நந்ததேவனுடைய கிருகத்தில் உற்சவ சம்பிரமங்கள் நிகழ்ந்ததை நேர ஸ்ரீமத் வல்லபாசாரிய மகாப்பிரபுவினுடைய அவதார காலத்திலும் மங்கலச் சடங்குகள் நிகழ்ந்தன. இலக்குமண பட்டர் காசிக்ஷேத்திர மடைந்தனர். ஆந்திர தேசாசாரத்தின்படி எல்லம்மை பாகீரதி நதிக்குப்போய்ச் சிசுவைத் தன் வாமத்தில் வைத்துக்கொண்டு கங்காபூஜை செய்தனள். இந்நாளிலும் ஸ்ரீவல்லபாசாரிய சம்பிரதாயஸ்தர்கள் அவ் வண்ணமே கங்காபூஜை செய்கின்றனர். தன் புத்திரனுக்குச் சகல செம்மலுஞ் சீர்த்தியும் அளித்தருளுமாறு பாகீரதியை எல்லம்மை பிரார்த்தித்தலும், வரநதி பெருக்குற்று அவளுடைய தொடையின்மீது அமர்ந்துள்ள ஸ்ரீ வல்லபாசாரியப் பிரபுவாகிய சிசுவின் பாதங்களைப் பரிசித்தது. அக்காலை நீர் முகத்து ணின்று, 'உனது புத்திரன் உலகப் பிரசித்தனவன்' என்னுமொரு தொனி தோன்றியது.

விரஜ ஸ்தலக் காட்சி

விரஜம் என்று சொல்லப்படுகிற கோகுலம், பிருந்தாவனம் முதலிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போகவேண்டுமென்று எல்லம்மை விருப்பங் கொண்டு தனது பர்த்தாவாகிய இலக்ஷ்மண பட்டருக்குத் தெரிவித்தாள். அதற்கு அவர் குமாரனுக்கு உபநயன ஸம்ஸ்காரமான பின்பு

போகலாமென்று பதில் சொன்னார். விரஜ ஸ்தலங்களின் ஞாபகமாகவே எல்லம்மை உட்கார்ந்து ஒரு நாள் தன் குழந்தைக்கு அமுதூட்டிக்கொண்டிருக்கையில் அந்தக் குழந்தை தாயின் மனோபாவத்தை யறிந்து ஆவலித்தது. எல்லம்மை தரிசிக்க விரும்பிய விரஜப் பிரதேசத்து ஸ்தலங்களை யெல்லாம் ஆவலிப்போடு கூடிய ஸ்ரீ வல்லபருடைய முகாரவிந்தத்தில் அவ் வம்மை தரிசனஞ்செய்து மிக்க ஆச்சரியமும் பிரமையும் அடைந்தனள்.

அற்புத பாஷணம்

பின்பு, ஒருநாள் குழந்தை வாயோயாமல் அழுதுகொண டிருந்தது. என்ன உபாயம் செய்தும் அது சமாதானப்பட வில்லை. சிங்கத்தின் நகம் பொதிந்த தங்கப் பதக்கம் ஒன்றைக் கழுத்தில் கட்டினால் அழுகை ஓயுமென்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். சிங்க நகத்தின் பொருட்டு இலக்குமண பட்டரின் சீடர்கள் அங்கு மிங்கும் அலைந்து திரிகையில் யோகி ஒருவரிடத்து அவர்கள் விரும்பிய வண்ண மமைந்த பதக்கமொன்று இருக்க அவர்கள் கண்டார்கள். அவரை யண்மிச் சீடர்கள் தம் விருத்தாந்தை விளம்பலும் அவர் தம் திருக்கரத்தாலேயே குழந்தைக்கு அந்தச் சிங்க நகப் பதக்கத்தைத் தரிப்பித்துச் சந்தோஷிப்போமென அவர்களுடன் இவர்ந்து அங்ஙனமே செய்தனர். அதுகாறும் மழலையுங்கழறாத மழவு அந்த யோகியோடு வடமொழியில் வல்லுரையாடக்கேட்டு அவணிருந்தா ரனைவரும் மிக ஆச்சரியப் பட்டார்கள்.

உபநயனம்

வல்லபர் மற்றச் சிறுவர்களோடு விளையாடிக்கொண் டிருக்குங் காலத்தில் எல்லா ஆட்டங்களிலும் இவரே முதன்

மையானவராக விவகரிப்பார். இப்படி யிருக்கும் நாளில் இலக்குமண பட்டருக்கு மூன்றாவது குமாரன் பிறந்தான். அந்தச் சிசுவுக்கு இராமகிருஷ்ண பட்டன் எனப் பெயரிட்டார்கள். வல்லபர் தம்முடைய தம்பியினிடத்தில் மிக்க பிரேமையோடு விவகரித்துக்கொண் டிருந்தார். இவருக்கு ஐந்து வயது நிரம்பியது. விக்கிரம சகம் 1540 (கி. பி. 1483) சைத்திர சுத்தம் ஸ்ரீ ராமநவமி, ஆதிவாரத்தில், வல்லபருக்கு வேதோக்த பிரகாரம் உபநயனம் செய்வித்தார்கள்.

கிருஷ்ண தாச மேகனர்

கேசவானந்தர் என்னும் யோகி ஒருவர் சோரோஞ்சி என்னும் வராக க்ஷேத்திரத்தில் இருந்தனர். அவர் வைஷ்ணவ மதத்தை யனுசரித்தவர். அவர் தம் சீடர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு நாள் அவர்களை நோக்கி, 'இப்பொழுது பகவானுடைய மானவாவதாரம் ஏதோ ஓரிடத்தில் உண்டாயிருக்க வேண்டும்' என்று சொற்றனர். அதனைக் கேட்டுக்கொண் டிருந்த கிருஷ்ண தாச மேகனர் என்னும் சீடர் பகவதவதார மானவமூர்த்தியைத் தரிசிக்க வேண்டுமென்று அநேக இடங்களில் சஞ்சரித்துத் தேடிக் கொண்டே ஸ்ரீ வல்லபருடைய உபநயன சமயத்தில் இவருடைய கிருகத்திற்கு வந்து சேர்ந்தார். முன் பின் தெரியாத அந்த பச்சனைப் பார்த்தவுடனே, 'கிருஷ்ண தாச மேகனா! வந்தாயா? வா' என்று வல்லபர் விளைவுடன் வரவேற்றார். இவரே பகவானென்று தெரிந்து கிருஷ்ணதாச மேகனர் இவருக்கு நமஸ்காரஞ் செய்தார். அவர் தம் கையிலணிந்திருந்த மோதிரத்தை உபநயன முகூர்த்தத்திற்குப் பின்பு வல்லபருக்குக் காணிக்கையாகக் கொடுத்தனர். அதனை

வல்லபர் உலகத்தில் விவகரித்துக்கொண் டிருந்த வரையில் அன்புடன் அணிந்துகொண்டிருந்தனர்.

சகுண தாசன்

இலக்குமண பட்டருடைய இல்லத்துக்குச் சமீபத்தில் தாடி என்னும் இழிகுலத்தவனுகிய சகுணதாசன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் ஸ்ரீவல்லபரைச் சாக்ஷாத் பகவானுகப் பாவித்துத் தினந்தோறும் தரிசனஞ் செய்த பின்பே உணவு அருந்துவதென்னும் அரிய விரதம் மேற்கொண்டிருந்தான். அவனுக்குத் தரிசனபளிக்கும் பொருட்டு வல்லபர் அவனுடைய குலத்தின் இழிவைப் பாராட்டாமல் அப்போதைக் கப்போது அவனுடைய குடிலுக்கும் போய் வருவர்.

கல்விப் பயிற்சி

உபநயனமான பிறகு இவர் வேதாத்தியயனம் செய்யத் தொடங்கினர்; மத்துவானந்த சுவாமி என்பவரிடத்தில் வேதங்களையும் சாஸ்திரங்களையும் அப்பியசித்தனர். மிக்க தீவிர புத்தியுள்ளவரானமையின் இவர் சீக்கிர காலத்திலேயே எல்லாச் சாஸ்திரங்களையும் பயின்று தேர்ந்தனர். அந்த மத்துவானந்த சுவாமியினிடத்திலேயே கிருஷ்ண சைதனியரென்னும் கௌராங்கரும் வேதாத்தியயனஞ்செய்து கொண்டிருந்ததனுல் வல்லபரும் அவரும் நண்பர்களாயிருந்தனர். இதுவல்லாமல், நிம்பார்க்க சம்பிரதாயாசாரியராகிய கேசவ காசுமீரஜீ என்பவருக்கும் இவருக்கும் இங்கே இணக்கமுண்டாயிருந்தது. பின்பு, வல்லபர் பாதஞ்சல யோகசாஸ்திரத்தையும், கௌதம நியாய சாஸ்திரத்தையும், காவியங்களையும் வித்தியாவிலாச பட்டாசாரியர் என்பவரிடத்திற்

பயின்றார். இவ்வாறு, சகல சாஸ்திரங்களிலும் தேர்ச்சி வாய்ந்த தநயனைப் பார்த்து இலக்குமண பட்டர் மிகச் சந்தோஷப்பட்டுக்கொண் டிருந்தனர்.

சாஸ்திர வாதம்

வைஷ்ணவ தருமஸ்தாபனத்தில் வல்லபர் அதிக ஊக்கமுடையவரா யிருந்ததனால், எங்குச் சபைகள் கூடின போதிலும் அங்குப்போய் வித்துவான்களோடு சாஸ்திரார்த்த வாதஞ்செய்து அவர்களை இவர் வென்று வந்தார். ஸ்ரீகாசி விசுவநாத சுவாமியின் ஆலயத்தில் அப்போதைக் கப்போது வித்தியா விஷயமான சபைகள்கூடி ஏதாவது ஒன்றைச் சித்தாந்தப் படுத்திக்கொள்வது வழக்கமா யிருந்தது. அவர்கள் செய்யும் சித்தாந்தங்களைக் கண்டித்து வல்லபர் நாள் தோறும் சபாமண்டபத்தின் சுவரில் எழுதி வந்தனர். இவ்வாறு 30-நாள் வரையில் அவர்களுடைய சித்தாந்தங்களைக் கண்டித்து இவர் பிரமிக்கச் செய்தனர்.

வைஷ்ணவ தர்மோற்சாகம்

இலக்குமண பட்டர் தம்முடைய பிரதிக்கினையின்படி காசியில் வசிக்க வேண்டிய பன்னீராண்டுகள் பூர்த்தியான தனால் குடும்பத்தோடு தமது பண்டைக்கிராமத்திற்கு மீண்டனர். கற்றோரைக் கண்டவிடத்துப் புலமையர் முற்போந்து வாயாடல் வழக்கமா தலின், வழியில் தங்கிய ஊர்களி லெல்லாம் பண்டிதர்கள் இலக்குமண பட்டரோடு சாஸ்திர விவாதத்திற்கு வந்தார்கள். பண்டிதர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தந்தையின் உத்தரவுப்படி வல்லபர் தக்க விடைகளளித்து எல்லாரையும் வென்றனர். அப்போது இலக்குமண பட்டர் தம காதலின் கல்விமேம்பாட்டுக்கு மெச்சி, 'உனக்கு

வேண்டிய வரங்களைக் கேள்' என்றனர். அதற்கு வல்லபர், "வைஷ்ணவ தருமத்தை ஸ்தாபிப்பதற்காக யான் எவ்விடத்தில் வாக்குவாதஞ் செய்தபோதிலும் தடை செய்யாதிருத்தல்; அந்த வாக்குவாதங்களில் யான் சத்தியமான வாதஞ் செய்யும்போது அதனை அசத்தியமென்றெண்ணி, இடையில் நிராகரித்து என்னை அவமானப்படுத்தா திருத்தல்" என்னுமிரண்டு வரங்களைத் தந்தருளும்படி தந்தையை வேண்டினர். அப்படியே ஆகட்டுமென்று இலக்குமண பட்டர் இவருக்கு வாக்குக் கொடுத்தனர். பின்பு, மார்க்கத்தில் தீர்த்த யாத்திரை செய்துகொண்டு இரண்டு மாதங்கழித்து இலக்குமண-பாலாஜி க்ஷேத்திரம் என்னும் திருப்பதிக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

பிதுரு கருமம்

விக்கிரம சகம் 1546 சைத்திர சுத்த நவமி (ஸ்ரீராம நவமி) தினத்தில் இலக்குமண பட்டர் ஸ்ரீவேங்கடேசுவர சுவாமிக்கு அலங்காரஞ் செய்துகொண் டிருக்கையில் அ தர்த்தானமாயினர்; அஃதாவது, விஷ்ணுவின் தேஜசோடு ஐக்கிய மாயினர். அப்போது ஸ்ரீ வல்லபருக்குப் பதினொரு வயது பூர்த்தி யாயிற்று. இலக்குமண பட்டர் தரித்துக் கொண்டிருந்த வஸ்திரம் மாத்திரம் மீந்திருந்தது. அந்த வஸ்திரத்திற்கு விதிப்படி வல்லபர் அக்கினியில் ஸம்ஸ்காரம் முதலான கிரியைகளைச் செய்தனர்.

பூப்பிரதக்ஷிணம்

ஓர் ஆண்டிற்குப் பிறகு வல்லபாசாரியர் பூப்பிரதக்ஷிணம் செய்யச் சங்கற்பித்துத் தாயாரையும் சிஷ்யர்களையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டனர். காசியில் கிடைக்காத வைஷ்ணவ தந்திரம், சைவ தந்திரம், கௌமாரில தந்திரம்,

பிரபாகர தந்திரம், மௌங்கலம் முதலான மத தாந்திரிக கிரந்தங்களையும் சைவம், பாசுபதம், காலாமுகம், அகோரம் என்னும் நான்கு சைவ சம்பிரதாயக் கிரந்தங்களையும், விஷ்ணு சுவாமியின் சம்பிரதாயத்தை யனுசரித்த நான்கு கிரந்தங்களையும், இராமாநுஜ மதக் கிரந்தங்களையும் ஆய்ந்தறிய வெண்ணி இவர் காசுமீரத்திலுள்ள ஸரஸ்வதீ பண்டாரத்திற்குப் போயினர். அங்கே மேற்சொல்லிய நூல்களையெல்லாம் பரிசீலனை செய்தது மன்றி வேதத்தின் 36 - சாகைகளையும் சங்கிதைகளையும் பிராம்மணம் முதலானவைகளையும் முகபாடமாக இவர் நெட்டுருப் போட்டனர். அங்கிருந்து புறப்பட்டு ஹேமாசலம் கோவா முதலான பிரதேசங்களின் வழியாக இவர் சோடா என்னும் நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். சோடா ராஜன் இவரை வரவேற்று, மிக்க மரியாதையுடன் உபசரித்து, இவருக்கு ஒரு பல்லக்கையும் இரண்டு ஆட்களையும் கொடுத்தனன்.

கிருஷ்ண தேவராயன்

அந்தச் சிவிகையில் ஆரோகணித்து வல்லபர் அவ்வழியே ஊர்ந்து வித்தியா நகரமென்னும் விஜய நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கே கிருஷ்ண தேவராயன் என்னும் பூபதி கல்வியையும் கவிஞரையும கௌரவிக்கும் வள்ளலாக விளங்கிக்கொண் டிருந்தான். அந்த ஸம்ஸ்தானத்தில் இவருடைய மாமன் "வித்தியா பூஷணம்" என்னும் பட்டம் வாய்ந்து தானதிகாரியா யிருந்தான். தம் தாயாரை மாதுலர்மனையில் விட்டுத் தாம் தேச சஞ்சாரஞ் செய்யலாமென்று எண்ணியே வல்லபர் அவணடைந்தவ ராவர். இவருடைய வருகையை அறிந்து மாமன் சந்தோஷித்து இவரை மிக உபசரித்தான்.

பிற்றை நாள் வல்லபாசாரியர் கிருஷ்ண தேவராயனுடைய சபைக்கு எழுந்தருள, அரசன் இவரைத் தக்கவாறு கௌரவித்துச் சத்கரித்தனன். இவர் சாஸ்திரார்த்தஞ் செய்ததைக் கேட்டு அங்கிருந்த பண்டிதர்க ளெல்லாரும் வியந்து, விஷ்ணு சுவாமியின் பீடமாகிய "சர்வோபரி சிங்காதன"த்தில் இவரை எழுந்தருளுவித்தார்கள். பற்பல பிறமதத்தவர்களையும் இளம்பிராயத்தவராகிய இவர் சாஸ்திர வாதத்தில் வென்று விளங்கக் கிருஷ்ண தேவராயன் இவருக்குச் சேவகனாயினன்.

வைஷ்ணவ சம்பிரதாய வரலாறு

ஆதியில் இவ் வைஷ்ணவ சம்பிரதாயம் புருஷோத்தமரால் ஏற்படுத்தப்பட்டது. அவர் இதனை உருத்திருக்கு உபதேசித்தார். பின்பு, உருத்திரமூர்த்தி நாரதருக்கும், நாரதர் வியாசருக்கும், வியாசர் சுகருக்கும், சுகர் விஷ்ணு சுவாமி என்பவருக்கும் இதனை உபதேசித்தருளினார்கள். இவ் வரலாறு வல்லப வைஷ்ணவ சம்பிரதாயிகளின் குரு பரம்பரைக் கவியிற் கூறப்பட்டுள்ளது.

ஆதௌ ஸ்ரீபுருஷோத்தமம் புரஹரம் ஸ்ரீநாரதாக்கியம் முனிம்
கிருஷ்ணவியாசகுரும் சுகம்ததனு விஷ்ணுஸ்வாமினம் திராவிடம்
தச் சிஷ்யம் கில பில்வமங்கள மஹம் வந்தே மஹாயோகினம்
ஸ்ரீமத் வல்லப நாமதாமச பஜே அஸ்மத் ஸம்ப்ரதாயாதிபம்.

விஷ்ணுசுவாமிகள்

விஷ்ணுசுவாமி என்பவர் விக்கிரம சகத்திற்கு 600 ஆண்டுகளுக்கு முன் திராவிட தேசத்திற் பிறந்தவர். இவர் வெகு சீக்கிர காலத்திற் கல்வி பயின்று கலைகளனைத்தினையும் கலக்கமறக் கற்றுத் தேர்ந்து, ஒரு மண்டலாதிபதியினிடம் அமைச்சரா யமர்ந்து அலுவல் பார்த்து வந்தனர்.

அவ் வரையன் வியலும், விஷ்ணுசுவாமி இனி நரசேவை செய்யலாகாதென வோர்ந்தவராய் விஷ்ணுசேவையில் வாணுள் கடத்த விரதம் பூண்டனர். ஈது இங்ஙனம் நிகழ்ந்துழி இவருடைய இருக்கைக்கு ஸ்ரீ சுகதேவர் எழுந்தருளி, "விஷ்ணு பக்தி என்பது பகவானைப் பூஜித்துப் பகவத் பிரசாதத்தைப் பாரணஞ் செய்தல் *" எனப் பணித்துப் போயினர். அந் நாள்தொட்டு விஷ்ணுசுவாமி பகவானைத் தியானிக்கத் தொடங்கி, அவருக்கு அமிழ்து செய்வித்த பின்னரே பிரசாதம் புசிப்ப தெனச் சங்கற்பித்து ஊண் ஒறுத்து ஒரு நிலையில் நின்றனர். இன்னணம் இவர் எழு தினங்கள் அன்னபானுதிகளை அருந்தாதிருக்கப் பகவான் இவருக்கு பிரத்தியக்ஷராயினர். அவரைத் தரிசித்து ஷோடசோபசாரங்களைச்† சமர்ப்பித்து விஷ்ணுசுவாமி பகவத் பிரசாதத்தை யுட் கொண்டனர். அப்போது, விஷ்ணுசுவாமியை நோக்கிப்

பகவான் — இனி எமது சுவரூப விக்கிரகத்தை நிர்மித்துச் சேவித்துப் பிரசாதத்தை எற்றுண்டிரும்.

விஷ்ணுசுவாமி — சுவாமி! விக்கிரகத்தைப் பூஜிக்குமாறு குரு எனக்கு கற்பனை யருளவில்லையே.

பகவான் — உமது குருபக்திக்கு மெச்சினேன். யாமே தினந்தோறும் நுமக்குத் தரிசனம் தந்தருள்வேம்

என்று திருவாய் மலர்ந்தருளித் திருவுருக் கரந்தனர். விஷ்ணு

---

* பாரணஞ் செய்தல் = உண்டல்.

† ஷோடசோபசாரங்கள் = 1. தவிசளித்தல், 2. கைகழு நீர் தரல், 3. கால்கழு நீர் தரல், 4. முக்குடி நீர் தரல், 5. நீராட்டல், 6. ஆடை சாத்தல், 7. முப்புரிநூல் தரல், 8. தேய்வை பூசல், 9. மலர் சாத்தல், 10. மஞ்சளரிசி தூவல், 11. நறும்புகை காட்டல், 12. விளக்கிடல், 13. கருப்பூரமேற்றல், 14. அமுத மேந்தல், 15. அடைகாய் தரல், 16. மந்திர மலரா னருச்சித்தல்.

சுவாமி பரமபத மேகுந் தருணத்தில் தம் இனத்தவரை விளித்து விஷ்ணுப் பிரதிமாராதனம் பண்ணிக்கொண்டிருக்கும்படி புகன்றருளினர். சின்னாள் செல்லலும் இவ் வைஷ்ணவ மதம் சூனியமாயிற்று. விஷ்ணுசுவாமியின் சிஷ்யரான வில்வமங்கள மகாயோகீசுவர ரொருவர் இவ் வைஷ்ணவ சம்பிரதாயம் வழங்காதொழிந்ததை யெண்ணி வருந்திக்கொண்டிருக்க ஸ்ரீமத் வல்லபாசாரியர் சதசோமயாகப் பயனாகத் திருவவதாரஞ் செய்தருளினர்.

வில்வமங்களர்

கிருஷ்ணதேவராயனது போஷணையில் ஸ்ரீ வல்லபர் பொலிவுற்றிருக்கும் நாளில், ஓரிரவு இவருடைய கனவில் பகவான் தோன்றி, "விஷ்ணுசுவாமியின் சம்பிரதாயத்தை ஸ்தாபிப்பதற்காக உனக்குக் கட்டளையிட்டிருக்கிறோம். இந்த விஷயத்தை வாயு ரூபத்தோ டிருக்கும் வில்வமங்களர் என்பவர் உனக்கு உபதேசிப்பார். அந்தப் பிரகாரம் நீ நடந்துகொள்வாயாக" என்று கட்டளையிட் டருளினர். உதயத்தில் வில்வமங்களர் வல்லபாசாரிய ரண்டை எழுந்தருளி, விஷ்ணுசுவாமிகள் தம்மிடத்தில் ஒப்புவித்துப்போன பத்திரத்தைக் கொடுத்து, வைஷ்ணவ சம்பிரதாயத்தை நிலைநாட்டுவதற்கான வழி வகைகளையும் தெரிவித்தனர். சிறிது காலம் வித்தியா நகரத்திலேயே தங்கி யிருந்து ஆசாரியர் சத்விஷயமான உபந்நியாசங்களைச் செய்துகொண்டிருந்தார். அதுமுதல் ஸ்ரீவித்தியா நகரத்து அரசனும, கிருஷ்ணகடையின் அரசனும், நவாநகரத்து அரசனும் வல்லபாசாரிய சம்பிரதாயத்தை அனுஷ்டிக்கலானார்கள். ஆசாரியர் வித்தியா நகரததரசன் தமககுச் சமர்ப்பித்த பாதகாணிக்கையி லிருந்து ஏழு மோகராக்களை எடுத்துக் காற்சிலம்பு செய்து ஸ்ரீ கோவர்த்தன நாதஜீ

சுவாமிக்குச் சமர்ப்பித்தனர். அந்த அருஞ் சிலம்பைக் கோவர்த்தனத்தில் இன்றைக்குங் காணலாம்.

புண்டரீக க்ஷேத்திரம்

விக்கிரம சகம் 1548-வைசாக பகுள துவிதீயை உரோகிணி நக்ஷத்திரத்தில் ஆசாரியர் தம் தாயாரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு வைஷ்ணவ சம்பிரதாயத்தை உத்தரிக்கும் பொருட்டு பூப்பிரதக்ஷிணம் பண்ணப் புறப்பட்டார். அப்பொழுது இவருக்கு வயது பதின்மூன்று. தாமோதரதாஸ் ஹரஸானி, கிருஷ்ணதாஸ் மேகனர் என்னும் இரண்டு சிஷ்யர்களுடன் இவர் புண்டரீக புரத்திற்கு (பண்டராபூருக்கு)ப் போய்ச் சேர்ந்தார். அங்கே புண்டரீகன் என்னு மொருபக்தன் விரஜபூமியைத் தரிசிக்க விரும்பி விட்டலநாத சுவாமியைப் பிரார்த்திக்க, அவனை ஆசாரியர் அந்த இடத்திலேயே கண்ணை மூடித் திறக்கச் சொல்லி அவனுக்குக் கோகுலம் பிருந்தாவனம் முதலான கிருஷ்ணலீலா ஸ்தலங்களையும் ஸமஸ்த தீர்த்தங்களையுந் தரிசனம் செய்வித்தனர். ஆசாரியர் புண்டரீக க்ஷேத்திரத்து விசிராந்தி கட்டத்தில் ஏழுநாள் பாகவத பாராயணஞ் செய்தனர். இவருடைய 'பேடக்' இன்றைக்கும் அங்கே இருக்கின்றது. 'பேடக்' என்பது விசிராந்தி ஸ்தானம். இப்படிப்பட்ட 'பேடக்கு'கள் பரதகண்டத்துப் புண்ணிய க்ஷேத்திரங்களி லெல்லாம் இருக்கின்றன. இந்த விசிராந்தி ஸ்தானங்களை வல்லபமத சம்பிரதாயஸ்தர்கள் பரிசுத்த ஸ்தலங்களெனப் பாராட்டிப் போற்றுகின்றார்கள். இவை காசி, இராமேசுவரம், காஞ்சி, ஜனார்த்தனம், ஹரிதுவாரம், கோவர்த்தனம் முதலாயுள்ள அநேக திவ்விய ஸ்தலங்களில் இருக்கின்றன.

விரஜபூமிப் பிரதக்ஷிணம்

பின்பு, ஆசாரியர் நாசிகா, திரியம்பகம், உஜ்ஜயினி, புஷ்கர க்ஷேத்திரம், கோகுலம், மதுராபுரி முதலான அநேக ஸ்தலங்களுக்குத் திக்குவிஜயஞ் செய்து அங்கங்கே 'பேடக்' குகளை ஏற்படுத்தினர். அங்கிருந்து இவர் விரஜபூமியைப் பிரதக்ஷிணம் செய்யப் புறப்பட்டனர். விரஜபூமி என்பது 84-கோசு விஸ்தீர்ணமுள்ள க்ஷேத்திரம்; அஃதாவது, 128-மைல் விசாலமுள்ளது. கிருஷ்ணமூர்த்தி லீலைகள் செய்து சஞ்சரித்த ஸ்தலத்திற்கு விரஜபூமி யென்று பெயர். அந்தப் பிரதேசததிலுள்ள பற்பல க்ஷேத்திரங்களையுந் தரி சித்து ஆசாரியர் திருபபி மதுராபுரிக்கு வந்து சேர்ந்தனர். அங்கிருந்து பிருந்தாவனத்துக்குப் போய்ச் சின்னாள் அவண் தங்கியிருந்து பாராயணம் செய்து பீடம் ஏற்படுத்தினர். பின்பு, கோகுலத்துக்குப் போய்ச் சாதுர்மாசியம் வரைக்கும் இருந்தனர். சாதுர்மாசிய மென்பது நானகு மாதத்திற் கொருமுறை செய்யும் யஞ்ஞம. அது கார்த்திகை பங்குனி ஆடி மாதங்களின் துவக்கத்தில் செய்யப்படுவது. அவ் விடத்தில் ஒரு நாள் ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஆசாரியருக்குக் கனவில் காட்சியளித்து, ஜனங்கள் முக்தியடைவதற்கு இவர் செய்யத்தக்க காரியம் இனனதென்று குறிப்பிட் டருளினர்.

அயோத்தி சேவை

அங்கிருந்து ஆசாரியர் அயோத்திக் கெழுந்தருளி ஸ்ரீராம மூர்த்தியைச் சேவித்தனர். அந்த க்ஷேததிரத்தில் கௌடப் பிராமணர்களும் சர்வாரி பிராமணர்களும் முரண்பட்டுக் கிருஷ்ண பரமாத்மாவே சிரேஷ்ட மென்று ஒரு திறத்தார் சாதிக்க, மற்ருெரு திறத்தார் ஸ்ரீராமசநதிர பரப்பிரமமமே சிரேஷ்ட மெனறு வாதித்துக்கொண் டிருந்தார்கள். கிருஷ்ண

பரமாத்மாவும் இராமசந்திர மூர்த்தியும் சமமேயென்று ஸ்ரீ வல்லபாசாரியர் அவர்களுக்குத் தெளிவுறச்சாற்றிச் சமாதானப் படுத்தினர்.

காசி க்ஷேத்திரம்

அங்கிருந்து நைமிசாரணியம், கோமதி க்ஷேத்திரம், சக்கர புஷ்கரம முதலான திவ்விய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, அங்கங்கே சாஸ்திரார்த்தங்களும் உபந்நியாசங்களுஞ்செய்து அநேகரைச் சீடர்களாக்கிக்கொண்டு ஸ்ரீ வல்லபாசாரியர் காசி நகருக்குப் போய்ச் சேர்ந்தனர். அவ்விடத்தில் நகரச் சிரேஷ்டனான புருஷோத்தமதாஸ் என்பவன் இவருக்குப் பிரதான சிஷ்யனாயினன். அவனுக்காக இவர் கங்கையில் மூழ்கி யொரு விக்கிரகத்தை யெடுததுக் கொடுத்து, அதனைச் சேவித்துக்கொண் டிருக்கும்படி கட்டளையிட்டனர். இப்பொழுது அந்த விக்கிரகததை இராஜபுதனத்திலுள்ள ஜோத்பூரில் தரிசிக்கலாம்.

ஜகந்நாதம்

காசியிலிருந்து கயைக்குப் போய், அங்கிருந்து ஆசாரியர் ஜகந்நாத க்ஷேத்திரத்திற்கு எழுந்தருளினர். இவரைப் பார்த்து அவ் வூரரசன் நான்கு கேள்விகள் கேட்டான். அவைகளுக்குத தாமே விடையளிக்காமல் ஆசாரியர் ஸ்ரீ ஜகந்நாதசுவாமியிட மிருந்தே விடைபெறும் பொருட்டு, எழுதுவதற்கான சாமக்கிரிகளைச் சுவாமியின் பாதசதில் வைப்பித்துக் கர்ப்பக்கிருகத்தின் கதவுகளைப் பூட்டுவித்தனர். மறுநாள் உதயத்தில் கதவைத்திறநது பார்க்கையில், 1. ஸ்ரீ பகவத்கீதையே முக்கிய சாஸ்திரம், 2. ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியே முக்கியமான தெய்வம், 3. ஸ்ரீ கிருஷ்ண நாமமே முக்கிய மந்திரம், 4. ஸ்ரீ கிருஷ்ணசுவாமியின் சேவையே முக்கிய

கருமம் என்று காகிதத்தில் எழுதப்பட் டிருந்தது. இந்த விடைகளை எல்லாரும் பார்த்து ஆனந்தித்து அங்கீகரித் தார்கள்.

தக்ஷிணத்து ஸ்தலங்கள்

ஜகந்நாதத்தில் அநேக சாஸ்திரங்களைப் பாராயணஞ் செய்து ஆசாரியர் சாக்ஷி-கோபால சுவாமியைத் தரிசனஞ் செய்துகொண்டு, திருப்பதியில் ஒருமாசம் தங்கி யிருந்து, ஸ்ரீ காஞ்சி நகரத்திற்குப்போய் ஏழுநாள் நிவசித்தனர். அப் போது, துளசிமணிமாலை ஜபகாலத்தில் மாத்திரமே தரிக்கத் தகும் என்று இராமாநுஜமதஸ்தர்கள் சொல்லியதன்மீது ஆசாரியர் சாஸ்திரார்த்தஞ்செய்து, வைஷ்ணவனாயிருப்பவன் எப்பொழுதும் துளசிமாலையைத் தரிக்கவேண்டுமென்று நற் பிரமாணங்களோடு நாட்டிப் போந்தனர்; சிவகாஞ்சியில் சிவ தரிசனஞ்செய்து, அங்குள்ள பண்டிதர்களோடு சாஸ்திரார்த் தஞ்செய்து அவர்களை வென்றனர். பின்பு, இவர் ஸ்ரீரங்கம், நரஸிம்மம், பத்மநாபம் (அனந்தசயனம்), ஜனார்த்தனம் முத லான திவ்விய ஸ்தல யாத்திரைசெய்து இராமேசுவரம் சேர்ந் தனர். அங்கே இவர் காபாலி மதத்தினரைச் சாஸ்திர விவாதத்தில் வென்று, துவாரகைக்குப் பிரயாணப்பட்டனர்.

துவாரகை

வழியில் பரூச்சியில் பாராயணம் செய்து இவர் 'பேடக்' ஏற்படுத்தினர்; அந்தப் பிரதேசத்தில் அநேக தீர்த்த யாத் திரைகள் செய்து, பலப் பல இடங்களில் பாராயணம் செய் தனர். அந்தப் பேடக்குகள் இன்றைக்கும மிகப் பிரசித்தமா யிருக்கின்றன.

அந்தக் காலத்தில் துவாரகேசராகிய இரணசோடஜீ சுவாமியானவர் ஜகத்தேரா என்னும் மாளிகையில் விராஜ மானரா யிருந்தார். ஆசாரியர் அவ் விடத்தில் சுவாமியைத் தரிசனஞ் செய்துகொண்டனர். அங்கு அர்ச்சகச் சிரேஷ்ட னுயிருந்த கோவிந்த தவே என்னும் பிரம்மசாரிப் பிராம் மணன் இவருடைய பாராயணங்களைச் சிரவணஞ் செய்து பரவசனாகித் தன் ஆயுள் முழுதும் இவருடனே இருக் கத் தீர்மானித்தான். அந்தப் பிரதேசத்தில் பிரபலமா யிருந்த இராணுவியாஸ் என்னும் இராமாநுஜ சம்பிரதாயஸ் தனும் இவருடைய பாராயணங்களைக் கேட்டு இவரிடத்து மிக்க பக்தி செலுத்திக்கொண் டிருந்தான். ஆசாரியர் அந் நாட்டிலுள்ள பிரபல பண்டிதர்களுடன் சாஸ்திர வாதஞ் செய்து அந்நியமதத்தவர்க ளெல்லாரையும் வென்றுகொண் டிருந்தனர். பின்பு, பேட் என்னும் ஸ்தலத்திற்குப்போய், இவர் சங்கதலாய் (சங்கசயனம) என்னும் இடத்தில் தம் முடைய பேடக்கை ஸ்தாபித்தனர். பேட் என்பது ஒரு தீவு. அது பூர்வத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் பரிபாலித்து வந்த துவாரகாபுரம் என்பார்கள். அஃது இப்பொழுது சமுத் திரத்தில் மூழ்கிப் போய்விட்டதாயினும், அதனிற் சிறிது பாகம கண்ணுக்குத் தெரிகின்றது.

ஸ்ரீவியாச தரிசனம்

ஸ்ரீ வல்லபாசாரியர் குருக்ஷேத்திரத்திற்குப் போயிருந்த போது, புராணங்களுள் ஸ்ரீமத் பாகவதபுராணமே சிரேஷ்ட தமமான தென்று சாஸ்திரார்த்தஞ் செய்து சித்தாந்தப் படுத்தினர். அங்கே ஸரஸ்வதி நதியின் பிரவாகத்தினல் உண்டாயிருந்த மணல்மேட்டில் அகப்பட்ட ஸ்ரீமதன மோகன மூர்த்தி விக்கிரகத்தை இவர் எடுத்து க்ஷத்திரி

பிரபுதாஸ் ஜலோட்டா என்பவருக்குக் கொடுத்து, அதனை ஆராதிக்கும்படி கட்டளையிட்டனர். வேதவியாச மூர்த்தியின் தரிசனஞ் செய்து சகல சாஸ்திரங்களிலும் மிகச் சமர்த்தராயிருந்த இராமாநந்தி என்னும் பண்டிதர் அவ்விடத்தில் ஆசாரியருக்குச் சிஷ்யரானார். அங்கிருந்து ஆசாரியர் பதரிகாசிரமத்திற்குப் போய்க் கேதாரேசுவர தரிசனஞ் செய்து, அலகநந்தா தீர்த்தத்தில் நீராடி, சிஷ்யர்களை விட்டுத் தனியே குகைக்குள் பிரவேசித்து ஸ்ரீவேதவியாசரைத் தரிசித்து மீண்டனர்.

அடேல் க்ஷேத்திரம்

திரும்பும் மார்க்கத்தில் இவர் மணிகர்ணி திரிலோகநாதம் என்னுமிடத்தில் ஸ்ரீ கிருஷ்ண சைதன்னியரைச் சந்தித்துச் சம்பாஷித்தனர். பின்பு, கிஷ்கிந்தா (வித்தியா நகரம், விஜயநகரம், ஆனகொந்தி எனப்படும்) நகரத்திற்குப் போய்த் தாயாரை அழைத்துக்கொண்டு அடேல் என்னும் க்ஷேத்திரத்தை யடைந்தனர். அங்கே ஆலயமொன்றை நிர்மித்து, அதனருகில் கிணறு வெட்ட, அதனில் உவர் நீர் தோன்றியது. அதன்மீது ஆசாரியர் அபிமந்திரித்த ஜலத்தைப் புரோக்ஷித்தனர். அந்தக் கிணற்றில் இவர் புரோக்ஷித்த ஜலம் விழுந்த இடத்து நீர் இனிமையாகவும், மற்றப் பாகத்திலுள்ள நீர் உவராகவும் இன்றைக்கும் அதிசயக் காட்சியா யிருக்கின்றது.

காசியில் விவாகம்

இரண்டாம் முறை பூப்பிரதக்ஷிணம் செய்யத் தொடங்கி ஆசாரியர் கோவர்த்தனகிரியில் ஸ்ரீ நாதஜீ சுவாமியைத் தரிசித்து, அங்கே ஓர் ஆலய மமைத்தனர். பண்டராபுரத்திற்கு வந்த விட்டலநாத சுவாமியைத் தரிசிக்கையில், "நாம்

உங்கள் வீட்டில் அவதரிக்கப் போகிறோ மாதலால் நீர் விவாகஞ் செய்துகொள்ள வேண்டும்'' என்று ஆசாரியருக்குச் சுவாமி அனுஞ்ஞை யருளி, அதன் நிமித்தமாகக் காசிக்குப் போகக் கட்டளை யிட்டனர். அவ் வண்ணமே ஆசாரியர் காசிக்குப் போக, அங்கே மதுமங்களன் என்னும பிராம்மணன் தனது குமாரியாகிய மகாலக்ஷ்மி என்பவளைப் பலவந்தமாக இவருக்குக் கன்னிகாதனஞ் செய்து கொடுத்தான். ஆசாரியர் ஆறாண்டுக் கொருமுறையாக மூன்று முறை பூப்பிரதக்ஷிணம் செய்தனர். 12-ஆவது வயது முதல் 30-ஆவது வயது வரையில் இவ்வாறு சஞ்சரித்து இவர் விஷ்ணு சுவாமியின் சம்பிரதாயத்தைப் பிரகடனஞ்செய்தனர் ; பின்பு 21-ஆண்டளவும் பூமியின்மீது இருந்தனர். அந்தக் காலத்தில் அடேல், சர்நாட், காசி, விரஜபூமி முதலான ஸ்தலங்களில் சிலநாள் நிவசித்தனர். இவருக்கு கி. பி. 1511-ஆம் ஆண்டில் கோபிநாதர், 1516-ஆம் ஆண்டில் விட்டலநாதர் என்னும் இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். இவர்களின் சந்ததியார் இன்றும் உளர். இவர்கள் மற்ற ஆசாரிய பீடத்தவர்களைப் போலல்லாது கிருகஸ்தாசிரமத்தவர்கள்.

பிருந்தாவன ஆலயம்

இரண்டாம் பூப்பிரதக்ஷிணத்தில் இவர் கோவர்த்தனத்தில் ஸ்ரீநாதஜீயின் ஆலயத்தை அமைத்ததாகச் சொன்னோமல்லவா? கி. பி. 1520-ஆம் ஆண்டில் இவர் பிருந்தாவனத்திற்கு எழுந்தருள, இவருக்கு ஸ்ரீபகவான் பிரத்தியக்ஷராகித் தமக்கு ஓர் ஆலய மமைத்துத் தம்மைப் பாலகிருஷ்ணராகவும் பாலகோபாலராகவும் வழிபட்டு வரக் கட்டளையிட்டருளினர். இவ் வாக்கினைப்படி இவர் அமைத்த ஆலயம் இப்போது இவருடைய சந்ததியாரால் பரிபாலிக்கப்படுகின்றது.

துறவும் மறைவும்

காசி க்ஷேத்திரத்தில் நிவசிக்கையில் இவர் பகவத் கீதைக்குச் 'சுபோதினி' என்னும் வியாக்கியானமாதியாக 18-நூல்களை இயற்றினார். விக்கிரமசகம் 1587 (கி.பி.1530) வைசாகபகுள தசமி தினத்தில் புறப்பட்டுப் பிரயாகைக்குப் போய் இவர் விதிப்படி சந்நியாசம் மேற்கொண்டார். பின்பு, ஒருநாள் காசியில் அநுமந்த கட்டத்தில் சந்தியா வந்தனஞ் செய்யப்போயிருக்கையில் இவர் கங்கா ஜலத்தின்மீது நடந்து சென்று பதுமாசனத்தில் அமர்ந்து அந்தர்த்தானமாயினர்.

வைஷ்ணவ மகாராஜா

இவருக்கு 48-சீடர்கள் இருந்தார்கள். இவருடைய இரண்டாங் குமாரராகிய விட்டலநாதர் இவருக்குப்பின் ஆசாரிய பட்டம் பெற்றார். இவர் கோகுல — பிருந்தா வனத்தில் இருந்தவர். கோகுலத்திலிருந்து பிருந்தாவனம் ஆறு மைல் தூரத்திலுள்ளது. இவை தனித்தனியே வடமதுரைக்கு ஆறு மைல் தூரத்திலுள்ளன. எனவே, வடமதுரை, கோகுலம், பிருந்தாவனம் என்னும் மூன்றும் சேர்ந்து முக்கோண வடிவமாக இருக்கின்றன. இவை இடையர்களின் உறைவிடமாம். ஆயர்பாடியானது வடமொழியில் 'கோஷ' (Ghosha) எனப்படும். ஆயர்பாடிகளுக்கும் ஆயர்களுக்கும் அதிபதியான ஸ்ரீகிருஷ்ணனுடைய பிரதிநிதியாக அங்கே விளங்கிய வல்லபாசாரியர் 'கோஷாஜி' எனப்பட்டார். இந்தப் பட்டப் பெயரே 'கோஷாயி' எனவும் 'கோசாயி' எனவும் மருவியதென்னலாம். மும்பாய் (பம்பாய்), குச்சி, காத்தியாவாடை, மாளவம் முதலான இடங்களிலுள்ள பிரபலமான வணிகர்கள் (Banya)

இந்த மதத்தைத் தழுவ, இந்த மதாசாரியர் 'வைஷ்ணவமகா ராஜர்,' 'பிரபுஜி' என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றார்.

நூல்கள்

ஸ்ரீமத் வல்லபாசாரியருடைய வைஷ்ணவ சம்பிரதாயத்தை யனுஷ்டிப்பவர்கள் பெரும்பாலும் குஜராத்தியர். இவர் அருளிச்செய்த அநேக நூல்களுள் சிலவற்றின் பெயர்கள் வருமாறு :— 1. வியாச சூத்திரங்களுக்கு அணுபாஷியம், 2. வியாச சூத்திரங்களுக்கு பிருகத் பாஷியம், 3. பூர்வமீமாம்சா காரிகை, 4. பூர்வமீமாம்சா பாஷியம், 5. சித்தாந்த முக்தாவளி, 6. சித்தாந்த ரகசியம், 7. அந்தஃகரண பிரபோதம், 8. சந்நியாச நிர்ணயம், 9. சந்நியாச விதி, 10. காயத்திரீ பாஷியம், 11. சுதரிசனம், 12. தத்துவார்த்த தீபம், 13. சுபோதினி, 14. சித்தப்பிரபோதம்.

வல்லபமத சித்தாந்தம்

இந்த மத சம்பிரதாயத்தவர்கள் கோபிகா வேஷந் தரித்துக் கிருஷ்ண மூர்த்தியைப் பூஜிப்பார்கள். மதாசாரியரை ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவின் பிரதிநிதியாகப் பாவித்து விவகரிப்பார்கள் ; குருபாததீர்த்தத்தை அமிருதமெனக் கருதிச் சேவிப்பார்கள் ; குரு வாயிற்போட்டு மென்ற தம்பலத்தைப் பிரசாதமாக ஏற்பார்கள். இம் மதகுரு இல்லறத்திலே இருப்பார்.

ஒரு சிராவண சுக்கில பக்ஷ ஏகாதசி தினத்தில் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி இம் மதாசாரியருக்குப் பிரத்தியக்ஷராகி மத சித்தாந்த இரகசியத்தைப் போதித்தருளினார். அவ்விரகசியம் — தேகம், தனம், மனம் (உடல், பொருள்,

ஆவி) என்னும் இம் மூன்றையும் ஸ்ரீபகவானுக்குச் சமர்ப்பிப்பதனுல் பிரம்மசம்பந்தமென்னும் ஜீவனும் ஆத்மாவும் ஒன்றிக்கும். அதனுல், ஆகாமி சஞ்சித பிராரப்த கர்மங்களும்* சகல பாவங்களும் நாசமெய்தும் என்பதாம்.

பகவானுகிய கிருஷ்ணன் சத்து (ஸ்திதி), சித்து (ஞானம்), ஆனந்தம் என்னும் மூன்றுவிதமானவர். பதார்த்தம் என்பது சத்தின் பாகம், ஆக்மா என்பது சித்தின் பாகம். ஆத்மாக்கள் அநேகம் உண்டு. கிருஷ்ணனுடைய ஆக்கிணையினுல் ஆத்மாவானது சரீரத்திற் புகுந்து தனது நிஜமான ஞானத்தை மறந்து போகின்றது. ஆயினும், கிருஷ்ண பரமாத்மாவின் தயையினுல் திரும்பவும் அது தன் ஞானத்தை யடைந்து அவருடன் வசிப்பதற்காக அவருடைய சந்நிதானத்திற்கு (கோலோகத்திற்குப்) போய், நிததியபதவியை யடையும். கிருஷ்ணனுடைய கிருபையைப் படைப்பதற்கும், அவருடைய பதத்தை யடைவதற்கும் பக்தியே முக்கிய காரணமாகும். அந்த பக்தியில் சாந்தம்,

---

* ஆகாமி = இனிவரத்தக்க, arriving, impending, future. சஞ்சிதம் = ஈட்டியது, செய்தவினைத்தொகுதி, heap, accumulation. பிராரப்தம் = அனுபவிக்குங் கர்மம், ஊழ், that which has been commenced or begun. முற்பிறப்புக்களிற் செய்த வினைகளின் தொகுதி 'சஞ்சிதம்.' அத் தொகுதியினுள் பயன் தரும் பக்குவமெய்தி, இப் பிறப்பின் அனுபவத்திற்குக் காரணமாயிருக்கும் பகுதி 'பிராரப்தம்'; இப்பிறப்பிற் செய்யப்பட்டு இனி யொருகால் பயன்தரும் பொருட்டுச் சஞ்சிதத்தோடு போய்ச் சேரத்தக்க வினைகள் 'ஆகாமி'. உதாரணமாக, — களஞ்சியத்தில் சேர்கட்டி வைத்திருக்கும் தானியராசி 'சஞ்சிதம்.' அதனின்று இவ் வாண்டில் புசிப்பதற்காக எடுத்து வீட்டிலுள்ள குதிரில் கொட்டி வைக்கும் தானியம் 'பிராரப்தம்;' இவ் வாண்டிற் பயிர்செய்து களஞ்சியத்திற் சேர்ப்பதற்காக விதைக்கும் விதைநெல் 'ஆகாமி.'

தாசியம், சக்கியம், மாதுரியம் என்னும் நான்கு கிரமங்கள் உண்டு; ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் கோபிகைகளுக்கு இருக்கத் தக்க பாவத்தை (எண்ணத்தை) யுடையவர்களாகப் பக்தர்கள் இருக்க வேண்டும். இவர்கள் சிறு பிராயத்திலேயே துளசிமணி மாலையைக் கழுத்தி லணிந்து, "ஸ்ரீ கிருஷ்ண சரணம் மம" என்னும் அஷ்டாக்ஷர மந்திரோபதேசம் பெறுவார்கள்.

துறவறம் மேற்கொள்வது, உபவாசமிருப்பது (பட்டினி), அகங்காரத்தை யடக்குவது, இந்திரியங்களை யொறுத்து வசப்படுத்திக்கொள்வது முதலான காரியங்கள் அவசியமானவையல்ல; உலகத்தில் யோக்கியமான வஸ்துக்களெல்லாம் அனுபவிப்பதற்காக ஏற்பட்டனவே என்பது இந்த மதத்தினரின் கொள்கையாம். இவர்கள் குருபக்தியே பெரியதெனவும் முக்கியமெனவும் பாராட்டுவார்கள். இம் மதத்தைப் "புஷ்டி மார்க்கம்" எனவும், "சுத்தாத்துவைதம்" எனவும் சொல்வார்கள். இவர்களுடைய சம்பிரதாய நூல்கள் மூன்று கூறுகப் பகுக்கப்பட் டிருக்கின்றன.

வல்லபமத பேதம்

கி. பி. 1780-ஆம் ஆண்டில் சுவாமி நாராயணர் என்பவர் அயோத்திமாநகருக்கு அருகிலுள்ள சபாநகரத்தில் கிருஷ்ணுவதாரமாக ஜன்மித்து, சகல சாஸ்திரங்களையும் பரிசோதித்துக் கூர்ஜரதேசத்தில் பிரம்மசரிய விரதத்தோடு வாழ்ந்து, வல்லபமதத்து ஆசாரங்கள் சிலவற்றைக் கண்டித்தார். இவருடைய தேகயாத்திரை 49-ஆம் வயதில் முடிவுற்றது. இவருடைய சிஷ்யர்கள் அநேகர் இருக்கிறார்கள். சுவாமி நாராயணர் ஸ்தாபித்த மதத்திற்கு "உத்தவ சம்பிரதாயம்" என்று பெயர்.

6. ஸ்ரீமத் கிருஷ்ண சைதனியர்

அவதார சமயம்

ஸ்ரீபகவத்கீதையின் நான்காம் அத்தியாயத்தில் அர்ச்சுனனை நோக்கி ஸ்ரீகிருஷ்ணபகவான்,

எவ் வெப்பொழுது தர்மத்திற்கு இடையூறு நேரிடுகின்றதோ, அதர்மம் அபிவிருத்தி யடைகின்றதோ, அவ் வப்பொழுது நான் அவதரிப்பேன். — சு. 7.

சத்புருஷர்களை இரக்ஷிப்பதற்கும், பாப கர்மங்கள் செய்வோரை நாசஞ் செய்வதற்கும், தர்மங்களை நன்றாக ஸ்தாபிப்பதற்கும் ஒவ்வொரு யுகத்திலும் நான் பிறக்கிறேன். — சு. 8.

என்று உறுதி கூறி யருளியுள்ளார். இங்ஙனம் மானிடர்களுக்கு நன்மை புரிந்து உலகத்தை யுய்விக்கும் பொருட்டு ஈசுவரனுடைய அவதாரங்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு தேசங்களில் தோன்றுகின்றன வென்னும் உண்மையை ஸ்ரீகிருஷ்ணன் வெளியிட் டுள்ளார். 'அவதாரம்' என்னுஞ் சொல்லுக்கு 1. இறங்குதல், 2. புவியின்மீது தோன்றல், 3. உதயம், 4. உருவம், 5. பரிணமம் (திரிபு), 6. கடத்தல் என்னும் அர்த்தங்கள் உண்டு. ஆனால், தேவன் உடலெடுத்து உலகத்தில் தோன்றலே அவதாரமெனச் சாமானியமாக வழங்குகிறோம். நாம் அவதார புருஷர் என்பவரைப் பிற மதத்தவர்கள் தேவதூதர் (Messiah), தீர்க்கதரிசி (Prophet), 'பேகம்பர்', 'நபி' என்பார்கள். இப்படிப்பட்ட மகான்களுள் ஸ்ரீமத் கிருஷ்ண சைதனியரும் ஒருவரென மதிக்கப்படு

கிறார். ஒவ்வொரு மதச் சார்பினர் ஒவ்வொருவரை முதன்மையான அவதாரமெனப் பாராட்டுவார்கள். வைஷ்ணவ மதத்தினருள் ஒருவகுப்பார் (முக்கியமாக வங்காளிகள்) கிருஷ்ண சைதனியரை உத்தமாவதார மெனக் கொண்டு கௌரவித்து வருகிறார்கள்.

வங்காளத்தில் கல்விப் பயிற்சி மிகுந்திருந்தும் ஜனங்கள் பெரும்பாலார் தெய்வபக்தி யில்லாதவர்களாகவும் தன்னயக் கருத்து மேலிட்டவர்களாகவும் இருந்தார்கள்; இந்திரிய விஷயங்களில் இன்புறுவதே பெருநோக்கமாக இருந்தார்கள். கற்றார் தெய்வபக்தி யில்லாதவர்களாகக் கல்லாதார் தெய்வத்தை முற்றும் மறக்கலாயினர்; பாணியும்* புலானும் பிரபல மெய்தின; நீதியும் நியமும் பலங்குன்றின. கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் சுபுத்திராயன் என்னும் இந்து மன்னனுடைய பட்டத்தை ஹுஸேன்கான் என்பவன் கவர்ந்து, அன்னவனை யகற்றியோட்டி வங்காள தேசத்து ஆட்சியைக் கைக்கொண்டான. அவன் கொடுங்கோலன். 'ஊரைக் கொளுத்தும் இராசாவுக்கு ஊதிக்கொடுக்கும் மந்திரி' என்பதுபோல அம் மகம்மதியனுக்கு மந்திரிகளும் மாகாணாதிகாரிகளும் வாய்த்தார்கள். அவ் வதிகாரிகளுள் சந்த காஜி என்பவன் ஒருவன். இவனும் நவாப்பாகிய ஹுசேன்கானைப் போல ஈர இரக்க மில்லாத கொடியன். அங்கங்கே இருந்த கொத்தவால்களும் அதிகாரிகளும் பெருங் கட்குடியரா யிருந்தார்கள். அவர்கள் தங்கள் அதிகாரங்களை அநியாயமான வழிகளிற் செலுத்தி வந்தார்கள். அவர்களுடைய அக்கிரமங்களுக்கு அளவில்லை. கற்பழிப்பதும் கொள்ளையடிப்பதும் கொலைபுரிவதும் அவர்களுக்குச் சர்வசாமானியமான காரியங்களாயிருந்தன.

* பாணி — கள்.

தெய்வ பக்தியிலும் தேசாசாரத்திலும் துரைத்தன விவகாரத்திலும் வங்காள தேசமானது பலவகைகளில் சீர் குலைந்திருந்தது. இவ் விழிநிலைமையைத் திருத்தி மன்ப தையை உயர்த்துவதற்கு உற்ற மகா புருஷன் ஒருவன் தேவையாயிருந்தது. இப்படிப்பட்ட சமயத்தில் ஸ்ரீகிருஷ்ண சைதனியர் என்னும் மகான் தோன்றி அரசிய லதிகாரிகளை யும், மகம்மதிய மன்னவனையும், மந்திரிமார்களையும் தம் மகிமையினால் வசப்படுத்தித் திருத்தித் தெய்வ பக்தி யுள்ள வர்களாக்கி இப் பரதக் கண்டத்தில் பிரேமையும் பக்தியும் பரவச்செய்தார்.

ஜனனம்

ஸ்ரீ கிருஷ்ண சைதனியர் சகாப்தம் 1407-க்குச் சரி யான கி. பி. 1486-ஆம் வருஷம் பங்குனிமாதம் பௌர்ணமி யில் வங்காளத்திலுள்ள நவத்துவீபம் என்னும் (Nadia) நகரத் தில் ஜனனமாயினர். இவர் கிருஷ்ணனுடைய அவதார மென்று சொல்லுவார்கள். இவருடைய தந்தை ஜகந்நாத மிசிரர் என்னும் பண்டிதர், தாய் சசீதேவியம்மை. இவர் நிம்ப* மரத்தடியிற் பிறந்தமையின் இவரைத் தாயார் 'நிமி' என்றழைப்பாள்; தந்தை இவரை 'விசுவம்பரன்' என்று அழைத்து வந்தார். உபநயன காலத்திலிவருக்கு 'கௌராங் கர்'* என்று பெயரிட்டார்கள். ஆயினும், 'ஸ்ரீ கிருஷ்ண சைதனியர்' என்னும் துறவறப் பெயரே இவருக்கு உலகத்தில் விசேஷமாக வழங்கப் பெற்றது; இந்தப் பெயருக்குக் 'கிருஷ்ண பக்தியை உண்டாக்குகிறவர்' என்று அர்த்தம்.

---

* நிம்பமரம் = வேப்பமரம்.

† 'கௌராங்கர்' = (கௌரம் = மஞ்சணிறம்; அங்கம் = தேகம்) அழகிய வடிவம் வாய்ந்தவர், சுந்தரமூர்த்தி.

அற்புதத் தோற்றங்கள்

இவர் நல்ல வடிவமும் அழகும் தேக காந்தியும் உடையவரா யிருந்தனர். இவருடைய தமயன் விசுவரூபன் எனப்படுவன். அவனுக்குப் பின்பு பத்து வருஷம் சென்று நிமி பிறந்தமையால் இவரைத் தாய் தந்தையர்கள் மிகச் செல்வமாக வளர்த்து வந்தார்கள். அதனால் இவருக்குப் பிடிவாதமும் முரட்டுத்தனமும் அதிகமாக வளர்ந்தன. அழத் தொடங்கினாலும் சமாதானப் படாமல் இவர் நெடுநேரம் அழுவார். 'ஹரி' என்னும் நாமோச்சாரணத்தைக் கேட்டால் இவருக்கு உடனே அழுகை ஓயும்; முரட்டுக்குணம் மாறிச் சாந்தம் மேலிடும். இவரிடத்தில் ஆச்சரியமான தோற்றங்கள் சில அப்போதைக்கப்போது காணப்படும். ஒரு சமயத்தில் இவருடைய மார்பில் சந்திரகாந்தி தோன்றும்; மற்றோர் சமயத்தில் இவருடைய தேகம் முழுவதும் திவ்விய தேஜசோடு விளங்கும் ; இவர் படுத்து உறங்கும் அறையில் அற்புதமான தேஜோ விக்கிரகங்கள் ஒவ்வோர் வேளையில் தோன்றும்; இவர் வெறுங் காலால் நடந்தாலும் சதங்கைச் சத்தம் 'கல், கல்' லெனக் கேட்கும். இத்தனை இலக்ஷணங்களுள்ள இவர் மற்றப் பிள்ளைகளுடன் தெருக்களில் ஓடியாடிச் சேஷ்டைகள் செய்வதும், எல்லாராலும் குறைகூறப் பெறுவதும் விபரீதமான காட்சிகளாகவே இருந்தன. இவர் அநேக ஜன்ம பரிபாகத்தினால் உயர்நிலை யடைந்த பெரிய ஞானி யென்று முராரிகுப்தர் என்னும் தத்துவ சாஸ்திரி தெரிந்து ஜகந்நாத மிசிருடைய அகாரத்திற்கு*ப்போய் நிமியைத் தேடி வாழ்த்தி, மிசிரரை நோக்கி, "உமது குழந்தை கிருஷ்ணனே. இவ் வுண்மை உலகத்திற்கும் உமக்கும் இன்னும் சில நாளில் வெளிப்படும்" என்று சொல்லிப் போயினர்.

---

* அகாரம் = பிராமணர் வீடு.

ஸ்ரீ கௌராங்க தேவர்

தமையனார்

நிமியினுடைய தமையனாராகிய விசுவரூபர் பல கலைகளை யும் பயின்று, வேதாந்த விசாரத்தில் மிக்க பற்றுடையவ ராகித் துறவறம் பூண்டார். அதனை யெண்ணித் தாய் தந்தையர் பட்ட துயரத்தைப் பார்த்துத் தாளமாட்டாதவ ராய் நிமி, "நீங்கள் மனங் கலங்காதீர்கள். நான் உங்கள் புத்திரனாயிருந்து உங்கள்பால் செய்ய வேண்டிய கடமை களைச் செய்வேன்" என்று சொல்லி அவர்களைச் சமாதானப் படுத்தித் தேற்றினார். அதுமுதல் நிமிக்குச் சாந்தகுண மும் நல்லொழுக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்தன. பள்ளிக் கூடத்தில் இவர் பாடங்களை யெல்லாம் மிகத் தீவிரமாகக் கற்றுச் சூக்ஷ்ம புத்தியுடையவரென உபாத்தியாயராலும் மற்றவர்களாலும் கொண்டாடப்பெற்றார்.

உபநயனம்

அப்போது இவருக்கு வயது ஒன்பது. முறைப்படி இவருக்கு உபநயனம் செய்வித்தார்கள். காதில் காயத்திரி மந்திரத்தை உபதேசித்தவுடனே நிமி ஒரு பெருங் கூச்ச லிட்டு மூர்ச்சித்தார். இவருடைய கண்களினின்று தாரை தாரையாக நீர் வடிந்தது; திவ்ய தேஜசு இவரைச் சூழ்ந்து நின்றது. அதனைப் பார்த்து ஆச்சரியப் பட்டவர்கள் அநேகர்; நிமிக்கு என்ன விபத்து நேர்ந்து விட்டதோவென்று கலங்கி ஏங்கினவர்கள் பலர். சூழ்ந்திருந்தவர்கள் அன்புடன் செய்த சைத்தியோபசாரத்தினால் சிறிது நேரத்தில் இவர் மூர்ச்சை தெளிந்தெழுந்தார். இவருடைய முகத்தைப் பார்த்தவர்க ளெல்லாருடைய மனத்திலும் பக்திவெள்ளம் பரக்கப் பெருகியது, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியின் ஞாபகமும் தோன்றியது.

"கௌராங்கர்"

இவர் கண்ணனுடைய அவதாரமேயென்று ஜனங்கள் எண்ணிப் பாராட்டலானுர்கள். உபநயன முகூர்த்தத்தில் 'கௌராங்கர்' என்று இவருக்குப் பெயரிட்டார்கள். பின்பு, இவர் வழக்கம்போலப் பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் படித்து நல்ல நடையினரென யாவராலும் கொண்டாடப் பெற்ருர். இவருக்குப் பதினோராம் வயதில் தகப்பனுராகிய ஜகந்நாத மிசிரர் விஷஜ்வரங் கண்டு விண்ணுல கேகினர்.

நூல் இயற்றல்

அதுமுதல் சமுசாரத்துத் தொல்லைகள் கௌராங்கருக்குத் தெரியாதவாறு சசீதேவி குடும்பத்தை நிர்வகித்து வந்தனள். வியாகரணத்திற் பெரிய பண்டிதராயிருந்த கங்காதாஸ் என்பவரிடம் கௌராங்கர் அந்தச் சாஸ்திரத்தை நன்கு கற்றுத்தேர்ந்து, அப்போதே வடமொழி வியாகரண சூத்திரங்களுக்கு அருமையான பெரிய உரை யொன்றை எழுதினர். பின்பு, சார்வ பௌமர் என்பவரிடம் இவர் தர்க்க சாஸ்திரம் பயின்று தர்க்க நூலொன்றைப் புதிதாக இயற்றினர். இரகுநாதர் என்னும் மற்ருெரு மாணவமித்திரரும் தர்க்கத்தைப் பற்றி "திதீதி" என்னுமொரு பெரியநூலை எழுதி வைத்திருந்தார். நண்பரான இரகுநாதருடைய நூல் உலகத்தில் விளங்கும்படி செய்யவெண்ணிக் கௌராங்கர் கருணையினுல், தாம் எழுதியதைக் கிழித்து ஆற்றிலெறிந்தார்.

விவாகம்

பிரபலமான பண்டிதர்களிடத்தில் பயின்று தேர்ந்து கௌராங்கர் தாமே ஒரு கலாசாலையை யேற்படுத்தி மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லி வந்தனர். ஆயிரம் ஆயிரமாக

மாணவர்கள் இவரிடத்திற் பாடங் கேட்கவந்தார்கள். இங்ஙனம் இவர் விவகரிக்கும் நன்னாளில் ஸ்ரீ வல்லபாசாரியருடைய குமாரி இலக்ஷ்மீதேவியை இவருக்குத் திருமணம் செய்வித்தார்கள். கௌராங்கர் பெரிய பண்டிதரெனப் பிரசித்தி பெற்றும், விவாகஞ்செய்துகொண்டு குடித்தனப் பொறுப்பு வாய்ந்தும், விளையாட்டுத் தனத்தை விட்டவரல்லர். எவரையும் இவர் வம்புக்கு இழுப்பார். இவரை வல்வாயரெனக் கருதி ஜனங்கள் இவருக்கு எதிர்ப்படாமல் தப்பித்துக் கொள்வார்கள். ஒருநாள் ஈசுவரபுரி என்னும் துறவி இவருக்கு எதிர்ப்பட்டார். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்தவர், கிருஷ்ணபக்தி மிகுந்தவர். அவரைப் பார்த்தவுடன் கௌராங்கர் மற்றவர்களை வெருட்டுவது போலல்லாமல் மரியாதையாக வசனித்து, அவரைத் தம இல்லத்திற்கு எழுந்தருளச் செய்து உபசரித்தனர். ஈசுவரபுரிக்கும் கௌராங்கரிடத்து அன்பும மதிப்பும் பெருகின. இருவருக்கும் நட்புமேலிட்டது.

கீழ்த்தேச சஞ்சாரம்

அப்பொழுது கௌராங்கருக்கு வயது பதினெட்டு. இவர் கீழ்த்தேச சஞ்சாரஞ் செய்யக் கருதித் தாயாரிடம் விடை பெற்றுப் பதுமநதியைக் கடந்து ஒரு கிராமத்தில் தங்கினார். இவருடைய பகிமை அதிசயமானதென்று கேட்டிருந்த ஜனங்கள் திரள்திரளாக இவரைக் காணவந்தார்கள். அவர்களுள் செல்வம்மிக்க தபனமிச்ரன் என்பவனும் ஒருவன். அவன் கௌராங்கரிடத்துத் தேவதா விசுவாஸம் பாராட்டினான். இவ்வாறிவர் சஞ்சரித்த பிரதேசங்களில் பிரசங்கங்கள் செய்யவில்லை; ஜனங்களுக்கு தனித்தனியே உபதேசமும் செய்யவில்லை. ஆயினும், இவரைக் கண்ட மாத்திரத்தில் ஜனங்களுக்குக் கிருஷ்ணபக்தி பெருகியது, இவரிடத்தில்

ஆசாரியபக்தி தோன்றியது, ஹரி நாமத்தைப் பஜிப்பதில் ஆர்வம் மேலிட்டது.

கேசவபட்டன்

சின்னாள் சென்ற பின்பு கௌராங்கர் நவத்துவீபத்திற்குத் திரும்பிப் போனார். அங்கே இவருடைய பத்தினி இலக்ஷ்மீதேவி பரமபத மடைந்த செய்தியைக் கேட்டுத் துக்கித்து ஒருவாறு தேறினார். நவத்துவீபத்தில் இவர் தங்கியிருக்கையில் பிரசித்தி பெற்ற பண்டிதனாகிய கேசவபட்டன் என்பவன் காசுமீரத்திலிருந்து வந்து இவரிடத்தில் தன்னுடைய கல்விச் செருக்கைக் காட்டினான். வாதத்தில் அவனை இவர் வென்றமையின் அவன் தனது பிரதிக்கினையின்படி துறவறம் பூண்டான்.

கயா யாத்திரை

நவத்துவீபத்தில் பெரிய தனவானான சநாதனமிசிரன் என்பவன் விஷ்ணுப் பிரியை யென்னும் தன் மகளைக் கௌராங்கருக்கு இரண்டாந்தாரமாக மணம்புரிவித்தான். சில காலம் சென்றபின் கௌராங்கர் தாயாரின் அனுமதி பெற்றுக் கயா க்ஷேத்திரத்திற்குப் போனார். கயையிலுள்ள கதாதரருடைய கோயிலில் இவர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சீரடிச் சுவடுகளைக் கண்டு ஆனந்தங் கொண்டார். அந்த க்ஷேத்திரத்தில் ஒவ்வொரு பொருளும் இவருக்குக் கண்ணன் திருவுருவமாகவே தோன்றியது. 'கண்ணா! கண்ணா!' எனக் கூவிக்கூவி இவர் நெஞ்சுருகிக் கண்பனி சோர நின்றார். பின்பு மூர்ச்சித்து விழுந்த கௌராங்கரை ஈசுவரபுரி என்னும் பெரியார் தாங்கி யுபசரித்துக் கலை தெளிவித்து, இராதாகிருஷ்ண உபாசனாக்கிரமத்தை இவருக்கு உபதேசித்தருளினார். அங்கிருந்து கௌராங்கர் பிருந்தாவனத்திற்குப் போகப் புறப்பட்டார்.

"ஹரி போல்"

பக்திபரவசராக இவர் மெய்ம்மறந்து விவகரிப்பதனால் இவரைக் கட்டிக்காத்துத் தாயாரிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பது உடனிருந்தாருக்குப் பெருங் கவலையாயிற்று. சந்திரசேகரர் முதலாயினோர் பலபல உபாயங்கள் செய்து இவரைத் திரும்ப நவத்துவீபத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். பிறகு, ஒருநாள் தம் உபாத்தியாயரின் சொற்படி இவர் தம் பள்ளிக்கூடத்தைத் திரும்ப நடத்தத் தொடங்கினார். நாள்தோறும் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்வதற்குப் பதிலாக ஹரி நாமத்தின் பெருமைகளையும் கிருஷ்ண பக்தியின் விசேஷங்களையும் இவர் பிரசங்கிக்கலாயினர்; நாளடைவில் அவர்களுக்குக் கிருஷ்ண பக்தியைப் பெருக்கி, அவர்களும் தம்முடன் கிருஷ்ண கீர்த்தனங்களைப் பாடியாடும்படி செய்தனர். அவர்கள் "ஹரி போல்" (ஹரி என்று சொல்) என்பதையே மாமந்திரமாகக்கொண்டு, தம் மனத்தை நோக்கிக் கூறுவதுபோல எந் நேரமும் அதனை உச்சரிப்பர்.

ஹரிதாச மகம்மதியர்

அதுவல்லாமல், மாதை என்றும் ஜகை என்றும் பெயர் கொண்ட கொடிய கொத்தவால்களை இவர் அடக்கி யாண்டார்; ஹரிகீர்த்தனம் செய்யக்கூடாதென மறித்த அவ்வூர்க் கவர்னராகிய காஜியை நல்வழிப்படுத்தி, அவனால் "கௌர - ஹரி" (சிவப்பு நிறமுடைய ஹரி) என்னுஞ் சிறப்புப்பெயர் இடப்பெற்றார். பிறமதத்தவர்க ளநேகர் இந்து சமயிகளாகி, ஹரிபக்தி மேற்கொண்டு, கௌராங்கரைக் குருவாகக் கொண்டனர். மகம்மதியனாகப் பிறந்தும் ஹரி பக்தியிற் சிறந்து ஹரி நாம சங்கீர்த்தனஞ் செய்துகொண் டிருந்த ஹரி தாஸ் என்பவனும் இவருக்குச் சிஷ்யனாயினான். கௌராங்கர்

செய்த அற்புதக் காரியங்களுள் ஓரிடத்தில் இறந்துபோன குழந்தையைப் பேச வைத்ததும், குஷ்டரோகி யொருவனை மார்புறத்தழுவி அவனுடைய நோயைத் தீர்த்ததும், துஷ்ட கள்வர்கள் பலரை நல்வழிப்படுத்தியதும் சிலவாம்.

துறவறம்

கௌராங்கர் துறவறம் மேற்கொள்ள விரும்பிக் கத்துவா என்னும் ஊருக்குப் போய், அங்கே கேசவபாரதி என்னும் துறவியாகிய பெரியாரை அடைந்து தமக்குத் துறவற தீக்ஷை செய்விக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார். தாயின் அனுமதியும் மனைவியின் சம்மதமும் பெற்று வந்தாலன்றித் தீக்ஷை செய்விக்க முடியாதென்று கேசவபாரதியார் கூறினார். பாரதியாரும் மற்றவர்களும் கௌராங்கருடைய சங்கற்பத்தை எவ்வகையிலும் மாற்ற முடியாதவர்களாயினர். முடிவில், பாரதியார் இவரைச் சந்நியாசியாக்கி, இவருக்கு 'கிருஷ்ண சைதனியர்' என்னும் தீக்ஷா நாமமும் சூட்டியருளினார். துறவறம் பூண்டவுடனே கிருஷ்ண சைதனியர் பிருந்தா வனத்திற்குப் போகப் புறப்பட்டார். இவர் பக்தி பரவச ராகக் கால் போனவழியே நடந்துபோய்க் கொண்டிருந்தார். இவருடைய சிறிய தகப்பனாராகிய சந்திரசேகரர் என்பவரும் நண்பராகிய நித்தியானந்தர் என்பவரும் இவரைப் பின் பற்றிச் சூழ்ச்சி செய்து சாந்திபுரத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

"கிருஷ்ண சைதனியர்"

நவத்துவீபத்திலிருந்து நூற்றுக்கணக்கான பக்தஜனங் களும் கௌராங்கருடைய தாயாராகிய சசிதேவியும் கிருஷ்ண சைதனியரைக் காண்பதற்காகச் சாந்திபுரத்திற்கு வந்தார்கள். தாயாரைப் பணிந்து கிருஷ்ண சைதனியர், "அம்மா! நான்

துறவியாகிவிட்டதைப் பற்றிச் சஞ்சலப்பட வேண்டாம். இனி உமது அனுமதியின்றி எந்தக் காரியமும் செய்யத் துணியேன். நான் திரும்ப கிருகஸ்தாச்சிரமத்தை மேற் கொள்ளவேண்டு மென்பது உமது விருப்பமானால், அப்படியே செய்கிறேன்; என்னை மன்னிக்கவேண்டும்" என மொழிந்தார். "நீ துறவறத்தைக் கைவிடவேண்டாம். ஆனால், பிருந்தா வனத்திற்கும் நவத்துவீபத்திற்கும் வெகு தூரம். அதனை விட நீ ஜகந்நாத க்ஷேத்திரத்தில் வசிப்பது நலமாகும். அது வும் திவ்விய க்ஷேத்திரம். நம் ஊரிலிருந்து யாத்திரிகர் அடிக் கடி அங்குப்போய் வருவார்கள். அவர்களின் வாயிலாக உன் க்ஷேமாபிவிருத்திகளை நான் கேட்டுத் தெரிவதற்காகும்" என்று சசீதேவி தன் புத்திரனைப் பார்த்துச் சபலமின்றிப் பெரும் புத்தி கொண்டு பதில் சொன்னாள்.

ஜகந்நாத வாசம்

தாயின் கட்டளையைத் தலைமேற் கொண்டு கிருஷ்ண சைதனியர் ஜகந்நாதத்திற்குப் போக நிச்சயித்து நித்தியா னந்தர், முகுந்தர், ஜகதானந்தர், கோவிந்தர், தாமோதரர் என்ற ஐவரையும் துணையாகக் கொண்டு புறப்பட்டனர். போகும் வழிநெடுக அவ் வவ்வூர் ஜனங்களுக்கும் இவர் ஹரிபக்தி புகட்டி, அவர்களெல்லாரும ஹரிநாம சங்கீர்த் தனம் பண்ணும்படி செய்துகொண்டே ஜகந்நாத க்ஷேத்திரத் திற்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கே வாசுதேவ சார்வ பௌமர் என்னும் மகா பண்டிதரைச் சாஸ்திர வாதத்தில் வென்றனர். ஸ்ரீ சைதனிய சுவாமிகள் தமக்கு ஏதாவது இன்னுரை இயம்பி ஏக்கம் நீக்குவாரென்று எதிர்பார்த்துச் சார்வபௌமர் தலைநிமிர்ந்து உற்று நோக்கினர். அப்போது

சைதனியருக்குப் பதிலாகச் சாக்ஷாத் எம்பெருமான் ஆறு திவ்விய கரங்களுடன் தம் அருட் கோலத்தைக் காட்டி நின்றனர். அந்தத் திருக்கோலப் படத்தை இங்குப் பதிப்பித்

சைதனியர் காட்டிய அருட்கோலம்

திருக்கிறோம். அதனில் அவர் ஓர் இரண்டு கரங்களில் வில்லும் அம்பும் தாங்கித் தாம் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனார்த்தமாகச் சக்கரவர்த்தித் திருமகனை வுண்

மையை யுணர்த்துகின்றார்; மற்றிரு கரங்களில் தீங்குழல் தாங்கித் தாம் அன்புருக் கோலமும், அருட்பெருந் தகைமையும், கருணையஞ் சோதியும், இனிய தீஞ்சொற்களும் வாய்ந்து ஸ்ரீகிருஷ்ணனான வண்மையை விளக்குகின்றார்; வேறு இரு கரங்களில் தண்டு கமண்டலங்களை ஏந்தி அனந்த ஜீவராசிகளிடத்தும் அன்பை இரக்கக் கௌராங்கரான மாண்பைத் தெரிவிக்கின்றார்.

அவதார நிதரிசனம்

பிறர்மனத்தைக் கவரும் சக்தியும், கிருஷ்ணபக்தி புகட்டுந் திறமையும் இவருக்கு நாளுக்குநாள் அதிகரித்தன. இவருடைய மகிமை ஜனங்களுக்கு அதிகமாகப் புலப்படலாயிற்று. இவர் அவதார புருஷர் என்பதற்கான நிதரிசனங்களைப் பண்டிதர்களும் பாமரர்களும் காணலானார்கள். ஸ்ரீவாசர், ஸ்ரீதரர், நித்தியானந்தர் முதலான கன பண்டிதர்கள் கௌராங்கருடைய விசுவரூபத்தைக் கண்டதாகச் சொல்லுகிறார்கள். இராமரின் வடிவமாகவும் கிருஷ்ணனின் வடிவமாகவும் கௌராங்கர் அநேகருக்குப் பலமுறை தோன்றியதுண்டு. இவருடைய மகிமா விசேஷத்தினா லநேக ஜனங்கள் கிருஷ்ண பக்தர்களானார்கள்.

விஜயநகர ராஜன்

சிலநாள் சென்ற பின்பு கிருஷ்ண சைதனியர் தக்ஷிண தேசயாத்திரை செய்யப் புறப்பட்டார். இவர் கோதாவரி நதிக்கரையில் வீற்றிருக்கும் பொழுது விஜயநகரத்து அரசனான இராமானந்தராயன் என்பவன் இவரைக் கண்டு வணங்கி வழிபட்டான். கிருஷ்ணபக்தி மிகுந்து, அவன் வைராக்கிய மேலீட்டால் தனது இராச்சியாதிகாரத்தைத் துறந்து சீடனாக இவருடன் செல்லச் சித்தமானான். அவனுடைய கண்ணுக்கு இவர் இராதா கிருஷ்ணமூர்த்தியாகத் தோன்றினர்.

தென்னாட்டுச் சஞ்சாரம்

கிருஷ்ண சைதனியர் தென்னாட்டைச் சுற்றி வருவதற்கு இரண்டு வருஷங்களாயின. வழியிலுள்ள ஊர்களில் அநேகம் பண்டிதர்களையும், பௌத்தர்களையும், கள்வர்களையும், தாசிகளையும் கிருஷ்ணபக்தர்களாக்கி, இவர் அநேக விநோதங்களை இயற்றி மீண்டனர்.

மகாராஷ்டிரமும் கூர்ஜரமும்

பண்டராபுரத்தில் இவர் துக்காராம் என்னும் பக்தருக்கு அருள் புரிந்தார்; சூரத்தில் அஷ்டபுஜதேவதைக்கு வழக்கமாக இடும் பலியை நிறுத்தினார்; இன்னும், புரோச்சு, பரோடா, ஆமதாபாது, கோகா, ஜாப்பரபாது, சோமநாதபுரம், ஜூநாகடை, துவாரகை முதலான இடங்களுக்கு எழுந்தருளி யிருந்தார். இவருடைய மதத்தை மகாராஷ்டிர தேசத்தில் துக்காராம் சுவாமியும், கூர்ச்சரத்தில் நாராயண சுவாமியும் பிரபலப்படுத்தினார்கள். இவருடைய மதம் வங்காள வைஷ்ணவம் என வழங்குகின்றது. இம் மதத்தவர்கள் நெற்றியில் கோபீசந்தனத்தினால் நிறுதிட்டமாக இருகீற்று நாமம் அணிவார்கள்; துளபமணி ஜபமாலையைத் தரிப்பார்கள்.

தர்ம பரிவர்த்தனம்

மேற்சொல்லிய தீர்த்த யாத்திரையின் முடிவில் கிருஷ்ண சைதனியர் நவத்துவீபத்திற் குப் போயினர். அங்கே தாயாரைப் பணிந்து, பாரியையான விஷ்ணுப் பிரியைக்குத் தம பாதுகைகளைக் கொடுத்து, அவைகளைப் பூஜித்துக்கொண் டிருக்கும்படி அவளுக்குக் கட்டளையிட்டருளினர். அந்தப் பாதுகைகள் இன்னும் ஜகந்நாதத்தில் பூஜிக்கப்பட்டு வருகின்றன. இவர் 31-ஆம் வயது முதல் 48 ஆம் வயது வரையில் ஜகந்நாத க்ஷேத்திரத்தில் வாசஞ் செய்தார். அங்கே மகா பண்டித

ராக விளங்கிய சார்வ பௌமரைத் தம் பெருங் கல்வியாலும், காசியில் பிரசித்திபெற்ற வித்துவானாகிய பிரகாசானந்த ஸரஸ்வதியைத் தம் மகிமா விசேஷத்தினாலும், மால்ட்டா மாகாணத்தில் ரூபன், சநாதனன் என்னும் பிரபல துரைத்தனாதிகாரிகளைப் போதனா பலத்தினாலும் தம வழிப்படுத்தி ஆட்கொண்டனர். ரூபனும சநாதனனும் கர்ணாடக பிராமண சகோதரர்கள். ஹுஸேன்ஷா என்னும் அரசனுடைய சகவாச விசேஷத்தினால் அவர்கள் முஸ்லிம் ஆசாரங்களைக் கைப்பற்றி, தாபிர்காஷ் எனவும் சாகர்மாலிக் எனவும் தம் பெயர்களை மாற்றிக்கொண்டு விவகரித்து வந்தனர். அவர்க ளிருவரையும் கிருஷ்ண சைதனியர் திரும்ப இந்துக்களாக்கி, ஞானோபதேசஞ் செய்ததன் பயனாக அவர்கள் கோசுவாமிகளாகி மதப் பிரவசன கைங்கரியத்தை மேற்கொண்டனர்.

கௌராங்கமடம்

எல்லாரும் உபதேசத்திற்குரியவர்களே யெனச் சைதனியர் பள்ளர் பறையருக்கும தம் மதத்தைப் போதித்து வந்தனர். மகம்மதிய மதத்தினின்றும் மீட்கப் பெற்ற ரூபன் சநாதனன் என்பவருடைய பரம்பரையினரே பிருந்தாவனத்துக் கௌராங்க மடத்தில் முக்கிய வைணவ ஆசாரியர்களாக இருக்கிறார்கள்.

அந்தர்த்தானம்

ஒருநாள் இவர் தோதா கோபீநாதருடைய ஆலயத்தில் ஹரிநாம சங்கீர்த்தன காலக்ஷேபம் செய்து கொண்டிருக்கையில், 'கண்ணனைக் கண்டேன்' எனப் பக்தி மேலீட்டினால் சொல்லிக் கொண்டே கடற்கரைக் கேகி நீர்மேல் நடப்பதாகப் பக்த ஜனங்களுக்குக் காட்சிதந்து அந்தர்த்தானமாயினார்.

7. ஸ்ரீ வித்தியாரணியர்

காலவியல்

பரதக் கண்டத்தில் கலி பிரவேசித்த பின்பு சிரௌத[1] வித்தையும் சிரௌத கர்மமும் நாளுக்கு நாள் குறையுமென் பதைத தீர்க்க தரிசிகளாகிய முனிவர்கள் அறிவார்கள். அந்தக் காரணத்தினலே, பிராமணர் முதலானவர்களும் கிருஷி முதலான ஜீவனஞ் செய்பலாமென்று பராசரர் முத லான முனிவர்கள் போதித்தார்கள். கலியின் மகிமையால் காமம் அதிகரித்தது; வேத வித்தையானது மற்றக் கலை களின் பிரகாசத்தினல் மங்க வேண்டிய தாயிற்று; தர்மம் அதர்மத்தினல் மறைக்கப் பெற்றது; வர்ணுசிரம விய வஸ்தை குலைந்தது; ஒருவருடைய ஆசாரங்களை மற்ருெரு வர் கைக்கொள்ளலாயினர்; க்ஷத்திரிய ராஜர்கள் பலவீனப் பட்டனர்; வேதத்திற்கு விரோதமான மதங்கள் பிரபலமா யின; சிரௌத கர்மானுஷ்டானம் நிர்மூல மாகியது.

மத பேதங்கள்

பின்பு, பரதக் கண்டத்தில் அநேக தந்திரங்களும்[2] ஆகமங்களும்[3] முன்னுக்கு வர, அந்த வித்தைகள் செல் வாக்குற்றன; சைவ வைஷ்ணவ சாக்தேயாதி[4] சமயங்கள் (Schools of Philosophy) பிரபல மெய்தின; ஒவ்வோர் ஊரி லும் கோயில்கள் கோபுரங்கள் மடங்கள் முதலியன தோன்ற லாயின; வேத விரோதமான ஆசாரங்கள் வியாபித்தன; மீமாம்ஸா[5] சாஸ்திரிகள் சிறிது மட்டும் தலையெடுத்து வாதிக்கத் தலைப்பட்டுச் சுருதியின் தாற்பரியத்தைச் சரி யாக எடுத்துரைக்க மாட்டாமற் போனதனுல் சிரௌத கர் மத்தில் பற்றுக் குறைந்தது, நாஸ்திகம் ஏற்றமுற்றது. உப நிஷத்துமதம் மூலையி லொடுங்கியது.

தர்மோத்தாரணம்

வேத சம்மதமான அனுஷ்டானத்தைச் சாதிக்கும் பொருட்டு ஸ்ரீசங்கராசாரியர் சேதுமுதல் [6]சீதாசலம் வரை பரதக் கண்டம் முழுவதும் திக்விஜயஞ் செய்து, சிரௌத ஸ்மார்த்த[7] கர்மானுஷ்டானத்தையும் அத்துவைத மதத்தையும் ஸ்தாபித்தார்; அந்த ஸ்தாபனம் நீடித்து நிலைத்திருக்கும் பொருட்டு நான்கு அத்துவைத பீடங்களை நான்கு திக்குகளில் அமைத்தார். அதன் பினபு, தக்ஷிண ஹிந்து ஸ்தானத்தில் பாஞ்சராத்திராதி[8] ஆகமங்களும் திராவிடப் பிரபந்தங்களும்[9] பிரபலமாயின. அவைகளையும் வேதாந்தத்தையும் இணைத்து, அவ் வுபய வேதாந்தங்களையும் ஸ்ரீராமாநுஜாசாரியர் பிரவர்த்தனைக்குக் கொண்டு வந்து, விசிஷ்டாத்துவைத மதத்தை ஸ்தாபித்தார். அதன்மீது, நான்குவேதம், பாஞ்சராத்திரம், மூலராமாயணம் ஆகிய இவையனைத்தும் விஷ்ணுவைக் குறித்தனவேயாகும், தத்துவம் துவைதமேயாகும் — என்று துளுவ தேசாதிகளில் ஸ்ரீ ஆனந்த தீர்த்தர் ஸ்தாபித்தார். இதுபோலவே வேறு பல சமயங்களும் தோன்றியதனால், இந் நாட்டில் 'இது இன்னது' எனத் தெரியாமல், அவரவருடைய புத்தி பலத்தை யனுசரித்து மதப்

---

1. சிரௌதம் — சுருதி சம்பந்தமானது; அஃதாவது, வேதத்தில் கூறப்பட்ட மந்திரம், உபாசனை, கர்மம் முதலியன.

2. தந்திரங்கள் — பூஜை முதலிய வைதிக காரியங்களிற் செய்யும் கைத்தொழில்கள். இவைகளை விவரிக்கும் நூல்கள் 'தந்திரகலை' எனப்படும். 'ஆகமம்' என்னுங் குறிப்பைக் காண்க.

3. ஆகமங்கள் — இவை சிவ விஷ்ணுக்களால் இருஷிகளின் பொருட்டு அருளிச்செய்யப்பட்ட நூல்கள். இவை 1. மந்திரகலை, 2. தந்திரகலை, 3. உபதேசகலை என்னும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும்: 'மந்திரகலை' — பக்தி, உபாசனை முதலிய கூறும்; 'தந்திரகலை' — கர்மம், கிரியை, ஆசாரம், ஸம்ஸ்காரம், நியமம்

முதலிய விவரிக்கும்; 'உபதேசகலை' — ஈசுவரனுடைய இலக்ஷணங்கள், கலியாண குணங்கள், வியாபாரங்கள், லீலைகள் முதலியவைகளை விளக்கும். சிவாகமங்கள் 28. அவை சிவபேதம், உருத்திரபேதம் என இருவகைப்படும். சிவபேதத்தில் காமிகாகமம் முதலான 10-ஆகமங்களும், உருத்திரபேதத்தில் விஜயாகமம் முதலான 18-ஆகமங்களும் ஆகும். வைஷ்ணவாகமங்கள் வைகானசம், பாஞ்சராத்திரம் என இருவிதப்படும்.

4. சாக்தேயம் — இது தேவீமதம் எனவும் பெறும். இதன்படி சக்தியே (தேவியே) பரதெய்வம்; எல்லாவற்றிற்கும் சக்தியே ஆதிகாரணம்; திரிமூர்த்திகளையும் படைத்துக் காத்தற்குச் சக்திக்கே சாமர்த்தியம் உண்டு.

5. மீமாம்சை — இஃது ஆறுவகைச் சித்தாந்தங்களுள் (ஷட் தரிசனங்களுள்) ஒன்று. ஷட் தரிசனங்களாவன, — 1. நியாயம், 2. வைசேஷிகம், 3. சாங்கியம், 4. யோகம், 5. மீமாம்சை, 6. வேதாந்தம் என்னும் ஆறுவகைத் தத்துவ விசாரக்கொள்கைகள். மீமாம்சா மதத்தைத் தாபித்தவர் ஜைமினிமாமுனிவர். மீமாம்சா தரிசனத்தின்படி, வேள்விகள் என்று வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கும் கர்மங்களைச் செய்வதனுல் ஆன்மாக்கள் சொர்க்கமெய்தும்; வேள்விகளினுல் மறுமைச் சுகம் மாத்திரமேயல்லாமல் இம்மைச் சுகங்களும் உண்டு. இதனைப் 'பூர்வ மீமாம்சை' எனவும், 6—ஆவது தரிசனமாகிய வேதாந்தத்தை 'உத்தர மீமாம்சை' எனவும் சொல்வார்கள். ஆனுல், இவ்விரண்டு தரிசனங்களுக்கும் சம்பந்தமே இல்லை.

6. சேது — இராமேசுவரம், சீதாசலம் — இமயமலை.

7. ஸ்மார்த்தம் — ஸ்மிருதி சம்பந்தமானது.

8. பாஞ்சராத்திரம் — இது வைஷ்ணவாகமங்கள் இரண்டினுள் ஒன்று; பிரமனுக்கு, 5-நாளில், திருமால் உபதேசித்தருளிய நூல்; விஷ்ணுவாலயப் பிரதிட்டைக்குரிய விதி, துவஜாரோகண விதி, ஜீர்ணோத்தாரணம், தீக்ஷை, ஆராதனம், மகோற்சவம், ஸ்ரீ வைகுண்டலக்ஷணம், யோகம், பிரதிமாலக்ஷணம் முதலிய கூறும்.

9. திராவிடப் பிரபந்தங்கள் — திருவாய்மொழி, ஆழ்வார்கள் அருளிய பாக்கள்.

பிரவர்த்தகர்கள் வெளிப் போந்தார்கள். இவ்வாறு நானாவித ஞானமார்க்கங்கள் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு வரையில் தலையெடுத்தன.

இலௌகிக நிலை

அன்றியும், கிருஷ்ணாநதிக்கும் நர்மதாநதிக்கும் இடையில் 'தேவகிரி' என்னும் துருக்க ஸம்ஸ்தானமும், 'ஓருகல்' (ஏகசிலாநகரம்) என்னும் இந்து ஸம்ஸ்தானமும் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரையில் சிறந்து விளங்கின. கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவ் விரண்டு ஸம்ஸ்தானங்களும் சீரழிந்து 'பாமினி' 'விஜயநகரம்' என்பனவாதிய ஸம்ஸ்தானங்களாக மாறின. 'ஓருகல்' தேசாதிபதிகளாகிய ஆந்திர ராஜர்களுக்கு வேத விஷயப் பிரசாரங்களில் அபிமானம் இருந்ததாகத் தெரியவில்லை; ஒருவேளை இருப்பினும், அவைகளைக் கவனிப்பதற்கு அவர்களுக்கு நேரம் இல்லை. தம் நாட்டைக் கைப்பற்றுவதற்கு வேற்றரசர் செய்யும் பிரயத்தனங்களைப் பங்கப்படுத்தும் முயற்சியிலே அவர்களுடைய காலம் கழிந்தது. சிறிது இடைவெளி வாய்த்த காலத்தில் பிரதாபருத்திரன் முதலான அரசர்கள் அலங்காராதி கிரந்தங்களை இயற்றுவதற்குச் சகாயஞ் செய்தார்களே யல்லாமல், வேத மந்திரங்களையும் மந்திரார்த்தங்களையும் சிரவணஞ் செய்வதில் அவர்கள் மனத்தைச் செலுத்தவில்லை. தேவகிரி, குல்பர்கா, கர்நூல், ஆறுகாடு என்னும் தேசாதிபதிகள் துருக்கர்களாயிருந்தமையின் தக்ஷிண ஹிந்துஸ்தானத்தில் வேத விரோதமான ஆசாரானுஷ்டானங்கள் தோன்றியோங்கின.

வைதிகநிலை

அது நிற்க: இந் நாளில் வழங்கும் ஸம்ஸ்கிருதத்தைவிடப் பாஷியங்கள் எழுதப்பட்டிருக்கிற ஸம்ஸ்கிருத பாஷை

கடினமானது. அதனைவிடக் கடினமானது வேத பாஷை. எளிதில் விளங்காத வேதத்திற் சொல்லப்பட்டிருக்கும் கர்மங்களை அனுஷ்டிப்பது மிகக் கஷ்டம். அவைகளைச் சரியாகத் தெரிந்துகொள்ளவேண்டுமானால், வேதாங்கங்களையும் * அவைகளுக்கு ஏற்பட்டிருக்கிற குறிப்புரைகளையும் கற்க வேண்டும். இது பெருங் கஷ்டமான காரியம். இருஷிகளேனும், அவர்களுக்குப் பிற்காலத்தவர்களேனும் வேதாங்கங்களைத் தழுவி வேதத்திற்குப் பூர்த்தியாக வியாக்கியானம் எழுதி வைக்கவில்லை. சிற் சிலர் சிறிது பாகத்திற்கு வியாக்கியானம் எழுதியிருப்பினும், அஃது அவரவருக்கு அபிமதமாயுள்ள வேதாந்தத்தை யனுசரித்திருக்கும். அவர்கள் ஏதோ ஒரு மதத்தில் ஆர்வங்கொண்டு வேதாங்க நிபந்தனைகளை மீறிச் சில இடங்களில் உரை எழுதி யிருக்கிறார்கள்; கர்மத்திற்கு அனுகூலமாக மேற்சொல்லிய ஆறு அங்கங்களுக்குக் கட்டுப்பட்டு எழுதவில்லை. அவர்களுக்குப் பின்பு வியாக்கியான மெழுத முன்வந்தவர்கள் முற்றும் எழுதவில்லை. ஸ்கந்தஸ்வாமி, பவஸ்வாமி, குஹதேவர், ஸ்ரீநிவாசர், மாதவதேவர், ஊவடர், பட்டபாஸ்கரமிசிரர், பாரதஸ்வாமி, ஸ்ரீ ஆனந்த தீர்த்தர், புஷ்பக ஸூத்திரகாரர் முதலானவர்கள் வேதத்தின் சிற்சில பாகங்களுக்கு மாத்திரம் உரை எழுதினார்கள். அந்த உரைகள் சிரௌதகர்மத்திற் பயன்படுவதைக் காணோம்; அவை கிடைப்பது மில்லை.

ஸ்ரீ சங்கராசாரியர், ஸ்ரீ சுரேசுவர விவரணாசாரியர், வாசஸ்பதிமிசிரர், ஆனந்தகிரி, ஸ்ரீ ராமாநுஜாசாரியர், ஸ்ரீ மத்

---

* வேதாங்கங்க ளாவன — 1. சிக்ஷை (the science of pronunciation), 2. சந்தசு (prosody), 3. வியாகரணம் (grammar 4 நிருத்தம் (philological explanation of difficult Vedic words), 5. ஜ்யோதிஷம் (astronomy), 6. கல்பம் (ceremonial),

துவாசாரியர், சுதாகாரர் முதலான வித்துவான்கள் வேதாந்த கிரந்தங்களையே எழுதி வெளியிட்டார்களல்லாமல் கர்ம காண்டத்தில் அவ்வளவாக உழைக்கவில்லை. அவர்களுடைய சிஷ்யர்களும், சிஷ்யருக்குச் சிஷ்யர்களும் நாட்டிற் பரவியதனால் கர்மத்தைக் கவனிப்பார் இலராயினர். அன்றியும், ஸ்ரீ பூர்ணபிரஜ்ஞர், சுதாகாரர் ஆகிய இவர்களுடைய மதத்தின்படி கர்ம காண்டத்திலுள்ள பதம் ஒவ்வொன்றுக்கும் விஷ்ணுவே முக்கியார்த்தமாகும். இப்படிப்பட்ட போதனையினாலும் கர்மத்தில் சிரத்தை குறைந்திருக்கலாமே. கர்மமானது பிரம்ம ஸ்வரூபமென்னும் சுருதியைக் கேட்பாரில்லை. அவ் வுண்மையை விளக்குவதற்காக ஏற்பட்ட ஜைமினியின் பூர்வமீமாம்சையையும், பாதராயணரின் உத்தர மீமாம்சையையும் பாராட்டுவார் அரியராகுங் காலம் நேர்ந்தது. அந்தக் காலமே மேற்சொல்லிய கி. பி. 13-ஆம் நூற்றாண்டு ஆகும். அப்போது வேதாந்த ரகசிய ஞானமானது கர்ம பூமியெனப் பிரசித்தமாக வழங்கும் இப் பரதக் கண்டத்தில் க்ஷீணித்தது. அந்தத் தர்ம க்ஷீணத்தை நிவாரிக்கும் பொருட்டு இந்து இராஜ்யமாகிய ஸ்ரீ வித்தியா விஜய நகர ஸம்ஸ்தானத்தை ஸ்தாபிக்கத் தக்க மகா புருஷர் தோன்றினர்.

இலௌகிக வைதிக மேம்பாடு

துருக்கருடைய அதிக்கிரமத்தினால் ஒருகல் இராஜ்யம் இருந்த இடம் தெரியாமற் போயிற்று. பாமினி யரசர்களுக்குள் பரஸ்பர கலகம் அதிகரித்தது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் யாதவ குலத்தவர்களும, பெல்லாலராஜ வம்சத்தவர்களுமாகிய சங்கமனும், அவனுடைய புத்திரனான ஹரிஹர புக்கணனும் ஈசுவரானுக்கிரகத்தால் பம்பா க்ஷேத்திரத்திற்குச் சமீபத்திலுள்ள சிறிது பிரதேசத்தைச் சம

பாதித்துக்கொண்டார்கள். அவர்களுக்கு, வன்னிக்கு வாயுவைப் போல, மாதவர் சாயணர் என்னும் சகோதரர்கள் குலகுருக்களாகவும், மந்திரிகளாகவும் ஏற்பட்டு மிக்க சகாயஞ் செய்தார்கள். அவ் விருவருள் மூத்தவரான மாதவர் என்பவரே மேற்குறித்தவாறு தர்ம ஸ்தாபனத்தின் பொருட்டுத் தோன்றிய மகா புருஷர்; இவரே வித்தியாரணியர் என வழங்கப் பெறுபவர்.

மாதவரின் குலம்

மாதவர் தெலுங்கு தேசத்திற் பிறந்த தெலுங்கு பிராமணர், பாரத்துவாஜ கோத்திரத்திற் பிறந்தவர்; போதாயன சூத்திரத்தை யவலம்பித்த யஜுர்வேதி. இவர் சாயண குடும்பத்திற் பிறந்தவர். இவருடைய தாயார் ஸ்ரீமதி, தந்தை மாயணர், தம்பிகள் 1. சாயணர், 2. போக (சோம) நாதர். இவருடைய தந்தையாகிய மாயணர் யாதவகுலத் தாசனாகிய சங்கமனுக்கு மந்திரி யென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சங்கமராஜனுடைய காலம் தெளிவாகக் குறிக்கப்படவில்லை. சங்கமராஜனுடைய புத்திரனாகிய புக்கராஜனுக்கும், அவனுடைய குமாரனுக்கும் மாயண புத்திரர்களாகிய மாதவரும் சாயணரும் பரம்பரைக் கிரமமாக மந்திரிகளாயிருந்தார்களென்பது தேச சரித்திரங்களினால் பிரசித்தம். மாதவர் மந்திரி குலத்தில் பிறந்தவரே யாயினும் வைதிக லௌகிக வித்தியா விவகாரங்களில் மிக்க தேர்ச்சி பெற்றவர். இவருக்குப் புஜபலமும் மனோபலமும் புத்தி பலமும் அதிகம். ஆனால், சங்கமராஜனும் அவனுடைய குமாரனான புக்க ராஜனும் துருக்கப் பிரபுக்களின் நெருக்கிடையினால் ஒடுக்கமுற்றுத் தம் மந்திரிமாருக்குத் தக்கவாறு தனமளிக்கவும் மானிய மீயவும் சக்தியற்றவர்களாயினர். ஆதலால், மாதவருக்குப் பொருள் வளம் இல்லை.

அவதார விசேஷம்

ஸ்ரீ சங்கராசாரியர் அவதரித்து வேதாந்த விஷயமான நூல்களை மாத்திரமே இயற்றினர்; தமக்குப் பின்பு 11-ஆவது குருமூர்த்தியாக ஜகத்குரு பீடத்தில் அவர் தாமே திரும்பவும் தோன்றிக் கர்ம காண்டத்திற்குப் பாஷிய மியற்றிச் சிரௌத ஸ்மார்த்த கிரந்தங்களுக்கு வியாக்கியானம் செய்வேமென வாக்களித்திருந்தனராம். ஆதி சங்கராசாரியருக்குப் பிறகு ஜகத்குரு பரம்பரையில் அவருடைய பீடத்திற்கு 11-ஆவதாக வந்தவர் மாதவ ரென்னும் வித்தியாரணியரே யாவர்.

இளமைப் பருவம்

உபநயன ஸம்ஸ்காரம் ஆன பின்பு இவர் 12-ஆண்டுகள் குருகுலவாசஞ் செய்து வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார். அப்பொழுதே இவரிடத்து வைதிகாசாரங்களும், வேதாந்த ஞானவாசனையும், வைதிக நிஷ்டையும் தலைகாட்டின; இலௌகிக விவகாரஞானமும் அற்புதமாக விளங்கியது. அறிவு முதிர்ச்சியினாலோ, அல்லது, வறுமைச் சிந்தையினாலோ இவர் குருகுல வாசத்திற்குப் பின்பு தவத்தில் அமர்ந்தனர்.

தவம்

இவர் இலக்குமீ தேவியைப் புவனேசுவரி வடிவமாக உபாசித்தவர். இவருடைய தவத்திற்கு மெச்சிப் புவனேசுவரி பிரத்தியக்ஷமாகி, "உமக்குச் சகலகலா வல்லமையையும், அழியாப் புகழும், பிரமஞானமும், பரமபதமும் எய்துவதாக! இந்த ஜன்மத்தில் உமக்குத் தனப்பிராப்தி மாத்திரம் இல்லை" எனவும், இவர் விரக்தராகி, கி. பி. 1321-துர்மதி வருஷத்தில் தாமாகவே துறவறம் மேற்கொண்டு, இஷ்ட தேவதையை உபாசித்து வந்தார்.

பொன்மாரி

துறவறம் பூண்டதனுல் இவருக்கு ஜன்மம் வேறுன மையின் ஸ்ரீ தேவி இவருக்கு ஐசுவரியம் அருள வந்தனள். அதனை இவர் தமக்கென ஏற்காமல் நாட்டார் அனைவருக்கும் பயன்படுமாறு பொன்மாரியாகப் பெய்யப் பிரார்த்தித்தனர். இல்லங்களி லல்லாமல் வெளிநிலங்களில் விழுந்த சொர்ணத்தைக்கொண்டு இவர் அநேக தேவாலயங்கள், மண்டபங்கள், சிற்பத்திற னமைந்த கட்டடங்கள், கால்வாய்கள், கோபுரங்கள் முதலியவைகளை நிர்மித்தார்.

ஸ்ரீ வேதவியாச தரிசனம்

தபோதனராகவும், தர்மகாரிய நிர்வாகக ராகவும், யாதவ குலத்தரசனுன புக்கராஜனுக்கு மந்திரியாகவும், பரதேவதையின் பிரசாதம் பெற்ற சகலகலா வல்லவராகவும் இவர் விளங்கும் நாளில் அநேக அருமையான நூல்களை ஆக்கினுர். அவற்றுள் வேத பாஷியங்களை யெடுத்துக்கொண்டு இவர் கி. பி. 1331—பிரஜோத்பத்தி வருஷத்தில் காசி யாத்திரை செய்யலானுர். வழியில் எதிர்ப்பட்ட "சிங்கேரிபட்டர்" என்னும பிரம்மரக்ஷசைத் தம் புலமையால் வென்று, அவர் சொல்லிய குறிப்புக்களைக் கொண்டு ஸ்ரீ வேதவியாசரைக் காசிமாநகரில் தரிசித்துத் தம் வேத பாஷியங்களுக்கு அவருடைய அனுசாசனத்தைப் பெற்றுர். பின்பு, இவர் பதரிகாசிரமத்திற்குப் போய் ஸ்ரீ வியாசரால் மந்திரோபதேசமும் ஸ்ரீ வித்தியாசங்கர லிங்கமும் அருளப்பெற்றுர்.

வித்தியாநகர மூலம்

கி. பி. 1332 - ஆங்கிரச வருஷத்தில் மாதவர் விருபாக்ஷ (ஹம்பி) க்ஷேத்திரத்திற்கு மீண்டு, வித்தியாசங்கர லிங்கத்தை ஆராதித்துக்கொண்டு, தாந்திரிக கிரந்தங்களை

இயற்றி வந்தார்; புதிதாக ஸ்ரீ வித்தியாநகரம் என்னுமொரு நகரத்தை அமைப்பதற்கு அடிப்படை போட்டார்; இலக்ஷப் பிராம்மண போஜனம் செய்விப்பதற்காக ஆயிரக் கால் மண்டபத்தைக் கட்டினார். ஸ்ரீ வியாச தரிசனத்திற்கு வகை யறிவித்த "சிங்கேரிபட்டரை" மாதவர் ஸ்தாபனஞ்செய்து அவருக் கோர் ஆலயமு மமைத்தார்.

"வித்தியாரணியர்"

பின்பு, மாதவர் சிங்கேரிக்குச் சென்று, அப்போது ஜகத்குரு பீடாதிபதியாயிருந்த ஸ்ரீ பாரதீ தீர்த்தரை அடைந்து சேவித்தார். இவருடைய பிரபாவத்தை இவரது நூல்களாலும் அருஞ் செயல்களாலும் ஏற்கெனவே தெரிந்திருந்த பாரதீதீர்த்தர் நல்வரவு கொண்டாடி இவருக்கு முறைப்படி சந்நியாசம் அருளி, "வித்தியாரணியர்" என்னும் தீக்ஷா நாமமுஞ் சூட்டினார். பாரதீதீர்த்தருடைய குருவாகிய வித்தியாதீர்த்தரென்னும் முனிவரர் பரமகுரு முறையிற் கருணித்து வித்தியாரணியருக்குப் பிரமஞானமும் ஸர்வஜ்ஞத்துவமும் அருளினார்.

"ஜகத் குரு"

காலக் கிரமத்தில் பாரதீதீர்த்தருக்குப் பின்பு வித்தியாரணியர் "ஜகத் குரு" பீடாதிபதி யாயினர். இவர் அவ்வாதிபத்தியம் பெற்றவுடனே, தமக்கு ஆத்ம வித்தையை யுபதேசித் தருளிய பரம குருவாகிய வித்தியாதீர்த்தரிடத் துள்ள பக்தியினால் 'வித்தியா சங்கர தேவ ஸ்தானம்' என்றொன்றை அமைத்து, 'வித்தியா தீர்த்தேசுவர லிங்க'த்தை அதனில் பிரதிஷ்டை செய்தார். அந்த வித்தியா தீர்த்த முனிவரே காஞ்சீபுரத்தில் புதிதாக ஒரு மடத்தை ஏற்படுத்தி, அதற்குக் 'காமகோடி பீடம்' எனப் பெயரிட்டனர் என்பார்கள். வித்தியா சங்கர தேவாலயத்தை யமைத்த

ஸ்ரீவித்தியாரணியர் ஹரிஹரபுக்கராஜன்

தல்லாமல் வித்தியாரணியர் ஸ்ரீ சாரதா ஆலயத்துக் கோபுரத்தைக் கட்டுவித்தார்; 'வித்தியாரணியபுரம்'' என்னுமோர் அக்கிரகாரத்தை நிர்மித்தார்; முற்கூறியவாறு சிங்கேரி பட்டருக்கு ஓர் ஆலயமும் நிர்மாணஞ் செய்தார்.

சாயணர்

வித்தியாரணியர் எங்கே யிருப்பினும் விருபாக்ஷத்தையும், யாதவ குலோற்பவனான புக்க ராஜனையும் மறக்கவில்லை; அந்த ஸம்ஸ்தானத்து மந்திரி பதவியைத் துறக்கவில்லை. இவர் வெளியே சஞ்சரிக்குங் காலங்களில் இவருடைய இளவலாகிய சாயணர் இவருக்குப் பதிலாக அமைச்சு புரிவார். அவர் கல்வியிலும், திறமையிலும் முன்னவர்க்குப் பின்பட்டவ ரல்லர்; வேத பாஷியங்களியற்றியதில் சேட்டருக்கு உற்ற உதவியா யிருந்தவர், 'ஸர்வஜ்ஞகல்பர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். அவர் வித்தியாரணியருக்குப் பின்பு அந்த ஸம்ஸ்தானத்து முதன் மந்திரியாக விவகரித்தார்.

ஹரிஹரபுக்கராயன்

ஜகத்குரு வித்தியாரணிய சுவாமிகள் சிங்கேரியிலிருந்து தாது வருஷத்தில் (கி. பி. 1336) விருபாக்ஷத்திற்குத் திரும்பி வந்து வித்தியா நகர ராஜதானியின் நிர்மாணத்தைப் பூர்த்தியாக்கிப் புக்கராஜனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தார். அவனுக்கு இவர் 'ஹரிஹரராயன்' எனப் பெயரிட்டு இராச்சியத்தை யளித்தார். பின்பு ஏழு ஆண்டுகள் உழைத்து வித்தியாநகர மென்னும் பட்டணத்தை இவர் அமைத்தார்.

சிம்மாசனாதிபதி

அரசனாகிய ஹரிஹர ராயனுடைய வேண்டுகோட்கு இணங்கி மந்திரியாகிய வித்தியாரணியர் தாமே சிம்மாசனா

ரோகணஞ் செய்து, அவனுக்குப் பதிலாக 26 - ஆண்டுகள் இராச்சிய பரிபாலனஞ் செய்தார். தலைநகரமாகிய வித்தியா நகரம் 'ஜயந்தி பட்டணம்' எனவும், 'விஜய நகரம்' எனவும் வழங்கியது. இவர் தம்முடைய ஆட்சிக் காலத்தில் மாற்ற ரசர்களை வென்று, அவர்களுக்கு வீரச் சொர்க்க மளித்தார்; நீதியான ஆட்சியினால் குடிகளின் மனத்தைக் கவர்ந்தார்; பற்பல வகைகளிலும் அவர்கள் வளமுறச் செய்தார்; நீர்ப் பாசனங்களை யமைத்து வேளாண்மையை வளர்த்தார்; கைத் தொழில்களை யாதரித்து வர்த்தகத்தைப் பெருக்கினார்; சாலை களைச் சீராக்கினார்; கோயில்களையுங் குளங்களையும் அமைத் தார்; வைதிக ஆசாரங்களை வற்புறுத்தினார்; இலெளகிகக் கலைகளைக் கற்பிக்கப் பாடசாலைகளை ஏற்படுத்தினார்; வில் வித்தை, மற்போர், குதிரை யேற்றம் முதலானவைகளைத் தாமே முன்னின்று சற்பித்துப் போர்ப்படையைப் பலப் படுத்தினார். இவ்விதமாக நிர்வகித்து ஸ்ரீ வித்தியாரணியசுவா மிகள் விஜயநகர ஸம்ஸ்தானத்தை 27-கோடி பாக்கியமுள்ள

சாம்ரா॥ஜ்யம்

ஆக்கி, கி. பி. 1362-ஆம் ஆண்டில் ஹரிஹரராயனுக்கு ஒப்புவித்து, அவனை ஏகசக்ராதிபதியாகப் பட்டாபிஷேகஞ் செய்வித்தார். இந்தச் சாம்ராஜ்யம் (Empire) மைசூர் ஸம்ஸ் தானத்தின் தென்கோடி வரையிலும், மேலைக் கடற்கரையி லுள்ள உத்தர கொங்கணம் (North Canara) வரையிலும், தக்ஷிண பரதக்கண்டம் முழுவதும் வியாபித்திருந்தது. ஹரிஹரபுக்கராயன் கி. பி. 1379-ஆம் ஆண்டில் பரகதி யடைய, அவனுடைய குமாரன் இரண்டாம் ஹரிஹரராய னென கி. பி. 1401 வரையில் அரசாண்டான். அவனுக்கும் ஸ்ரீ வித்தியாரணியர் சிறிதுகாலம் பிரதான மந்திரியா யிரு

தனர். இந்தச் சாம்ராஜ்யம் கி. பி. 1565-ஆம் ஆண்டில் தேலிக் கோட்டையில் நிகழ்ந்த போரில் சிதைவுற்றது.

கோவாக்கோட்டை

இரண்டாம ஹரிஹரனுடைய வேண்டுகோட்கிணங்கி வித்தியாரணியர் பின்னுள் தாமே திரும்பவும் அரசு செலுத்தினர். அப்போது வெற்றி விருப்பம் மேலிட்டவராய் இவர் கொங்கணதேசத்தின்மீது படை யெடுத்து, அதன் தலைநகரமாகிய கோவா என்னுங் கடற்றுறைப் பட்டணத்தை முற்றிச்கை யிட்டார். இவர் தாமே படைத் தலைமை பூண்டு அந்தக் கோட்டையைத் தாக்கித் தகர்த்துத் தம் புஜபல பராக்கிரமத்தினுல் துருக்கரை வென்று, அந்தத் தேசாதிபத்தியத்திற் குரியவர்களாகிய சப்தநாதர்கள் என்னும் யாதவ மன்னர்க்குப் பட்டங்கட்டி யவர்களை அங்கே நிலைப்படுத்தி, இராச்சியத்தையும் அவர்களுக்கு ஒப்புவித்தார்.

"மாதவபுரம்"

அவ் வெற்றிக் குறியாக வித்தியாரணியர் 25-கிராமங்களுள்ள குசோர (குஞ்சர)ப் பிரதேசத்திற்கு "மாதவபுரம்" எனப் பெயரிட்டு, அதனை வேதபாஷிய மெழுதுவதில் தமக்குத் துணைபுரிந்த 24-பண்டிதர்களுக்கு கி. பி. 1391-ஆம் ஆண்டில் சூரியகிரகண காலத்தில் சாசனபத்திர மூலமாகத் தானஞ் செய்தார்.

ஸ்ரீ விரூபாக்ஷ பீடம்

சிரௌதஸ்மார்த்த ஆசார வியவகாரங்களை நிர்வகிக்கவும், அத்துவைத வேதாந்த வுண்மைகளை ஜனங்களுக்குப் போதிக்கவும், வைதிக சம்பிரதாயங்களை ஆதரித்து

வளர்க்கவும், வித்துவான்களைச் சம்மானித்துச் சாஸ்திரப் பயிற்சியைப் பெருக்கவும் ஸ்ரீ வித்தியாரணியர் விரூபாக்ஷத்தில் சங்கராசாரிய பீடமொன்றை ஸ்தாபித்தார்; அதற்குச் சார்பாக எட்டு மடங்களை வேறு வேறு ஸ்தலங்களில் அமைத்து, அவை யொவ்வொன்றிற்கும் ஒவ்வொரு துறவியைத் தலைவராக நியமித்தார்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர்

தமிழ் நாட்டில் பிரபலமாக விளங்கிய ஸ்ரீ வேதாந்த தேசிகரும் வித்தியாரணியரும் சம காலத்தவர்க ளென்பது பிரசித்தம். அதுவன்றி, இவர்களிருவரும் சின்னாள் ஒரே ஆசானிடத்திற் கலை பயின்றன ரென்பார்கள். இருவரும் நண்பர்கள், இணையான மேதாவிகள். தேசிகர் 102-ஆண்டுகள் ஸ்ரீவித்திருந்ததாகவும், வித்தியாரணியர் 119-ஆண்டுகள் இருந்ததாகவும் சொல்வார்கள். ஸ்ரீ மத்துவாசாரியருடைய நேர் சிஷ்யரான அக்ஷோப்பிய தீர்த்தருக்கும் வித்தியாரணியருக்கும் துவைதாத்துவைத சித்தாந்தங்களின் விஷயமாக விவாதம நடந்த தெனவும், இவர்க ளிருவருக்கும் வேதாந்த தேசிகர் மத்தியஸ்தம் செய்யப் போந்தன ரெனவும் ஒரு கதை உலவுகின்றது. ஸ்ரீ மத்துவ பரம்பரையின் வமிச விருக்ஷ மொன்று அந்த வகையைச் சேர்ந்த ஸ்ரீ ராகவேந்திர சுவாமி மடத்தாரால் கி. பி. 1875-ஆம் ஆண்டில் வெளியிடப்பட் டிருக்கின்றது. அதன்படி அக்ஷோப்பிய தீர்த்தர் கி. பி. 1239-ஆம் ஆண்டில் சித்தி யடைந்தார். வித்தியாரணியர் கி. பி. 1300-முதல் 1400-வரையில் இருந்ததாக அநேக சாக்ஷியங்களினால் ஏற்படுகின்றது. அப்படியாயின், வித்தியாரணியர் பிறப்பதற்கு 50-வருஷங்களுக்கு முன்னால் சித்தியடைந்த அக்ஷோப்பிய தீர்த்தருக்கும் இவருக்கும் விவாதம் நடந்ததென்பது பொருந்துமோ?

ஹம்பீ பட்டணம்

வித்தியாரணியர் அமைத்த விஜயநகரம் 'ஹம்பீ' எனப் படுகின்றது. இது பல்லாரி ஜில்லா ஹொசப்பேட்டைத் தாலூக்காவில் துங்கபத்திரைக் கரையிலுள்ளது. இதுவே இராமாயணத்திற் கூறப்படும் கிஷ்கிந்தை. 'வித்தியாரணியர்' என்னும் சிறப்புப் பெயரினாலே மாதவருடைய கல்விப் பெருமை விளங்குகின்றது. உண்மையில் இவர் கல்விக் கடலே யென்பதற்கான அடையாளங்கள் ஹம்பீ பட்டணத்தில் இருக்கின்றன. இஃது இப்பொழுது பாழாயிருக்கின்றது. இந் நிலைமையிலும் இதன் மகத்துவம் புலப்படுகின்றமையின், இவ் வற்புதத்தைக் காண்பதற்குப் பிறதேயத்தாரும் இந்தப் பிரதேசத்தைச் சுற்றிப் பார்த்துப் புகைப் படங்க ளெடுத்துச் செல்கிறார்கள்.

குகை புகல்

கி. பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்ரீ வித்தியாரணியர் குகைக்குள் பிரவேசித்து விதேக கைவல்ய மெய்தினர். அந்தக் குகை ஸ்ரீ விருபாக்ஷரின் ஆலயத்திற்கும் சிங்கேரி பட்டரின் கோயிலுக்கும் இடையில் உள்ளது. அதனை மறைத்து கி. பி. 1888-ஆம் ஆண்டில் ஸ்ரீவித்தியாரணியாலயம் கட்டினார்கள். இவருக்குத தினந்தோறும் பூஜை நைவேத்தியம் முதலியன முறையே நடைபெறுகின்றன. இவர் இயற்றிய அரும் பெருங் காரியங்களையும், இவருடைய மகிமையையும், அரசிய லறிவையும் பாராட்டி அர்ச்சிப்பதற்கேற்ற அஷ்டோததரசத (108) நாமாவளியும் உண்டு.

நூல்கள்

மாதவரென்னும் வித்தியாரணியரும் தம்பியாகிய சாயணரும் ஆக்கிய நூல்களின் பெயர்களைத் தொகுத்தெழுதுவதற்கு இங்கு இடங் காணாது. அவை நூற்றுக் கணக்கானவை எனபார்கள். அவற்றுள் 95-நூல்கள் இப்போது பிரசித்தமாகத் தெரியும். சுருதி ஸ்மிருதிகளின் வியாக்கியானங்கள் மிக அருமையானவை.

8. ஸ்ரீ வேதாந்த தேசிகர்

வமிச பரம்பரை

ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் தம்முடைய வைணவ மார்க்கம் நிலைகுலையாது காக்கும் பொருட்டு ஏற்படுத்திய 74-சிங்காசனாதிபதிகளின் பரம்பரையில் வந்த அனந்த சோமயாஜி என்பவர் ஒருவர் காஞ்சீபுரத்தில் இருந்தார். அவருடைய புத்திரர் புண்டரீக சோமயாஜி எனப்படுவர். இவரிடமாக அனந்தசூரி என்பவர் உதித்து நாரணனது திருத்தொண்டர்களுள் முதன்மையானவராக விளங்கினர். அப்பிள்ளார் என்னும் மற்றொரு ஸ்ரீ வைஷ்ணவ சிகாமணியின் சகோதரி தோதாரம்மனை* அனந்தசூரி மணந்து இல்லறநெறி சற்றும் வழுவாது நடத்தி வந்தார். மணவிழாக் கடந்து பன்னாள் மகப்பேறில்லாதவராய் அனந்தசூரி மாயவனுடைய திருநாமத்தை மறவாது அனுதினம் மனமார வாழ்த்தி வந்தார். அவருடைய சொப்பனத்தில் திருவேங்கட முடையான் அந்தணச் சிறுவனுருக்கொண்டு போந்து, தனது உறைவிடமாம் வேங்கடமாமலைக்கு வரக்கிளந்து கரந்தனன்.

திருமணியாழ்வார்

பத்தினியுடன் அனந்தசூரி திருவேங்கடச் சிகரியிற் சென்று திருக்கோயிலை வலம் வந்து, கோயிற் போனகமருந்தி, ஒரு வைணவருடைய மாளிகைபுக்குத் துயின்றிருக்கு மளவில் அவருடைய கனவின்கண் கமலிநாதர்,

நமது ஆக்கினையைக் கடவாது நம்மை அடைந்துள்ள நுங்கட்கு ஒரு புத்திரப்பேற்றை இதோ அளித்தோம், கொள்வீராக

என வாழ்த்துக் கூறித் தம்பால் அருக்கனெனன வொளிருமணியாழ்வாரை† ஈந்து,

---

* இவ் வம்மை கிடாம்பி பத்மநாபர் என்னும் ஸ்ரீரங்கராஜப் பிள்ளானது குமாரி, அப்பிள்ளாரது மதனி என்பர் சிலர்.

† ஆராதனைக்குரிய கைம்மணி.

இதனை விழுங்குமாறு உமது தேவியாரிடம் அளிப்பீரேல் அவரிடமாக ஓர் அழகிய குமாரன் உதிப்பன். அவனால் இவ் வுலகில் இராமாநுஜ சித்தாந்தம் நிராடங்கமாக * நிறுத்தப்படும்

என்றருளி அந்தர்க்கத மாயினர்.* அந்த மணியை அனந்த சூரி தம் மனையாளிடம் கொடுத்ததும், அவள் அதனை விழுங் கியதும் அத் தம்பதியருடைய கனவில் நிகழ்ந்த காரியங்க ளாம். வைகறைப் போழ்து எம்பிராற்கு அபிகமனாராதனம்† செய்வதற்கு அர்ச்சகர் கோயிற் கவாடங்களைத் திறந்து உப கரணங்களைச் சித்தமாக்குகையில் திருமணியாழ்வாரைக் காணாது அவர்கள் திகைத்தனர். அப்போது முற்று முணர்ந்த முளரியாட் கொழுநன் ஜீயர்பால் ஆவேசித்து,

இக் காசினியில் இராமாநுஜ சித்தாந்தார்த்தமாக இவ் வனந்த சூரிகள்பால் பெரும்பெயர் சூட்டப்பெறும் ஒரு குழவியாக உதிக்கும் வண்ணம் நாம் நமது திருமணியாழ்வாரைத் தந்தருளி னேம். இன்றுதொட்டு நம் சந்நிதியில் திருமணியைச் சேவிக்க வேண்டாம். ஆயின், கைம்மணியின்றிச் செய்யும் ஆராதனை அசு ரரை உகப்பிக்குமன்றே யெனின், அது நேராவண்ணம் இனி நம் மாட்டுள்ள நிலைமணியை ஆகம முறைப்படி சேவித்துத் திருவா ராதனஞ் செய்யக்கடவீர்கள்

எனச் செப்பித் தாம் நீங்கினர்.

அவதாரம்

அனந்தசூரிகள் விடை பெற்றுக் கச்சிநகரிலுள்ள தூப் பில் என்னும் தம் உறைவிடம் சேர்ந்தனர். முன்னங் கூறிய கனவுநாள் தொடங்கித் தோதாரம்மைக்குக் கர்ப்போதரம் வாய்த்தது. அக்குரூரரின் அருமையன்னையாகிய காந்தினீ தேவியையும், அஸ்மகன் என்னும் இராஜ ரிஷியையும், பராசர முனிவரையும்யானத் திருமணியாழ்வார், உலகத்து இயற்கைக்கு மாறாக, பன்னீராண்டளவும் சூலின்கண் இருந்து, கலி நாலாயிரத்து முந்நூற்றெழுபான் ஆண்டுக

* நிராடங்கமாக = தடையின்றி. †அந்தர்க்கதம் = மறைதல்.

† அபிகமனாராதனம் = இளங்காலைப் பூசை.

ளுக்குமேல், சுக்கிலவாண்டு* கன்னிமதி சுக்கிலபக்கத் தசமி சௌமியவாரங் கூடிய ஓணவுடுவில் ஓர் ஆண்குழவியாக உதித்தனர்.

அத்திகிரியா ரடைக்கலம்

செல்வக் குழவியின் சனனத்தைச் செவியேற்ற கிடாம்பி அப்பிள்ளார் குழவியைக் குளிர நோக்கிக் களிப்புற்று அனந்தசூரிகளைக் கொண்டு சாதகருமஞ் செய்வித்துத் "திருவேங்கட நாதாரியன்" எனத் திருப்பெயர் சூட்டி, இரக்ஷையின் பொருட்டுத் திருவிலச்சினை† ஈந்தனர். ஆண்டு நிறைவு தினத்தன்று அனந்தசூரிகளும் மற்றவர்களும் குழந்தையைத் தேவாலயத்திற்கு எடுத்துக்கொண்டுபோய்ப் பெருந்தேவித் தாயாரை முன்னிட்டுப் பேரருளாளரை அட்டாங்கப் பிரணமஞ் செய்வித்தனர். அப்போது, ஆய்ந்த மனத்து அண்ணலாகிய அவ் வெம்பெருமான் இக் குழந்தையை விளித்து, "நீவிர் நம் இராமாநுஜனைப்போலாகக் கடவீர்" என அர்ச்சகமுகத்தான் அருளிச் செய்தனர்.

கல்விப் பயிற்சி

தூப்பிற் பிள்ளையாந் திருவேங்கடநாதாரியர் பள்ளிக் கூடத்தில் வாசிக்குங்கால் மாதுலராகிய அப்பிள்ளாரின் ஆசானும் நடாதூர் அம்மாள் என்பவர் இச் சிறுவரைக் குறித்து, 'இஃது ஓர் அவதார விசேடம்" என்று சொற்றனர். இவர் வேதங்களையும் வேதாங்கங்களையும் வெகு விரைவில் பயின்று தேர்ந்தனர். திருமந்திரார்த்தம், ஸ்ரீ பாஷியம் ஆகிய வனைத்தையும் மாதுலரிடத்துப் பயின்றனர். இவருக்கு வயது இருபஃது ஆயது. இவரது வளங்களைக் காண்டொறுங்

---

* இவ் வவதாரம் சாலிவாகன சகம் 1191, விபவஹூ எனச் சொல்வாரும் சிலர் உண்டு.

† திருவிலச்சினை = திருமாலின் ஆயுதங்களாகிய சங்கம், சக்கரம், கதை, கட்கம், சார்ங்கம் என்னும் ஐம்படைத்தாலி (இலச்சினை = குறி, முத்திரை).

சாண்டோறும் எல்லாரும் அதிசயங் கொண்டார்கள். தக்க குலசீல விலக்கணங்க ளமைந்த திருமங்கையார் என்ற கன்னிகையை அப்பிள்ளார் இவருக்கு மணஞ் செய்வித்தார். அதுமுதல் இவர் காஞ்சீபுரத்தில் ஸ்ரீராமாநுஜ சித்தாந்தப் பிரவசனஞ் செய்துகொண் டிருந்தார். இவருக்கு அப்பிள்ளார் ஸ்ரீவைநதேய மந்திரத்தை உபதேசித்து, "நீவிர் இராமாநுஜ சித்தாந்த ஸ்தாபக ராகக் கடவீர்" என்று உள்ளன் போடு வாழ்த்தினார்.

மந்திரசித்தி

பிற்பட்டு, இவர் பெரிய திருவடிநயினாரைச்* சேவிக்க வெண்ணித் திருவயீந்திரபுரத்திற்கு ஏகித் தேவநாயகப் பெருமானைத் திருவடி தொழுது, ஔஷதாத்திரி மலையின் மீது அசுவத்த விருக்கத்தின் கீழிருந்து ஸ்ரீ வைநதேய மந்திரத்தை இலக்ஷக்கணக்காக ஆவர்த்தித்துக்கொண்டிருந்தார். இவருக்குப் பெரிய திருவடிநயினார் சுப்பிரசன்னராகி, ஸ்ரீமத் ராமாநுஜ சித்தாந்த ஸ்தாபனார்த்தமாக ஸ்ரீ ஹயக்கிரீவ மந்திரத்தை உபதேசித்தருளினர். இவர் அம் மந்திரத்தை மனனஞ் செய்துகொண்டிருக்க, ஹயக்கிரீவ பகவான் இவர்முன் எழுந்தருளி, பன்னுகலை நால்வேதப் பொருளை யெல்லாம் பரிமுகமா யருளினார்.

"கவிதார்க்கிக சிங்கம்"

ஒருதினம் இவர் ஸ்ரீ பாஷியாதிப் பிரவசனஞ் செய்துகொண்டிருக்கையில் பெரியவராவார் இவரது ஆசுகவி பாடுந் திறலைக் காணவேண்டிச் சில வினாக்களை விடுத்தனர். அவ்வினாக்களுக்கேற்ற விடைகளை அங்ஙனே இவர் கீர்வாணச் சுலோகங்களினாலும் செந்தமிழ்ப் பாக்களினாலு மடக்கி ஆசுகவியாகப் பாடி அப் பெரியாரைக் களிப்பிக்க, அன்னார் கழிபேருவகை பூத்தவராய், "இன்றுதொட்டு இப் பிள்ளைக்குக் 'கவிதாக்கிக சிங்கம்' எனத் திருநாமம் வழங்கக் கடவது" என அருளிச் செய்தனர்.

* பெரிய திருவடிநயினார் = கருடன்.

கச்சிவாசம்

சின்னுளாயபின் நமது 'கவிதார்க்கிக கோளரி' திருக்கோவலூருக்கு எழுந்தருளிப் பின்னர் முத்திதருங் கச்சி நன்னகரை யடைந்து, "தித்திக்கு மெங்கள் திருவத்தியூரைச் சேர்பவருக்கே" என்றருளிப் போந்து, பண்டைபோல் சித்தாந்தப் பிரவசனம் செய்துகொண் டிருந்தனர். இடையிடையே இவர் திருவட்டபுஜம், திருவெஃகா, திருவேளுக்கை, திருப்புட் குழி என்னும் தலங்களின் பெருமான்களைச் சேவித்து வந்தனர். ஸ்ரீ பாஷியகாராராலே பிரசாதிக்கப் பெற்றுத் திருக்குருகைப்பிரான் ஆராதித்து வந்த ஸ்ரீஹயக்கிரீவ சாளக்கிராமம் அப்பிள்ளாரின் மருகராகிய புண்டரீகாக்ஷரிடம் இருந்தது. அந்த இவுளிமுகப்பெருமானை அவர் வேதாந்த கோளரியிடம் ஈய, இவர் களிப்புற்றுப் பயபக்தி யாதிக்கத்தோடு பிரதிக்கிரகித்தவராய் நாடோறும் முறைவழுவாது ஆராதித்து வந்தனர்.

திருமலைச் சேவை

பின்னர், இவர் திருவேங்கடத் தமுதனை அஞ்சலிக்கப் பேரவாக்கொண்டு, கடிகாசலத்தை * யண்மி அக்காரக்கனியாம் அழகிய சிங்கரைத் தவுத்தியப் பிரணமஞ் செய்து, ஆராமனததோடு அவணீத்துத் திருமலையைக் கிட்டித தண்டன் சமர்ப்பித்துவிட்டு மலைமீது ஏறினுர். ஆலயத்தினுட் புகுந்து, கர்ப்பக் கிருகத்தில், 'படியாய்க் கிடந்தும் உன் பவளவாய் காண்பேனே' என்ற குலசேகரன் படியருகே இவர் கிடந்தனர். பின்னர்த் திருவேங்கடமுடையானுடைய திவ்விய மங்கள விக்கிரகத்தைத் தொழுது அவனுடைய தயா குண விஷயமாக தயாசதகம் என்றெரு நூலை இவர் வடமொழியில் அருளிச் செய்தனர்.

உத்தரதேச சஞ்சாரம்

அவண் சின்னுள் எழுந்தருளியிருந்து தூப்பிற்பிள்ளை வடமதுரை யாதியாய முத்திநற் றலங்களை யடைந்தனர்.

---

* கடிகாசலம் = சோளசிங்கபுரம், Sholinghar.

ஆங்காங்குள்ள அருட்பெரும் பிழம்பாகிய எம்பெருமான்களை யாராதித்து இவர் ஆங்குள்ளவர்களைத் திருத்திப் பணி கொண்டு, அன்னார்க்குச் சம்பிரதாயார்த்தங்களை உபதேசித் தனர். சின்னாடுகளைக் கடந்து துங்கபத்திரா நதிக்கரையில் இவர் இளமையில் தம்மோடு கல்வி பயின்ற மித்திரராகிய வித்தியாரணியர் என்ற துறவியைக் கண்ணுற்றுப் பேரா னந்த முற்று அளவளாவினர். ஆங்கிருந்து இவர் துவாரகை, வடமதுரை, ஸ்ரீ கோவர்த்தனம், பிருந்தாவனம், புஷ்கரம், நைமிசாரணியம், பதரிகாச்சிரமம், சாளக்கிராமம் முதலாய திவ்விய நகரப் பெருமான்களை அஞ்சலித்துக்கொண்டு, இனகுலத்திற்கு இனனென்ன * இலங்கிய இரகுபதிவாழ் திருவயோத்தி மார்க்கமாக வாராணசி புக்குப் பாகீரதி நீரில் திருத்தியாகத் திளைத்தனர்.

ஆங்கணிருந்து இவர் ஸ்ரீ புருஷோத்தமம், ஸ்ரீ கூர்மம், சிம்மாததிரி, அகோபிலம், திருமலை, திருவெவ்வுள்ளூர், திரு வல்லிக்கேணி, திருக்கடன்மல்லை, திருநீர்மலை, திருவட வெந்தை முதலாய பல திவ்ய தேசங்களைச் சார்ந்து, ஆங் காங்கு மங்களாசாசனஞ் செய்தருளிப் போந்தவராயினர். அங்ஙனே இவர் ஸ்ரீ பெரும்பூதூரடைந்து, அவணுள்ள எம் பெருமானார்மாட்டு என்றும் பிரியகில்லா சந்துஷ்ட மனத் தரா யிருந்தனர். பின்னர்க் கச்சியம் பதியை யுடைந்து பண்டையேபோல் சித்தாந்தப் பிரவசனஞ் செய்துகொண் டிருந்தனர்.

க்ஷுத்திர நிரசனம்

பஞ்சகால பராயணராய் இவர் மண்ணுலக வாழ்க்கை யில் மனமாழாது விரத்தராகி, வடமொழி தென்மொழி யென்னும் இருகடல்களின் கரைகண்ட கலாவல்லுநராக விளங்கும் நாளில் மாயசந்நியாசி யொருவன் இவருடன் வாதிட்டுப் புறமுதுகிட்டோடி, க்ஷுத்திர மந்திரப் பிர யோகத்தால் தூப்பிற் பிள்ளையின் உதரத்தில் நீர் உபாதியை

* இனன் = சூரியன், அரசன்.

யுண்டாக்கினன். அதனை யுணர்ந்து நிகமாந்ததேசிகனார் தம் எதிரே நின்றதொரு தம்பத்தைக் கீறி, அதன் வழியாக அந் நீரத்தனையும் பெருகும்படி யியற்றினர்.

"வைராக்கிய பஞ்சகம்"

தம்மை யண்டினார்க்கு அருள் புரிந்துகொண்டு தேசிகனார் உஞ்ச விருத்தியே * பெருங்கடமைப்பாடென மதித்து நிகழ்த்தி வருவுழி, முற்கூறிய நண்பராகிய ஸ்ரீ வித்தியாரணியர் இவர்பால் இரங்கிய மனத்தினராய்த் தம் அரயனைக் கொண்டு பெரும் பொருளை யீயுமாறு செய்விக்கக் கருதித் தேசிகரை ஆண்டடைய வேண்டினர். அந் நிருபத்தை யுற்று நோக்கிய தேசிகனார் விஷயாதிகளில் தமக்குள்ள வைராக்கியத்தையும், பரம னிடத்திலுள்ள பிரேமாதிக்கத்தையும் தெளிவுறக் காட்டுந் தன்மைத்தாய பஞ்ச சுலோகங்களை ஓர் வட்டினிடம் வரைந்து வித்தியாரணியர்பால் விடுத்தனர்.

"வேதாந்த தேசிகர்"

திருவரங்கத் திருப்பதியின்கண் பல்லவாய மாயாவாத வித்துவான்கள் குழுமிப் பரம சாதுக்களாம் வைணவ மணிகளை நிர்ப்பந்திப்பது கேட்டுக் கவிதார்க்கிக சிங்கம் அதி விரைவில் அந் நகரை யடைந்தனர். அரங்கததமுதன உவந்தருளி, இவர்க்குத் தீர்த்தாதிகளைப் பிரசாதிப்பித்தனன். மாயாவாதிகள் மனத் தழுக்காறு மிக்கவராய் இவரோடு ஒரு வாரங்காறும் வாதிட்டுத் தோற்றனர். அப்போது நிகழ்ந்த வாதானுவாதங்களை இவர் சததூஷணி என்னும் நூலாக்கினர். அரங்கநாதன் நன்கேயுவந்தருளி,

நீவிர் நமது ஸ்ரீயப்பதித்துவாதி குணநிரூபகமான இராமாநுஜ சித்தாந்தத்தை நிலைப்படுத்தி வைரிகளை நிராகரித்தமையால், நம்

---

* உஞ்ச விருத்தி = உரலருகிலும், வயலிலும் ஒவ்வொரு தானியமாகப் பொறுக்குதல். இவ்விடத்தில் உபாதான விருத்தி (ஏற்பு) என்பது பொருள்.

ஒருவருக்கே உரித்தாய வேதாந்த தேசிகர் என்ற திருநாமத்தை இன்றுதொட்டு நீவிரே பெறக் கடவீர்

எனச் சாற்றி யனுக்கிரகித்தனர். இவருடைய சித்தாந்த நிர்வாகத்தைக் கண்டு அரங்கநாச்சியார் சாலவும் வியந்து இவருக்கு சர்வ தந்திர சுவதந்திரர் என்னும் நவ நாமம் அருளினர். தேசிகர் கிருதார்த்தராயினர்.

"சங்கற்ப சூரியோதயம்"

பின்னர்த் தேசிகனார் பரமதநிரசனமும் ஸ்வமத ஸ்தாபனமுமாகப் பல பகவத் விஷயப் பிரபந்தங்களைச் செய்தருளி உடையவரது திருவுளக் கருத்தைப் பிரகாசிப் பித்துக்கொண்டு அரங்கமா நகரில் எழுந்தருளியிருந்தனர். சர்வ தந்திர சுவதந்திரரான நிகமாந்த தேசிகரது மான் மியத்தைச் செவிமடுத்த கிருஷ்ணமிசிரர் என்ற வட தேய வித்துவான் வேதாந்த விஷயமாக இவருடன் வாதிட்டுத் தோற்றுத் தாம் செய்திருந்த "பிரபோத சந்திரோதயம்" என்னும் அத்துவைத நாடகக் கிரந்தத்தைக் கடாக்ஷிக்க வேண்டு மென்றனர். இவரும் "நாம் செய்துள்ள 'சங்கற்ப சூரியோதயம்' என்னும் விசிஷ்டாத்துவைத நாடகக் கிரந் தத்தை நீவிரும் நோக்கக் கடவீர்" என்று சொல்லி, அற்றை நிசிதினியிலேயே "சங்கற்ப சூரியோதயம்" என்ற நாடகத்தை இயற்றினர். அது போலக் கல்விமதங் கொண்ட டிண்டிமன் என்னும் கவிஞன் இயற்றிய "இராமாப்பியுதயம்" என்னும் நூலுக்குப் பிரதியாக "யாதவாப்பியுதயம்', "ஹம்ஸ சந் தேசம்" என்னு மிரு நூல்களையும் உடனே அருளிச் செய்தனர்.

திவ்வியதேச மங்களாசாசனம்

சின்னாள் கழியலும் நம் குரவர்பிரான், திருக்குடந் தையாதியாகத் திருமெய்யம், திருக்கோட்டியூர், திருமா லிருஞ்சோலை, திருமோகூர், மதுரை, திருப்புல்லாணி என்னுந் திவ்விய தேசங்களைச் சேவித்துத திருவணை யாடினர். ஸ்ரீ வில்லிபுததூருக்கும் ஆழ்வார் திருநகரிக்

கும் எழுந்தருளி, அந்தப் பிரதேசத்து நவதிருப்பதி எம்பெருமான்களையுஞ் சேவித்து, வானமாமலை, திருக்குறுங்குடி, திருவண்பரிசாரம், திருவாட்டாறு, திருவனந்தபுரம் முதலாய திவ்விய தேசதது எம்பெருமான்களை ஆராமனத்தோடு ஏத்தித் தொழுது, கோயிலுக்கு எழுந்தருளினர். மீண்டும் திருவெள்ளறை, ஸ்ரீ முஷ்ணம ஆதிய திவ்விய தேசங்களைக் கடந்து கச்சியமபதியை யடைந்து வேதாந்தப் பிரவசனம் புரிந்துகொண் டிருந்தனர்.

பிடாரன் பங்கம்

பாம்பாட்டி யொருவன் சில துஷ்டர்களின் துர்ப்போதனைக்கு இலக்காகிப் பிள்ளையை யண்மித் தன்னை மந்திர வாதத்தில் வெல்லின் 'சர்வ தந்திர சுவதந்திரர்' என்னும் விருது சாலும், அன்றேல் ஒவ்வாது என்று பறைந்து, தன் மாட்டுள்ள மகாநாகங்களைத் தூண்டினன். நிகமாந்த கோளரி யாவார், அவ் வராவாட்டி காண, தம் முன்னர் அடுத்தடுத்து ஏழு கீற்றுக்களைப் புவிமிசை வரைந்தனர். அவ் விஷ குண்டலிகள் சில கீற்றுக்களைக் கடக்க மாட்டாதனவாக, அவன் சில பேராாக்களைக் கடத்தினன். அவையும் ஏலாதனவாக, அவ் வாண்டி 'சங்கபாலன்' என்னும் மகாசர்ப்பத்தை ஏவினன். அஃது ஏழு கீற்றுக்களையுங் கடந்து பிள்ளைபால் ஆவேசிக்க அண்மியபோது இவர் அசனியேறென ஆர்த்துக் "கருட தண்டகம்" பாடினர். அக்கணமே, தயார்ணவமான பெரிய திருவடி நயினர் ஆண்டேகிச் சங்கபாலனைப் பற்றிக்கொடுபோயினர்.

அயக்கிரீவ விழா

ஈதிவ்வாறொழியத் தூப்பிற்பிள்ளை காஞ்சிபுரி நீத்துச் சேடவரைபுக்குச் சேவாக் கிரமத்தால் திருவேங்கடமுடையானை நமஸ்கரித்து அவனது அருள் வெள்ளத்தில் திளைக்கையில் திருமலைஜீயர் இவருக்குச் சகல வரிசைகளையும பிரசாதித்துச் சத்திர சாமராதி வைபவங்களோடு இவர் ஊர் வலம் வருமாறு விழா நிகழ்த்தினர். பெருமான் முன்னிலே

யில் நியமனம் பெற்று இவர் கோயிலேற எழுந்தருளினர். மார்க்கத்தில் திருக்கோவலூ ரருகே அடிசிலாக்குவதற் கேலாது தம் இஷ்டதேவதையான ஸ்ரீ ஹயக்கிரீவமூர்த்திக் குத் தீர்த்தத்தை நிவேதித்து இவர் உபவாசத்துடனே ஒரு திரைவர்ணிக வைணவன் மாளிகையில் ஓர் இரவு தங்கி னர். அர்த்தயாமத்தில் சுவேதாசுவ மொன்று அவனுடைய கடலை மூட்டைகளைத் தின்னக் கண்டு அவன் இவரை எழுப் பினன். அவனைக் கொண்டு நிகமாந்தாரியர் பால் தருவித் துப் பெருமானுக்கு ஊட்டி அவனை நோக்கி, "இனி இப் பாண்டிவுளி நினது கடலையை உணாது" என்றனர். அவன் ஆஹ்லாதித்து மற்றை நாளில் ஸ்ரீ ஹயக்கிரீவப் பிரானுக் குப் பெருவிழா நிகழ்த்தினன்.

வாவி வளைத்தல்

அவணீத்து இவர் திருவயீந்திரபுரத்துக்கு ஏகிச் சின் னுள் அங்ஙனே வதிந்துழி இவருடைய கீர்த்திகிரணங் களைப் பொறாதார் சிலர் இவர்பால் ஒரு கொற்றனை விடுத் தனர். இவருடைய வன்மையைச் சோதிப்பான் அவன் ஒரு சித்திர வாவியை இயற்றும்படி கேட்க, இவர் தம் திருமாளிகையின் புறம்பே ஸ்ரீ ஹயக்கிரீவப் பிரானுக்கென்று ஓர் அழகிய வாவியைக் கட்டி முடித்துக் காட்டி அவனை வென்றனர். அந்தக் கிணறு இப்போது தரைமட்டத்துக்குக் கீழிருக்கின்றது.

இரகசிய நூல்கள்

தெய்வ நாயக னியமனம் பெற்று விடைகொண்டு இவர் வீரநாராயணபுரத்தில் ஸ்ரீமந் நாதமுனிகளை அஷ்டாங் கப் பிரணமஞ் செய்து, திருமங்கையாழ்வார் அருளிய மரி யாதைகளைப் பெற்றுக் கோயிலேற எழுந்தருளிப் பெருங் கூட்டத்து முதலிகளோடே சித்தாந்தப் பிரவசனம் புரிந்து கொண் டிருந்தனர். அன்னணமாங்கால் தேசாந்தரங்களி லிருந்து பலப்பல ஸ்ரீ வைணவர்கள் வந்து இவரை ஆசிர யித்து உபய வேதாந்தங்களையும் அதிகரித்தனர். அவாகள்

தெள்ளிதி னுணருமாறு வேதாந்த தேசிகர் தத்துவ-ஹித-புருஷார்த்தங்களைச் சங்கிரகித்துப் பல இரகசிய நூல்களை இயற்றினர்.

முஜ்ஜீயர்கள்

சாஸ்திரப் பயிற்சியில் தேர்ந்து சிஷ்டர்களாகவும் விரக்தர்களாகவும் விளங்கிய பேரருளாளையன், வீரவல்லி கிருஷ்ண மாசாரியர், குமாண்டூர் அப்பை என்பார் மூவர் சீடர்கள் துறவறம் மேற்கொள்ள, வேதாந்த கோளரியார் அவர்களை முறையே பேரருளாள ஜீயர், வெண்ணெய்க் கூத்த ஜீயர், பிரபாகர ஜீயர் என முஜ்ஜீயர்க ளாக்கினர்.

அழகிய மணவாளப் பெருமாள் நயினர்

ஆதிய சில்லோர் பொறாமையினுல் தேசிகருடைய அழகிய மாளிகையின் வாயிலிலே தமது பாதரக்ஷைகளை நாற்றி வைத்தனர்.* அவைகளைக் கண்டு தேசிகர்,

உலகத்தில் நல்வழிப்புகச் சிலர் கருமத்தையும், சிலர் ஞானத்தையும் பற்றி நிற்கின்றூர்கள். நாமோ பாகவதர்களுடைய பாதரக்ஷைகளைப் பற்றி நிற்கின்றோம்

எனப் பொருள்படும் சுலோகத்தை யனுசந்தித்தனர்.

தந்தையின் திருவத்தியயனம்

பிற்றைஞான்று அனந்த சூரிகளுடைய திருவத்தியயனத்திற்கு† வரிக்கப்பட்டிருந்த ஸ்ரீவைணவர்கள் உரிய வமயத்தில் தேசிகர் திருமாளிகைக்கு ஏகாவண்ணம் சில வைரிகள் ஆக்கினர். நம் தேசிகனுர் கலக்கமின் மனத்தராய்ப் பெருந்தேவி மணுளனை பேரருளாளனையும் ஸ்ரீ ஹயமுகப் பிரானையும் ஆராதித்துப் பிரணமம் புரிந்து, ஓமம் முதலிய சிராதத கிரியைகளை விதிப்படி செய்து, முறையே அரம்பையம் மடலில் அடிசிலாதிய இட்டு, ஆங்காங்கு அவ்வவற்றினுக்கு இயல, தேவ பிதுரு விஷ்ணுக்க ளென்னும்

*நாற்றுதல் = தூக்கித்தொங்கவிடல். †திருவத்தியயனம் = சிராத்தம்.

பகவத் சுவரூபங்களை ஆவாகனித்துத் தத்தஞ்செய்து சிராத் தத்தை அணிபெற வாற்றினர். கோயில், திருமலை, பெரு மாள் கோயில் என்னும் மூன்று நற்றலத்து மூவாமுதல் வரும் மூன்று வைணவ மணிகளாகச் சிராத்தத்தில் போனக மருந்தி அடைக்காயுண்டு அந்தர்த்தான மாயினர்.

பொருள் வெறுப்பு

பின்னொருபகல் இவர் பண்டுபோல் உபாதானத்திற்குச் செல்ல, பக்தியின் மேம்பாட்டால் சிலர் இவரறியாமல் அரிசி யோடே தனங்களையுங் கலந்து அளித்தனர். பின்னர் அவை களை இல்லக்கிழத்தி எடுத்துக் காட்டத் தேசிகர் அவைக ளின் வரவைப் பரியாலோசித்துப் புழுக்களைமான உன்னி அவைகளைக் களையக் கட்டளையிட்டனர்.

"பாதுகா ஸஹஸ்ரம்"

ஒருநாள் அந்தியில் வேதாந்த கோளரியார் திருவரங் கத்து அழகிய மணவாளன் திருவோலக்கத்தி விருப்புழி முற்கூறிய அழகிய மணவாளப் பெருமாள் நயினர்,

இன்றிரவு விடிவதற்குமுன் பெருமான் விஷயமாக ஆயிரஞ் சுலோகங்கள் ஆசுகவியாகப் பாடித் தருவோர்க்கே 'கவிதார்க்கிக சிங்கம்' என்ற பிருது விளம்பக்கடவது. யாம் இன்றிரவுக்குள் எம்பிரானது "பதகமல ஸஹஸ்ரம்" என்றொரு நூலைப்பாடிக் கொண்டு வருகிறோம். தாம் எந் நூலைப் பாடித்தருமோ?

என்று இவரை விளித்துச் சொற்றனர். வேங்கட நாதா ரியர், "சுவாமின்! யான் பாதுகா ஸஹஸ்ரம் எனவொரு நூலை இயற்றிக் கொணர்வல்" என மறுமொழி கூறினர். நயினர் முந் நூறு சுலோகங்களைப் புனைவதற்குள்ளேயே கதிரவன் குண திசையி லெழுந்துவிட்டனன். தேசிகமணியோ இரண்டாவது யாமத்துள், கூறி யாங்கு, "பாதுகாஸஹஸ்ர"த்தைப் பாடித் தலைக்கட்டினர்.

புத்திரப் பேறு

தேசிகரின் கனவில் அருளம்பதியான பேரருளாளன் தோன்றித் தம் அமிசமாக இவர்க்கு ஓர் அருங்குமரன் உதிப்

பன் என்றறைந்து கரந்தனர். அங்ஙனமே இவர்க்கு நள வாண்டு ஆவணிமதி உரோகிணியுடுவில் ஒரு குமார் உதித்தார். அவர்க்கு வரதன் என நாமகரணஞ் செய்து தந்தை தேசிகனார் அக்ஷராரம்பம் புரிந்து, முறையே வேதாந்தம் சாத்திரம் திருமந்திரார்த்த மாதியவைகளைத் தாமே கற்பித்து வந்தனர்.

சத்தியமங்கல வாசம்

ஓர் அமயத்தில் நம் அருமந்த வாக்கி* கிரந்தகாலக்ஷேபம் செய்துகொண் டிருக்கையில் வீதிவழியே கந்தாடை இலக்ஷ்மணாசாரியர் என்பார் தமது மாணவர்களுடனே சென்றனர். அவர் செல்வதைத் தேசிகர் காணாராயினர். இலக்ஷ்மணாசாரியருடைய சீடரான சாத்தாதவர் வந்து இவரது பாதங்களைப் பிடித்து ஈர்த்துவிட்டனர். இவர் பொறையிரந்து — கொடியரைக் காணாஞானி குவலயந் துறப்ப போன்று — தம் குடும்பத்தோடு மேனடைய்தித் திருநாரணனையும் செல்வப் பிள்ளையையுந் தொழுது சத்திய மங்கலத்தில் நித்தியவாசம் புரிந்தனர். ஈதொருங்காக,—

காந்தாடை இலமக்ஷ்ணாசாரியர்

தமது யாக்கையில் சோகை என்னும் நோய் கண்டு, அஃதோடு புத்திரோற்பத்தியு மில்லாதிருந்தனர். மேற்சொல்லியவாறு பரமபாகவதரான வேதாந்த தேசிகருக்குத் தம் சீடர்கள் செய்த அபசாரத்தின்பயனாக அந் நோய் தமக்குக் கண்டுளதென இலக்ஷ்மணாசாரியர் ஓர்ந்து,

நன்றல புரிந்தார் மாட்டு நாயகன் சினந்து பல்ல
நன்றல பிணிக ளேற்றி யருநா கழுந்திச் சாம்பிப்
பொன்றிடப் புரிந்து பின்னும் புவியினி லேற்றி நிற்கும்
வென்றிடா வினைகளெய்த வைப்பனால் விரும்ப லென்னே!

என்று அனுதாபப்பட்டுச் சத்திய மங்கலத்திற்குச் சென்று தேசிகமணியைச் சரணம் அடைந்தனர். நிகமாந்தாரியரது

---

* வாக்கி = அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருளையும் விரித்துக் கூறுவோன்; இங்கு வேதாந்த தேசிகர்.

ஸ்ரீபாதப் புனலின் மாட்சியால் அவருக்கு அந்தப் பெருநோய் நீங்கியது, ஓர் குமரனும் உதித்தனன்.

அழகிய மணவாளன்

அரங்கனைச் சேவிக்கத் தேசிகர் கோயிலுக்கு எழுந்தருளினர். அப்போது இராஜகலகம் உண்டாயிருந்தது. சத்துருக்கள் கோயிலைச் சூழ்ந்துகொண்டனர். சுதரிசன பட்டர் என்னும் விரக்தருடைய ஸ்ரீ பாஷிய வியாக்கியானத்தையும் குமரர்களிருவரையும் தேசிகர் கைக்கொண்டு சத்தியமங்கலத்திற்கு மீண்டனர். கலகத்தினிமித்தம் அழகியமணவாளன் கோயிலை விட்டுக் காடேற எழுந்தருளினன். அந்த அர்ச்சாவதார மூர்த்தியை மாலிருஞ்சோலை, கொல்லம், கொச்சி, கோழிக் கோட்டுப்பிரதேசம், திருநாராயணபுரம் முதலான இடங்களுக்கு எழுந்தருளச் செய்து பின்னர்த் திருமலைக்கு எழுந்தருளுவித்தார்கள். விஜயநகர சாம்ராஜ்யத்திற் குட்பட்ட செஞ்சிக் கோட்டையிலிருந்த கோப்பணாரியன் என்னும் அரசன் திருமலையினின்றும் அழகிய மணவாளனைச் செஞ்சிக்கு எழுந்தருளப் பண்ணினன். அரங்கநகர் 50-வருஷகாலம் மிலேச்சர் வசத்திலிருந்தது. அவர்களுடைய படைத் தலைமை வாய்ந்த திருமணற்றூண் சிங்கபிரான் என்னுங் காணியாளனது பேருதவியினால் செஞ்சி மன்னன் மிலேச்சர்களை அங்கிருந் தோட்டி, அழகிய மணவாளனைப் பெரிய பெருமாளது திருவோலக்கத்தில் உபயநாச்சியார்களோடு ஒரு சேர்த்தியி லிருத்தினன்.

தில்லை கோவிந்தராஜர்

சத்தியமங்கலத்தை நீத்துத் தேசிகர் கோயிலெய்திப் பூர்வம் போன்று சித்தாந்தியா யிருந்தனர். ஒரு வைணவ தாசி சித்திரகூடத்திலிருந்து வந்து அறிவித்த சந்தர்ப்ப விசேஷங்களைக் கைக்கொண்டு தேசிகர் செஞ்சி கொப்பணாரியனது உதவியால் எம்பெருமான் கோவிந்தராஜனைப் பரிவாரங்களோடு ஆலயத்தமர்த்திப் பிரதிஷ்டை செய்து, கச்சியம்பதிபுக்கு வாழ்ந்தார்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர்

178897
-600 008.

கனகதாராஸ்துதி

பிரம்மசாரியொருவன் மணத்தினுக்குரிய செலவிற்காகத் தனம் இரக்க, இவர் பெருந்தேவித் தாயார்பால் "ஸ்ரீஸ்துதி"யை யனுசந்தித்து அவனுக்கு வேண்டிய பணம் குவியலாக வந்து வீழச் செய்தனர்.

திருவுருவச்சிலை

ஒரு சிற்ப சாஸ்திரி வந்து இவருடைய சிற்பத் திறலைத் தர்க்கிக்க இவர் தம் போன்ற உருவை மெழுகினால் அமைத்துக் காட்டி அவனை யடக்கினர். அவன் அவ் விக்கிரகத்தை ஞானமுத்திரையுங் கோசமுங் கொண்டதாகக் குயிற்றித் தாமிரத்தில் எடுத்தனன். அதனை ஸ்ரீ ரங்கநாச்சியார் சந்நிதியில் இவர் தரிசனப் பிரவசனம் நிகழ்த்திவந்த இடத்திலே பிரதிஷ்டித்து ஆராதித்து வருகின்றார்கள். இஃது அகோபில மடத்து அதீனம்.

சரமதசை

இவர் தம் புத்திர ரத்தினமாகிய தூப்பில் நயினாரை விளித்து, "இனி இச் சித்தாந்தத்திற்கு நீவிர் பிரவர்த்தகராகுவீர்" என வறைந்து, நயினார் மடியில் திருமுடியும், பேரருளாள ஜீயர் மடியில் திருவடியுமாக—மேனாட்டிலும் தம் மதத்தை நிறுத்த வுன்னியோ, தம்மை விடுத்த திருநாராயணன்பால் தம் செயலைச் செப்பக் கருதியோ—சௌமிய ஞு கார்த்திகை மாதத்தில் திருநாடெய்தினர்.

நூல்கள்

இவர் இயற்றிய நூல்கள் வட மொழியில் "ஹயக்கிரீவ ஸ்தோத்திரம்" முதலிய 95, தென்மொழியில் "அமிர்த ரஞ்சனி" முதலிய 24, பிராகிருதத்தில் "அச்சுத சதகம்" என்பதும் ஆம்.

Printed at the 'Aurora Press', Madras — 1925.—(B)

விவேக சந்திரிகை

முதற் புத்தகம்

1. இளமைப் பழக்கம் 2. நயம்பட உரை 3. பயனற்ற மொழிகளை யொழி 4. பரிஹாஸம் செய்யாதே 5. பெற்ருேர்க்கு இணங்கு—I 6. பெற்ருேர்க்கு இணங்கு—II 7. கபடம் ஆகாது 8. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி 9. சகோதர ரிடத்தில் அன்பாக இரு 10. காலம் தவருமை—I 11. காலம் தவருமை—II 12. உருவு கண்டு எள்ளாதே 13. அசட்டை யாகாது 14. இடம்பம் ஆகாது 15. வார்த்தை தப்பாதே—I 16. வார்த்தை தப்பாதே—II 17. பரிசுத்தம் 18. அஹங்காரம் ஆகாது—I 19. அஹங்காரம் ஆகாது—II 20. உண்மை உரை &c. விலை **7** அணு

இரண்டாம் புத்தகம்

1. அரசரிடத்து அன்பு 2. ஆரோக்கியமே பாக்கியம் 3. யுக்தியே சக்தி 4. பிறரை இகழாதே 5. வன்மனங் கொள்ளாதே 6. பெரியாரைப் பிழையாதே 7. பொருமை யகற்று 8. பொறுமை 9. இயற்கைப் பொருள் ஆராய்ச்சி 10. மன்னிப்பதே மாண்பு 11. விடாமுயற்சி—I 12. இந்திரன் 13. விடாமுயற்சி—II 14. பாஷாபிமானம் 15. விநாயக சதுர்த்தி &c. விலை **8** அணு

மூன்ரும் புத்தகம்

1. குரு பக்தி 2. உரவோரின் உபதேசம் 3. ஒழுங்கின் உயர்வு 4. தீபாவளிப் பண்டிகை 5. மனைவியின் மாட்சி 6. வியாயாமம் 7. இயனிலைப்பள்ளி (இந்திய இரண வைத்தியக் கருவிகள்) 8. கானம் 9. ஆலயங் தொழுதல் (தஞ்சாவூர்க் கோவில்) 10. க்ஷேத்திரம், (ஆருதாரப் படம்) (ஆருதார உபலக்ஷணங்கள்) 11. ஆலய வமைப்பு (தேவாலயப் படம்) சயனத் திருக்கோலம் &c. விலை **12** அணு

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்,

புத்தக வியாபாரிகள்,

35, சின்னத்தம்பித் தெரு, சென்னை.